# தமிழர் சமயமும் சமஸ்கிருதமும்

தமிழண்ணல்

chezhian

# தமிழர் சமயமும் சமஸ்கிருதமும்

## வரலாறு தரும் உண்மைகள்

(ஆய்வு நோக்கில் கண்ட அரிய செய்திகள்)

பதிப்பாசிரியர்

**உல. பாலசுப்பிரமணியன்**

## தமிழண்ணல்

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : டிசம்பர், 2011

விலை ரூ. **150.00**

## நூலைப்பற்றி


| | | | |
|---|---|---|---|
| ★ | நூலின் பெயர் | : | தமிழர் சமயமும் சமஸ்கிருதமும் |
| ★ | நூலின் ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| ★ | பதிப்பாசிரியர் | : | உல. பாலசுப்பிரமணியன் |
| ★ | நூலின் தன்மை | : | ஆய்வு நோக்கு |
| ★ | முதற்பதிப்பு | : | டிசம்பர், 2011 |
| ★ | நூலின் தன்மை | : | நேச்சுரல் சேடு |
| ★ | நூல் அளவு | : | டெம்மி |
| ★ | அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| ★ | பக்கங்கள் | : | 248 |
| ★ | நூலின் விலை | : | ரூ. **150.00** |
| ★ | நூல் கட்டுமானம் | : | சாதாக் கட்டு |
| ★ | வெளியீடு | : | விழிப்புணர்வுப் பேரியக்கம், மதுரை. |
| ★ | ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| ★ | அச்சிட்டோர் | : | கணபதி பிரர்சஸ், சென்னை. |

---

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex,48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# புதிய மறுமலர்ச்சிக்கு வழிவகுப்போம்

தமிழர் சமயமும் சமஸ்கிருதமும் பற்றித் தொடர்புடைய திருமுறைகளையும் வடமொழி வேதங்கள் - விளக்கங்கள் பற்றிய நூல்களையும் படித்தேன். அதன் விளைவே இந்த நூலும், அடுத்து 'திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள்' என்ற நூலுமாகும். இவற்றை எழுதி முடித்த போது, எனக்குப் பல ஐயங்கள் எழுந்தன.

- சங்க காலக் கபிலர், பரணர், பாலைக் கவுதமனார், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார், தாமப்பல் கண்ணனார் போலும் அந்தணப் புலவர்கள் தமிழக நிலச்சூழலறிவு, மக்களின் நடைமுறை வாழ்வு, தமிழ்ப்புலமை ஆகியவற்றில் முழுமையான தமிழர்களாகவே இங்கு வாழ்ந்துள்ளனர்.

  இன்று தமிழை வேறுபட நினைத்து நடக்கின்ற வேண்டாத பழக்கம் எப்படி வந்தது?

- பிராமணரல்லாதார் இயக்கம், ஆங்கிலம் கற்ற சிலரால் சமத்துவம் வேண்டித் தோற்றுவிக்கப்பட்டது. பின்னரே அது திராவிட இயக்கமாக மாறியது. இந்தியை எதிர்த்துத் தமிழை வளர்க்கப் போவதாகப் பறைசாற்றி, ஆட்சியைப் பிடித்த திராவிட இயக்கம், இன்று தாய்மொழியாம் தமிழைக் காப்பாற்ற வில்லை. 'தமிழ் வாழ்க' என்பதே ஒரு நாடகமாகிப் போனது. திராவிட இயக்கத்தவர்கள் தமிழைச் சொல்லித் தங்களையே வளர்த்துக் கொண்டனர். மற்றபடி தமிழ் பற்றிய தொலைநோக்கோ, திட்டமிடலோ, செயல்திட்டம் வரைந்து நாளும் ஓசைப்படாமல் வளர்ப்பதோ திராவிட இயக்கத்தைச் சார்ந்த முடிமுதல் அடிவரை காணப்படவில்லை. இன்றும் அவர்கள் அனைவரும் தாய்த் தமிழைத் தங்கள் சுயநலத்திற்கு, ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

- பார்ப்பன அந்தணர்களுக்கு தமிழை வளர்ப்பது பற்றிய அனைத்துத் திட்ப நுட்ப வழிகளும் தெரியும். அவர்கள் வழிவழியாகக் கல்விக்குரிய குடியினராகப் பல நூற்றாண்டுகள் வளர்ந்ததால், அவர்கள் நினைத்தால் மட்டுமே, நாம் தமிழ்பற்றி இன்று காண்கின்ற கனவுகள் அனைத்தும் நிறைவேறும் என்று தோற்றுகிறது.

- இன்றும் பார்ப்பனக் குடும்பங்களில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள் அவர்களைத் தூய தமிழர்களாக இனம் காட்டுகின்றன. உறவுப் பெயர்களில் அகமுடையான், அகமுடையாள், அத்தையன்பர், அம்மான் சேய், ஓரகத்தி, ஓர் பிடியாள் போல்பவை வியப்பளிக்கும் சொற்களாகும். பிறகு ஏன் தமிழினின்றும் வேறுபட எண்ணுகிறார்கள்? நாம் அவர்களைத் தமிழினின்றும் அயன்மைப்படுத்தி விட்டோமா அல்லது அவர்களே தங்களை அயன்மைப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்றா?

- இன்றைய ஆங்கில மோகம் ஆங்கிலரால் விளைந்ததன்று. இன்று எதையும் ஆங்கிலத்தில் எழுதினால், அதில் பெருமையும் சிறப்பும் உண்டு என்பதைத்தான் தமிழர்கள் ஏற்கிறார்கள். ஆங்கிலம் படித்தால்தான் வருமானம் தேடி, வாழ முடியும் என்ற நிலை உளது.

இதே நிலை சங்க காலத்திற்குப் பிறகு - களப்பிர, பல்லவ நாயக்க அரசுகளின் காலத்திலும் அதற்குப் பிறகும் சமஸ்கிருதத்திற்கு இருந்தது. அதனால் தமிழரின் கலைகள், இசை, சமயம் என அனைத்தும் பெயர்கள், கலைச்சொற்கள் உட்பட சமஸ்கிருதமயமாக்கப்பட்டு விட்டன. இன்று கால மாறுதலுக்கேற்ப அவற்றைத் தமிழுக்கு மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். இதற்கு நல்ல தமிழறிஞரேயன்றி, வடமொழியறிந்த தமிழ் அந்தணர்களும் ஒத்துழைத்தால்தான் நடக்கும்.

- ஆகவே இந்நூலுள் காணப்படுவன இடைக்காலத்தே ஏற்பட்ட மாற்றங்களை உள்ளவாறு விளக்கி, அவற்றை இன்றைய நிலைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்பதற்காகவே குறிக்கப்படுகின்றன. பழைய வரலாறுகள் மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன. பார்ப்பனப் பகைமையோ, சமஸ்கிருத வெறுப்போ காரணமன்று.

# நூன்முகம்

"ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன் முன்னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ!
இளந் தமிழா! கண் விழிப்பாய்!"

- பாவேந்தர்

## உண்மையைத் தேடும் ஒளிக்கதிர்கள் !

நெருப்பு சுடும்; மருந்து கசக்கும்; உண்மையும் அவ்வாறே. அண்மைக் கால நடைமுறைகளில் பழகியவர்களுக்கு இந்நூல் அதிர்ச்சி தரும்; ஆத்திரமும் வரும். மறுக்க முடியாத நூற்சான்று களுடன் இவை எழுதப்பட்டுள்ளன. இக் கருத்துக்களை மறுக்க விரும்புவார், காரண காரியத்துடனும் சான்றுகளுடனும் மறுக்க வேண்டும். இறுதியில் உண்மையே நிலைக்கும்.

OOO

இது ஆரிய திராவிட ஆய்வன்று; பிராமண எதிர்ப்பு நூலன்று; சமஸ்கிருத மறுப்பு நூலுமன்று. இந்நூலில் வருபவை உண்மைகளின் வேர்களை வெளிப்படுத்துவதால் அவ்வாறு தோன்றக்கூடும். ஆனால் நம் நோக்கம் அதுவன்று. மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிப்படுத்துகிற நல்ல நோக்கமே இது.

## உண்மையைப் பொய்ம்மை வெல்வதா ?

1) தமிழ் 'நீசபாஷை'; அது மந்திர சக்தியுள்ள மொழியன்று, திருக்கோயில் வழிபாடுகள், சடங்குகளுக்குத் தமிழைப் பயன் படுத்தக்கூடாது. இவ்வாறு கூறப்படுபவை தவறானவை என்பதை இந்நூல் நிறுவுகிறது. தமிழே மந்திர சக்தி உடையது. தொல்காப்பியர் 'மறைமொழி கிளந்த மந்திரம்' (1420), நிறைமொழி மாந்தர் கிளந்த தமிழ் மறைமொழிகளே மந்திரம் (1434) என்பார். இவை தமிழ் நூல் வகை சார்ந்தவை.

2) **ஆதி சைவர்கள் வேறு; ஸ்மார்த்த பிராமணர்கள் வேறு.** ஆதி சைவர்கள் முழுமைத் தமிழர்கள். வடமொழி வல்லாண் மைக் காலத்தில், தங்கள் உரிமைகள் பறிபோகாமல் இருக்க, சமஸ்கிருத மொழியைப் பயின்று, அதைப் பயன்படுத்திக் கொண்டவர்கள். ஆதி சைவர்கள், பட்டர்கள், குருக்கள், சிவ வேதியர் என இவர்கள் மட்டுமே, 'முப்போதும் திருமேனி தீண்டி' பூசனை செய்தற்குரியவர்கள். இவர்களுக்கு ஸ்மார்த்த பிராமணருடன் கொள்வினை, கொடுப்பினை கிடையாது.

OOO

**ஸ்மார்த்த பிராமணர்கள் கோயில் வழிபாடு அற்றவர்கள்,** வேள்வி, ஹோமமே அவர்கள் வழிபாடு. அவர்கள் கோயில்களை வெறுத்தார்கள். அவர்கள் வழிபாடு வேள்வி ஒன்றே. இன்று வருமானம் கருதி கோயில்களில் நுழைகின்றனர். ஹோமம், யாகம் என அக்கினி வேள்வி செய்வன, திருக்கோயில் உருவ வழிபாட்டு ஆகம நெறிகளுக்கு முற்றிலும் முரண்பட்டவை.

ஸ்மார்த்தர்களைக் கோயில் கொடிமரத்துக்கு அப்பால் நுழைய விடுவதில்லை. காஞ்சி மகா சுவாமிகள் எல்லாம் ஸ்மார்த்தர்கள். அவர்கள் கோயில் பற்றிப் பேசுவது, நுழைவது, ஈடுபடுவது எல்லாம் கொள்கையை விடுத்து வாழ்வதாகும்.

இன்று கோயில் வழிபாடு, சடங்குகளில் நுழைவது மகா தோஷம். இது அவர்களை ஏழேழு பிறவிக்கு நரகத்தில் தள்ளும் பெரும் தீங்காகும்.

OOO

3) **திருக்கோயில் வழிபாடு வேறு; வேள்வி வழிபாடு வேறு.**

**முன்னது உருவ வழிபாடு; பின்னது அருவ வழிபாடு.**

ஸ்மார்த்தர்களின் தெய்வங்கள் அனைத்தும் மேலுலகில் உள்ளனர். அவர்களுக்கு அக்கினி மூலம் வேள்வி செய்து, காணிக்கைகளை அனுப்புகின்றனர். இவ்வுலகில் இவர்களுக்கு கடவுளர் இல்லை. கோயில் இல்லை. அக்கினி ஒன்றே இங்கும் அங்கும் தொடர்புபடுத்தும் தூதுவன். வேதத்திலோ, கீதையிலோ உண்மையான பத்து உபநிடதங்களிலோ, கோயில் என்ற சொல்லே இல்லை. வேள்வி தவிர, பிற வழிபாடில்லை.

4) **வேள்வி, ஹோமம் வேறு - படையல் வேறு.** மக்களுக்குப் பயன்படும் அனைத்தும் தேவர்களுக்கு என்று அக்கினியில் போடப்படுகின்றன. வேள்வி, ஹோமம் என்று மக்களுக்கு உரியவற்றை அக்கினியில் போடுவது தமிழர் மரபன்று. தமிழர் மரபு படையல் இடுவது. அது பொருள்களை வீணாக்குவ தில்லை. திருக்கோயில்களில் 'ஹோமங்கள்' தடை செய்யப்பட வேண்டும்.

ஸ்மார்த்த பிராமணர்களைத் திருக்கோயில்களை விட்டு வெளியேற்ற வேண்டும். காஞ்சி மகா சுவாமிகள் ஸ்மார்த்தர். அவர் கோயில்களை வெறுத்தவர்களின் வழி வந்தவர். அவர் இப்போது வருமானம் கருதி, காவலர் துணையுடன் திருநெல் வேலியிலும் பழனியிலும் கோயிலினுள் நுழைந்தார். மக்கள் பேராரவாரம் செய்து இதை எதிர்த்தனர். கொள்கையை விட்டு விட்டு, ஸ்மார்த்தர்கள் கோயில்களுக்குள்ளேயே, சுற்றித் திரிவ துடன், தமிழை இழிவுபடுத்தும் பணிகளைச் செய்த வண்ணம் உள்ளனர். இவை தவறானவை என இந்நூலால் தெளிவுற அறியலாம்.

OOO

5) **வேதம் வேறு, வேதாந்தம் வேறு.** கங்கைச் சமவெளியில் நிலைபெற்ற பிற்பாடு, தோன்றியவை பிராம்மணம், உப வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் எனப் பலவாகும். இவை காலத்தால் வேதங்களுக்குப் பிற்பட்டவை. திராவிடர், சமண, புத்த மதத்தவர் எனப் பலருடன் கலந்த பிறகு தோன்றி யவை. இவற்றை மூன்றாகப் பகுக்ககலாம். 1) மிக உயர்ந்த அத்துவைத சித்தாந்த உண்மைகள். 2) ஆரியர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியன. 3) தங்கள் காலத்தனவும் தங்களை எதிர்த்தனவும் தங்கள் கொள்கைகளுக்கு முரண்பட்டனவுமான சமணம், புத்தம், தெற்கே தமிழர் சமயங்கள் ஆகிய இவற்றை - இவற்றிலுள்ள நல்லன எல்லாம் தம்மிட முள்ளன எனக் காட்டுவன; அனைத்தையும் **சமஸ்கிருத மயமாக்கி எல்லாமே தம்மிடமிருந்து வந்தனவாகக் காட்டல்;** எதிர்ப்பாளரை அணைப்பதுபோல் காட்டி அழித்தல் ஆகிய அனைத்தையும் செய்ய நூறுவகை உபநிடதங்கள் முதலிய வற்றைக் காலந்தோறும் எழுதிக் கொண்டவையாகும். இறுதியில் சொன்ன இதனை இந்நூல் நன்கு விளக்கிக்

காட்டுகிறது. மேலும் இவை முழுமையாக ஆராய்ந்து எழுதப்பட வேண்டும். வேதம் வேறு; பிற்பட்ட வேதாந்தம் எனப்பட்டவை வேறு. இந்நூலைப் படித்தாலே உண்மை தெரியும்.

**6) வேதம் வேறு, ஆகமம் வேறு.** இரண்டையும் போட்டுக் குழப்பி, மற்றவர்களை முட்டாள்கள் ஆக்கி விடுகின்றனர். ஆகமம் - வழிபாட்டு நெறிகளைக் கூறும் கையேடு. அருவ வழிபாட்டு, வேள்வி வழியினர், உருவ வழிபாட்டுக் கோயில் நெறிகளுக்குச் சொந்தம் கொண்டாடுவது எவ்வாறு ? பிற சமயங்களுக்கும் ஆகமம் உண்டு. காலந்தோறும் வழிபாட்டு நெறிகள் மாறும்; அதனால் ஆகமமும் மாறும்.

வேதம் என்பது இருக்கு வேதமே. பிறகு அதிலிருந்து பிரிந்து, வளர்ந்தவை யஜூர், சாமம். இவற்றைத் 'த்ரயு' என்றனர். மிகப் பிற்பட வந்த அதர்வ வேதம் முழுவதும் பில்லி, சூனியம், மனித வாழ்வில் செய்யும் அனைத்துப் பாவங்களையும் தோஷங்களை யும் நீக்கும் பரிகாரம் என இவை போல்வன உள்ளன. இன்று பிராமணர்களுக்கு இதில் வரும் பலவகைப் பரிகார ஹோமங்களே சோறு போடுகின்றன எனலாம்.

இருக்கு வேதம் ஆரிய திராவிடப் போராட்டம் பற்றியே பெரிதும் பேசுகிறது. அவை தங்களை அசுரர்களிடமிருந்து காக்குமாறு வேண்டும் புலம்பல்களும் வெற்றி பெற்றுத் தருமாறு வேண்டுதல்களும் உள்ளன. இவை காலத்தால் முற்பட்டவை.

OOO

***7) சமஸ்கிருத ஆதிக்கம்:*** களப்பிர, பல்லவ, நாயக்கர் ஆட்சிக் காலங்களில் சமஸ் கிருதம் மிகவும் போற்றப்பட்டது. பல்லவர் ஆட்சி செய்தபோது, சமஸ்கிருதமே அறுநூறு ஆண்டுகள் ஆட்சி மொழியாய் இருந்தது.

இன்று ஆங்கிலம் கற்றாலன்றி வாழ்வில்லை என்பதுபோல், சமஸ்கிருதம் கற்றாலன்றி வாழ்வில்லை என்ற நிலை இருந்தது. தமிழர்களே சமஸ்கிருதம் கற்று, அதில் எழுதி, தமிழர் கலை, சிற்பம், தொழில் பலவற்றையும், அம்மொழியில் எழுதிப் படித்துக் கற்று கற்பித்து வாழ்ந்தனர். இவ்வாறு சிவஞான முனிவர் போல்வார் பலர் விளங்கினர்.

இவ் ஆறேழு நூற்றாண்டுகளில், தமிழரின் கல்வி, கலை, கோயில் உடைமைகள் அனைத்தையும் சமஸ்கிருதமயமாக்கினர்.

**சமஸ்கிருத வல்லாண்மைக் கால விளைவுகள்:** சமஸ்கிருதம் தேவ பாஷை என வணங்கப்பட்டது. தென்னாட்டிற்கே யுரிய, தென்னகத்தில் மட்டுமே விளங்கிய பரதநாட்டியம் கா மீரத்தில் இருந்து வந்தது என்றனர். கையினால் ஒரு சிற்றுளி பிடிக்கத் தெரியாத இக்கூட்டத்தார் நம் சிற்பக்கலை, கட்டிடக்கலை பற்றிய அனைத்தையும் அழித்துவிட்டு, தம் மொழியில் எழுதி வைத்துக்கொண்டு, அனைத்துமே தமிழர்க்கு நாங்கள் தந்தனவே என எழுதினர்.

இது ஒரு நீண்ட கொடிய வரலாறு. தமிழர் சமயம் எனப்படும் சிவ, மால் வழிபாட்டு மெய்ம்மைகள் பற்றிய சமயக் கலைச்சொற்கள் ஒன்றுகூட இல்லாமல் அழித்து விட்டனர்.

இக் கொடிய வரலாற்றின் ஒரு கூறு இந்நூலில் ஆங்காங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. தமிழறிஞர் யாரேனும் முன்வந்து இவை அனைத்தையும் தமிழில் மீட்டுருவாக்கம் செய்யவேண்டும் என்ற நிலையில் உள்ளோம்.

OOO

ஆகமத்தின் கதையும் இதுதான். காலந்தோறும் ஆகமங்கள் சமஸ்கிருதமயமாயின. ஆகமத்தின் முதல் நோக்கம் அவ்வக் காலக் கடவுள் வழிபாட்டு நெறிமுறைகளையும், சடங்குகள் செய்யும் வழிமுறைகளையும் கூறுவது.

இவை 'கையேடுகள்' போன்றவை என்பர். காலந்தோறும் இவை மாறுவன. இவற்றுடன் கோயிற்கலை சார்ந்த நாட்டியம், இசை, சிற்பம், பிற கருவிகள் - கோயில் கட்டும் நெறிமுறைகள் எல்லாம் தமிழ் ஆகமத்தில் எழுதப்பட்டு இருந்தன.

தமிழ் ஆகமங்கள் கடலாற் கொள்ளப்பட்டவை போக, மீதமிருந்தவற்றை, சமஸ்கிருதமாக்கிக் கொண்டனர். இதில் அதி தீவிர, அத்துவைதக் கூட்டம், கோயில் பற்றிய வெறுப்பில் பலவற்றை அழித்துவிட்டனராம். கோயில் வழிபாட்டிற்கும் ஸ்மார்த்த பிராமணர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இருந்தும் வருமானம் கருதி நுழையக்கூடாத இடத்தில் நுழைந்த இவர்கள், தமிழில் கோயிற் பூசை, சடங்குகள் எதையும் செய்யக் கூடாது; செய்வது தோஷம் என்று புலம்புகின்றனர். இது தவறு என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது. மேலும் கோயில் தொடர்பான அனைத்தையும் சிற்பம், நாட்டியம், இசை, பிற யாவற்றையும் சமஸ்கிருதத்தில் எழுதிக்கொண்டு, தமிழில் இருந்த ஏடுகளை அறவே அழித்துவிட்டனர். சிவநெறி எனப்படும் சைவ சித்தாந்தம் - கலைச்சொற்கள் உட்பட சமஸ்கிருதமாக்கப்பட்டு, தமிழில் இருந்தவை அழிக்கப்பட்டன.

8) **தமிழைச் சரண் புகுந்த வைதிகம்:** சமண, புத்த மதத் தாக்குதல் தாங்காமல் இப் பிராமணியம் அன்று தமிழையும் தமிழர் சமயங்களையும் தமிழர் கட்டிய கோயில்களையும் சரண் புகுந்து, தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. தமிழரும் பேரளவில் அவர்களை ஏற்று, மேற்படி மதங்களால் தமிழர் சமயங்கள் சிவநெறி, திருமால் நெறி, கொற்றவை (சக்தி) நெறி ஆகியவற்றைக் காத்துக் கொண்டனர். இந்தக் **கொள்கை இல்லாக் கூட்டணியால்** விளைந்த தீமைகள் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

மேலே சுட்டிய அனைத்தையும் முதலில் ஏற்பது கடினமாக இருந்தாலும், பிறகு உண்மை இதுவென உணரப்படும். இந்நூலால் தமிழரிடையே ஓரளவேனும் விழிப்புணர்வு ஏற்பட்டு, மேற் கொண்டு செயற்படக் கூடுமேல் அதுவே யாம் எதிர்நோக்கும் பயனாகும்.

9) **எங்கும் சமஸ்கிருதம் எதிலும் சமஸ்கிருதம்:** எந்த ஒன்றை எடுத்து உற்று நோக்கினாலும் அதன் மூலவேர் தமிழாக இருக்கும். மேற்பூச்சும் பிறவும் சமஸ்கிருதமாகத் தோன்றும்.

10) **மீட்டுருவாக்க ஓர் இயக்கம்:** இன்றைய நிலையில், இயன்றவரை - சமஸ்கிருத மயமாக்கப்பட்ட அனைத்தையும் தமிழில் மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். அதனை ஓர் இயக்கமாகவே செயற்படுத்த வேண்டும். என்றேனும் ஒருநாள் தமிழுணர்வு முழுமையாய்ப் பெற்ற தமிழக அரசு தோன்றும். இன்று நாம் தூவும் இவ் உண்மை விதைகள் அன்று வளர்ந்து பயன்தரும் என்பது உறுதி.

ooo

# உள்ளுறை


நூன்முகம்

| | | |
|---|---|---|
| 1. | சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் | 13 |
| 2. | வேதமும் ஆகமமும் | 35 |
| 3. | தமிழில் வழிபாடு - குழப்பமும் விளக்கமும் | 58 |
| 4. | இறைவன் இறைவி பெயர் மாற்றம் | 81 |
| 5. | இருக்கு வேத சாரம் | 103 |
| 6. | யஜுர் வேத சாரம் | 138 |
| 7. | சாம வேத சாரம் | 151 |
| 8. | அதர்வ வேத சாரம் | 161 |
| 9. | சண்டீசர் வரலாறு | 176 |
| 10. | மனுநீதிச் சோழன் வரலாறு | 189 |
| 11. | வேள்வியும் வழிபாடும் | 200 |
| 12. | சிவ வேதியரும் வேத வேதியரும் | 216 |
| 13. | கொள்கை இல்லாக் கூட்டணி | 231 |

# 1

# சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

1960களில் மதுரைத் தியாகராசர் கல்லூரியில், விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் ஒரு கருத்தரங்கு நடந்துளது. அதில் மு. வரதராசனார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், சி. இலக்குவனார் போலும் தமிழ்ப் பேராசிரியர் பலர் கலந்து கொண்டுள்ளனர். அதில் கே. ஏ. நீலகண்ட சாத்திரியார், முருக வழிபாடு மத்திய ஆசியாவில் தொடங்கி, வடநாட்டிற்கு வந்து, தெற்கே பரவியது என ஒரு கட்டுரை படித்துள்ளார். எங்கள் பேராசிரியர், அக்கட்டுரையின் ஆங்கிலப் படியைக் கொணர்ந்து, என்னிடம் தந்து, இதற்கு ஒரு விரிவான மறுப்புரை எழுதுங்கள், என்று கூறித் தம் குறள்நெறியில் அதை வெளியிடுவதாகவும் கூறினார்.

அதற்காக சங்கப் பாடல்கள் முழுவதும் தேடி, பல சான்றுகளுடன் 'முருகன் தமிழ்க் கடவுளே' எனத் தொடர்ந்து வெளிவருமாறு, ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதினேன். முருகன் தமிழரின் முன்னோன், வடவர்க்கு இராமனைப் போலத் தமிழர்க்கே ஒரு பண்பாட்டுச் சின்னமாக விளங்கியவன், கடல்கொண்ட தென்னாட்டை ஆட்சி செய்தவன். தமிழர்களின் கடல் வாணிகத்தில் குறுக்கிட்டுக் கொள்ளையடித்த கடற் கொள்ளையர்களைப் போரிட்டு அழித்துத் தமிழரைக் காத்தவன், அதனால்தான் அவன் போர்முனைகளாக முன்புகொண்ட ஆறு இடங்களும் 'படை வீடுகள்' எனப்பட்டன. அவன் பின்னர் ஒரு போர்க் கடவுளாகப் போற்றப்பட்டான், பலவகையிலும் தமிழர்களின் அக, புற வாழ்க்கைக்கு மேல்வரிச் சட்டமாகப் போற்றப்பட்டான் என மிக விரிவாக எழுதியிருந்தேன். அக்கட்டுரை தமிழ்ப் பேராசிரியர்களிடம் எனக்கு ஒரு நன்மதிப்பை ஏற்படுத்தித் தந்தது. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள், தம் நூல் ஒன்றில் என்னைப் பற்றி எழுதியிருந்தார். கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் படித்த கட்டுரையைக் குறிப்பிட்டுவிட்டு, "இதை மறுத்துத்

தமிழறிஞர் சிலர் 'குறள்நெறி'யிற் கட்டுரை வரைந்தாரேனும், நாடு முழுவதும் கிளர்ச்சி எழவில்லை. முப்பெருஞ் சிவமடங்களும் மூகங்களாயிருந்து விட்டன. சட்டப்புலமைபெற்ற தமிழக வழக்கறிஞரும் சற்றும் வாய்திறந்திலர். இந்நிலையில் தமிழண்ணல் இராம. பெரியகருப்பன் எம். ஏ., 'குறள்நெறி' யிதழ் நான்கில் வரைந்த தொடர் கட்டுரை மிகப் பாராட்டத்தக்கதும் தமிழன் தன் மானத்தைக் காப்பதுமாகும்'', என எழுதியிருந்தார் (*இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?, 1968*).

முருக வழிபாடு கடல்கொண்ட குமரிக் கண்டத்ததாகும். இன்று அக்கடவுள் பெயரால் வழங்குவன, முன்னையவற்றின் நினைவாகத் தமிழர் கொண்டாடி வருபவையே, இம் முருக வழிபாடு தனியே தோன்றி வளர்ந்து, சிவ வழிபாட்டுடன் இரண்டறக் கலந்தது. இவை இரண்டின் ஒன்றிய தன்மையை, அறிஞர் பலர் முன்பே ஆராய்ந்து எழுதியுள்ளனர். இவை ஒருபுறம் இருக்க, தமிழரின் நிலவழித் தெய்வ வழிபாட்டைப் பற்றிக் காண்போம்.

தமிழர்கள் குறிஞ்சிச் சிவ வழிபாடு, முல்லைத் திருமால் வழிபாடு, பாலைக் கொற்றவை வழிபாடு மூன்றையும் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே போற்றி வந்துள்ளனர். (குறிஞ்சியில் வருவது சிவ வழிபாடே, யன்றி, அது முருக வழிபாடன்று. மாயோன் - கருமை நிறத்தவனாகிய திருமால்; சேயோன் - சிவந்த நிறத்தவனாகிய சிவன். சேய் - குழந்தை என்றும் பொருள் தருதலின் இடைக்காலத்தார் தவறுபட உரையெழுதிவிட்டனர்).

ஆரியர்கள் சமண புத்த சமயங்களினால், தாம் நிலைகுலைந்த போது, தமிழரது ஆகம வழிபாட்டுக்குத் திரும்பிக் கொண்டு, இம் முக்கடவுளரையும் ஏற்றுக்கொண்டு, அக்கடவுளர்களைப் பற்றி உபநிடதங்களிலும் புராணங்களிலும் நூற்றுக்கணக்கான புனைவுகளை எழுதி வைத்துக் கொண்டனர். அவற்றைக் காட்டி, பத்திநெறியே தமிழர் நெறியாதலின் அதைக் கைப்பற்றி, முதலீடாக்கிப் புண்ணிய வாணிகம் செய்துகொண்டு, தமது ஹோமங்களையும் வேள்விகளையும் சமஸ்கிருதச் சடங்குகளை யும் நடத்திக் கொண்டு இரண்டு நெறியிலும் வருமானம் தேடி வாழ்ந்து வருகின்றனர். இவையும் ஒருபுறம் இருக்கட்டும்.

வேதங்கள் தமிழாக்கம் பெற்றதுபோல், ஆகமங்களும் தமிழாக்கம் பெறவேண்டும். புதுச்சேரியிலும் சிவாச்சாரியார் சிலரிடமும் ஆகமங்களில் அழிக்கப்பட்டன போக மீதமுள்ளன சில உள என்று கூறுகின்றனர். ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டனவும் கிடைக்கக் கூடும். மும்மொழி அறிஞர் மு. அருணாசலம் ஆகமத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்துள் ளார். இவை அனைத்தும் தமிழில் விரைவில் மொழிபெயர்க்கப் பட்டு, வெளியிடப்படவேண்டும்.

திருமூலரும் திருமுறை அருளாளர்களும் பிறசில நூல்களும் கூறும் தமிழாகம நெறிகளும் தொகுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு புதிய தமிழாகமங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றின்படி தமிழர்தம் திருக்கோயில் வழிபாட்டு நெறிகள் சீர்திருத்தப்பட வேண்டும். இதற்குக் கோடிக்கணக்கில் அறக் கட்டளை நிறுவி, பலர் கூடிப், பல ஆண்டுகள் உழைத்து உருவாக்க வேண்டும்.

தமிழன் தன்னலத்தைக் கைவிட்டு, விளம்பரம் தேடாது, இத்தகைய உருப்படியான பணிகளில் இனியேனும் ஈடுபட வேண்டும். நம் திருக்கோயில் நிதிகள் இதற்குப் பயன்படவேண்டும்.

குறிஞ்சி நில வழிபாடு சிவ வழிபாடே எனவும் சிவன் மால் கொற்றவை மூன்றும் தமிழர் வழிபாடுகளே எனவும் ஐயத்திற்கு இடமின்றி நிறுவ, சிலப்பதிகார வேட்டுவ வரி உதவுகிறது.

அனைத்துவகைக் கருத்துக்களுக்கும், குழப்பங்களுக்கும் இடம்தரும் உபநிடதப் புராணங்களுக்கு முன்பு, வடவர்தம் வேள்விநெறி பற்றிய கூர்தலற வளர்ச்சியைக் (பரிணாமம்) காண வேண்டும். அதுபோலத் தமிழர்தம் திருவுருவத் திருக்கோயில் வழிபாட்டுக் கூர்தலற வளர்ச்சியைக் காண்பதும் உண்மையைத் தேட உதவும் ஒளிக்கதிர்களாகும்.

தமிழர்தம் இயற்கைச் சூழல் வழிப்பட்ட நிலத் தெய்வ வழிபாடுகளில் சிவன், திருமால், கொற்றவை வழிபாடுகள் மேலோங்கின என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். இவை மூன்றும் முறையே குறிஞ்சி, முல்லை, பாலைநில வழிபாடுகளாகும்.

தமிழகத்தில் அடர்ந்த காடுகள், மலைகள் சூழ்ந்து, ஒரே அடர்த்தியாய், எங்கும் பசுமையாய், ஆங்காங்கு, சிற்றூர்களையும் கடற்கரை ஓர மருத நிலங்களில் மட்டும் பெருநகரங்களையும் கொண்டிருந்த காலம் அது. தமிழகத்தில் இவ்வாறு நான்கு நிலங்களே நிலையாக இருந்தன. தொல்காப்பியரும் 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்' என்று இவற்றையே குறிப்பிட்டார். தமிழில் உலகை 'நானிலம்' என அழைக்கும் வழக்கமொன்றுண்டு.

பிறகு பாலை நிலம் எங்கிருந்து வந்தது?

குறிஞ்சி நில மலைகளுக்கு அப்பாலிருந்த, எல்லை ஓரப் பகுதிகளும் முல்லை நிலக் காடுகளுக்கு இறுதியில் இருந்த அதன் எல்லையோரப் பகுதிகளும் ஓரளவு சேர்ந்து, கலந்திருக்கும். அவை வெப்பம் மிக்க கோடை காலத்தில் (முதுவேனில்) பெரிதும் வறண்டு, வெறும் குத்துச் செடிகள் மட்டுமே கரிந்தும் - மரங்கள் வாடியும் காணப்படும். அதுவே மக்கள் போக்குவரத் துக்கு உதவும் பெருவழிப் பாதையாயிற்று. இந்தப் பகுதிகள் மழைக்காலத்தில், மீண்டும் தளிர்த்துத் தழைத்துக் காணப்படும். பிற எல்லாம் கருங்கும்மெனத் திரண்டுருண்ட அடர்ந்த காடு களாகவே இருந்தன. அதனால் மக்கள் போக்குவரத்திற்குப் பயன்பட்ட இதைப் பாலை என்றனர்.

பெரும் போர்க்களங்களும் - வெண்ணிப் பறந்தலை, வாகைப் பறந்தலை போல்வனவும் இவ் பாலைநில வெளிகளிலேதான் நடந்தன.

தொல்காப்பியர் பாலையை நடுவுநிலைத் திணை என்றார். இளங்கோவடிகள் அதனை,

வேனிலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற்குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலம்பு 11, 62 – 66)

என்கிறார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. முல்லை குறிஞ்சி பாலை - மூன்றும் ஒன்றினொன்று இயைபுடைய நிலங்களாகும். அதனால் இம் மூன்றின் நிலத் தெய்வ வழிபாடு களிலும் ஒரு கலப்பு ஏற்பட்டது.

கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் சோழநாட்டு வழிகளில் மதுரை நோக்கி நடந்ததை நாடுகாண் காதை என்றும் அதைக் கடந்து பாண்டிய நாட்டிற் புகுந்து நடந்ததைக் காடுகாண் காதை என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அது பாலை நில வழியாதலின் கண்ணகிக்கு வேனிலின் வெப்பம் தாங்க வொண்ணாதாயிற்று. அதனால் வழியிடையேயிருந்த, கொற்றவைத் தெய்வத்திற்குரிய ஐயை கோட்டத்தை அடைந் தனர். அங்கு ஓய்வு பெறுமாறு தங்குகின்றனர். அது ஆறலை கள்வராம் எயினர்கள் வாழும் இடமாகும். அப்போது அங்கு அவ்வேட்டுவக் குடியினராம். எயினரும் எயிற்றியரும் தங்கள் பாலைநிலத் தெய்வமாகிய கொற்றவையை வழிபடும் நிகழ்வு ஒன்று நடப்பதை, இம்மூவரும் வேடிக்கை பார்ப்பதாக, 'வேட்டுவ வரியை' அமைக்கின்றார் இளங்கோவடிகள்.

சாலினி என்ற பெண்மீது, தெய்வமுற்று, அவள் 'சாமி வந்து' - அருள் வந்து ஆடுகிறாள்.

கலையமர் செல்வி - கலைமான் மீது அமரும் கொற்றவைத் தெய்வம். அவளுக்கு நேர்த்திக் கடன் கொடுக்காததால், அங்கிருந்த எயினர் குடிக்கு நிரை கவராமல் வளம் சுருங்கிப் போனதாம்; வழிப்பறி வாய்க்காததாலும் செல்வ வளம் குன்றிப் போனதாம். மறக்குடி மக்களாகிய அவர்கள் அறக்குடி மக்கள் போல் அடங்கிப் போயினராம். இதற்கு, அச்செல்விக்குக் காணிக்கையை - கடனைச் செலுத்தி, ஆடிப்பாடி வணங்கித் தொழுதாலன்றி, எயினர் குடிக்கு வாழ்வில்லை என்று, அருள் வந்தாடிய சாலினி கூறினாள்.

ஊர் நடு மன்றத்தில், அப்பழங்குடி மக்களில் ஓர் இளம் பெண்ணாகிய குமரியைக் கொற்றவைபோலப் புனைந்தனர்.

அவளது நெறித்த கூந்தலைச் சடையாகக் கட்டி, அதில் ஒரு பாம்புக் குட்டியைக் கொண்டு, இறுகக் கட்டினர்.

தடித்ததொரு காட்டுப் பன்றியின் வெண்ணிறச் சிறு கொம்பைக் கொணர்ந்து, அக்குமரியின் நெற்றிக்கு மேலே, பிறை என அணிவித்தனர்.

புலிவாயைக் கிழித்து உதிர்த்த அதன் பல் வரிசையை, அக்குமரியின் நிரைத் தாலியாக அணிவித்தனர்.

புலித்தோலை, மேகலையாக இடையில் உடுத்தினர்.

அவளைக் கலைமான்மேல் ஏற்றிவைத்து, அவள் கையில் கூரிய அம்பைக் கொடுத்தனர்.

பாவை, கிளி, காட்டுக்கோழி, மயில், பந்து, கழங்கு எல்லாம் படைத்து வணங்கினர்.

பெண்கள் அவரை, துவரை, எள், நிணச்சோறு மற்றும் வண்ணம், சுண்ணம், சாந்தம், பூ, நறும்புகை, எல்லாம் ஏந்தியபடி எயிற்றியர் பின்வர, பறை சூறைச்சின்னம் முதலான வாத்தியங்கள் முழங்க, பின்னே வந்தனர்.

இவ்வாறு வந்த அனைவரும் அக்கொற்றவை வேடக் குமரியை வணங்கி, பாடல்கள் பாடி ஆடி வணங்கினர்.

அப்போது, தெய்வமுற்றவளாகிய சாலினி, வேடிக்கை பார்த்து நின்ற கண்ணகியைப் பலவாறு பாராட்டினாள்.

இவ்வாறு வழிபாடு நடந்ததால், 'தமர் தொழவந்த குமரிக் கோலத்து அமரிளங்குமரியும் அவர்களுக்கு அருள் செய்தாள். முன்னர் அக்குமரிக்கு அணி செய்தன எல்லாம் சிவனுக்கு உரியன எனக் கூற வேண்டியதில்லை. அப்பாலைநிலம் குறிஞ்சி திரிந்த **பாலை ஆதலின், குறிஞ்சிக்குரிய சிவத் தோற்றம் புனைந்தனர் என்பதால், குறிஞ்சி வழிபாடு 'சேயோன்' - எனச் சிவ வழிபாடே என உறுதிப்படுகிறது.**

இனி, அக் குமரியை - கொற்றவையை அவர்கள் எவ்வாறு தொடக்கத்தில் அருச்சித்துப் பாடினர் என்பதைக் காண்போம்.

மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி

கரியின் உரிவை போர்த்து அணங்காகிய
சிலம்பும் கழலும் புலம்புஞ்சீரடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை (12: 54 – 64)

இதில் கொற்றவையைப் பெரும்பகுதி சிவனாகவும் மற்றொரு பகுதியைத் திருமாலுக்குரியதாகவும் புனைவது புலனாகிறது. கொற்றவையைத் திருமாலின் தங்கையாக மட்டுமன்றி, திருமாலாகவே புனைவதும் காணப்படுகிறது. மூன்று நிலம் கலந்த இடத்தில் (குறிஞ்சி, முல்லை, பாலை) மூன்று தமிழ்க் கடவுளர் வழிபாடும் ஒன்று கலந்து வெளிப்படும் தொடக்கநிலையை, இவ்வேட்டுவவரி மூலம் இளங்கோவடிகள் உணர்த்தியுள்ளார். இதனை நன்கு மனங்கொண்டு சிந்திக்கவேண்டும்.

மதிசூடல், நெற்றிக்கண், நஞ்சுண்டு கறுத்த கழுத்து, மலையை வளைத்துப் பாம்பை நாணாகப் பூட்டிய தொன்மம், பாம்பினை மார்பில் கச்சாக அணிந்தமை, சூலம் ஏந்தியமை, யானைத்தோல் போர்த்தமை, புலித்தோல் உடுத்தமை, எல்லாம் கூறி, ஒரு காலில் சிலம்பும் (பெண் வடிவம்) மறுகாலில் கழலும் (ஆண் வடிவம்) அணிந்தமையும் இறுதியில் சொல்லி முடிக்கப்படுவதில் மங்கை பங்கன், உமையொரு பாகன் எனும் தொன்ம வடிவமும் தொடர்ந்து விளக்கப்படுகின்றன. வடவர் 'அர்த்த நாரீசுவர வடிவம்' என மொழிபெயர்த்துக் கொண்டமையால் இதனையும் ஏதோ அவர்களிடமிருந்து பெற்றதுபோல் நினைப்பவர் உண்டு. இவற்றைத் தமிழர் நிலத் தெய்வ வழிபாட்டின் கூர்தலற வளர்ச்சி - பரிணாமம் என்பதற்கு இவ்வரிப்பாடல் நிலைபெற்ற சான்றா கிறது.

மேலும், இதே பாடலில் அவர்கள் இசையுடன் பாடி ஆடுவனவற்றுள், இவை மேலும் அழுத்தமாய்க் கூறப்படுகின்றன. திங்கள் வாழ் சடையாள், திருவ மாற்கு இளையாள் என்பன காண்க. தொடர்ந்து வருவன, ஆடலுடன் கூடிய இசைப்பாடல்கள் - 'வரி' என்பது ஒருவகைக் கூத்து, ஆடல் வகை. அவ் இசைப்பாடல் களில் இடையிடையே இம் தெய்வ வணக்கங்கள் ஒன்றாக இருந்து பிரிந்து வளர்ந்தன என்று எண்ணும்படியான கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலை மேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரிஅரன் பூ மேலோன் அகமலர்மேல்மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக் கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய்

ஆங்குக்
கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த
துன்றுமலர்ப் பிணையல் தோள்மேல்இட்டு ஆங்கு
அசுரர் வாட அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே (12: 8– 11)

இதில் முதலில் சிவத்தொன்மமும் அடுத்து கொற்றவைத் தொன்மமும் மூன்றாவதில் திருமால் தொன்மமும் கலந்து வருகின்றன.

முடிவில் கொன்றையும் துளவமும் கலந்து தொடுத்த மாலையைக் கொற்றவை தோள்மேலிட்டுக் கூத்து ஆடினள் என வருகிறது. இவ்வளவும் அக் குமரிக் கோலத்தவளைக் கொண்டு ஆடியவை.

தொல்காப்பியர் நிறைமொழி மாந்தர் கூறிய பல மறைமொழிகள் வழங்கின என்றும் எழுவகை (யாப்பில்) இலக்கிய வகைகளில், மந்திரம், வாய்மொழி என்ற பெயர்களுடனும் மறைகள் வழங்கின என்றும் கூறுகிறார். நம் அருளாளர்களும் மறைகள் பல எனக் கூறுமிடங்கள் உள. வடமொழி மறைகள், அம்மொழிக்குரிய ஒருவகை மட்டுமே. அவற்றில் இங்குக் கூறப்பட்ட, எத்தொன்மமும் துருவித் தடவிப் பார்த்தாலும் காணப்படவில்லை.

தொன்மைமிக்க காலத்தில் தமிழரிடையே காணப்பட்ட இத்தகைய தொன்மங்கள், ஏதோ வரலாற்றுவழிப் பழங்கதை களில் இருந்து கிளைத்தனவோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. தொல்காப்பியர் இசைத்தமிழ் நூல்களை, 'நரம்பின் மறை' என்பதால், இத்தகைய இறைமைத் தொன்ம மறைகளும் இருந்தன என நம்பக்கூடும்.

வடமொழிப் புராணங்கள் பலவும் அவர்கள் வேள்விகள் செல்வாக்கிழந்தபின், தமிழருடன் கூடி, தமிழர் வழிபாடுகளை ஏற்று, தமிழர்களின் மறைகள், தொன்மங்களை, ஆகமங்களைத் தம் மொழியில் ஆக்கிக் கொண்டு, தமிழரிடையே செல்வாக்குடன் வருமானம் தேடி வாழ முற்பட்டதையே காட்டுவனவாகும்.

எனவே, இளங்கோவடிகள் இவ் வேட்டுவ வரிமூலம் அக் காலப் பாலைநில மக்களின் உண்மையான வாழ்வு நெறிகளை நேரிற்கண்டு பாடி, தமிழர்கள் உண்மை உணர வேண்டி இவ்வளவும் பாடியுள்ளார் என எண்ண வேண்டியுளது.

தொன்மங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, அடிப்படைகளை வைத்துப் பார்த்தால், தமிழர்தம் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை வழிபாடு மூன்றும் நிலப் பின்னணி வழிபாட்டில் வளர்ந்தவை என்பதை யாரும் மறுத்தல் இயலாது.

## ஊர் நடு மன்றமும் மர வழிபாடும்

வேட்டுவ வரியில் 'நடுவூர் மன்றத்தில்' சாலினி, தெய்வமுற்று ஆடிய குறிப்பு வருகிறது (அடி 11). பழங்காலத்தில் மக்கள் மரங்களில் தெய்வமிருப்பதாக நம்பி வழிபட்டனர். 'மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள், கொடியோர்த் தெறூஉம் என்ப' என்பது குறுந்தொகை. மராமரத்திலுள்ள கடவுள் கொடியவர் களைக் கொன்றுவிடும் என்ற அச்சம் பற்றிய குறிப்பு இது. இதிலும் 'மன்ற மராஅத்த' என்று ஊர் நடுமன்றம் குறிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

மரங்களை வழிபடுவது இக்காலத்தும் நிலவியது. அரச மரத்தைப் புலர் காலையில் சுற்றிவந்து வழிபடும் வழக்கம் இருந்தது. அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் குளக்கரை

போலும் இடங்களில், அடுத்தடுத்து வைத்து வளர்த்து, அவற்றுக்கு மேள தாளத்துடன் திருமணம் செய்து வைத்தனர். அதனால் குழந்தை பிறக்கும் என நம்பினர்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இத்தகைய பல வழிபாடுகள் இருந்ததைத் தனி ஆய்வாக மேற்கொள்ளலாம். நாம் இங்கு சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறோம்.

தன்னை எதிர்த்து வந்த புலியை, யானையைக் கொன்று, அதன் தோலைக் காயப்போட்டு உடையாக உடுத்திக் கொண்டது ஒரு காலம். அவ்விலங்குகளை அசுரர்களாகவும் அவற்றைக் கொன்றவனைத் தெய்வமாகவும் உருவகித்தமை புலனாகிறது. தழைகளைப் பறித்துத் தைத்து, இடையே பூக்களை வைத்து, அதனைத் 'தழையுடையாக' உடுத்ததுண்டு. 'ஆவி அன்ன அவிர் நூற்கலிங்கம்' வந்த பிறகும், முந்தைய இவ் வழக்கங்களைச் சடங்குகளின்போது பயன்படுத்தியுள்ளனர்.

அன்று ஊர் நடுவே நாற்சதுர வடிவில் மேடை அமைத்து அவற்றை **மன்றம், பொதியில், அம்பலம்** என அழைத்தனர். அதுவே ஊர்ப் பொதுவிடம். அதில் ஆல், அரசு போலும் மரங்களை வளர்த்து வழிபட்டுள்ளனர். அக்காலத்தில் அதுவே ஊராட்சி மன்றம்; முறைகேட்டுக் குறைநீக்கும் நீதிமன்றமாம் அம்பலம்; மேலும் அங்குள்ள மரமே மக்கள் வழிபடுமிடமுமாம்.

இன்றும் நம் திருக்கோயில்கள் பொன்னம்பலம். வெள்ளியம்பலம் எனப்படுவதும், 'பொதுவில் நடமிடும் அரசே' எனப் பாடப் படுவதும், மன்றில் ஆடும் மாணிக்கமே எனப்படுவதும் எல்லாம் அதன் தொடர்ச்சியேயாகும்.

காலப்போக்கில் ஊர்நடு மன்றத்தில் மரங்கள் மழை இடி மின்னல் போன்றவற்றால் அல்லது பழைமையால் முறிந்தும் ஒடிந்தும் போவதுண்டு. சில ஊர்ப் பொதுவில் மரமே இல்லாதும் போவதுண்டு. அப்பொழுதெல்லாம், அம்மன்றத்தின் நடுவே ஒரு மரத்தறியை வைத்து வழிபட்டுள்ளனர். அந்தத் தறி அடி பெருத்தும், நுனி சிறுத்துமிருக்கும். அது அசையாமலிருக்க, அதனடியில் நன்கு சுற்றிலும் மண் அணைத்து மேடையாக்கினர். இவ்வாறு மரத்தறியை வழிபட்டதைச் சங்கப்பாடல்கள் தொடங்கி, தேவார காலம்வரை நிகழ்ந்ததாக அறிகிறோம்.

கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில் (பட்டினப்பாலை 246–49)

பகைவரை வென்று பிடித்துவந்த, அடிமை மகளிரைக் 'கொண்டி மகளிர்' என்பர். நீருண்ணும் துறை ஊருணிக்கரை. அங்கு நீரினுள் முழுகி, அந்திப்போதில், அணையா விளக்கை ஏற்றினர். அவர்கள் அவ்விடத்தை மெழுகினர். அப்பொதியிலில் இருந்த 'கந்து'வின் (கடவுள்தறி) மீது பூக்களை அணிவித்தனர். அவ்வழிப் போந்த புதியவர்கள் அதாவது வழிப்போவார் பலரும், அப்பொதியிலில் சற்றே இளைப்பாறத் தங்கினர். இவ்வாறு பலரும் அப்பொதியிலில் ஏறி, கடவுளாகிய கந்தினைத் தொழுதனர்.

இதில் 'பொதியில்' (பொது இல்) கந்து, நந்தாவிளக்கு, பலர் தொழுதல் என்பன நினைவில் வைக்கத்தக்கன. இங்கு நச்சினார்க் கினியர் கந்து - தெய்வம் உறையும் தறி என்று எழுதுகிறார். பொதியில் - அம்பலம் என்று அவரே திருமுருகாற்றுப்படையில் எழுதியுள்ளார் (226).

இதற்கு உ. வே. சாமிநாதையர் எழுதிய அடிக்குறிப்பில் 'கந்து' என்ற, கடவுளுறையும் தறி பற்றி வருமிடங்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

"கந்துடை நிலையினும்" (முருகு. 226). 'அருந்திறற் கடவுள் திருந்துபலிக் கந்தமும்' (மணி. 6 - 60) 'இலகொளிக் கந்தமும் (மணி. 24 - 162). 'மரம் சேர் மாடத்து எழுது அணி கடவுள் போகலில், புல்லென்று, ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணை' (அகம். 167). (எழுது என்றால் சித்திரமாக எழுதியது என்பதைவிட, 'சிற்பமாக வடித்த' மரத்தறி என்பது பொருந்தும். சிலம்பில் 'கடவுள் எழுத ஓர் கல் தாரான் எனின்' என்று வருமிடத்து எழுதுதல் என்பது சிற்பமாக - உருவமாக வடித்தல் என்றே பொருள்படும்). 'மாத்தாட் கந்தின் சுரை இவர் பொதியில் அங்குடிச்சீறூர் நாட்பலி மறந்த' (அகம். 287). 'புதல்இவர் பொதியில் கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து' (307). 'கலிகெழு கடவுள் கந்தம் கைவிட' (புறம். 52).

இவற்றின் விளக்கத்தையும் சிறிது காண்போம். திருமுருகாற்றுப் படையில் முருகன் உறையும் இடங்களாகக் குறிப்பன, அன்று 'கடவுள்' எனப்பட்ட சிவனுறையும் இடங்களையும் குறித்தது. 'சதுக்கமும் சந்தியும் புதுப் பூங்கடம்பும் மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்' (225 - 226) சதுக்கம் என்பதே. சதுரமான ஊர் நடுமன்றம் சிறிது உயரமாக, நான்கு பக்கமும் எழுப்பப்பட்டிருக்கும். நான்கு பக்கத்தும் தூண்கள் இருந்ததாகப் பட்டினப்பாலையில் ஒரு குறிப்புளது. கடம்பு மரம் - இருந்ததால் இது முருகனுறையும் இடமாயிற்று. இச்சதுக்கத்தில் ஆலமரம் இருந்தால், இதுவே கடவுள் - சிவன் உறையும் இடமாகும். (சங்கப் பாடல்களில் 'கடவுள்' என்ற சொல், பொதுப்பொருளைவிட, சிவனையே குறிப்பது கருதற்பாலது).

புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
உடனுறை பழைமையின் துறத்தல் செல்லாது
பெருங்கல் வைப்பின் மலைமுதல் ஆறே (அகம். 307)

அன்று மக்கள் வசிக்கும் இடந்தேடி, அடிக்கடி வலசை போயுள்ளனர். இவ்வாறு இடம்விட்டு இடம் மாறும்போது, இவர்கள் வணங்கியதும் ஊர் நடுவே இருந்ததுமாகிய 'கருந்தாட் கந்தத்தில்' இருந்த கடவுளும் போய்விட்டதாக, அதாவது தொழுபவர் இருக்குமிடத்தேதான் கடவுள் இருப்பார் என்ற கருத்து மிகவும் சிந்திக்கற்பாலது.

மக்கள் போனதால் மண்டபம் போலிருந்த சுற்றுச் சுவர்களில் மண்புற்றுக்கள் தோன்றிவிட்டன. புதர்கள் மண்டிவிட்டன. அப்பெருவழியிலிருந்த 'பொதியிலில்' மக்கள் போய்விட்டதால் கடவுளும் போய்விட்டாராம். இப்போது 'கருந்தாள் கந்து' மட்டுமே நிற்கிறது. கருந்தாள் - அசையாதபடி அடியிலிட்ட அணைப்புடன் கூடிய கந்து (கடவுளுக்கு அடையாளம் இது). கருந்தாள் - வலிய அடிப்பாகம். அங்கு புறாக்கள் வந்து தங்குவது வழக்கமாம். மக்கள் போய்விட்டதும், வந்து வந்து தங்கி உடனிருந்த பழக்கத்தால் புறாக்கள் வந்து தங்கள் பெட்டைகளையும் அங்கு அழைக்கின்றனவாம்.

மற்றொரு அகநானூற்றுப் பாடல் இன்னும் விரிவாக உளது.

தூங்குநிலை
மரை ஏறு சொறிந்த மாத்தாட் கந்தின்
சுரை இவர் பொதியில் அங்குடிச் சீறூர்
நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை
புரிசை மூழ்கிய பொரி அரை ஆலத்து
ஒருதளி நெடுவீழ் உதைத்த கோடை
துணைப்புறா இரிக்கும் (287)

ஆண்மரைமான், உராய்ந்ததால், பருத்த வலிய அடியினையுடைய கடவுள் கந்து உள்ள, சுரைக்கொடி படர்ந்த பொதியிலாகிய அம்பலத்தின் கண்ணே, நாள்தோறும் காலையில் கொடுக்கப்படும் பலி கொடுக்கப்படவில்லை. (பலி - உணவு, கடவுளுக்குப் பூசைக்காக வைப்பது. இது தமிழர் வழக்காறு. இன்றும் கோயில்களில் ஆறுகால பூசை, மூன்று கால பூசை என உணவை எடுத்துச் சென்று இறைத் திருமுன் காட்டுவதும், பலிபீடம் என முன்பு பலியுணவு வைத்த பீடம் இன்றும் இருப்பதும் அறியத்தக்கன. இங்கு, பலி என்பது உயிர்ப்பலி அன்று). அதற்குக் காரணம் அந்த அம் குடிச்சிறூரினர் இடம்பெயர்ந்து போய்விட்டனர். இதனால் இட்டிகை எனப்படும் செங்கல்லால் ஆன பலிபீடம் வெளிறிக் கிடந்தது. அப்பொதியிலின் பக்கத்தே, மதில்போற் சூழ்ந்த அடைப் பினையுடையதும் பொரிகள் பொருந்திய அடியினையுடையதும் ஆகிய ஆலமரத்தின் தனித்த ஒரே ஒரு நீண்ட விழுதை மோதிய கோடைக்காற்று, துணையுடன் கூடியிருந்த புறாக்களை விரட்டியதாம்.

ஆலமரம் விழுதுகளுடன் உயர்ந்தோங்கி நிற்பதைச் சடைமுடியுடன் தோன்றும் சிவன் எனக் கருதினர். ஆலமர நிழலில் சிவன் உறைவதாகத் தமிழரிடம் ஒரு நம்பிக்கை இருந்தது.

இது போன்றதொரு கருத்துப் புறநானூற்றிலும் வருகிறது;

இனியே
கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில் (52)

கந்து என்னும் தறியில், மக்கள் தொழும்போது கடவுள் அதில்

அமர்ந்திருப்பதாகவும், அவ்வாறு தொழுபவர் போய்விட்டால், கடவுளும் அக்கந்தினை வெறும் தறியாக விட்டுவிட்டுப் போய்விடும் என்றும் எண்ணும் கருத்து மிகவும் சிந்திக்கத்தக்கது.

மலர்தூவி, மழைவேண்டி கடவுள் பேணிய குறவர் மாக்கள் (புறம் 143), அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப் பெருங்கல் நாடன் (புறம் 158), குறவன் மகள், மன்ற வேங்கை மலர் சில கொண்டு, மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி, தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையள் (ஐங். 259) என வருவன பலவும் 'கடவுள்' என்று சிவ வழிபாட்டையே குறிக்கின்றன.

நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை
கடவுள் பேணேம் என்னா. . .

என்று கபிலர் பாடுகிறார் (புறம் 106). புல்லிலை எருக்கம் பூவும் போதும் என்னும் கடவுள் சிவனே என்பது தெளிவு. ஏனெனில் அவன்தானே 'வெள்ளெருக்கம் சடைமுடியான்'. பிறகு வேறென்ன சான்று வேண்டும்?

இவ்வழிபாட்டின் தொடர்ச்சியைத் திருநாவுக்கரசராகிய அப்பர், கி. பி. ஏழாம் நூற்றாண்டில், மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

காதன்மையால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே
(திருக்கன்றாப்பூர்த் திருத்தாண்டகம்)

மரவழிபாடு தொடர்ந்து கந்து, தறி வழிபாடாக மலர்ந்தது. சிவபெருமான் தில்லை என்னும் சிதம்பரத்தில் தில்லை மரத்தின் கீழ் உறைந்தவர்; திருவாலவாயாம் மதுரையில் கடம்ப மரத்தின் கீழ் இருந்தவர்; திருவானைக் காவில் நாவல் மரத்தின் கீழிருந்து அருளியவர்; திருப்பாதிரிப்புலியூரில் பாதிரி மரத்தின் கீழ் அமர்ந்தவர்; திருமயிலாப்பூரில் புன்னை மரத்தின் கீழ் உறைந்தவர்; திருவொற்றியூரில் மகிழ மரத்தின் கீழ் அமர்ந்திருந்தவர் (மறைமலையடிகள் - தமிழர் மதம்). மருத மரத்தின்கீழ் இருந்தமையால் மருதீசர் என்றோ பரியா மருதர் என்றோ அழைக்கப்பட்டார். ஆலங் காட்டில் ஆலின்கீழ் இருந்தவர். காரைக்காலம்மை பாடிய 'ஆலங்காடு' தொன்மை மிக்கதாய்த் தோன்றுகிறது.

ஆரியர் தம் மூல நூல்களாம் வேதம் முதலியவற்றில் காணாத பல அடிப்படைச் செய்திகள் ஒருதிறத்தன.

அவர்கள் தஸ்யூக்கள் - திராவிடர்கள் - தமிழர்கள் எனப் பலவாறு அழைக்கப்பட்ட இந்தியப் பழங்குடியினருடன் கலந்தபின் தோன்றிய அவர்களது நூல்கள் பிரிதொரு திறத்தன.

வரலாற்று வழி இவ் வேறுபாட்டை வைத்து, ஆழமாக ஆராய்ந்தாலன்றித் தெளிவு பெறுதல் அரிது.

ஆரியர்களின் அக்கினி வழிபாடு, வேள்விச் சடங்குகள், அருவ வழிபாடு, அத்துவைதமாம் ஏகான்ம வாதம் போல்வன ஒரு சார்பின.

தமிழர்தம் மரவழிபாடு, கந்து, தறி வழிபாடு, நடுகல் வழிபாடு, கோயில் வழிபாடு, உருவ வழிபாடு, முப்பொருளுண்மை மெய்யியல் ஆகியன பிறிதொரு சார்பின

ஆலமர் செல்வன் பற்றிய கருத்து, சங்க காலம் தொடங்கி, தேவார காலம் வரை காணப்படுகிறது.

தமிழர்தம் வழிபாடுகளாகிய இவை வடமொழியில், தமிழர் தொடர்பு ஏற்படுமுன் எழுந்த எந்த நூலிலும் காணப்படாதவை.

உபநிடதங்கள் 285, 108, 31, 10 எனப் பலவாறு கூறப்படுகின்றன. இவற்றுள் **பத்து உபநிடதங்களே உண்மையானவை** என அறிஞர் பலர் கூறியிருப்பதன் காரணம் என்ன? ஆரியர்களில் தம் வேத வேள்வி அருவ வழிபாடுகளிலே ஊறி நின்றவர்கள் உருவாக்கி யவையே, அவர்களைப் பொறுத்தவரை உண்மையானவை, பிற யாவும் சமண, புத்த சமய எதிர்ப்பினை மடை மாற்றவும் தமிழரு டையவற்றை உருமாற்றவும் காலந்தோறும், அவ்வப்போது எழுதிச் சேர்த்துக் கொண்டவை. முன்னைய உறுதிப்பாடுடைய, தீவிர வைதிகர்கள், பின்னர்த் தோன்றிய இவற்றைப் போலிகள் என ஏற்க மறுத்தனர் (வடுவூர் நாராயணனது நூல் காண்க).

ஆகமங்களின் கதையும் இதுதான். ஒரு செருமானியப் பேராசிரியர், ஆகமங்கள் தமிழருடையவையாக இருந்தன. அவை

பல கடல்கோள்களால் அழிவுற்றன; பிற சில கறையான்களால் அழிக்கப்பட்டன. எஞ்சியிருந்தவற்றையும் ஆரியர்கள் அழித்து விட்டு சமஸ்கிருதத்தில் அரைகுறையாக எழுதி வைத்துக் கொண்டனர். இதையும் அச்செருமானியப் பேராசிரியர் குறிப்பிடுதல் காணலாம்.

முதலில் தோன்றியன 108 வைணவ ஆகமங்கள்; சைவ ஆகமங்கள் 28; பிற்பட்ட காலத்தே சக்தி பற்றி 27 ஆகமங்கள் இருந்தன என்று கூறிக் கொள்வர். சைவ ஆகமங்கள் 28க்கு, 207 உப ஆகமங்கள் இருந்தன என்று மு. அருணாசலம் கூறுகிறார்.

வேதங்கள் கூறும் வேள்விகளின் தொடர்ச்சியான உபநிடதங்களில் இருவேறு சாரார் இருந்தனர் எனக் குறிப்பிட்டோம். தங்கள் வேள்வி தொடர்பான அருவ வழிபாடுகளில் உறுதியாக இருந்தவர்கள்; வேள்விகள் குறையக் குறைய, வாழ்வுதேடி ஆகம நெறிக்கு மாறிக் கொண்டவர்கள் எனப் பிரிந்தவர்கள். எனினும் பொதுநலம் கருதும்போது சேர்ந்து கொள்வர்; தந்நலம் தேடும் போது பிரிந்து செயல்படுவர். பிரிந்து வந்தவர்கள்தான், தமிழர் சமய நெறிகளைச் சமஸ்கிருதமயமாக்கித் தொலைத்தனர்.

ஆகமம் என்ற சொல்லின் முதற்பொருள் 'பழைமையிலிருந்து வந்தது' என்பதே. ஆயினும் தமிழருடையன இயற்கையால் அழிக்கப் பட்டனவும் அயலவரால் அழிக்கப்பட்டனவுமாக, எல்லாம் மறைந்தொழிந்தன.

ஆகம நெறிகளை ஏற்பதிலும் அவர்களுள் இருசாரார் இருந்துள்ளனர். ஒருசாரார் முற்றிலும் இவற்றை வெறுத்த வேத வைதிகர்கள். பிறிதொரு சாரார், தாம் வாழவேண்டி ஆகமநெறிகளுக்கு மாறிக் கொண்டவர்கள். இந்தக் 'கட்சிமாறி' களாலேதான், தமிழ் ஆகமநெறிகள் பல அழிக்கப்பட்டு சமஸ்கிருதமயமாக்கப் பட்டன. இவ்வாறு தமிழ் ஆகமங்களை அழித்த முதல்நிலை ஒன்று; அடுத்தது சமஸ்கிருத மயமாக்கப்பட்டவற்றிலும் சிலவற்றை அத்தீவிர வைதிகப் பிராமணர்கள் அழித்தனராம். விருப்பு வெறுப்புக்கு ஆளாகும் நிலையினரல்லாத, ஓர் அயல் நாட்டவர், செருமானிய அறிஞர் கூறுவன இவை.

(Unlike most works, the Agamas do no emphasise the supremacy of the Brahmins, so the Brahmins may will have opposed them . . . . - H. W. Schomerus, Saiva Siddhanta, M. B. Publishers, Delhi, 2000).

இத்தகைய குழப்பங்களிலிருந்து தமிழ்நெறி மீட்கப்பட வேண்டும்; தமிழர் சமய நெறிகளும் மீட்டுருவாக்கம் பெற்றுத் திருக்கோயில் வழிபாடுகளில், சட்டப்படியான சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்பதே எம் விழைவு.

## ஆலமர் செல்வன் வழிபாட்டுத் தொடர்ச்சி

வடமொழியில் காணாது தமிழ் நூல்களில் மட்டுமே மிக விரிவாகக் காணப்படும் ஆலமர் செல்வனாம் சிவன்பற்றி, மேலும் நுட்பமாக ஆராயவேண்டும். இது முன்பு கூறிய தமிழர்தம் மரவழிபாடு, கந்து (தறி) வழிபாடு ஆகியவற்றின் தொடர்ச்சியாகும். சங்க காலந்தொட்டு, பத்திமை இயக்க இலக்கிய காலம் வரை இதன் தொடர்ச்சி காணப்படுகிறது.

1. ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம் (புறம். 198)

2. ஆலமர் செல்வர்க்கு, ஆய் வள்ளல் நீலநாகம்
நல்கிய கலிங்கம் தந்தது (சிறுபாண். 97)

3. ஆல்கெழு கடவுட் புதல்வ (முருகு. 256)

பெரிதும் சிவபெருமானின் மகன் முருகன் என்று திரும்பத் திரும்ப வருவதிலும் ஒரு குறிப்புளது. இரண்டும் ஒற்றுமைப்பட்டு ஒரே வழிபாடானதுண்டு.

4. ஆலமர் செல்வன் அணி சார் பெருவிறல்
போலவரும் என் உயிர் (கலி. 87 – 7)

தலைவி தன் மகனைப் பற்றிக் கூறுவது. பெருவிறல் - மிக்க சிறப்புடைய முருகன்.

5. ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக் கால்கோள் (கலி. 83)

இதுவும் தலைவி கூறியது.

6. ஆலமர் செல்வன் புதல்வன் (சிலம்பு – குன்ற)

7. ஆலமர் செல்வன் மகன் (மணி. 3 – 144)

8. நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில் மனை மகளிர் (அகம். 181)

ஆலமர் கடவுளின் வழிபாட்டிடத்து முற்றத்தை, மகளிர் மெழுகித் தூய்மை செய்து அழகுபடுத்தினராம். அது ஒரு பொய்கை சூழ்ந்த இடத்தின் பக்கத்தது என்பதும் கருதற்பாலது. இதில் வரும் 'நான்மறை முதுநூல்'. அவ் ஆலமர் செல்வன் அருளிய தமிழ் மறையாதல் வேண்டும். பிரம்மாவின் மகன்கள் சனகாதி முனிவர் நால்வர்க்கு ஆலமர் செல்வனாம் சிவன் அருளினான் எனப் புராணங்கள் எழுதிவிட்டால் அவை தமிழ் மறைகள் ஆகாது போய்விடா. மேலும் இக்கடவுளைத் தென்னாட்டுத் தமிழர்க் குரியவர் என்ற பொருளில் தட்சிணாமூர்த்தி எனப் புராணம் கட்டினர். அதை நம் தமிழர் தென்திசைக் கடவுள் - தென்முகக் கடவுள் என மீண்டும் தமிழாக்கி மகிழ்ந்தனர். பிறகு தேவகுரு எனப்படும் வியாழ பகவானுடன் தொடர்பு படுத்தினர். சங்க நூல்கள் சிவன் என்றதை, இவ்வாறு மாற்றி அதன் பெருமையைக் குறைத்தனர். இவை எல்லா வ்ற்றையும் எண்ணிப் பார்ப்பதற்கு நம் தலைவர்களுக்குப் போதிய அறிவில்லை என்று கூறமுடியாது. 'என்ன? ஓதிவிட்டுப் போய்விட்டானா?' என்று ஏமாற்றிவிட்டு ஓடியவனைக் கூறுவது ஒரு பழமொழி. நம் தலைவர்களுக்கு அருகிலிருப்பவர்கள்தான், சிறிதளவுகூடச் சிந்திக்க விடாமல் மூடி மறைத்து விடுகின்றனர்.

*1. ஆரூரர், 'மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப் பன்னிய* **எங்கள் பிரான்'** *என்று, திருப்பழமண்ணிப் படிக்கரைப் பதிகத்தில் பாடுகிறார்.* **வடமொழி வேதங்களின் தோற்றம் பற்றிய வரலாறு முற்றிலும் வேறுபட்டது. இங்கு ஆலமர் செல்வன் - சிவன் அருளியவை வேறு.**

2. அன்று ஆலின் நிழற்கீழ் 'அறம்' நால்வர்க்கு அருள் புரிந்து' –
ஆரூரர் (திருக்கடவூர்)

3. கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல் நிழற்கீழ் அறம்பகர
வேதம் செய்தவர் எய்திய இன்பம்
யானும் கேட்டு நின் இணையடி அடைந்தேன்

நீதி வேதியர் நிறைபுகழ் உலகில்
நிலவு தென்திரு நின்றி யூரனே (ஆரூரர், திருநின்றியூர்)

இப்பாடலில் வரும் சொற்கள் ஆராயத்தக்கன. நால்வர் மட்டுமன்றி, மாதவ முனிவர்களின் குழுவினர் கேட்டனராம். 'நீதி வேதியர்' - இன்றும் உளர். புரோகித வேதியர்களைத் தவிர்த்து, இது 'சிவவேதியரைப்' பிரிப்பதுபோல் உளது.

அருந்தவ மாமுனிவர்க்கு அருளாகியொர் ஆலதன்கீழ்
இருந்து அறமே புரிதற்கு இயல்பாகியது என்னைகொலாம்?
–ஆரூரர் (திருநாகேச்சுரம்)

ஆலினிற் கீழிருந்து ஆரணம் ஓதி – திருநாவுக்கரசர் (திருக்கடவூர்)

திருநாவுக்கரசர் தரும் செய்தி ஒன்று இன்னும் விரிவாக இதை ஆராயத் தூண்டுகிறது.

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதம் சந்திப் பொருளுருவாம் புண்ணியனை
(திருக்கச்சியேகம்பம்)

என்று பாடும்போது, மறைகள் பல என்பதை நிறுவுகிறார்.

மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல் மேவி அருமறை சொன்ன தென்னே
சம்பந்தர் (திருச்சேய்ஞலூர்)

அறங்கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்தருளி சம்பந்தர் (திருமுதுகுன்றம்)

ஆலின்கீழ் அருளியவை 'அறம்' எனும் மறைகள் என்று குறிப்பிடப்படுவதும் எண்ணத்தக்கது. இது மறுக்க முடியாச் சான்றாகி உளது.

மாணிக்கவாசகரும் இதைப் பாடுகின்றார்.

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்து அங்கு அறம் உரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்து அங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ

இதன் தொடர்பான அனைத்தையும் தொகுத்தல் இங்குக் கருத்தன்று. ஆலமர் செல்வன் தமிழ் வேதம் - அறம் உரைத்ததை மறைக்கவே, வியாழனுடன் இணைத்துக் கதை கட்டினர். இதனையும் வடமொழியினர் ஓர் உபநிடதம் என்றும் புராணம் என்றும் தங்கள் மொழியில் எழுதி வைத்திருப்பர். உலகிலேயே கருத்துத் திருட்டுக்குத் தயங்காத கயமைக்குணம்தான், நம்மைக் கடும் சீற்றம் கொள்ளத் தூண்டுகிறது.

பல்வேறு கருத்துக்களுக்கான வேரும் விழுதுகளும் தமிழில் உள என்று காட்டுவதற்குத்தான், நாம் சான்றுகளை அடுக்கித் தந்துள்ளோம்.

## சிவனை அவமதிக்கும் இருக்குவேதம்

ஆரியர் இந்நாட்டில் புகுமுன்னரே, சிந்து நதி நாகரிகத்தில் சிவ வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் பலவுள என அறிஞர் பலர் நிறுவியுள்ளனர். தமிழர்கள் உருவ வழிபாட்டினர். அதனால் வேத வேள்வியே வாழ்வாக இருந்தபோது, ஆரியர்க்கு, இவ் உருவ வழிபாட்டில் அளவற்ற வெறுப்பு இருந்தது. பொதியில், மன்றம், அம்பலம் என்பன ஊர்நடுவே, வழிபடுமிடங்களாக இருந்ததை அறிவோம். அவையே இன்றும் கோயில் பெயர்களாக வழங்குவதிலிருந்து, தமிழர் கோயிற்கலையின் வளர்ச்சி அது என்பது போதரும்.

அங்கு, 'கன்றாப்பூர் நடுதறி' என அப்பர் பெருமான் பாடியது போல, அதுவே கந்து, தறி என நடப்பட்டு வணங்கப்பட்டது.

இது சிந்துவெளி நாகரிகம் முதல் தமிழர் கண்ட உருவ வழிபாடு. அதனை 'மாத்தாள் கந்து', 'கருந்தாள் கந்து' என்றது 'கடவுளுக்கு' அடையாளமான அந்தத் தறி அல்லது கந்து அசையாமல் நிற்க, அடி அணையிட்டு, நன்கு வலிதாகக் கட்டப்பட்டு பருத்து இருந்ததைக் குறிக்கும். மாத்தாள், கருந்தாள் - வலிய பெரிய அடிப்பாகம்.

இதனை வெறுப்புடன் பார்த்த ஆரியர், அதன் தோற்றத்தை வைத்து 'ஆண்குறி' என்று கூறி, மிகுந்த வெறுப்புடன் பாடியுள்ளனர். 'தஸ்யூக்கள்' என்று அவர்கள் குறிப்பிட்ட பழங்குடி

மக்களாம் திராவிடத் தமிழர்களைச் **'சிசுன தேவனை'** வழிபடுகின்றவர்கள் என்று பாடியுள்ளனர்.

வசி டன் இந்திரனை நோக்கிக் கூறுகிறான்.

*"இந்திரனே! அரக்கர்கள் எங்களைத் துன்புறுத்தாமல் இருப்பார்களாக.* **சிசுன தேவர்கள்** *எங்கள் வேள்வியைக் கலைக்காமலிருக்க, தலைவனான இந்திரன், விஷம ஜந்துக்களைத் தடுக்க ஊக்கமுள்ளவன் ஆவானாக!" (இருக்கு. 7 - 21 - 5) சிசுனம் - ஆண்குறி. சிசுன தேவர்கள் - ஆண்குறியை வழிபடுபவர்கள், காம வெறி பிடித்தவர்கள். கிரிஃபித் இதை* Lewd *என்று மொழிபெயர்க்கின்றார். அதற்குக் கீழ்த்தரமான காமுகர்கள் என்றே பொருள்.*

*ரிஷி வம்ரன் இந்திரனை நோக்கிக் கூறுகிறான். "போருக்குச் செல்லும் அவன் துன்பமற்ற வழியில் கடந்து எல்லாச் செல்வத்தையும் கைப்பற்றும் பணியிலமைகிறான். வெல்லப்படாத அவன் சிசுன தேவர்களைச் சாய்த்து, நூறு வாயில்கள் உள்ள கோட்டையை உடைத்து, அக்கோட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அளவில்லாத செல்வங்களைத் திருடினான்" (இருக்கு 10 - 99 - 3).*

*இதன் அடிக்குறிப்பு: சிசுன தேவர்கள் - வடமொழிச்சொல் அப்படியே மொழிபெயர்ப்பில் வந்துள்ளது. இதற்குக் காமவெறி பிடித்தவர்கள் என்று பொருள். சிச்னம் (சிசுனம்) என்பதற்கு ஆண்குறி என்று பொருள். அதனால் காமவெறி என்றும் கூறலாம். ஆனால் சரியான பொருள் தெரியவில்லை. இதன் ஆங்கில ஆக்கம்.*
He seized the humdred gated castle's treasure by craft unchecked, and slew the lustful demons.

*இதைப்போல மேலும் சில இடங்கள் உள்ளன. பிற்காலத்தார், இதை 'லிங்கம்' என்றனர். அதற்கும் முதற்பொருள் ஆண்குறி என்பதே. பிற்பாடு 'அடையாளம்' என்ற நிழற்பொருள் கொள்ளப்பட்டது. இலிங்கம் -* Glans penis *ஆண்குறி (திவா.); அடையாளம் (பிங்.); சிவலிங்கம்* (Symbol of Siva) *(தமிழ்ப் பேரகராதி).*

இலிங்க புராணம் முதல் வடமொழியாளரால், இது பலவாறு திரித்து எழுதப்பட்டு, தமிழரும் தவறுபட உணர்ந்து பல ஆயிரம் பெயர்களும் கதைகளும் புராணங்களுமாக இது வளர்ந்து விட்டது.

கீழேயுள்ள ஆவுடையார் பெண்குறியாம், சிவ அடையாளம் ஆண்குறியாம். இவை ஒன்று சேர்வதை, இறைமையாகக் கண்டது உலகம் வியக்கும்படியான தத்துவமாம். ஆண்குறி, பெண் குறியினுட் புகாது, மேலே நீட்டிக்கொண்டு, எவ்வாறு நிற்கும்? மிகப்பெரும் சிவநெறிச் சான்றோரும், இவ்வாறு வடவர் அருவருப் பாகக் கூறியதை, உவப்பாக ஏற்றுத் தத்துவங்கள் கண்டது, மனத்திற்குள் நீங்காத நெருடலாக உளது. எனினும் இன்று இலிங்கம் - அடையாளம் என்ற பொருளில் நிலைபெற்றுவிட்டது.

நாம் காண்பது கந்து, தறி, கன்றாப்பூர்க் கோயிற்கண் உள்ள நடுதறி என்ற நினைவை அகற்றாது, நம் முன்னோர் வழிபட்ட உருவ வழிபாட்டு முறையைப் போற்றுவோமாக.

❖❖❖❖❖

# 2

# வேதமும் ஆகமமும்

## (ஒரு நடுவுநிலை விளக்கம்)

சிவனியத் திருமடங்கள் பெருமைக்குரியன. சிவநெறியும் செந்தமிழும் சிறந்தோங்கத் தோன்றியன. அவை தமது வானுற ஓங்கிய பெருமிதத்தினின்றும் சிறிதும் வழுவுதல் கூடாது என்பதே நம் விழைவும் வேண்டுகோளுமாகும்.

1980இல் யான் எழுதிய 'புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு' என்ற நூலில், சிவநெறித் திருமடங்கள் பற்றி எழுதிய மூன்று பக்க விளக்கத்தின், முன்னுரைப் பகுதியை மட்டும், இங்கு மீண்டும் நினைவு கூர்வது, எனது நல்ல எண்ணத்திற்கு ஒரு நற்சான்றாகும்.

"சைவத் திருமடங்களில் திருவாவடுதுறை ஆதீனம் 14ஆம் நூற்றாண்டிலும் தருமபுர ஆதீனம் பதினாறாம் நூற்றாண்டிலும் தோன்றின. திருப்பனந்தாள் காசிமடம் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. மதுரை திருஞான சம்பந்தர் திருமடம் காலத்தால் மிக முற்பட்டது. இப்போதிருக்கும் தலைவர் 296ஆம் குரு என்பர். இவற்றின் பணி காலத்தால் ஏற்பட்ட திருப்பணியாகும். முகமதியர் படையெடுப்புக்குப்பின் தமிழும் சைவமும் ஆட்டங் கண்டன. இந்நிலையில் தமிழ் ஏடுகளுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் இம்மடங்களே புகலிடமாயின. பிறர் அழித்துவிடாமல் இவை தமிழ் ஏடுகளைத் தொகுத்துப் பாது காத்தன. தமிழ்ப் புலவர்களை மன்னர்களும் ஆதரிக்காமல் மக்களும் மறந்து போயிருந்த காலத்தில், இம்மடங்களே அவர் களைத் தாயினும் சாலப் பரிந்து காப்பாற்றி வந்தன. தமிழ் இலக்கிய வரலாறு இடையறவுபடாமல் முதலிற் காத்தவர்கள் தேவார சமய குரவர்கள் ஆவர். புறச் சமயத்தாரிடமிருந்தும் பிறமொழியாளரிடமிருந்தும் அவர்கள் தமிழைக் காத்தார்கள் என்றுதான் கூறவேண்டும். பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டி லும் அதேபோன்றநிலை மீண்டும் ஒருமுறை ஏற்பட்டது; புறச் சமயங்களும் பிறமொழிகளும்

படையெடுத்தன. தமிழர் செல் வத்தை மட்டுமல்ல, பண்பாட்டையே அவை சூறையாடின. இந் நிலையில் தமிழ்க் காப்பாக எழுந்த இம்மடங்கள் தன்னுணர்வு பெற்று, மீண்டும் அப்பழைய காலம்போலத் தம் தமிழ்ப் பணியைப் புதுப்பிக்க வேண்டும்" (25ஆம் வெள்ளிவிழாப் பதிப்பு, 2009, பக். 325).

கடந்த முப்பது ஆண்டுகளாக இக்கருத்தைப் பல ஆயிரம் மக்கள் படித்துள்ளனர். இவ்வளவு விரிவாக இதை எடுத்துக் காட்டக் காரணம், நாம் இந்நூலில் எழுதுவன அனைத்தும் உண்மையைத் தேடி உரைப்பனவே தவிர, பகைமையோ, எதிர்ப்புணர்வோ உடையன அல்ல என்பதை உணர்த்தவேயாம்.

ஒரு திங்களுக்கு முன்பு, என்பால் பேரன்புடைய சீர்மிகு தா. குருசாமி தேசிகர், தருமை ஆதீனத் தலைவர் சீர்வளர்சீர் சண்முக தேசிக பரமாசாரிய அடிகளார் அவர்கள் என்னிடம் தரச் சொன்னதாக, திருவருட் பயன் உரை விளக்க நூலுடன், 'வேதாகம உண்மை' என்ற நூலையும் வீட்டிற்கு வந்து தந்தார். மேலும் சிறிய அளவினதான அந்நூலினைப் படித்து, என் கருத்தைக் கூறுமாறு, சீர்வளர்சீர் அடிகளார் குறிப்பிட்டதாகவும் சொன்னார். பின்னர் ஒருமுறை தொலைபேசியில் கூப்பிட்டு, 'தங்கள் கருத்து யாது?' என வினவினார். 'எனக்கு இதில் கருத்து வேறுபாடு உண்டு. பின்னர் விளக்கமாக எழுதுவேன்' என்று கூறினேன்.

அச்சிற்றேடு தரும் செய்திகள் இவை:

1. வேதம் என்பது அறிவு நூல். அது ஆன்ம அறிவை விளக்கும் பொருட்டுச் சிவபெருமானால் அருளப்பெற்றது.
2. வேதங்கள் இருடிகளால் இயற்றப்பெற்றதாகக் கூறுவர். சிவபெருமானின் முகத்தில் தோன்றி, ரிஷிகள் வழிவழியாகக் கேட்டு ஓதிவருவதாகவும் கூறுவர்.
3. இதை வேத வியாசர் நான்காகப் பகுத்தார். ஒவ்வொரு வேதமும் மூன்று பிரிவுகளாக உள்ளது.
4. இவ்வேதத்தின் நடுநாயகமாக 'நமசிவாய' எனும் மகா மந்திரமாகிய பஞ்சாட்சரம் அமைந்திருப்பது சிறப்பிற்குரியது.

எனவே நான்கு வேதங்களாலும் பெறப்படும் உண்மைப் பொருள் சிவ பஞ்சாக்கரமே ஆகும்.

5. ஆகமம் என்பது வேதத்தின் சாரமாகும். ஆகமங்கள் சிவபெருமானால் அருளப்பெற்றவை. இதனை 'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என மாணிக்கவாசகர் போற்றுவதால் அறியலாம். ஆகமங்கள் மந்திரப் பகுதிகளின் சாரங்களையும் உபநிடதங்களின் சாரங்களையும் உடையது.

6. வேத ஆகமங்களின் சாரமாக அருளப் பெற்றவை திருமுறைகள், புராணங்கள் முதலியன.

இம் முன்னுரைப் பகுதியே, பின்பு விரிவாகப் பேசப்படுகிறது. சில உபநிடதங்களின் வரிகள், சிவாகமம், சிவபுராணம், வேத உரைகள், பா ய விளக்கவுரைகள் என்பன பல எடுத்துக் காட்டப்படுகின்றன.

இவை மிகக் கூர்மையாய் ஆராய்ந்து தெளியவேண்டுவன. வேதங்களின் காலம், அவற்றின் சார்பான மந்திரம், உபநிடதம் போல்வனவற்றின் காலம், வேதங்களுக்கும் உபநிடதங்களுக்கும் விளக்கம் எழுதப்பட்ட காலம் போல்வன முன்னதாக அறிதற்பாலன.

"ஆர். சாமா சாஸ்திரிகள் வேதகாலம் (Vedic Era) என்ற நூலில், வேத வாக்கியங்களைக் கொண்டே, வேதங்கள் கி. மு. 3101இல் துவங்கிப் பலப்பல ஆண்டுகளாய்ப் பலரால் எழுதப் பட்ட பகுதிகள் சேர்ந்துள்ளனவென்று மெய்ப்பித்திருக்கிறார். இன்னும் சில ஆண்டுகள் சேர்த்துப் பார்க்கினும் ஒருகாலத் தெழுதப்பட்ட தென்பதுண்மை" (பக். 28).

முதல் வாக்கியம், இரண்டாம் வாக்கியத்துடன் பொருந்த வில்லையே.

"இனி ஆகமங்களும் பல்வேறு காலங்களில் பலருக்குப் பரமேசுவரனாற் கூறப்பட்டனவே" (பக் 28).

முன்னுரையில் கூறியிருப்பதுபோல வேதம் சிவபெருமானால் அருளப்பெற்றதா? சிவபெருமானின் முகத்தில் தோன்றி, ரிஷிகளால் வழிவழியாகக் கேட்டு ஓதப்பட்டதா? அல்லது சாமா சாஸ்திரிகள் சொல்வது உண்மையா?

ஆகமங்களும் பல, அவையும் பல்வேறு காலங்களில் பலருக்கு இறைவனால் அருளப்பட்டனவெனில், அவை வேதங்களின் சாரம் என்ற முன்னுரைக்கு முரண்படுகிறதே?

வேதங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளி வந்துள்ளன. உபநிடதங்களே 'தத்துவங்கள்' பற்றிப் பேசுகின்றன. வேதங்கள் எந்த வகையில் 'அறிவு நூல்கள்' என்று அவற்றினுள் ளிருந்து சான்று காட்டி, எந்தப் பரமாசிரியராவது விளக்க முடியுமா? சிவபெருமானை அவமதிக்கும் தெளிவான இடங் களுள்ள வேதங்களை அவரே எவ்வாறு அருளியிருப்பார்? நான்கு வேதங்களின் நடுநாயகமாக 'நமசிவாய' என்ற மகா மந்திரம் எங்கே இருக்கிறது; எந்த சூக்தத்தில் அல்லது மந்திரத்தில் இருக்கிறது என, தமிழரைக் காரசாரமாக எதிர்க்கும் திருப் பனந்தாள் காசிமட அதிபர் எடுத்துக்காட்டுவாரா? அவ்வாறு காட்டுவாரானால், எம்மிடமுள்ள ஆங்கில, தமிழ் நூல்கள் வழி நாமும் அறிந்துகொள்வோம்.

முன்னுரையில் 'வேத ஆகமங்களின் சாரமாக அருளப் பெற்றவை திருமுறைகள்' என்று கூறிவிட்டு, பிறகு அவை 'தமிழ்த் திருமுறைகள்' எனப் புகழ்வது, அந்நூல்களை அவமானப்படுத் துவதாகாதா? இனி இவ் அருளாளர், "அகத்தியனாரும் மார்க் கண்டேயனாரும் வான்மீகனாரும், கௌதமனாரும் போன்ற தலைச்சங்கப் புலவர்களாகிய முனிவர்களும், கடவுளரும் அருளி யவை இருக்கு யசூர் சாமம் போன்ற தலையாய ஓத்துக்கள்" என, நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத் திற்கு உரையெழுதியுள்ளார் என்று குறிப்பிடுகிறார் (பக். 30). அச் சூத்திர உரையில் முன்பு கூறிய வேதங்களை வேறாகவும், "இனித் தமிழ்ச் செய்யுட்கள் இறையனாரும் அகத்தியனாரும் போல்வார் அருளியவை தலைச்சங்கத்தார் செய்தன" என்றே வருகிறது. வேதங்களை இத்தலைச்சங்கத்தார் செய்ததாக நச்சர் கூறினாரிலர். பரமாசிரியரே இவ்வாறு நூலுள் நுழைந்து பாராது, தமிழ்ப் புலவர்கள் கூடிய தலைச்சங்கத்தார் 'இருக்கு' முதலான வேதங் களைத் தலையாய ஓத்துக்களாகப் படைத்தனர் என எழுதும் போது, நாம் 'குன்று முட்டிய குரீஇப்போலத்' தடுமாறுகிறோம்.

நம் வணக்கத்திற்குரிய சீர்மிகு அடிகளார், "இவ்வாறு வேதம்

யுடையனவாயினும் வேதம் துறக்கம் முதலிய போகலோகங்களைத் தரும் வேள்விக் கருமங்களையே மிகுத்துக் கூறலானும்,

உபநிடதங்கள் ஞானோபாசனைகளையும் பசுபதிபாச இலக்கணங்களையும் ஒழுங்குபட விளங்கக் கூறுபவைகளை ஆங்காங்குத் தேடி வருந்தித் தெரியற்பாலனவாயும் பல்வேறு பொருள் கொள்ளத்தக்கனவாயும் கூறுதலானும் சிவாகமங்கள் பசுபதிபாச இலக்கணங்களையும் ஞானோபாசனா வழிகளையும் ஒழுங்குபெறத் தெளிவாய்க் கூறுதலானும் மிக வேற்றுமை யுடையனவாம்" (பக். 21).

இவ்வாறு நம் குருமகாசன்னிதானம் வேதமும் ஆகமமும் வேற்றுமையுடையன என எழுதுவது, அவராக எழுதியதன்று; நம் பரம்பொருளாம் சிவனே அவரைத் தெளிந்த நிலையில் வைத்து எழுதியதாகும். ஏனெனில் இப்பகுதி மிகத் தெளிவாக உளது.

ஒரு மாபெருந் திருமடத்தின் தனிப்பெருந்தலைவர், பிறிதோரிடத்தில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

"நாம் தென்மொழி வடமொழி என்ற இருமொழிகளிலும் பற்றுடையராதலால் உண்மையில் அவ்வவற்றின் பெருமைகளைக் கூறிப் போற்றுகிறோம்.

வடமொழியில் மிக்க பற்றும் தமிழில் வெறுப்புடையரும், தமிழின் பெருமையை அறியாதவரும் தாய்மொழியில் அபிமான மற்றவரும் ஆங்கில மொழி நூல்களிற் பயிற்சியில்லாதவரும் வடமொழி தென்மொழிகளின் உண்மை இயல்பு ஓராதவரும் ஆகிய சிலர் தமிழ் நூல்களிற் கூறப்படுவனவற்றைப் பிரமாணமாய் நம்பாமல் இடர்ப்படுகின்றனர். அன்னவர் வடமொழி நூல்களைப் பிரமாணமென்பாரை என்ன குறை கூறுவரோ, அக்குறைக்குத் தாமும் இலக்காவர் என்பதைக் கருதியுணர்ந்தால் அவ் இடர் நீங்கும் என்க" (பக். 37).

இதற்கொரு 'வியாக்கியானம்' எழுதவேண்டும் போல் உளது.

"வடமொழியைத் தங்கள் வேதமொழியாய், மந்திர மொழியாய், பிரமாண மொழியாய் ஏற்கும் தமிழரே, தாய்மொழி அபிமானம் உடையவராவர். இதை மறுப்பவர்கள் தமிழை

வெறுப்பவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு ஆங்கில நூற்பயிற்சி யின்மையே இவ் அறியாமைக்குக் காரணம்". சீர்வளர் சீர் மகா சன்னிதானம் கருத்து இது.

சீர்மிகு அடிகளார் இருமொழிப் பற்றுடன், ஆங்கிலப் பற்றும் பெற்று, முக்கண்ணனைப் போல் மும்மொழிப் பற்று டையராயின், அது மேலும் போற்றத்தகுந்ததேயாகும். இவை யெல்லாம் அவரவர் தனி விருப்பம். தமிழிலுள்ளவை தனித் தன்மையுடையவை, வடமொழித் தொடர்பற்றவை, தாய்த் தமிழ் வழிபாடுகளே ஏற்கத்தக்கவை என எடுத்துரைப்போர்க்கு, போதிய ஆங்கில அறிவும் உண்டென்று அடிகளாருக்கு யாரும் புள்ளி விவரம் தர முயல்வாராயின் அது முறையாகாது. அதை விட்டுவிடுவோம்.

நாம் இங்கு விளக்க விரும்புவது, தனிப்பட்ட ஒருவருக்காக அன்று; இது முன்னமே திட்டமிடப்பட்டது. இவ்வாறு குழம்பிய நிலையிலிருந்து, 'தன்னலம்' கருதித் தமிழர்களைக் குழப்பும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், வடமொழி வயப்பட்ட வர்கள் பலருளர். அவர்களுக்காகவே இந்நூல்.

முதற்கண் வரலாறு தெரிய வேண்டும். கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் 600வரை களப்பிரரும் கி. பி. 350 முதல் 900 வரை பல்லவரும் கி. பி. 15ஆம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற் றாண்டு வரை நாயக்கர்களும் ஆண்ட காலங்களில் ஏற்பட்ட பிறமொழியாளர்களின் வல்லாண்மைகளும் தாக்குரவுகளும் தெளிவுபெற முழுமையாக அறியப்படவேண்டும்.

நாடு முழுவதும் புத்தமதம் பரவியபோதும், அதற்கும் முன்னதாக சமணம் பரவியபோதும் வேத வேள்வி வைதிகப் பிராமணியம் அவற்றை அடியொண்ட விரட்டியடிக்கச் செய்த தந்திரத் திறன்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**சமணப் பண்பாட்டுச் சமயப் படையெடுப்பால் அத்து வைதப் பிராமணியம் நிலை குலைந்து அழிய இருந்தபொழுது, தமிழரின் பத்தி இயக்கத்துடன் அது 'கொள்கையில்லாக் கூட்டணி' வைத்துக்கொண்ட வரலாறு முழுமையாய் அறியப் படவேண்டும்.**

சமணம் பௌத்தமாகிய அச்சமயங்களைத் தமிழருடன் இணைந்து, வேரறுத்தபின் அதே வைதிக சமயம் தமிழரின் பத்தி உணர்வுகளையே கருவியாக்கிக் கொண்டு, சிவனியமும் மாலியமும் கொற்றவையியமும் தங்களிடமிருந்தே தோன்றியனபோல் காட்டி, அத்தமிழர் சமயங்களை, வடமொழிப் புறச்சாயம் பூசி மயங்க வைத்த வரலாறும் ஆராயப்பட வேண்டும்.

வடமொழி உபநிடதங்களும் விரிவுரை விளக்கங்களும் முற்றிலும் 'அத்துவைதக் கோட்பாட்டு' வேரும் விழுதும் உடையன. அத்துவைதத்தினுள்ளிருந்து முப்பொருளுண்மை எங்ஙனம் வெளிப்படும்? இடைக்கால 'நுழைவுகளால்' எல்லாம் எங்களிட மிருந்து வந்தன எனக் காட்ட முயன்ற வரலாற்றை, கூர்த்த மதியால் ஆராய்ந்து உண்மை காண வேண்டாமா?

'இந்துமதம்' என்ற ஒரு பெயரை உருவாக்கி, அதனுள் உலகிற்குத் தமிழர்கள் வழங்கிய கொடையாகிய சிவனிய மெய்ம்மைகளையும் திருமாலியத்தையும் உள்வாங்கிக் கொண்டு, வடமொழிப் பெயர், கலைச்சொல், விளக்கம் என மேற்பூச்சுப் பூசி அச்சமயங்களின் பெயர்கள்தாமும் உலகிடை விளங்காமற் செய்தமையைக் கூர்த்தமதியுடையார் கண்டுகொள்ள வேண்டாமா? நீங்கள் எந்தச் சமயம் என வினவினால், ஒரு சிவநெறிச் செல்வர் 'இந்துமதம்' என்றே கூறுகிறார். இவ்வாறு சிவனியமும் மாலியமும் (சைவமும் வைணவமும்) பெயர்கள்கூட விளங்காமற் போயினவே எனப் பேரறிஞர் கா. சு. பிள்ளை வருந்திப் பேசியது நூலாக வந்துள்ளதே!

சிவனியத்தின் அடிப்படை மெய்ம்மைகள் மூன்று: முப்பொருளுண்மை, வினைக்கோட்பாடு, பத்திநெறி. வேத வேள்வி வைதிகம் சார்ந்த அத்துவைதப் பிராமணியத்திற்கும் இவற்றுக்கும் எங்ஙனம் தொடர்புண்டாயிற்று. அக்கினி வழிபாடு வேறு; அருச்சனை வழிபாடு வேறு என்ற தெளிவு வேண்டாமா? தமிழ் மறைகள் வேதங்களையும் வேள்விகளையும் உதட்டளவில் போற்றிப் பாடவேண்டிய கட்டாயம் ஏன், எப்பொழுது, யாரால், எதற்காக உருவானது? வேதம் வேதம் எனப்பாடிய அருளாளர்கள் ஓரிடத்திலேனும் வேதங்களின் உட்பொருளை விரிவாக, விளக்கமாகப் பாடியுள்ளார்களா? தமிழர்களின் தனிப்பெரும் வழிபாடுகளாகிய சிவனியம், திருமாலியம், கொற்றவையியம்

(சக்தி, காளி) மூன்றும் சிவனியத்துடன் ஒன்றியிணைந்த முருகனியம் மற்றும் நிலத் தெய்வ வழிபாடுகள் ஆகியன பற்றியும் தமிழர்க்கேயுரிய சமயநெறி யாதென்பது பற்றியும் இவை அனைத்தின் வேர்கள் எங்கு தொடங்கின; எவ்வாறு தம் விழுது களைப் பரப்பின; இனிவருங் காலத்திலேனும் வடமொழியாளர் செய்து வைத்த மேற்பூச்சைக் களைந்து, புதுவண்ணந்தீட்டி, மறுமலர்ச்சி கண்டு அவற்றைத் தமிழராவார் அனைவரும் உணர்ந்து போற்றுமாறு செய்வது எவ்வாறு?

எங்கள் 'விழிப்புணர்வுப் பேரியக்கத்தின்' வழி, வெளிவரும் நூல்கள், உலகத் தமிழரிடையே ஒரு மாற்றத்தை உண்டாக்கும் என நம்புகின்றோம்.

## வேத ஆகம வேறுபாடுகளும் முரண்பாடுகளும் (பி. டி. சீனிவாச அய்யங்கார் கருத்து)

சீர்மிகு அடிகளார், 'ஆங்கில நூற் பயிற்சியின்மையே தமிழார்வலர்களின் அறியாமைக்குக் காரணம்' எனக் கூறியிருப் பதால், ஓர் ஆங்கில நூலிலிருந்தே தொகுத்தெடுத்து இக்கட்டுரை வரையப்படுகிறது.

யார் இந்த பி. டி. சீனிவாச ஐயங்கார்?

இவர் 1928 - 29இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்தவர். இவர் Life in Ancient India, Pre - Aryan Tamil culture, The stone age of India, History of the Tamils - from the earliest times to 600 A. D. போலும் பல நூல்களை எழுதியவர். இறுதியாகச் சுட்டியுள்ள தமிழர் வரலாறு என்னும் ஆங்கில நூல் 1929இல் இவர் ஆற்றிய 'பல்கலைச் கழகப் பேருரை' ஆகும். இவர் திராவிடர்கள், தமிழர்கள், தமிழ் மொழி பற்றி எல்லாம் மிக விரிவாக, நடுவுநிலையோடு எழுதி யுள்ளார். இவர் தமது கட்டுரை ஒன்றில் 'திராவிடன் ஆகிய நான்' (Being myself a Dravidian) எனக் குறிப்பிட்டுள்ளமை, அந்தணர் ஆவார் அனைவரும் கருதத்தக்கதாகும். தமிழர் வரலாறு பற்றிய ஆங்கில நூலை அறிஞர் பி. இராமநாதன் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார். அதை அண்மையில் 'தமிழ்மண்' பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

'எனினும் இக்கட்டுரை ஆங்கில நூலின் அடிப்படையிலேயே, அழுத்தமாகக் கருத்தை வெளிப்படுத்துமாறு, புள்ளி விவரம்போல் எழுதப்பட்டுள்ளது. சீனிவாசர் நடுநிலை பிறழ்ந்தவரா? பிறரைப் போல் வடமொழி அறிவின்றி, பிற்காலத்தே நுழைக்கப்பட்டவற்றை மட்டும் அங்கொன்றும் இங்கொன்றும் கண்டு, முழுமை அறிவின்றிச் சிவாச்சாரியார்கள் சீறி எழுகிறார்களே, அவ்வாறு அவர்களைப் போல் எழுதியுள்ளாரா? ஆங்கில அறிவின்றி ஆங்கிலத்தில் நூல் எழுதியவரா? - இதோ அவரே, தம்மைப் பற்றிச் சொல்வதைப் படியுங்கள். தமது நூலின் அடிப்படை ஆதார நூல்கள் (Sources of the History) என அவர் குறிப்பிடுவது இது:

"வேத இலக்கியம், அதாவது மந்திரங்களும் பிராமணங்களும் என இரண்டும் சேர்ந்தவை, சூத்திரங்கள் - அவை ஆரியர்களின் சமுதாய வாழ்க்கையும் தனிப்பட்டவர் ஒழுக்கமும் நடைமுறைகளும் பற்றிய தொடக்க காலச் சிந்தனைகள் அடங்கியவை - அவற்றைப் போலவே இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள், புராணங்கள், இவை தவிரவும் தொடக்ககாலப் பௌத்தர்களின் பாலி, சமணர்களின் அர்த்தமாகதி என கிடைக்கக் கூடிய அனைத்து ஆரிய மூல நூல்களையும், கருத்துத் தரவுத் தொகுப்புக்காக முழுமையாகக் கற்றறியப்பட்டன" (முன்னுரை).

இனி, அப்பகுதியை அப்படியே ஆங்கிலத்தில் தருவோம். Sources of the History :

"The vedic literature; by which I mean, the mantras and the Brahmanas (which together are the vedas), and the Sutras which contain the early concepts of the Aryas with regard to the object and the conduct of individual and social life, as well as the Ithihasas (the Ramayana and the Mahabharata) and the Puranas, besides the early Pali, Bauddha and the Arddha Magathi, Jaina works i.e. all the available Aryan sources have been ransacked for information".

இவர் காலத்தில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவை விரிவாகக் கற்கப்படவில்லை; ஆங்காங்கு அருகியே காணப்பட்டன. இருந்தும் அவர் அவற்றையும் கற்றுள்ளார்.

இப் பன்மொழி அறிஞர் கருத்தை யாரும் மறுக்கத் துணியார்; மறுக்க முன்வருவரேல், அவர்கள் இவரினும் மேம்பட்ட வடமொழி அறிஞராக இருத்தல் வேண்டும்.

எனவேதான் வேதமும் ஆகமமும் பற்றி இவர் என்ன கூறுகிறார் என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்படுகிறது. இவரது தமிழர் வரலாற்று நூலில் எட்டாம் இயல், ஆகமங்களின் தோற்றம் (The Rise of Agamas) என்பது. அதன் உட்தலைப்பு 'ஆகமங்களும் அவற்றுக்கு எதிரான வேதங்களும்' என்பது (The Agamas vs The Vedas). *இயல் தலைப்பே படிக்கத் தூண்டுகிறதல்லவா?*

## ஆகமமும் அதற்கு நேர் எதிரான வேதமும்

*சீனிவாச ஐயங்கார் கருத்துக் கோவை (இவை அனைத்தும் அவருடைய கருத்துக்கள். அடைப்புக்குள் உள்ளவை மட்டும் எம் கருத்து).*

1. இன்று இந்து சமயத்தவர் பின்பற்றுவதனைத்தும் ஆகமங்களின் அடிப்படையினவே; அவை வேதத்துடன் சிறிதளவு தொடர்பும் உடையனவல்ல.

2. மகாபாரதப் போருக்குப் பிறகு வைதிகக் கோட்பாடு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது (began to decay). இன்று முற்றிலும் மறைந்துவிட்டது. வாஜபேயம், கருடசாயனம், சோம யாகம்போல சில சிறுசிறு வேள்விகள் அங்கும் இங்குமாய் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களால் நடத்தப்படுகின்றன. குடும்பச் சடங்குகளில் ஓதும் நிலைமைகூட மிக விரைந்து மறைந்து வருகிறது. பிராமணக் குடும்பத்தவர் மூன்று தலைமுறைக்கு, புனித அக்கினி வழிபாட்டைப் புறக்கணித்திருப்பாரேல், அவர்கள் பிராமணர் என்ற தகுதியை இழந்து விடுவர் என்பது விதிமுறை. மிகமிகச் சில குடும்பங்கள், உண்மையான பிராமணக் குடிகள் எனப்படுதல் கூடும். இந்தியா 'சமயத்தில்' ஆழ்ந்தது; எனினும் இச் சமயநெறிகளின் ஆழமான அடிப்படைகள் ஆகம வழிப்பட்டனவே தவிர வேத வழிப்பட்டனவல்ல.

3. ஆகமம் - பெரியோர் அருள்வாக்கு; பிறிதொரு பொருள் 'உருவாக்கப்பட்டது' (Evolved). நேர் சொற்பொருள் என்றால் 'கடந்த காலத்திலிருந்து வந்தது'. இதனால் வேதத்தையும்

சிலபோது ஆகமம் எனக் குறித்ததுண்டு. ஆயினும் நடைமுறைப் படி கொண்டால் ஆகமம் என்பது 'தந்திர' நூல்கள். (தந்திரம் - வழிகாட்டும் நூல்களைக் குறிக்கும்). அதாவது சிவன், விஹு, சக்தி என்ற மூன்று கடவுளரின் வழிபாட்டு நெறிமுறைகளைக் கூறும் நூல்கள் என்பதே பொருள். (சிவனியம், மாலியம், கொற்றவையியம் மூன்றும் தமிழர்களின் தொன்றுதொட்ட வழிபாடுகள் என்பதும் அவற்றின் வேர்களும் வளர்ச்சியும் இங்குள்ளனவே தவிர வடமொழி வேத, உபநிடதங்களில் இல்லை. இவ்வகையில் ஆகமக் கோட்பாடுகள் வேதங்களுக்கு நேர் எதிரானவை. (In this sense, the Agama cults are opposed to the vedas). *(பக்கம் 103 முதல் 115 வரை இவ்விளக்கம் அவரது தமிழர் வரலாற்று ஆங்கில நூலில் தொடர்கிறது).*

4. பௌத்தர்கள், சமணர்களின் புனித நூல்களும் கூட ஆகமங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவையும் கூட 'கடந்த காலத்திலிருந்து உருவாகி வந்தவை' என்ற பொருளுடையன. இவ் ஆகமங்கள் அனைத்தும் 'கர்ம காண்டம்' எனப்படும் வேதங்களைத் தம் தொடக்கம் முதற்கொண்டே மறுப்பன. (அதாவது வேள்விகளையும் அவற்றில் ஓதப்படும் மந்திரங் களையும் நூற்றுக்கணக்கான பரிகாரங்களால் ஒருவர் செய்த அனைத்துப் பாவச் செயல்களிலிருந்தும் தப்பிப்பதற்கான நெறிமுறைகளையும் அவை கூறுகின்றன. வீட்டுச் சடங்கு களிலும் வேத வேள்விகளிலும் பிறர்மீது பில்லிசூனியம் முதலியவற்றை ஏவிவிட்டு, தம்மைக் காத்துக் கொள்ளும் படியான வழிகளையும் கூறுவதால், இவற்றை அவ் ஆகமங்கள் அடியொண்ட மறுக்கத் தோன்றின).

5. சிவ ஆகமக் கருத்து மரபு மகேசுவரம், பாசுபதம் என அழைக்கப்பட்டது. திருமாலியக் கருத்து மரபு பாகவதம், பாஞ்சராத்திரம் எனப்பட்டது.

6. வேதக் கொள்கைகளுடன் ஆகமக் கோட்பாடுகள் எதிர்த்துப் போராடிய தொன்மைமிக்க காலத்தில், இவற்றிடையே இருந்த வேறுபாடு நன்கு உணரப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது பல நூற்றாண்டுகளாக அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து போனதால், அவற்றிடையே உள்ள வேறுபாட்டைத் தற்காலத் தவர் உணர்ந்திலர். எல்லாவற்றுக்கும் மேலாக வேதங்களி

விருந்தே ஆகமங்கள் பெறப்பட்டன என்ற கருத்துடன் அவை அவ்வாறு இக்காலத்திற்கேற்ப வேதங்களை விரிவாக்கிக் கொள்ளப்பட்டன அல்லது தழுவியுரைத்துக் கொள்ளப் பட்டன என்ற கருத்தும் பரவலாக்கப்பட்டுள்ளது.

7. வேத 'சம்ஹிதை' களின் உள்பொருள் அனைத்தும் மந்திரங்களே. அவை வைதிகச் சடங்குகளில் ஓதப்படுவன (வேள்விகளும் சடங்குகளும்). ஆனால் ஆகமங்கள் என்பன இறை வழிபாட்டு நெறிமுறைகளைக் கூறும் 'வழிகாட்டி' நூல்களாகும் (Agamas are text - books). சிவன் அல்லது திருமால் திருவுருவ வழிபாட்டு நெறிமுறைகளின் விளக்கம் அடங்கியவை அவை; (இவை இரண்டும் தமிழர் வழிபாட்டு வேருடைய கடவுளர்கள் என்பதை மனங்கொளல் வேண்டும்). யோகப் பயிற்சிகளும் 'தத்துவ விசாரணைகளும்' அடங்கியவை.

8. வேதங்கள் மந்திரப் பகுதிகளும் பிராமணப் பகுதிகளும் அல்லது கர்ம காண்டமும் ஞானகாண்டமும் அல்லது வேதமும் வேதாந்தமும் (வேத சிரசு) எனப்படுபவை; 'மீமாம்சை' என்ற பின்னிணைப்புத் தேவைப்படுபவை. ஆனால் ஆகமங்கள் வரன்முறைப்பட்ட வழிகாட்டி நூல்களாதலின் (Systamatic text-books) உரைவிளக்கம் என்ற ஒன்று மட்டுமே தேவைப்படுபவை.

9. வேதங்கள் தொடக்க கால 'சந்தஸ்' வழக்குமொழியில் உள்ளன. ஆகமங்கள் 'பாஷை' என்ற வழக்கு மொழியில் உள்ளன. இம் மூலநூல்கள் கி. பி. 1000 ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தன. (இதைப் பிராகிருதத்தில் உள்ளன என்றும் கூறுவர்).

10. இனி, 'சடங்குகள் (Rites) என்பது பற்றிச் சிந்தித்தால், வைதிகத்தவை அக்கினி வழிச்சடங்குகள் (Fire rites). ஒவ்வொரு சடங்கிற்கும் ஓர் அக்கினியானது பற்றவைக்கப்படும். அது கூவி எரியும் சுடராக மேலெழும்போது, அதில் 'ஆகுதிகள்' (oblations) போடப்படும். ஆகமச் சடங்குகள், அக்கினியற்றவை. வழிபடும் இறை உருவின்முன், படையல் பொருள்கள் பரப்பி வைக்கப் படும். (Oblation - அவியுணவு, படையல் என இருபொருளும் தரும்). பிறகு அவை எடுத்துக் கொள்ளப்படும்.

முன்னைய அக்கினிச் சடங்கில் அவியுணவு நெருப்பில் வீசப்படுவதால் தெய்வங்களால் பருகப்படுகிறது; பின்னதில் வழிபடுபவர் தாம் படைக்கும் பொருள்கள் எதையும் இழப்ப தில்லை. ஏனென்றால் கடவுள் அவற்றிலுள்ள கட்புலனாகாத நுண்ணிய பகுதிகளை மட்டும் எடுத்துக்கொள்வதாக நம்புவதால், இழப்பதெதுவும் இல்லை. ஆதலால் வழிபடுபவர் அவ் இறை வனது கொடையாக எண்ணி, அப்படையற் பொருள்களைத் தாமும் உண்டு, மற்ற உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தந்து மகிழ்கின்றார்.

11. வைதிகச் சடங்குகளில் பல்வேறு தொழிலியற்றும் பல தெய்வங்கள் அழைக்கப்படுகின்றனர். ஆகமச் சடங்குகளில் அனைத்துத் தொழிலையும் இயற்றும் ஒரே ஒரு பரம்பொருள் மட்டும் வணங்கப்படுகின்றார்.

12. வேதச் சடங்குகளில் ஒவ்வொரு ஆகுதி பெய்யும்போதும் ஒரு மந்திரம் ஒலிக்கப்படும். (இவை பல மந்திரங்கள். இவைபற்றி ஆங்கில மூலநூலைப் பார்க்கலாம்). ஆகமச் சடங்குகளில் வேத மந்திரங்கள் எவ்விதத்திலும் இடம்பெறுவதில்லை. சில மந்திரங்களை இங்குமங்கும் பொருத்தமின்றிப் பயன்படுத்து கின்றனர். 'தூ' (dhu) எனும் அசையுடன் தொடங்கும் மந்திரத்தை, தூபம் காட்டும்போது பயன்படுத்துவது தவறு; அது வேறு பொருளுடையது.

13. ஆகம வழிபாட்டில் இறைவனின் எண்ணற்ற பெயர்களைக் கூறி 'நமஹ' என முடிப்பர் (போற்றி, வணக்கம் என்பது அது). (வேறு ஓர் இடத்தில் வைதிகச் சடங்கில் ஒவ்வொரு மந்திர முடிவிலும், பெரும்பாலும் 'சுவாஹா' என்றே முடிப்பர். ஆகம வழிபாட்டிற் கலக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பிறகே 'நமஹ' என ஓதும் பழக்கம் அவர்களுக்கு வந்ததென்பர்).

14. வைதிக வழிபாட்டில் அக்கினியில், அவியுணவுகளைப் போடு வதே அடிப்படையாகும். ஆகமத்தில் ஒரு விருந்தினர்க்கோ அல்லது அரசனுக்கோ 'உபசாரம்' செய்யும் முறையில், இறைவர்க்கு அனைத்தையும் செய்வதே வழிபாடு. நீராட்டித் தூய்மைப்படுத்தல், அலங்கரித்தல், உணவு படைத்தல் என்றாற் போல்வன அவை.

15. வைதிகத்தில் தெய்வ 'உரு' என்று எதுவும் முன்னே இல்லை. கட்புலனாகும் நெருப்பே, எல்லாக் கடவுளர்க்கும் உரிய அடையாளமாகும். ஆகமத்தில் கட்புலனாகும் ஏதாவது ஓர் உருவம், அடையாளம் கடவுளர்க்குப் பதிலியாக வைத்து வணங்கப்பெறும். அதாவது தாம்தாம் வணங்கும் கடவுளர்க்கு அடையாளமாக ஒரு கருவி (வாள் அல்லது வேல்), உயிருள்ள மரம் அல்லது மரத்தறி, ஒரு கல், ஓடும் ஆறு, ஒரு இலிங்கம், ஒரு சாலகிராமக்கல், இவற்றுக்கும் அப்பால் கல்லாலோ, உலோகத் தாலோ அமைக்கப்பட்ட அவரவர் விரும்பும் இறை ஓவியம் அல்லது கற்சிலை என ஏதாவது ஓர் அடையாளத்தை - உருவை - முன் வைத்தே வணங்குவர். (அதாவது வேத வேள்வி - அக்கினி வழிபாடு அருவ வழிபாடு; தமிழரது ஆகம வழிபாடு உருவ வழிபாடு. இரண்டும் எவ்வாறு ஒன்றாகும் ? ).

16. வேதத்தின் முடிவான பயன் வேதாந்தம். அது 'ஞானம்' எனப்படும். அறிவு வழியில் முத்தி (நிலைபேறு, Immortality) அடைவது. (சுருக்கமாகத் தத்துவ வழி) ஆகமத்தின் முடிவான பயன் பத்திவழி. இறைவன் மீது இடையீடின்றித் தியானம் - மன ஓர்மையின் மூலம் அவனை அடைவது.

கிரு ணன் இதனை 'ஏகபத்தி' என்று கூறுகிறான். உபநிடதங்கள் கூறும் 32 'வித்யை' முறைகளில் சிலவற்றைக் கைக்கொண்டுதான், பிறகு இறைமையை அடையலாம்.

ஆகமங்கள் சரியை, கிரியை (முதல் மற்றும் இரண்டு) நூல்கள் சிவனையும் விட்டுணுவையும் வழிபடும் நெறிகளை விளக்குகின்றன. ஆயினும் பத்திமை ஒழுக்கம் என்பது யோகம் (தமிழில் மன ஓர்மை) பற்றிய உளவியல் தொடர்புடைய நெறியையும் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆகமத்தின் மூன்றாம் நூல், இந்த (மன ஓர்மையாம்) யோகம் பற்றியது. நான்காம் புத்தகம் ஞானம் பற்றியது. ஆனால் இது முற்கூறிய (வைதிகவழி) ஞானம் அன்று. இது ஆகம நெறியின் அடிப்படையான மெய்ம்மைக் கோட்பாடுகளின் வழிப்பட்ட விளக்கமாகும். இது வேதாந்தத்தினின்றும் முற்றிலும் வேறுபட்டது. ஏனெனில் பின்னது 'பிரமம்' என்ற ஒன்றே இவ்வுலகிலுளது எனக் கொள்வது. முன்னதோ முப்பொருள் உண்மை பற்றியது: கடவுள், தனிமனிதன், உலகம் (பதி பசு பாசம்).

17. ஆகமங்கள் அடிப்படையில் பத்தி மார்க்கத்தின் புனித நூல்களின் வழிப்பட்டன. உபநிடதங்கள் ஞான மார்க்கத்தின் புனித நூல்கள் வழிப்பட்டன.

18. முன்னைய பத்தி மார்க்கம் பொதுவாகப் பலருக்குரியது; பின்னைய உபநிடதம் தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டுமே உரியது. முன்னையது எளிய வழி; பின்னையது அதினின்றும் வேறுபட்ட கடினமான வழி. ஸ்ரீ கிரு ணனும் கண்காணாத ஒன்றில் மனம் வைத்துத் தேடுவது, மண்ணுலக உயிர்களுக்குக் கடுந்துன்பம் தருவது என்றே குறிப்பிடுகின்றார்.

19. வைதிகச் சடங்குகளின்படி மக்களை நான்கு வகை வருணங் களாகப் பிரிக்கவேண்டியுளது. கடைசி வருணத்தாரை வேதத் தையும் வேதாந்தத்தையும் படிக்கக்கூடாதென்று அது தடுக் கின்றது. இது வருணாசிரம தருமம் என்ற கோட்பாட்டை உருவாக்கி, நான்கு வருணத்தாருக்கும் உரியன என வெவ்வேறு கடமைகளை வகுக்கின்றது. இதன் மிகைப்பட்ட கோட்பாடு எதுவென்றால், பிராமணர்களே சன்னியாசம் மேற்கொள்ள முடியும்; அச்சன்னியாசிகளுக்குரிய சிறப்புப் பயிற்சிகளெல் லாம் முடிந்தபிறகே அவர்கள் மோட்சம் அடைய முடியும். அதாவது இவ் வைதிக நெறிப்படி, பிராமணர்களே மோட்சம் அடையமுடியும். (நம் பரமாசாரியர்கள் எத்துணையளவு வடமொழி வேத வைதிக வேள்விச் சார்புகளுடன் எழுதிப் பேசி முயன்றாலும், அந்நெறிகளின்படி மோட்சம் அடைய முடியாது).

20. ஆகமர்கள் இக் கோட்பாடுகளை அறவே மறுக்கின்றனர். விட்டுணுவையும் சிவனையும் எவர் வேண்டுமானாலும், ஒரு சண்டாளன்கூட ஓர் உருவத்தை அல்லது படிமத்தை வைத்துப் பூசை செய்யலாம். சிவனடியார்கள் பற்றிய பழங்கதைகள் (legends) தாழ்ந்த சாதிப் பத்தர்கள், கோயில்களில் சிவனை வழிபட்டமை பற்றிக் கூறுகின்றன. திருக்காளத்திக் கோயிலில் கண்ணப்ப நாயனார் சிவனுக்கு இறைச்சியுணவு படைத் துள்ளார். கி. பி. எட்டாம் நூற்றாண்டளவில், வைணவப் பாசுரங்கள் பாடிய ஆழ்வார்களில் ஒருவர் 'பாணன்' ஆவார். அவர் கீழ்ச் சாதியினர். ஸ்ரீரங்கம் கோயிலைச் சுற்றியுள்ள புனித மண்ணில், அவர்தம் பாதங்கள் படுதற்குத் தகுதியுடையன அல்ல. ஆனால் ஆகமங்கள் நால்வகைச் சாதியை ஏற்க

வில்லை. வேதத்தின் ஒரு பகுதி எனப்படும் வேதாந்தம், சூத்திரர் களுக்கு முற்றிலும் மறைக்கப்படுகிறது. பாதராயணர் இக் கருத்தை விளக்கும் தனிப்பகுதி ஒன்றுளது. சூத்திரர்களை எவ்வகையிலும் புனிதப்படுத்தி, மேலே வரக்கூடிய சடங்கு களுக்கு உரியவர்கள் ஆக்கமுடியாது. (சூத்திரரை - பரமாசாரி யர்கள் உட்பட - 'ஞானஸ்னானம்' செய்து உயர் வகுப்பார் ஆக்க முடியாது). அதனால் அவர்கள் வேதங்களைப் படிக்கவும் கேட்கவும் கூடாதென்று தடைசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கு மாறாக ஆகமங்கள் அனைத்து மாந்தர்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எந்த அளவு என்றால், இன்றும் ஒரு பறையன், சிவதீக்கை பெற்றிருந்தால், ஒரு பிராமணனுக்கு அவன் சிவதீக்கை செய்துவைக்க முடியும். இதன்மூலம் ஒரு பறையன் பிராமணனுக்குக் குருவாக முடியும்.

21) ஆகமர்களைப் பின்பற்றுபவர்களிடமும் சன்னியாசம் எனும் நிலை பரவியுள்ளது. வைணவத் துறவிகள் ' ஏகாந்திகள்' எனப்படுவர்; சைவத்துறவிகள் 'சிவயோகிகள்' எனப்படுவர்.

22) ஆகமங்களின் அடிப்படை விதிகளின்படி மோட்சமடைய சன்னியாசம் கட்டாயத் தேவையன்று. எல்லாச் சாதியினர்க்கும் பொதுவான பத்திநெறியில், ஓர் இல்லறத்தானும்கூடச் 'சம்சார சாகரத்தை'க் கடக்கமுடியும். இவர்கள் 'யோகம்' என்பதையும் ஒரு பகுதியாகக் கடைப்பிடிப்பதால், சன்னி யாசத்தை மேற்கொள்ள நேர்கிறது. ஆனால் அது மிகவும் தேவையானதன்று. சன்னியாசம் மேற்கொள்வார்க்கு யோகப் பயிற்சி எளிதாகிறது என்பதால் ஓரளவு அதுவும் ஏற்புடைய தானதே தவிர, இங்கு அது கட்டாயமன்று.

இதன் பின்னர் பி. டி. சீனிவாசர், வைதீகர்களுக்கும் ஆகமவாதிகளுக்கும் முற்காலத்தில் கடும்போட்டி நிலவியதை விளக்குகின்றார். கடவுளர்களின் பெயரால் யக்ஞங்களில் இரத்தம் சிந்தும் உயிர்ப்பலி கொடுப்பதையும் மாட்டிறைச்சி தின்பதையும் ஆகமர்கள் வெறுத்தனர். இதனால் வைதிகர்கள் உயிருள்ள ஆடுமாடுகளுக்குப் பதிலாக, மாவால் அவைபோலச் செய்த பி டபசுக்களையும் அக்கினியில் போட்டு, யாகம் செய்தனராம். இவ்வாறு வைதிகர்கள், ஆகமங்களின் நல்வழியையும் ஏற்று, வேள்வி செய்து ஓரளவு இணையலாயினர்.

இதன்பின் கிருணன் தன் கீதையில் பாகவதர்களின் பத்திநெறியையும் வைதிகர்களின் ஞானநெறியையும் சாங்கியர் களின் நுண்ணிய சிந்தனைகளையும் கலந்து போதித்து, வைதிகப் போக்கைக் கடிந்தார் என எழுதிச் செல்கிறார், சீனிவாசர். (கீதை அத்தகையது தானா என்பது மீள் பார்வைக்குரியது).

மேலும் பி. டி. எஸ். அவர்கள் எழுதுவதன் சாரத்தைக் காண்போம்:

வைதிகர்கள் ஆகாமியர்களை மிகக் கடுமையாக வெறுத் தனர். இது வேத மந்திரங்களில் ஆரியர்கள் 'தஸ்யூக்களை'ப் பகைத்த காலத்தின் தொடர்ச்சியாகும். யமுனாச்சாரியர் காலத்திலிருந்து, வைதிக, ஆகம நெறிகள் இணைக்கப்பட்டன வெனினும், இன்றளவும் இவ்வெறுப்புணர்வு காணப்படுகிறது.

சைவ, வைணவத்தைச் சார்ந்த கோயில் குருக்கள்மாரை, கடுமை மிக்க வைதிகர்கள், கீழ்ச்சாதி பிராமணர்கள் என்றே கருதினர். "உண்மையில் எனக்குத் தெரிந்த அளவில், ஐம்பதாண்டு களுக்கு முன்புவரை, அத்துவைதக் கோட்பாட்டைப் பின்பற்றிய பிராமணர்கள், கோயில்களுக்குள் நுழைவதே இல்லை. வேதத்தின் உச்சியான வேதாந்தம் ஆகம நெறியை மிகக் கடுமையாக மறுத்து வெறுக்கவே செய்தது. பாதராயணர் பாசுபதத்தையும் பாஞ்ச ராத்திரத்தையும் மறுதலித்தார்". (இதற்கு எதிராக சிவநெறியினர், அத்துவைதப் பிராமணர்களைக் கோயில் கொடிமரத்திற்கு அப்பால் நுழையக் கூடாதென்றனர். அவர்களில் வருமானம் கருதி வந்தவர்களையும், கோயில் மடைப்பள்ளிகளில் மட்டுமே பயன்படுத்திக் கொண்டனர். சேக்கிழார் காலத்தில் 'முப்போதும் திருமேனி தீண்டுவார்' எனப்பட்ட சிவாச்சாரியார்கள், பட்டாச் சாரியார்களைச் சிவனியரும் மாலியரும் பெருமைப்படுத்தினர். குருக்களாகிய இவர்கள் தமிழர்களே. பல்லவர்தம் வல்லாண்மைக் காலத்தில், இவர்கள் வடமொழி கற்று, தாமே இறைவழிபாட்டு உரிமையைத் தக்கவைத்துக் கொண்டனர். இவர்களுக்கும் ஏனைய பிராமணர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை (திருமண உறவு) கிடையாது. அண்மையில் திருநெல்வேலியிலும் பழனியிலும் அத்துவைதியாகிய காஞ்சி சுவாமிகளைக் கோயில்களில் நுழையக்

கூடாது என்று பேரெதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் நடந்தன. அவரோ காவலர் உதவியுடன் கோயில்களுக்குள் நுழைந்தார். இவை வாழ்வும் செல்வாக்கும் வருமானமும் கருதித் தங்கள் கொள்கையை விட்டுவிட்டுக் குழறுபடி செய்வதாகும் என்பது வெள்ளிடைமலை. நம் பரமாசாரியர்கள் தம் உயர்ந்த பெருமித நிலையைவிட்டு, அரசியலுக்கும் அதிகாரத்திற்கும் அஞ்சிக் கீழிறங்குவதையே, எங்கள் மனம் தாங்கவில்லை. அவர்கள் உண்மையுணர்ந்து, தெய்வத் தமிழ்நெறியில் நிலையாக நின்றால், அவர்களை இமயத்தின் உச்சியில் வைத்துக் கொண்டாடத் தமிழ் மக்கள் காத்துள்ளனர்).

இதன்பின் சீனிவாசர் ஆகமங்கள் தோன்றிய காலம் பற்றி ஆராய்கிறார். இறுதியில் ஆகமங்கள் யாருடையன, அவற்றின் மூலவேர் எது என ஆராய்ந்து இவ் இயலை நிறைவு செய்கிறார். அவ்விரண்டு பகுதிகளின் சாரத்தை இங்குத் தொகுத்துத் தருகின்றோம். முழுவதும் படிக்க விரும்புவார், அவ் ஆங்கில நூலையும் அதன் சாரமான பகுதிகளை முழுமையாக பி. இராமனாதன் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளதையும் படிக்க வேண்டுகிறோம்.*

## ஆகமங்கள் எப்பொழுது தோன்றின?

பாரதப்போருக்குப் பிறகு பாரத நாட்டில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. வேதங்களை ஓதிய ரிஷிகளின் காலம் திரும்ப வாராத படி கடந்து போய்விட்டது. இவ்வுலகை மிகவும் வெறுப்பது; அதாவது வாழ்க்கையின் ஐம்புல இன்ப நுகர்ச்சியை, இவ்வுலகிலும் மறு உலகிலும் சிற்றின்பமெனத் தள்ளிவிட்டு, கரும காண்டம் தரும் மோட்சம் பற்றிய உறுதிமொழி மக்களை வலிந்துதான் ஈர்த்தது. பரப்பிரம்மத்தைத் தியானிப்பதன் மூலம் தீமைகளிலிருந்து பல வழிகளில் விடுபடலாம் எனச் சிந்தனையாளர்கள் நினைத்தனர். அவர்கள் உபநிஷத்துக்களில் 32 (வித்யை) வழிகளை உருவாக்கினர். உபநிஷதங்கள் கரும காண்டங்களிலிருந்து உருவானதால், சில உபநிஷதங்களில் முன்னைய கரும காண்டத்தின் சாயல்கள், காணப்பட்டன. ஆயினும் எளிய மக்களுக்கு இவை அனைத்தும் கடினமாகவே இருந்தன.

எளிய மக்களுக்காகவே ஆகமக் கல்வியும் நடைமுறைகளும் உருவாக்கப்பட்டன. சாதாரண மக்களின் அன்றாட வாழ்வியலோடு கூடியவை இவை. இறைவழிபாடு என்பது குருமார்களுக்கும் அரசர்களுக்கும் மாந்தர்கள் வணங்கிச் செய்யும் 'உபசாரங்கள்' போல அமைந்தது. இவ்வாறு பாரத காலத்திற்குப் பின்பு உபநிடதங்களும் முக்கிய ஆகமங்களும் தோன்றின.

## ஆகமங்களின் தோற்றத்திற்கான மூலங்கள்

ஆகம வழிபாட்டுச் செயற்பாடுகள் முழுவதும் 'அக்கினி' யற்றவை; (இன்று திருநெறிய தமிழில் சடங்குகள் செய்வோர் அக்கினி வளர்ப்பது தவறு); அப்போது வேதமந்திரங்கள் ஓதப் படுவதுமில்லை. எனவே இவை தஸ்யூக்களிடமிருந்தே தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். ஆரியச் சடங்குகள் வருமுன் தெற்கும் வடக்கும் அடங்கிய இந்தியா முழுவதும் தஸ்யூக்களின் சடங்கு முறைகளே உறுதியாக இருந்திருக்க வேண்டும். வேதகாலம் பிறகு வந்தபோது, வேதமும் வேதம் சார்ந்த நூல்களனைத்தும் மிக விரிவாக, எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருந்தபோதும், தஸ்யூக்களின் சடங்குமுறைகள் அப்போது எவ்வாறிருந்தன என்று யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஐரோப்பிய அறிஞர்கள் ஆரிய திராவிடப் போராட்டங்களையும் திராவிட நாகரிகம் அதனுடன் கலந்ததையும் ஆராய்ந்தார்களே தவிர, ஆரியச் சடங்குகள் பரவிய பின் தஸ்யூச் சடங்குகள் என்னவாயின என்ற வரலாற்றை நோக்க வில்லை. இதற்கு மனநிறைவான விடை தேடவேண்டும்.

ஆரியர்களின் வேள்வி உயிர்ப்பலிகள் ஆதலால் பொதுமக் களின் சமயமாகவில்லை. குறிப்பிட்ட சில 'ரித் விக்குகள்' - பிராமண குருமார்கள் மட்டுமே அவற்றில் ஈடுபட்டனர். அவற்றை பெரிய செல்வர்களும் வணிகர்களும் அரசர்களும், தம் செல்வத்தை வழங்கி, தமக்கு நன்மை தேட நடத்தினும் அவர்கள் அச்சடங்குகளில் பங்குபெற முடியாது. அதர்வ வேதத்தில் குடும்ப - வீட்டுச் சடங்குகளை நடத்துவதற்கான மந்திரங்கள் அடங்கியுள்ளன. ஆயினும் இவை குறிப்பிட்ட சிலர் தவிர, அனைவராலும் பின்பற்றப்பட்டன என்பதற்குச் சான்று இல்லை. வேதகாலத்தில் பொதுமக்கள் அக்கினிச் சடங்கல்லாத, தங்களுக்குரிய சமயச் சடங்குகளைப் பெற்றிருப்பார்கள். இவைதான் தொன்மைமிக்க

தஸ்யூச் சடங்குகளாக இருந்திருக்கும். அப்பொதுமக்கள் எக் கடவுளரை, எவ்விதச் சடங்குகளால் வழிபட்டனர் என்பதைக் கண்டறிய முடியுமா? ஆரிய அக்கினிச் சடங்குகளுக்கு முன்பு வடஇந்தியாவைப்போலத் தமிழர்களும் தஸ்யூக்களின் அக்கினி யற்ற சடங்குகளைப் பின்பற்றியிருப்பார்கள்.

இவ்வாறு 'தஸ்யூக்களின் சடங்குகளையே வேதகாலத்தில், பொதுமக்களும் தமிழர்களும் பின்பற்றி இருப்பார்கள் என்பதை பி. டி. எஸ். மிக வலியுறுத்தி எழுதியுள்ளார்.

அக்கினிச் சடங்குகள் குறையத் தொடங்கவே, பிராமணக் குருமார்கள் (Brahmana priests), தங்கள் தொழில் கைவிட்டுப் போனதால், முன்பே நாட்டிலிருந்த அக்கினியற்ற, சடங்குகளைத் தாமும் பின்பற்றத் தொடங்கினர். பெரும்பான்மையான மக்கள் மிகுந்த உணர்ச்சி வயப்படும் பத்தி வசப்படுபவர்களாக இருந்தார்கள்; மிகுந்த அறிவார்ந்த தன்மையுள்ளவர்களுக்குக் கட் புலனாகாத வழிபாடுகளில் மனம் தோயவில்லை. இவற்றால் பிராமணர்கள் பத்தி நெறிக்கு மாறிக் கொண்டார்கள். *

சிவன், திருமால், பிரமன் என்ற முப்பெரும் கடவுளர்கள்; கடவுள் அவதாரங்கள், அவ்வப்போது மனித வடிவில் வருபவர் கள் போன்ற பல கற்பனைகளை உருவாக்கி மக்களை ஈர்க்க முயன்றனர். (அதாவது தம் வாழ்வு தேடி, பிராமணர்கள் அக்கினி வழிபாட்டைக் கைவிட்டு, பத்தி நெறிக்கு மாறினர் என்பதே சீனிவாசர் கருத்து. ஆனால் இன்று நாள்தோறும் பல ஆயிரம் கணபதி ஹோமம், ஆயுசு ஹோமம், சுதர்சன ஹோமம் என நாடெங்கும் பரப்பி, அக்கினிச் சடங்குகளைப் பல மடங்கு உயிர்ப்பித்து, செல்வர்களை ஈடுபடுத்தி, பத்தி மார்க்கத்துடன் குழப்பி, தமக்கே உரியமுறையில் பெருவாழ்வு தேடிக் கொண் டுள்ளனர். இது சீனிவாசர் காலத்தில் குறைந்திருந்து, இன்று தீ பரவுவதுபோல், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துவிட்டது. தமிழர்கள் இவற்றால் தம் தோஷங்கள் அனைத்தையும், பணத்

---

* P. T. Srinivasa Iyengar, History of the Tamils, Asian Educational Services, New Delhi - 110 016.

*தமிழர் வரலாறு (கி.பி.600 வரை) பி.டி.எஸ்; தமிழாக்கம் பி.இராமநாதன், தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 600 017.*

தைக் கொட்டிக் கொடுத்துத் தீர்த்துக்கொள்ள ஒருவரை ஒருவர் முந்துகின்றனர். ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டுக் குடமுழுக்குச் செய்தால், குழந்தையைக் கொன்ற பாவம் தீராது. இரண்டு செயல் களுக்குமான பாவ புண்ணியங்கள் அவனால் நுகரப்பட்டே தீரும் என்று ஒரு சிவனியச் செல்வர் எழுதியுள்ளார். இவனோ ஆயிரம் கொலை, கொள்ளை, கருப்புப் பணம், ஊழல் என்று நாளொரு பாவமும் பொழுதொரு தீங்கும் செய்துவிட்டு, பிராமணர்களைக் கொண்டு ஹோமம், வேள்வி, சடங்குகள் செய்து தப்பிக்கலாம் என்று எண்ணத் தொடங்கிவிட்டான். கடவுளர்க்குப் பத்தியினால் செய்வது வேறு; பாவம் நீங்கச் செய்வது வேறு? பின்னதே இன்று பெருகிவிட்டதால், குறிக்க வேண்டியுள்ளது. இவற்றை எல்லாம் யாரிடம் சொல்வது? சிவனிய 'வினைக்கோட்பாடு' எங்கே போனது?).

காலப்போக்கில் படிப்படியாக 108 வை ணவ ஆகமங்களும் 28 சைவ ஆகமங்களும் மிகப் பிற்பட்டு 77 சக்தி ஆகமங்களும் தோன்றின.

பாணினி காலத்திலேயே சிவ, வைணவ வழிபாடு இருந்தன என்று அறியப்படுகிறது.

(சிவன், திருமால், கொற்றவைக்கு ஆகமங்கள் என்பதே, அவை தமிழரிடை மட்டுமே தோன்றியிருக்க முடியும் எனக் காட்டுகின்றன. இவை மூன்றின் வேரும் விழுதும் தமிழர் சமய வழிபாட்டின என்பது மறுக்க முடியாத உண்மையாகும்).

படிப்படியாக வேதாந்தமும் ஆகமமும் இணைய முயன்ற தைப் புராணங்களில் பார்க்கிறோம் என்றாலும் அவை ஒன்றாக வில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண்டு, சங்கராச்சாரியார் காலத்தும் அவர் ஓரளவு அறு சமயம் என வகுத்து, வி ணு, சிவன், சக்தி, கணபதி, சுப்ரஹ்மணியன், சூர்யன் என வழிபாட்டு முறைகளைக் கூட்டி, 'சண்மத ஸ்தாபனாச்சாரியார்' எனப் பெயரெடுத்த போதும் இவை ஒன்றாகவில்லை. அவர் வேத வழிபாட்டையும் ஆகம வழிபாட்டையும் தனித்தனியேதான் வைத்தார். யமுனா சாரியார், இராமானுசாச்சாரியார் போல்வார் இரு வழிபாடு களையும் இணைக்க முயன்றனர். கடைசியாக சீனிவாச ஐயங்கார்

ஆகம வழிபாட்டு முறை, மிகத் தொன்மை மிக்க காலத்தில் - ஆரியர் வருமுன் - வடநாட்டில் தொடங்கி, பிறகு தென்னாட்டிலும் பரவி, பிறகு அது வேதாந்தக் கலப்புற முயன்றது என்று கூறுகிறார். இன்று இந்தியா முழுவதும் ஆகம வழிபாடே வாழும் இந்து மதத்தின் வழிபாடாக ஆகியுள்ளது என்று முடிக்கிறார். (இக்கருத்து மீள் பார்வைக்குரியது. ஏனெனில் இன்று 'ஹோமம்' என்ற பெயரால், நாடெங்கும் வேதவேள்வி முறையே, பிராமணர்களுக்கு வாழ்வு தருமாறு, கணக்கின்றிப் பெருகிவிட்டது).

## முடிபுகள்:

*1)* இதுகாறும் ஆராய்ந்தவற்றிலிருந்து வேதம் வேறு, ஆகமம் வேறு என்ற கருத்து உறுதிப்படுகிறது.

*2)* அத்துவைத - அக்கினிச் சடங்குகள் உள்ள தத்துவஞான வழிப்பட்ட வேத வைதிகத்தையும் முப்பொருளுண்மை - வினைக் கோட்பாடு - பத்திமை மார்க்க அடிப்படையுள்ள தமிழர் சமயங்களையும் ஒரே இறைவர் எவ்வாறு தோற்றுவித்திருக்க முடியும் என்ற ஐயமும் எழுகிறது.

*3)* பிராமணர்கள் தங்களுக்கு வேள்விகளாலான வருமானம் கைவிட்டுப்போன காலத்தில், பத்தி மார்க்கத்துக்கு மாறிக் கொண்டு, பத்தியில் மூழ்கியுள்ள மக்களை, தம் வசப்படுத்தித் தாம் வாழ்வதற்கு வருமானம் தேட வழி வகுத்துக் கொண்டமை புலனாகிறது.

*4)* எனினும் எல்லாச் சடங்குகளையும் தாமே செய்வதாகக் கூறிக்கொண்டு, தங்கள் வேத வைதிக வேள்விச் சடங்குகளையும் 'ஹோமம்' என உருமாற்றி வைத்துக்கொண்டு, மக்களின் பத்திக்குரிய கோயில்களுக்குள்ளும் நுழைந்து கொண்டு, இருபிறப்பாளர்கள் என்பதற்கு ஒப்ப, பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிக்கொண்டு வாழ்வு தேடிக் கொள்கின்றனர் என்பதும் தெளிவாகிறது.

*5)* இவர்கள் ஆகமப்படி இறைவழிபாட்டிற்கு, வடமொழியே ஏற்றது; தமிழில் செய்தால் 'தோஷம்' எனக் 'கதைப்பதால்' இவ்வளவும் எடுத்துக்காட்ட வேண்டியதானது. நமக்கு யாரொடும்

பகைமை இல்லை. நடுநிலை சார்ந்த பார்ப்பன அந்தணர்களை நாம் போற்றுகிறோம். தமிழ் வளர்ச்சியில் அறிந்தோ, அறியாமலோ அவர்கள் பங்கு மகத்தானது. அந்த வழியில் ஒற்றுமைப் படவும், தமிழை இழிவுபடுத்தும்போது தடுத்து நீக்கவும் மானமுள்ள தமிழராவார் அனைவரும் எண்ணுகின்றனர் என்பனவே இந்நூல் வழி புலப்படுத்துவனவாகும்.

6) நம் சமயாசாரியர்களிடம் உள்ள ஐயப்பாடு, நம் பத்திப் பாடல்கள் அனைத்தும் வேதம், வேள்வி, ஆரியம் இவற்றை, (உதட்டளவில்) போற்றிப் புகழ்வதனால், நம் சமய மூலங்கள் ஆரிய, வடமொழி அடிப்படையினவாகத்தானே இருக்கமுடியும் என்பதாகும்.

இவற்றுக்கான விடைகள், அடுத்து வரும் பகுதிகளில், ஐயம் திரிபின்றித் தெளிவுபடுத்தப்படும்.

❖❖❖❖❖

# 3

# தமிழில் வழிபாடு - குழப்பமும் விளக்கமும்

சென்னை அண்ணாமலை மன்றத்தில் அரனருள் அமைப்பில் பேசியபோது (5-3-2007) தருமையாதீனக் குருமுதல்வர், "தமிழ்த் திருமுறைகள் மந்திர ஆற்றலற்றவை. அவை வழிபாட்டுச் சடங்கு கட்கு பயன்படுத்தக் கூடாதவை. திருமுறையில் திருமணங்கள் குடமுழுக்குகளைச் செய்வது முட்டாள்தனம், அபத்தம். சத்தியமாகச் சொல்கிறேன்" என்று பேசியதாக நாளிதழ்கள் சில செய்தி வெளியிட்டன. இது தொடர்பாக, இவை பொய்யென மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இப்போது, அதே மகாசன்னிதானம் புலவர் த. குருசாமி தேசிகர் மூலம், 'வேதாகமம்' என்ற, சிறு கையேட்டு நூலை அனுப்பி, நேரில் தரச் செய்தனர். தொடர்ந்து தேசிகர் அவர்கள், 'சாமி! இதுபற்றித் தங்கள் கருத்து என்ன என்று கேட்கிறார்' என்று நேரிலும் பேசியிலும் நினைவுபடுத்தினார்.

எதிர்பாராது ஒருநாள், திருப்பனந்தாள் காசிமட அதிபர் எழுதிய, 'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க' என்ற நூல், 'கூரியர்' மூலம் வந்தது. **'சைவ சமயம் வைதிக சமயம் எனப்படும்.' அது வேத உடன்பாட்டுச் சமயம்'. 'ஆகமம் என்பது வேதத்தின் சாரமாகும்! 'வேத ஆகமங்களின் சாரமாக அருளப் பெற்றவை திருமுறைகள், புராணங்கள் முதலியன**' என்ற அரிய கருத்துக்கள் இவற்றில் நிரம்ப இடம்பெற்றுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்னால், திருக்குடந்தை சாமி. தியாக ராசன் எழுதிய நூலொன்றும் யாரோ அனுப்பி, எனக்கு வந்து கிடந்தது. 'சொன்னால் விரோதம், ஆயினும் சொல்லுகிறேன்' என்பது அந்நூல்.

இந்நூலில், சாமி. தியாகராசனுக்கு ஏற்பட்டுள்ள வாதங்களில் ஒன்று, ஆரூரர் பற்றியது.

> மற்றுநீ வன்மைபேசி வன்தொண்டன் என்னும் நாமம்
> பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க
> அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச்
> சொற்றமிழ் பாடுக' என்றார், தூமறை பாடும் வாயார்

இதில் வருவது, 'தமிழில் அருச்சனை செய்து பாடுக, ஏனெனில் அருச்சனை என்பது பாட்டேயாகும்; அதிலும் அன்பின் மிக்க அப்பாடல்களைச் சொற்றமிழால் பாடுக!' எனச் சிவபெருமானே கூறியதாக வருவதுதான், கடும்நோயைக் கிளப்பி விட்டது.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் ஆறாம் நூற்றாண்டுவரை சமஸ்கிருதம் பற்றிய வல்லாண்மைக் காலம். தமிழர்கள் கடல் கோளால் இழந்தவை போக, எஞ்சியன அனைத்தையும் சமஸ்கிருத மயமாக்கி, தமிழர் சமயம் இசை நாட்டியம் கலைகள் என அனைத்தையும் தமிழருக்குரியன அல்ல; சமஸ்கிருதத்திலிருந்தே வந்தன போலத் தோன்றவைத்த கொடுமை மிகு காலம் அது.

இக்காலக் கட்டத்தில், தமிழ் கற்கப்படவில்லை; தமிழ்ப் புலவர்கள் போற்றப்படவில்லை; தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள், தமிழார்வலர்கள் வீடுகளில் முடங்கிக் கிடந்தன.

வடமொழி வளர்க்கப்பட்டது, வடமொழிவாணர்கள் போற்றப்பட்டனர். வடமொழிக் கல்லூரிகள் தோன்றின. குக் கிராமங்களிலும் வேத முழக்கம் கேட்டது. இதனால் **வாழ்வு தேடிய தமிழர்களும் வடமொழி கற்றனர், வடமொழியில் எழுதினர்;** தமிழர் நாகரிகப் பண்பாட்டு அடிப்படைகளையும், நூல்களையும் சமஸ்கிருதமயமாக்க முன்னின்று உதவினர்.

இன்று ஆங்கிலேயன் போன பிறகும் ஆங்கில மோகம் அளவின்றிப் பெருகி வளர்ந்து, தமிழை அறவே புறக்கணிப்பது போல, சோழர் காலத்திலும் அரசவைகளில் அந்தணர்களே மேலான இடம்பிடித்தனர். தமிழ்ப் புலவோரும் - தேவார, திவ்வியப் பிரபந்த அருளாளர்கள்முதல், சேக்கிழார்வரை, தங்கள் உள்ளக் கிடக்கைகளைக் குறிப்பாகவே வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

இதனிடையே களப்பிர, பல்லவ காலத்தில் புத்தமும் சமணமும் நாடெங்கும் பரவின. களப்பிர, பல்லவர் காலங்களில் சமஸ்கிருதமே அரசின் ஆட்சிமொழியாய், வடநாட்டைவிடத் தெற்கேதான் பெருஞ்சிறப்பும் பெருவாழ்வும் பெற்றது. சமணம் அரசின் ஆதரவு பெற்றதால், தெற்கே குமரிவரை, மேலோங்கி, வேதவேள்வி அந்தணரை, வேள்வியில் உயிர்க்கொலை செய்ய

விடாமல் தடுத்து, அவர்களையும் அடக்கி ஒடுக்கி அழிவின் விளிம்பிற்குக் கொண்டு போனது. இன்றும் 'களேபரம்' என்பது போல் எங்கும் கொலை, ஊர்களையே எரித்தல், அடித்தல், கட்டிப்போட்டு உதைத்தல், எங்கு நோக்கினும் கலவரம் என நடந்தன. இந்தக் கொடுமைகள் திருநாவுக்கரசருக்கே செய்யப் பட்ட காலமல்லவா அது?

இதனால் கடும் சோதனைகளுக்கு ஆளான வேத வேள்வி வைதிகப் பிராமணியம் தமிழரின் பத்திமை நெறியாகிய ஆகம நெறியையும் தமிழையும் தமிழரையும் சரணடைந்தது. சிவனியமும், மாலியமும் உள்நாட்டு மக்கள் சமயமாதலால், அவற்றைச் சார்வதுபோல் வெண்ணீறு பூசியும் திருநாமம் இட்டும் நடிக்க வேண்டியதாயிற்று.

இவ்வேத வைதியர்கள், இவ்வாறு நடந்த அடி உதை வலி தாங்காமல், கூட்டம் கூட்டமாக தனித்தனி ஊர்களில் வாழ்ந் ததை (சேய்ஞலூர், வேதிகுடிபோல) நம் திருப்பதிகங்கள் குறிப்பிடுகின்றன.

அன்றைய நிலையில் பல்லவராட்சியின் போதும் பின்பும் தமிழர்களில் பலர் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் காப்பாற்றலாம் என்ற நல்ல நம்பிக்கையில், சிவ வேதியராக வேடம்பூண்ட வேத வைதியரைத் தழுவிக் கொண்டனர்.

அவ்வாறு மாறியவர்களில் திருஞானசம்பந்தர், சண்டீசர், அப்பூதியடிகள் போலும் சிலரைத் தவிரப் பிறரெல்லாம், 'உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசி'த் தமிழின் அழிவுக்கு வழி வகுத்தவர்களே. இந்நிலையில்தான் 'கொள்கையில்லாக் கூட்டணி' ஒன்று, இன்றைய அரசியற் கட்சிகளில் போலச் சமயத்துறையில் ஏற்பட்டது.

வேத வைதியர்கள் தாமும் தமிழர்போல நடித்தும் பேசியும் புகழ்ந்தும் தாமே அனைத்திற்கும் உதவுவதாய் - எல்லாத் துறையிலும் நுழைந்து கொண்டும் தமக்கான வாழ்வு தேடினர். தமிழரும் வடமொழி வேதங்கள், வடமொழி மறையவர் போல் வாரை, வாயளவில் புகழ்ந்தும் பாடியும் சிறப்பித்தும் நடக்க வேண்டியவராயினர். ஆயினும் ஊள்ளூற வடவர்கள் தமிழைப்

பலவகையிலும் சமஸ்கிருதமயமாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாய், தமிழரில் மேனிலையினரைக் கையகப்படுத்திக் கொண்டு, தமிழையும் சிவ நெறியையும் விளங்காமற் செய் தொழித்தனர். தமிழரும் - நம் நாயன்மார்கள், சேக்கிழார் உட்பட, அவ் வடமொழிச் சார்பைப் புகழ்வார்போல வாயளவிற் புகழ்ந்துகொண்டு, அவற்றை அடியொண்ட மறுத்தும் பாடிச் சென்றுள்ளனர்.

இந்நுட்பங்களை உணர்தல் கடினமே. எனினும் இவற்றைக் கண்டறிவதற்கான, குறியீட்டுக் குறிப்புக்களை ஆங்காங்கே அழுத்தமாகச் சொல்லி வைத்துள்ளனர். தமிழருள் மழுங்கிப் போன, சிலரின் மண்டைகளில் இவை ஏறுவது கடினமே. இனி, இச்சூழலில் சேக்கிழார் பாடியதற்கு வருவோம்.

மறைகள் என்பன யாவை? தொல்காப்பியர்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

எனத் தரும் விளக்கப்படி, பேரருட் செல்வர்களாம் சான்றோர்கள் தம் புலமை - வாக்கு வன்மை - பலிதம் போன்ற ஆளுமை வன்மை யாற் கூறியன யாவும் மறைகளே.

திருவள்ளுவரும்,

நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து
மறைமொழி காட்டி விடும்

என்றார். சிவன் அருளியது மேலேயிருந்து வந்தது என்பன ஒருபுறம் இருக்க, 'நிலத்து மறைகளும் உள' என்று கூறுகிறார் வள்ளுவப் பேராசான். பிறப்பியலில் தொல்லாசான் '**நரம்பின் மறைய**' என்பார். இசைக்கலை நூல்களையும் மறைகள் எனல் காணலாம்.

'தூமறை பாடும் வாயார்' என்பதைப் பிடித்துக்கொண்டு, தொங்கும் சாமி. தியாகராசன், சேக்கிழார், அதே புராணத்தில் 'முந்தை மறை ஆயிரம் மொழிந்ததிரு வாயான்' என்று சிவபெருமானைப் பற்றிக் கூறுவதைச் சற்று முன்னோக்கிப் பார்த்திருக்க வேண்டும். முந்தை - முற்பட்ட. 'ஆயிரம் மறை' எங்கிருந்து வந்தன? ஏதாவது தவறான ஒன்றைப் பிடித்துத் தொங்காமற் தொங்குவது, தொப்

பென்று விழவும் வைத்துவிடக்கூடும். 'எண்ணில் ஆகமம்' எனத் திருமூலர் குறிப்பாக உணர்த்துவது என்ன?

ஏனைய மதத்தவர்களும் தங்களுக்கு என ஆகமங்கள் உள என்பர். சமணர் தங்களுக்கு 'நான்மறை' உண்டென்று நூறுமுறை கூறியுள்ளனர். ஆகமம் என்பது, வழிபாட்டு நெறிமுறைகளும் அவ்வச் சமயம் சார்ந்த கோயில்கள் அல்லது பள்ளிகள் அல்லது நிறுவனங்கள் பற்றிய விளக்கங்களே. அறிஞர் பி. டி. எஸ். ஆகமம் என்பது சமய வழிபாட்டுக் கையேடு (Text - Book) என்பார். ஆகமம் - பழைமையிலிருந்து வந்தது. இது காலந்தோறும் மாறவும் கூடும். இன்றும் நாம் நம் திருமுறைகளின்வழி, புதிய 'ஆகமங்கள்' படைக்கலாம். ஆகமப் பூச்சாண்டி காட்டுபவர்கள், தந்நலவாதிகள். தேங்காய் பழம் காணிக்கைப் பணம் வைத்து இன்று அருச்சனை - பரார்த்த பூசை என்று சொல்கிறார்களே, இது ஏழு திருமுறைகளுக் குள் எங்குளது? ஓரிடம் காட்டுவார்களா? 'அன்றாலின் கீழிருந்து அறமுரைத்தான் காணேடி' என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். வடமொழி வேதங்கள் நான்கும் ஏழுமடலங்களாக, ஆங்கிலப் பெயர்ப்புடன் வெளிவந்துவிட்டன. ஆலின் கீழிருந்து அறம் உரைத்தது பற்றி, ஒரு வரி, அம் மூலநூல்களில் வந்திருந்தாலும் அதனைச் சாமி. தியாகராசன் எடுத்துக் காட்டவேண்டும்.

நம் அருளாளர்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் வடமொழி நான்மறைகளைப் போற்றிப் பாடினரே என்று கூறக்கூடாது. அன்றைய 'கொள்கையில்லாக் கூட்டணியின்' விளைவு அது. இவர்கள் இருவரும் சேராவிட்டால் மூன்றாம் எதிரியை விரட்ட முடியாது என்றிருந்த நேரம். வேதங்களை அருளியவன் என்று மட்டுமா பாடியுள்ளனர்? வேதங்கள் தேடியவன், தேடியும் காண இயலாதவன், அருமறைகளைக் காளையாக்கி அவற்றை அடக்கி அதன்மேல் அமர்ந்தவன் என்றெல்லாம் வரும் பகுதிகளைத் தொகுத்து நோக்கவேண்டும். திருநாவுக்கரசர் பாடிய, திருக்கச்சியேகம்பப் பதிகம் ஒன்று. அந்த ஒரே பதிகத்தில் 'நான்மறையொடு ஆறங்கம் வல்லானை' என்பது ஏழாம்பாட்டு; 'விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள் புரித்தானைப் பதம் சந்திப் பொருளுருவாம் புண்ணியனை' என்பது எட்டாம் பாட்டு. 'வெவ்வேறு வேதங்கள் விரித்தான்' எனில்

அவை யாவை? எது எதற்கோ, நூறுவகைப் பொருள் சொல்லி, 'தமிழில் அருச்சனை செய்க' என்பது பொருளன்று என மறுக்க வல்ல தியாகராாசன் இதற்கு என்ன விடை சொல்கிறார்?

மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் (திருப்பழ மண்ணிப் படிக்கரை)

(இதற்கு நான்கு வடமொழி வேதங்களிலும் ஓரடியிற் கூட அகச் சான்று இல்லை).

அன்று ஆலின் நிழற்கீழ் அறம் நால்வர்க்கு அருள் புரிந்து
(திருக்கடவூர்)

ஆல் நிழற்கீழ் அறம் புரிந்து (திருப்புன்கூர்)

கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல் நிழற்கீழ் அறம் பகர
வேதம் செய்தவர் எய்திய இன்பம்
யானும் கேட்டுநின் இணையடி அடைந்தேன்
ஆலின் நிழலில் அமர்ந்தாய் (திருநெல்வாயில் அரத்துறை)

ஆலின் கீழிருந்து ஆரணம் ஓதி

மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல் மேவி அருமறை சொன்ன தென்னே

என்றது, வடமொழி வல்ல சம்பந்தர் வாக்கு (சேய்ஞலூர்).

நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள் புரித்தானை (திருக்கச்சியேகம்பம்)

என்பது அப்பர் வாக்கு. இவற்றில் '**அறம்**' என வருவதை நுட்பமாய் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த ஆலமரம் கயிலையிலே இருப்பது என்பதுதானே போதருமாம். இதற்குச் சில சான்றுகளும் காட்டுகிறார். வட, வடபால் எனப் பிற்காலத்தே வருவது கொண்டு, கயிலை என முடிவு செய்கிறார்.

'ஆலமர் செல்வன்' என்பது சங்க இலக்கியத்தில் வரும் சொல். இதனைப் பிறிதொரு இடத்திலும் விளக்கியுள்ளோம். எனினும்

'கீழகளது ஆசாரம்' என்பதுபோல், தவறுபட்ட கருத்துக்களே மேலோங்குவதால் மீண்டும் விளக்க நேர்கிறது.

ஆல்கெழு கடவுட் புதல்வ (முருகு. 256)

ஆலமர் செல்வன் அணிசார் பெருவிறல்
போல வரும் என் உயிர் (கலி. 81)

ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழாக் கால்கேள் (கலி. 81)

ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்' (புறம். 198)

ஆலமர் செல்வன் புதல்வன் (சிலம்பு – குன்ற)

ஆலமர் செல்வன் மகன் (மணி – 3 - 144)

கடையெழுவள்ளல்களில் ஒருவன் ஆய். அவன் 'ஆலமர் செல்வற்கு, நீல நாகம் நல்கிய கலிங்கம் தந்த ஆய்' (சிறு. 97). ஆய் இமயமலை சென்று, நல்கினன் என்பது பொருந்துமா?

அகநானூற்றுப் பாடல் ஒன்று;

நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்
ஆலமுற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர் (181)

இந்த மகளிர் வடநாட்டைச் சேர்ந்தவர்களா? அவர்கள் மனை இமயமலை உச்சியில் இருந்ததா? அங்கேதான் 'ஆலமுற்றம் இருந்ததா? அதை வடநாட்டு மகளிர், கழுவித் தூய்மை செய்து வழிபட்டனரா? ஆமாம், அது வடநாடுதான் என்றும் கூசாமல் எழுதக்கூடிய தகுதி ஒன்று உண்டு. ஆதரவு தருபவர்க்கு நன்றி பாராட்டலாம். அதற்காக எதை வேண்டுமானாலும் எழுதி அறிஞர்களை அவமதிக்கலாமா?

திரு. வி. க., மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை ம. ரா. போ. குருசாமி போல்வார், தமிழ்க் கல்வியின் உச்சம் தொட்டவர்கள்; பேரறிஞர்கள், ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்கள். அவர்களைக் கண்டபடி எழுதி, மறுத்துவிட்டதாக எண்ணி மகிழ்கின்றார்.

அறிஞர் ம. ரா. போ. குருசாமி அவர்கள், 'சூத்திர நற்குலம்' எனத் தாங்களே, தங்களை அழைத்துக் கொள்ளும்படியாக வைதிகருடன் தமிழர்க்கு ஏற்பட்ட 'கொள்கையில்லாக் கூட்டணியை' - ஐக்கிய முன்னணி அமைத்ததால் வந்த வினையை எடுத்தியம்பி யுள்ளார். வேளாளர் பற்றி வரும் வரலாற்றில், இச்சொல் வருவதால் அதை அவர் குறிக்க நேர்ந்துளது. இது பெரிய குற்றமன்று. சங்க காலத்திலேயே புறநானூற்றில் வரும் 'இழிபிறப்பினோன்' (363), புலைமகன் (360), இழிசினன் (289, 82) என்ற சொற்களை வைத்து அனைவரும் 'சமமாக' இல்லையே எனக் கண்டுபிடித்துக் கூறுகிறார். எந்தக் காலத்திலும் எல்லா நாட்டிலும் செல்வர், வறியவர், உயரிய வாழ்வினர், தாழ்ந்த நிலையில் வாழ்பவர் போன்ற ஏற்ற இறக்கங்கள் உண்டு. வருணா சிரமம் என்று பிறப்பினால் கூறும் கொடுமையை, இவ்வாறு எழுதி, சமனிலைப்படுத்த முயல்பவரிடம் ஒன்று கேட்கிறோம்:

"அட பாவி, குடியைக் கெடுத்துக் கும்மாளம் அடித்துக் கெடுத்தானே பாவி, இந்த இழிசினன் எப்போது திருந்துவானோ" என்பதுண்டு. அன்றும் வாழும் இடத்தால், செய்யும் தொழிலால், 'புலையர்' எனப்பட்டவர் இருந்தனர். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்' என்பதில்லையா? நந்தனாரை 'மாடுதின்னும் புலையா' என அழைக்கவில்லையா?

இன்னொன்றும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒருவன் கேடு கெட்ட கயவனாக இருந்தாலும் அல்லது தமிழுக்கு எதிராகவே சிந்திக்கும் யாரோ ஒருவனைப் பார்த்து, "இவன் தமிழனுக்குப் பிறந்த தமிழனா? இத்தகைய இழிந்த பிறப்பினர் இருக்கும் வரை நாடும் மொழியும் உருப்படா" என்றால், அதனால் மக்களைச் சமமாக மதிக்கும் மனநிலை போய்விட்டதாகாது.

சூத்திரன் என்பது பிறக்கும்போதே தலையில் எழுதிவிடுவது. அதை அவனாலும் மாற்றமுடியாது, அவனைப் படைத்த கடவுளாலும் மாற்றமுடியாது. எத்தனை பிறப்பெடுத்தாலும் சூத்திரன் சூத்திரனே. (கீதை, மனுஸ்மிருதிகள் படித்தால் தெரியுமே).

தமிழர்கள் "சங்க காலம் பொற்காலம்; அனைவரும் சமம் என்ற தத்துவம் தாண்டவமாடியது என நம்மவர்களில் பலர் வாய்ப்பறை அடிக்கிறார்களே. அந்தப் பறையை இந்தப் பாடலில்

காணப்படும் செய்தி கிழித்தெறிகிறது. இவ்வாறு எழுதுகிறார் சாமியார். கயவன் ஒருவனை 'இவன் ஓர் இழிபிறப்பினன்' என்றால், அது சமத்துவத் தத்துவத்திற்கு எதிரானதா? இவையெல்லாம் வருணாசிரமக் கோட்பாட்டுவழித் தோன்றிய சொற்கள் அல்ல என்பதை, முதலில் உணர வேண்டும்.

சங்க காலத்தைப் பொற்காலம் என்றது பழங்காலம். அன்றே இச் 'சாமிகள்' போன்ற பலர் இங்கு வந்துவிட்டார்களே? வேள்வி ஆசையில் மூழ்கிய தமிழக மன்னர்கள் கூட்டிவந்த, வேள்வி செய்யும் புரோகிதப் பார்ப்பனர்கள் என்ற ஒருவகையினரால் தானே இன்றும் தமிழும் தமிழரும் அல்லற்படுகின்றனர்.

சற்சூத்திரர், அசற்சூத்திரர், நற்சூத்திரர் என்பதை எல்லாம் இன்று யாரும் ஏற்கவில்லை. யாரிடமாவது சொல்லிப் பாருங்கள், காலில் கிடப்பதைக் கழற்றிடத் தொடங்குவான்.

அறிஞர் ம. ரா. போ. குருசாமி நன்கு தேர்ந்து, தெளிந்துதான் எழுதியுள்ளார்; தமிழுக்கு மந்திர சக்தி இல்லை என்று. எவர் கூறினாலும் எம் போல்வார்க்குச் சீற்றம் எழுவதுறுதி.

சைவப் பயிரை வேத வேலி கட்டிக் காப்பாற்றினராம். வேத வேள்வி நெறி வேறு; சிவப் பத்திமை நெறி வேறு. அது அருவ வழிபாடு; இது உருவ வழிபாடு. அது ஏகான்ம நெறி; இது முப்பொருள் உண்மை நெறி. இவை இரண்டும் நேர் முரணானவை. மூன்றாம் எதிரிகள் எனப்பட்ட சமண புத்த நெறிகளை விரட்ட இவை அமைத்துக் கொண்டது கொள்கையைத் தவறவிட்ட கூட்டணி'! அதன்பிறகு வேத வைதிகம், தமிழ்ச் சிவனியத்தையும் மாலியத்தையும் விழுங்கிவிட்டது என்றே கூறலாம். இப்படியிருக்க சைவப் பயிருக்கு வேத வேலி கட்டப்போக, வேலியே பயிரை மேய்ந்துவிட்டது. வடமொழி நான்கு வேதங்கள் பற்றிய எமது அறிமுகக் கட்டுரைகளையும் அவற்றில் நாங்கள் முகவரியுடன் தந்துள்ள ஆங்கிலம், தமிழ் நூல்களையும் வாங்கிப் படியுங்கள். அப்படியும் தெளிவேற்படாவிட்டால், மூளைக்கு மருத்துவம் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

சமஸ்கிருதத்தில் ஐம்பத்தோர் எழுத்துக்களிருப்பதால், உலகத்திலுள்ள பாஷைகள் அனைத்தையும் உள்ளபடி உச்சரிக்க முடியுமாம். ஆங்கிலம் 26 எழுத்துக்களில் உலகை ஆள்கிறதே, அது எப்படி? தமிழிலுள்ள எகர ஒகரம் சமஸ்கிருதத்தில் இல்லையே; ழ, ற, ன சமஸ்கிருதத்தில் ஒலிக்க முடியாதே. வடமொழிப்பற்று இருந்தால், அதைக்கட்டி அணைத்துக் கொள்வதை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை. தமிழ் போன்ற பிற மொழிகளைக் குறைகூறி, அவமானப்படுத்தாதீர் என்பதே எம் வேண்டுகோள். தமிழ் எங்கள் தாய்; எங்கள் உடம்பில் ஓடுவது தமிழ்க் குருதி.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்பதால், சிவன் தென்னாட்டிற்கு மட்டும் உடையவன் ஆக மாட்டானாம். எந்த மொழி, எந்த இனம், எந்த நாடு போற்றினும் அவ்வந் நாட்டிற்கு அவன் உரியவனாம். மாணிக்கவாசகர் அதிலுள்ள இரண்டாம் அடியை, இந்தச் சாமியை, அடியால் அடித்து மறுக்கவே வைத்துள்ளனர். அவன் எந்நாட்டவர்க்கும் உரியவனே. ஆயினும் அவனது தோற்றம், இருப்பிடம் எல்லாம் தென்னாடே. சிவனை வடமொழிக்கும் உரியவனாக்க இவ்வாறு முயல்கிறார், இந்த தியாகராசனிடம் ஓர் அமெரிக்கன் 'நீ எந்த ஊர்?' என வினவினால், நான் அமெரிக்காவில் வாழ்வதால் நானோர் அமெரிக்கன் என்று கூற முடியுமா? அவன் சிரிப்பானா, அடிப்பானா நான் அறியேன்.

'தென்பாண்டி நாட்டானே' (சிவபுராணம்); 'தென்னா என்னா முன்னம்' (திருவெம்பாவை); 'தென்னன் பெருந் துறையான்' (திருவம்மானை); 'தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை' (திருவம்மானை), 'தென்னா தென்னா என்று தெள்ளேணங் கொட்டாமோ' - இவ்வாறு மிகப்பல இடங்கள் உள.

இவற்றுக்குச் சாமியின் விடை என்ன?

எவ்வாறு எழுத வேண்டும்? சிவ வழிபாடு தென்னாட்டிற் குரியது; தென் தமிழுக்குரியது; சிந்து நதி நாகரிகம் வரை பரவினும்

அது இங்கிருந்து போனது என்றல்லவா எழுதவேண்டும்? வடமொழி ருத்ரனுக்கும் சிவனுக்கும் சம்பந்தமில்லை. எனினும் சிவ வழிபாடும் வடவரிடமிருந்து கடன்பெற்றதே என்றும் சிவஞானபோதம் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்ததேயன்றி, அது மூலநூலன்று என்றும் கூறுவார்க்கு, ஆதரவு தருவது இது.

சைவ சித்தாந்தமே வடமொழி உபநிடதம் முதலான நூல் களிலிருந்து பெறப்பட்டன என்பர். திருவிளையாடற்புராணம் மதுரையைச் சுற்றி நடந்த பழங்கதைகளையும் வரலாறுகளையும் கொண்டு விரிவாக எழுதப்பட்டது.

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமொடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
எண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?

எனும் பாடலுள்ள இதனை, வடமொழி 'ஹாலாசிய மகாத்மியம்' எனும் நூலின் தமிழாக்கம் என்றனர். தமிழர்க்கேயுரிய திருத் தொண்டர் புராணமாம் பெரியபுராணத்தைச் சிறிதும் வாய் கூசாமல், வடமொழி உபமன்யு பக்த விலாசத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு என்றனர். இந்தச் சாமி, ஓரிடத்தில் 'சுந்தரரைத் தமிழ்நாட்டில் பிறக்கச் செய்தான் என உபமன்னிய முனி வழிச் சேக்கிழார் கூறுகின்றார்' என எழுதியுள்ளார். அதாவது சமஸ் கிருத நூலின் வழிநூல் என்று சொல்கின்றார். அதனால்தான், 'சொன்னால் விரோதம் ஆயினும் சொல்லுகிறேன்' எனத் தம் நூலுக்குப் பெயரிட்டுள்ளார். இவ்வாறு 'நச்சுப்பாம்பு' பல இடங்களில், சமஸ்கிருதப் புற்றுக்களிலிருந்து, வெளியே தலை நீட்டுகிறது.

"இவற்றையெல்லாம் மனத்தில்கொண்டு, 'அரவின் குட்டி சிறிதாயினும் பெருங்கோல் கொண்டு அடித்தல் வேண்டும்' என்னும் பழமொழிக்கிணங்க பேராசிரியர் (ம. ரா. போ. குருசாமி) கட்டுரைச் செய்திகள் ஆய்வு செய்யப்படுகின்றன" என்று எழுது கிறார். இந்நூலில் நாங்கள் தந்துள்ள அனைத்தையும் மனங் கொண்டு, தியாகராசனே படித்தபின், எந்தப் பாம்பை யார் அடிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யலாம்.

அடுத்த செய்திக்கு வருவோம். 'சாமி'க்கு ஏற்பட்ட முதல் ஐயம் 'சொற்றமிழ் பாடுக' என்றவர், தூமறை பாடும் வாயார் என்றது ஏன் என்பதே. அதற்கான விடையை முன்னரே கண்டோம்.

பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி, 'சொற்றமிழ் பாடுக' என்றதால், இந்தச் சாமியனைய 'ஆரியச் சிசுக்கள்' சிவனைத் திராவிடரைச் சார்ந்தவன்; அதனால் அப்படிக் கூறினான் என எழுதிவிடுவர். அந்த ஐயத்தை மாற்றவே 'இச்சிவன் ஆயிரம் மறைகளையும் பாடும் வாயார் - அதாவது ஒரு சார்புடையவர் அல்லர் எனச் சேக்கிழார் விளக்குகின்றார் என்பது மிகத் தெளிவாக உளது. இதை இந்தச் சாமி, திராவிடச் சிவன் ஆரியச் சிவன் எனப் பேராசிரியர் எழுதிவிட்டதாகச் சொல்லி, முடிந்த மட்டும் 'விஷத்தைக்' கக்கியுள்ளார்.

'சாமி'யார் தருமபுரத்தையும் திருப்பனந்தாளையும் தாங்கிப் பிடிப்பது நமக்கு நன்றாகவே விளங்குகிறது. அவர் எழுதுகிறார், 'சிறந்த அறிவுடையோர் நோக்கத்தை எளிதாக அறிந்து கொள்வர். மந்த புத்தி உடையோர் நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொள்வர். பிழைப்புக் கருதுவோர் நோக்கத்தைத் திரித்துக் கூறுவர் என்று. இம் மூவரில் நம் 'சாமி' 'எந்தப் புத்தி உடையவர்' என்பதை அவர் நூலே நன்கு காட்டிவிடுகிறது. ஆதீனங்கள் தமிழுக்கு எதிராக இல்லையாம். எமக்கு அனுப்பிய 'வேதாகமம்' (தருமபுரம்) நூலும், 'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க' என்ற நூலும் (திருப்பனந்தாள்) பச்சையாக, தாங்கள் 'வேதச் சார்புடையோர், சமஸ்கிருதத்தை ஒரு கண்ணாக நினைப்பவர்கள்; தமிழைத் திருக்கோயிலிலோ, சடங்குகளிலோ பயன்படுத்தினால் அவற்றின் தரம் தாழ்ந்துவிடும்' - என இவ்வாறு எழுதிக் குவித்திருப்பது சாமி. தியாகராசனே எழுதியன போலும்!

"சிலபேதைகள் வேண்டுமானால் பிழைப்பிற்காகக் கூறித் திரியலாம்". இது சாமியின் வாக்கு. இது தமக்கே பொருந்துமெனப் போலும் அடிக்கடி அழுத்தமாக எழுதுகின்றார். திருப்பனந்தாள் எழுதுவது இது; 'வடமொழி வேத, ஆகம மந்திரங்கள் கிரியைகள் வழியாக இறைவனைச் சென்று அடைந்து பயன்தரச் செய்கின்றன. அதனால் அவை 'மந்திரங்கள்' என்ற தகுதி உடையன. நால்வர் பெருமக்களின் 'அருள் பழுத்தகனிகள்' கிரியைகள் வழியின்றி,

நேரே இறைவன் திருச்செவி அடைந்து அனைத்து நலன்களும் பெற்றுத் தருபவை. ஆகையால் இவை 'பெருமந்திரங்கள்' என்னும் உயர்தரம் உடையன. இப்பெருமந்திரங்களை (வடமொழி) மந்திரங்களுக்கு உள்ளதுபோல் கிரியைகளில் வைத்தால், தரம் குறைந்ததாகத்தானே ஆகும்?'' (பக். 17). சாமி. தியாகராசன் "தமிழைக் கோயில் பூசைக்கும் புரோகிதத்திற்கும் வேள்விக்கும் பயன்படுத்தப்படுவதை, நடுவுநிலைப் பார்வையுடன் பார்த்தால், 'செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்ற குறள் தானே நினைவுக்கு வருகிறது'' என்று எழுதுகிறார். இதனைக் கீழ்வருமாறு விளக்கலாம். தமிழ்மொழி செம்மொழி, தொன்மை மிக்க மொழி, தனித் தன்மையுடைய மொழி. அதைப் பள்ளி, கல்லூரி நீதிமன்றங்களில் பயன்படுத்தி, அதன் தரத்தைக் கீழிறக்குதல் கூடாது. அவற்றுக்கெல்லாம் நேற்றுத் தோன்றிய ஆங்கிலமே பொருந்துவதாம். இவ்வா றெல்லாம் எழுதத் தூண்டும். இது ஒரு முடக்குவாதம் என்பது உடனே தெரியும். இதற்கு என்ன மருந்து கொடுத்தும் தீரவில்லை என்றால் என்ன செய்வது? மேலும் வடமொழியையும் வேதத்தை யும் வானத்தின் எல்லைக்கே கொண்டு போய், மேற்கோள்களுடன் புகழ்ந்து தள்ளுகிறார்.

நான்கு வேதங்கள் பற்றி நமது அறிமுகக் கருத்துக்கள் தவிர, அவை முழுமையாகவும் கிடைக்கின்றன. அவற்றையும் இவர் படிக்க வேண்டும்.

இவ்வாறெல்லாம் மேலே கண்டவாறு எழுதிவிட்டு, "தமிழ் வழிபாடு, தமிழ் அர்ச்சனை, தமிழில் வேள்வி, தமிழில் திருமணம் எனத் தமிழை முன்னிறுத்திச் செய்யும் எதனையும் அவர்கள் எதிர்க்கவில்லை. இவற்றில் அவர்களுக்கு உடன்பாடே தவிர மாற்றுக் கருத்துக் கிடையாது'' என்றும் அவரே எழுதுகிறார். இடையே "சில பேதைகள் வேண்டுமானால், பிழைப்பிற்காகக் கூறித் திரியலாம்" என, இவரே தம் பேதைமை பற்றியும் முன் பின்னாக முரண்பட எழுதி, பித்துப் பிடித்த பேதைபோல் அல்லற் படுகிறார். என்ன செய்வது? ''பயிற்றிப் பயிற்றிப் பல உரைப்ப தெல்லாம், வயிற்றுப் பெருமான் பொருட்டு".

சொற்களை அவர் அளந்து போடாததால், அதே அளவில் நாமும் அவருக்குத் திரும்பத் தரவேண்டியதாகிறது.

“வேதத்தைப் பற்றிய புகழுரைகளில் வேத உடன்பாட்டுச் சமயமாகிய சைவத்திற்கும் பெருமை உண்டு என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்” என்பது இத்தியாகசீலரின் கருத்தாக எழுதப்பட்டுள்ளது. அதாவது வடமொழியாகிய பூவோடு சேர்ந்த நாறாகத் தமிழும் மணம் பெறுகிறதாம். வேதங்களின் மூல நூல்களையும் சிவநெறி மெய்யியலையும் பின்னர் எழுந்த, ஏகான்ம வாத வெறுமைக்கொள்கை - இருமையின்மை - அத்துவைதம் பற்றியும் நன்கு ஊன்றிப் படித்துவிட்டு, சிவநெறி வேத உடன் பாட்டுச் சமயம் என்பதை இவர்கள், நம்பத் தகுந்த சான்றுகளோடு நிறுவவேண்டும், வெறுமனே கூறல் கூடாது. நம் ஆசாரியர்கள் எதைச் சொன்னாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்; மறுத்து வாய்திறக்கவே கூடாது எனத் தியாகசீலர் எழுதுவன இக்காலத்திற்கு ஏலா. நம் சமயாசாரியர்களையும் நம் போன்ற மானுடர்களாக மதிப்பதே அவர்களுக்கு மதிப்புத் தரும். கடவுளர்கள்போல நடந்து கொள்ளும் காமாநந்தா, ஆனந்தனந்தா, பிறபல தாடிவைத்த சாமியார்கள், அம்மா மகமாயிகள் எல்லாம் செல்வம் கொழிக்கிறார்கள். நம் மூடர்கள் காணிக்கை என்று கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கிறார்கள். இமய உச்சி ஏகினும் கயவர் கயவரே.

வடமொழி வேதவழிப்பட்ட சமயக் கோட்பாடுகளுக்கும் தமிழர் சமய மெய்யியல்களுக்கும் மலையளவு வேறுபாடிருப்பது, ஒரு செருமானிய அறிஞனுக்குப் புலனாகிறது; இங்குள்ளவர்கள் குழப்புகிறார்கள் என்றால் அதற்கு வேறு காரணங்கள் இருக்க வேண்டும். இத்தகையவர்களைத்தான் - தெரிந்தும் தவறு செய்பவர் களைத்தான், பேரா. ம. ரா. போ. குருசாமி தோலுரித்துக் காட்டி, இதை ஒரு ‘புதிய சாதி’ என்றும் குறிப்பிட்டு விட்டார்.

நச்சினார்க்கினியர் முதல் சேனாவரையர், சிவஞானமுனிவர் வரை, அவர்கள் கற்றுத் துறைபோய சான்றோர்களே யாயினும் இப் ‘புதிய சாதியினை’ வளர்த்தவர்களே. இன்றும் சாமி. தியாக ராசன் போல் ஆயிரக்கணக்கானவர் உளர். இவர்கள் எல்லாம் ‘பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும்’ காட்டுபவர்கள். இதற்கு, சாமி தியாகசீலரின் நூலும் ஒரு தகுதிமிக்க சான்றாகும். இவர்கள் அனைவரும் ஒரு பக்கம் பார்த்தால் தமிழுக்காக

உயிர்விடுபவர் போல் தோன்றும்; மறுபக்கம் பார்த்தால் தமிழன் உயிரை வாங்குபவர் என்பது தெளிவுபடும். இதுவே 'புதிய சாதி'.

நம் சமயாசாரியர்கள் பலரும் - குறிப்பாக வேளாளர் குலத்தவராக இருந்து, திருமடங்களுக்குத் தலைமை தாங்கி, இத்தகைய, 'ஐந்தாம் சாதியினரை' வளர்ப்பது கண்டு வருந்தி எழுதிய, ஒப்பற்ற கருத்தமைந்த கட்டுரை அது. 'வேளாளர்களும்' என்பது உயர்வு சிறப்பும்மை. சிவநெறியின் தனித்தன்மை வெளிநாட்டவனுக்கு விளங்குகிற அளவு, அதைக் காக்கவேண்டிய கடமை மேற்கொண்ட திருமடங்களைச் சார்ந்தவர்களுக்கு விளங்காமற்போய், 'நாங்களும் வடமொழி ஆதரவாளர்கள்; தமிழையும் நேசிப்பவர்கள்' என முழங்கியமை கண்டு எழுந்த சீற்றத்தின் விளைவே அக்கட்டுரை.

உண்மையில் சாமி. தியாகராசனின் கட்டுரையைப் படிக்கிற போது, அவர் சமஸ்கிருத ஆர்வலரா, தமிழ் ஆர்வலரா என்று வேறு பிரித்தறிய முடியவில்லையே.

சாமி தம் ஊரில் ஒரு செல்வர் வீட்டுத் திருமணத்திற்குப் போயிருந்தாராம். அது தெய்வத் தமிழ் நெறியில் நடந்ததாம். அதில், திருஞான சம்பந்தரின் 'மண்ணில் நல்ல வண்ணம்' என்ற பதிகம் பாடப்பட்டதாம். அதற்கு அவர்தரும் விளக்கங்கள் மிகமிகக் கீழ்த்தரமானவை. ஓர் அறிவிலி - தமிழே தெரியாதவன்கூட இவ்வாறு எழுதமாட்டான்.

எங்கள் நகரத்தார் மரபில், திருமண அழைப்பில், 'வடிவுடையம்மை உடனாய வளரொளி நாதர்' திருவருளால் திருமணம் நடைபெறுகிறது; வந்து வாழ்த்துக' என இவ்வாறு, திருமண அழைப்பிதழ் அச்சிட்டு அனுப்புவர்.

சைவ சமயம் மனிதப் பிறவியை வெறுக்கச் சொல்லாது; இல்லற வாழ்வை இழிவுடையதென்னாது. அது மனிதனை முன்னேற்ற வழிகாட்டும் சமயம்; இவ்வுலக வாழ்வைப் போற்றும் சமயம். உண்மையில் சிவநெறி, தன்னம்பிக்கை, தன் முயற்சி, தன் முன்னேற்றச் சிந்தனையுடைய சமயம். இந்தியச் சமயங்களில் இதுபோன்றதொரு சிந்தனையை நான் வேறு எதிலும் காண வில்லை என்று ஆல்பர்ட்டு சுவைட்சர் என்ற செருமானியர்,

திருக்குறள் அடிப்படையை வைத்து எழுதுகிறார். சாமி. தியாக ராசனும் சமயாசாரியர்களும் படித்தால், சற்றே இப்போதுள்ள பித்தம் தெளியக்கூடும். (Albert Schweitzer, Indian thought and its development, wilco publishing House, Bombay - 1).

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

சிவநெறியார் 'வாய்த்ததொரு பிறவி இது; இதை மதித் திடுமின்' என்பர். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்பர். 'வான்பழித்து இம்மண் புகுந்து மனித்தரை ஆட்கொள்ளும் வள்ளல்' என்பர். 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்பர். 'எண்ணில் நல்ல கதி' என்பது முத்திநிலை. மேலுலக நல்வாழ்வு என்றும் கொள்ளலாம். அதாவது கொடுத்த இப் பிறவியைத் திருமணம் செய்துகொண்டு, நல்லபடியாக வாழ்ந்து காட்டினால், நீங்கள் மேலானதாக நினைக்கும் அம் மேலுலகப் பதவியும் குறைவின்றிக் கிடைக்கும் என்பதே நேர்பொருள்.

ஒரு வங்கியில் ஒருவனுக்குக் கொடுத்த பணியை நிறைவுறச் செய்தால், உரிய மேற்பதவி தானே கிடைக்கும். அதனால் குறைவு உண்டாகாது. அதுபோன்றதே மனித வாழ்வும். இந்த மனிதப் பதவியை மதியாது, நல்ல வண்ணம் வாழாது, ஆனந்த நந்தர்களாக இழிவுடன் வாழ்ந்தால் மேற்பதவி கிட்டாது. துறவுபூண்டு மேலுலகம் - முத்தி - மேற்பதவி போகலாம் என்பன எல்லாம் ஏமாற்று வேலைகளே. கொடுத்த மனிதப் பிறவியை நல்ல வண்ணம் வாழ்; அடுத்த அப்பிறவி, சிறிதும் குறைவின்றி தானே கிடைக்கும். அதனையே சொல்லிச் சொல்லி, இப்பிறவியைப் பழித்து, 'மழித்தேன், துறந்தேன், பற்றற்றேன், உடனே மேற்பதவி - சிவபதவி எய்தப் போகிறேன்' என்பன எல்லாம் போலித் தத்துவம்.

கொடுத்ததைச் சிறக்க செய்; அடுத்தது தானே வரும். அமெரிக்காவில் எல்லாம் 'திறமை' ஒன்றே மதிப்பீடு. சிபாரிசு, பரிந்துரை, பணமெல்லாம் அங்கு எடுபடாது. கீழ்ப்பதவியில் இருந்த ஒருத்தன், நன்கு பணிசெய்து, குழுமத்திற்கு ஊதியம் கூடிற்று எனத் தெரிந்தால், அவனுக்கு மேலேறுதல் (Promotion)

என்பது தானே, உடனே கிடைக்கும். இங்கு நல்லவண்ணம் வாழ்பவர்க்கு, அந்த நல்லகதி தானே வாய்க்கும் என்பதை மறந்து, இதனை 'மரணம்' பற்றிய பாட்டு என விளக்க எவ்வாறுதான் மனம் வந்ததோ?

சிவநெறியின் அடிப்படையை உணர்ந்த, சம்பந்தர் 'நீ மண்ணிடைப் பிறப்பிக்கப்பட்டுள்ளாய். கொடுத்த இப்பிறவியை நல்ல வண்ணம் நாளும் வாழ்ந்து காட்டினால்; மிக உயர்வாகப் பலரும் கூறும் அந்த 'நல்ல கதியை' எளிதில் அடைவதுறுதி; அதில் குறைவேற்படாது என வாழ்த்துகிறார்.

அதற்குக் காட்சியளவையாக, கழுமல வளநகரில் 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை' இருப்பதைப் பார் எனக் காட்டுகிறார். 'கண்ணின் நல் அஃதுறும்' என்பது காண்க. நம் சமயம் சக்தியுடன் சேர்த்தே சிவத்தை நினைப்பது; மாதொருபாகனைக் கண்டது. 'அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற தமிழ் வள்ளுவம் அது. 'காமம் சான்ற கடைக்கோட் காலை, ஏமம் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பது தமிழ்நெறித் தொல்காப்பியம். கிடைத்த வாழ்வை நன்கு பயன்படுத்தி வாழ்ந்து, விருப்பங்கள் நிறைவேறியபின், நன் மக்களொடும் நல்ல சுற்றத்துடனும் கூடிக் கணவனும் மனைவியும் சிறந்தன எனப்படும் நற்பணிகளை மேற்கொண்டு, மேற்பதவியை அடைதல் வேண்டுமாம். இது படிப்படியான முயற்சி; ஒவ்வொரு படியிலும் சிறக்க வாழ்ந்து, 'சித்த மலம் அறுவித்துச் சிவமாவது'.

ஆரியக் கலப்பால் மிகப்பல குழப்பங்கள் உண்டாகிவிட்டன. எனினும் பாசியை நீக்கித் தூய நீரைப் பருகலாம். சாமி போல்வார் எத்துணைதான் தமிழ் நூல்களைக் கற்றாலும் அவர் வேறு ஒரு நினைப்பினர்; வேறு ஒரு வழியினர்; பிறிதொரு நோக்கமும் நாட்டமும் மிக்கவர். சேய்ஞலூர் வேதியர்களைப் போல, "தூய திருநீற்று ஒருமையினார்' ஆகத் தோன்றினாலும், அந்த வேதியர் களைப் போலவே இன்றும் வாழும் குழுவினர். அதை நாம் போற்ற வேண்டும். அவரவர்க்கு ஒரு கொள்கை இருக்குமல்லவா?

மேலே காட்டிய சம்பந்தர் பாடலில் 'நீங்கள் மரணமுற்ற பிற்பாடு அடையப்போகும் மறுவுலக வாழ்வில் நல்ல கதி

கிடைக்கும்' என்று திருமணவீட்டில் பாடலாமா? என்று வினவுகிறார். ஏதேதோ எழுதிச் சகதியில் கிடந்துழல்வது போல், தம் எழுத்தில் இன்பங் காணுகின்றார்.

இதே சாமி. தியாகராசன் தம் திருமணத்திலோ, தம் நண்பர் திருமணத்திலோ வடமொழி வேதம் ஓதி நடப்பதைக் கவனித் திருப்பார். அதில் புரோகிதர் ஓதும் திருமண மந்திரத்தை, நச்சினார்க்கினியர் வேதத்திலிருந்து எடுத்துக் காட்டுகிறார்.

ஐயர் வேதஞ்சொல்லுதலுள்ள மந்திரத்தைத் தலைவனே கூறி, மணமகன் மணமகளுக்கு மங்கல நாண் பூட்டுகின்றான். மணமகன் சமஸ்கிருதம் அறியான். அதனால் ஐயர் சொல்லச் சொல்ல, அவன் கூறுகிறான்.

> மணமகளே! நின்னை முதல் நாள் தண்கதிர்ச் செல்வற்கும் (சந்திரன்), இடைநாள் (இரண்டாம் நாள்) கந்தருவர்க்கும், பின்னாள் (மூன்றாம் நாள்) அங்கியங் கடவுளுக்கும் (மணமேடை எதிரே வளர்க்கப்பட்டுள்ள அக்கினி) அளித்து, நான்காம் நாள் அங்கியங் கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர வேண்டிற்று. அங்ஙனம் வேதங் கூறுதலான் ·எனத் தலைவிக்கு (மண மேடையில்) விளங்கக் கூறிப் பிறகு மணமாலை அணிவித்தல் நிகழ்கிறது.

கெட்டி மேளம் முழங்குகிறது. சாமி. தியாகராசன், 'மண்ணில் நல்லவண்ணம்' என்ற பதிகத்தை விடுத்து, இம் மந்திரம் ஓதுவதைக் கேட்டு மகிழ்ச்சியில் துள்ளுகிறார். ஆனந்தத்தில் மூழ்குகிறார். ஏன்?

மணமகளை முதல்நாள் சந்திரன் ஆரத் தழுவிப் புணர்ந்தான். இரண்டாம் நாள் அவன் அவளைக் கந்தருவனுக்கு அளித்தான். அக் கந்தருவன் அவளைப் புணர்ந்து இன்பம் நுகர்ந்தான். புணர்ந்த அவன் அவளை மூன்றாம் நாள் அங்கியங் கடவுளுக்கு அளித்தான். அதனால் மூன்று நாளும் மூன்று பேர் நுகர்ந்தபின், மணமேடை எதிரே எரியும் அங்கியங் கடவுள் நான்காம்நாள்தான் மணமகனுக்கு அவளைத் தந்தானாம். தனக்கு மனைவியாகப் போகின்றவள், முன்னமேயே மூன்று பேருங் கூடியதால், காத்துக் கிடக்க வேண்டியதாயிற்றே என்று வருந்தி, நான்காம் நாள்

அவளைக் கைப்பிடித்துக் கூடும்பொழுது வருந்தாதே, இது வேதஞ் சொல்லும் வழக்கு; எனவே மறுக்கக்கூடாது என அவளுக்கு விளங்கக் கூறுதல் எனவும் அவ்வாறு கூறிப் புணர்ந்தான் என்றும் நச்சர் விளங்கக் கூறுகிறார். இது அகப்பாடல்களில் காணப்பட வில்லையே என்றால், நச்சர் இத்தகைய அகப்பாடல்கள் முன் பிருந்தன; இக்காலத்து உதாரணம் கிடைத்திலது எனவும் கூறுகிறார்.

இவர்கள் இத்தகைய திருமணங்களையே முன்னின்று நடத்தி வைக்க வேண்டுமென்றும்; இக்கூட்டத்தார் அனைவரும் இத்தகைய, முன்பே நன்கு பலரொடு புணர்ந்து, அத்துறையில் பழக்கப்பட்ட, பயிற்சிமிக்க மணமகள்களையே தேடி மணந்து நல்வாழ்வு வாழவேண்டும் என்றும்,

திருநெறிய தெய்வத்தமிழ்த் திருமணம் என்று கூறி, 'மண்ணில் நல்ல வண்ணம்' என்ற பதிகத்தையெல்லாம் ஓதி, மணம் செய்து கொள்ளலாகாது என்றும் மனமார வாழ்த்துகின்றோம்.

காஞ்சிபுரம் கோயிலில்தான் ஒரு புரோகிதர் கருமாதி மந்திரத்தை ஓதி, அருச்சனை செய்தார். வடமொழி அறிந்த சீர்மிகு ஞானியாரடிகள், இது முறையன்று என்று கேட்கவே, அவ் வேதியர், 'எனக்கு இம்மந்திரம் ஒன்றே தெரியும்' என்றாராம். பிறகு ஞானியாரடிகள் தாமே அருச்சனைக்குரிய மந்திரத்தை ஓதி வழிபாடு செய்தார். மந்திரசக்தி பற்றிப் பேசும் அருளாளர்களை ஒன்று கேட்கிறேன். எங்களூரில் ஒருவர் திருமணத்திலும், இராமர் பட்டாபிசேகத்திலும், பிற சடங்குகளிலும் ஒரு மந்திரத்தையே ஓதுகிறார் என்பதைக் குறிப்பால் உணரமுடிந்தது. நமக்கு விளங்காத மொழியில் வழிபாடும், சடங்கும் செய்க என்று, வேறு எந்த நாட்டிலும் யாரும் கூறார். இங்கு படிந்த மடமையாகிய இதைக் களைந்து, எல்லோருக்கும் விளங்கும் மொழியில் - குறிப்பாக, அந்தச் சடங்கைச் செய்து கொண்டவனுக்காவது விளங்கும்படி நடத்துக எனக் கூறக்கூடாதா? இந்தக் கொடுமை யாளரை நினைக்கும் பொழுதெல்லாம் நெஞ்சம் நோகிறது; வருந்துகிறது, சீற்றம் பொங்குகிறது.

'சாமி' யவர்கள், மரபை மீறுவது தவறு, தவறு என மீண்டும் புலம்புவது ஏனோ? இவருக்கும் இவரைப் புரந்தருபவர்களுக்கும் மட்டும்தான் மரபு தெரியும் போலும்!

ஆண்டாள் நாச்சியார் 'தீக்குறளை சென்றோதோம் என்றது திருக்குறளையே' என முதலிற் கூறியவர், முன்னைய காஞ்சிப் பெரியவாள். அதைச் சாதுரியமாக மறைத்துவிட்டு, ஒரு பேராசிரியரை மட்டும் எழுதி, தம் சுயநலத்திற்குத் தீங்கு வராமல் பார்த்துக் கொள்ளும் 'சாமி' - பாராட்டுக்குரியவரே.

சாமி. தியாகராசனும் சமயாசாரியரும் 'குன்று முட்டிய குருவி போல' மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்வது, சிவன் ஆரூரரிடம், 'தமிழில் அருச்சனை செய்' என்று கேட்கவே இல்லை என்பதுதான். இதற்காக இவர்கள் மாற்றித் திரித்துப் பேசுவதும் அழுவதும் புலம்புவதும் மிகமிகப் பரிதாபமாக இருக்கிறது. இதற்காகத் 'தமிழ்' என்ற சொல்லுக்கே புதுப்பொருள் தேடுகிறார்களே; ஏனோ, நல்ல உணர்வாளர்களின் நெஞ்சங்களை நோகடிக்கிறார்கள்.

ஆக முடிந்த முடிபென்ன? சேக்கிழார் சுந்தரரிடம் இறைவன் சொன்ன வாக்குமூலமாகவே பாடிவிட்டார்.

'நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க அருச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்றார் என்று சேக்கிழார் கூறிவிட்டார். பத்திமையுடன் இனிய இசைப்பாடல்களைப் பாடுவதே சிறப்புமிக்க அருச்சனையாகும். ஆதலால் "நம்மை - நம் இருவருக்கும் விளங்கும்படியான தமிழ்ச் சொற்களைக் கொண்டு இசைபாடி என்னை மகிழ்விப்பாயாக" என்பதே இதன் நேர்பொருள்.

சொற்றமிழ் பாடுக!

ஏனெனில் அருச்சனை பாட்டேயாகும்!

இவ்வாறு சிவபெருமான் கேட்டதுதான் கேட்டார். சுந்தரர் இறைவனிடம் 'நான் எப்படிப் பாட? என்று கேட்டாரா? அவ்வாறு கேட்ட பின்பு பாடினார் என்று மடப்பதிப்பில் உளதா? இல்லையே!

ஆரூரர் அவ்வாறு கேட்பதற்கு முன்பே, இறைவன் முந்திக் கொண்டு தானே சொல்லிவிட்டாரே?

அருச்சனை என்பது பூசை செய்வதையே குறிக்கும்; இசையுடன் அன்பு ஊற்றெடுக்கப் பாடுவதைக் குறிக்காது. இதைச் சிறிதும் அறியாத சிவபெருமான் (தம் ஆணவ மலத்தால்) அருச்சனை பாட்டேயாகும் என்று கூறிவிட்டார்.

'அருச்சித்தருள' என்பதும் 'பூசைக்கமர்ந்த' என்றாலும் ஒரே பொருள்தானாம். சற்றும் தமிழறியாத சேக்கிழார் இவற்றை 'அருச்சித்தலாம் பூசை' என ஒன்றாக்காமல், தனித்தனியே கூறினும், அவர் அறியாமையால் கூறினாரென அவரை மன்னித்து, ஒரே பொருள்தான் என நாம், இந்தச் சாமி கருத்தையே ஏற்போமாக.

அருச்சனைக்குரிய பாட்டு எனில் 'திருப்பாட்டு' என்றே கூறியிருக்க வேண்டுமாம். தமிழ்ப் பாட்டு என்றது, அருச்சனைப் பாட்டு ஆகாதாம்.

சுந்தரர் வேதம் கற்றவராம்; வடமொழி அவருக்கு நன்கு தெரியுமாம். இந்த உண்மை தேவருலகம் போய்வந்த சாமிக்கு நன்கு தெரிந்துளது. அதனால் முற்பிறவி அறிவிக்கப்பட்டவுடன் அவர் நிச்சயம் வடமொழியில்தான் பாடியிருப்பாராம். சாமி. தியாகராசனுக்குத் தெரிந்த இந்த உண்மை, அவரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாமற் போனது வியப்பே.

கயிலை மன்றில் சிவனுக்கு நாள்தோறும் வடமொழியில்தான் 'அர்ச்சனை' நடந்து வந்ததாம். இதை ஆரூரர் நேரில் பார்த்து வந்தவராதலால், அந்த வடமொழியிலேயே பாடிவிடுவாராம். அருச்சனைக்குப் பூசை என்றே பொருள்; பாடச் சொல்லியிருந்தால் 'திருப்பாட்டு' என்றே சொல்லியிருக்க வேண்டும் என முதல் பக்கத்தில் எழுதிய சாமி அடுத்த எதிர்ப் பக்கத்திலேயே சிவனுக்கான 'அர்ச்சனை' வடமொழியிலேயே நடந்து வந்ததால் ஆரூரர் அவ் வடமொழியிலேயே பாடத் தொடங்குவார் என எழுதுவது, எத்துணை முரண்? அவரே தாம் எழுதியதைத் திருப்பிப் பார்க்க மாட்டாரா?

போலி நாத்திகர்கள் - அவர்களுடன் கூட்டணி வைத்துள்ள போலிச் சைவர்கள் என எழுதும் இம் மடத்தவர்களே உண்மைச் 'சைவர்களாம்'

சிவன் இமயத்தில் வடமொழியாளனாம்; தென்திசையில் தென்மொழியாளனாம். சரிதான், சிவனே இடத்திற்கேற்ப நடிப்பதாற்போலும் இவ் இறைவனை, கூத்தப்பன் என்று கூறியுள்ளனர்.

சிவபெருமான் ஆரூரர் தம்மீது 'சாமவேதம்' பாடிவிடுவார் என்று முந்திக்கொண்டாராம். இவர் உய்த்துணர்ந்து கூறுகிறார். இவர் உய்த்துணர்வதை, போலிச் சைவர்கள் ஒருவர்கூட உணர்ந்து, கூறிற்றிலரே? அவர்களெல்லாம் சுத்த மடவர்கள்போலும்?

எட்டுத் திசைக்கும் உரிய சிவனைத் தலச் சிறப்புக்கள் கருதி, அவ் ஈசன் ஆரூரரைத் தமிழ்நாட்டில் பிறக்க வைக்கத் திருவுளங் கொண்டதாக உபமன்னிய முனி கூற, அவரது வழியில் சேக்கிழாரும் கூறினாராம். சேக்கிழாருக்குச் சொந்தப் புத்தி இருந்ததாக யாரும் கூறமுடியாதபடி சாமி உறுதிப்பட எழுதுகிறார்.

இறைவன் ஆரூரரிடம் முந்திக்கொண்டு தமிழில் பாடுக என்றது, பழம்பிறப்புணர்ந்த சுந்தரர், மேலுலகில் தாம் செய்துவந்த வழக்கப்படி, வடமொழியில் பாடிவிடுவார் என்பதால்தானாம். இவ்வாறு மீண்டும் மீண்டும் எழுதி, வடமொழியைத் 'தேவபாஷை' என்று சொல்லி வருவதை, எல்லோரும் நம்பவேண்டும் என்றும் தமிழ் தேவபாஷை அன்று; தேவ உலகில் தமிழ் இல்லை என்றும் அடித்துச் சொல்லும் இவர், திருமடங்களிலிருந்து அடிக்கடி தேவருலகம் சென்றுவருபவர் என்று தெரிகிறது.

'தமிழ்' என்ற சொல் 'பக்தி' என்றே பொருள்படுமாம். சமய நோக்கில் 'தமிழ்' என்ற சொல், ஈசனைப் பற்றிய பாடல்களையே குறிக்கும் என்பது, அடுத்த பக்கத்தில் வரும் நீண்ட விளக்கம். 'தமிழ்' என்ற சொல் 'மொழியையோ, காதலையோ, வீரத்தையோ குறிக்கவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது, அப்பத்தியின் முடிவிலுள்ள விளக்கம்.

இவ்வளவும் எழுதி, சிவன் ஆரூரரிடம் தமிழில் பாடுக; அருச்சனை பாட்டேயாகும் என்று கூறியதாகப் பொருள் கொள்ளும் போலிச் சைவர்களை மறுப்பவர், அவர்களைப் 'பேதைகள்', 'மந்த புத்தியினர்', பிழைப்புக்கு அலைபவர்கள் என்பதாக நிரம்ப எழுதுகின்றார்.

மேலே கூறியவை அனைத்தும் செருக்குடனும் தருக்குடனும் அவரால் எழுதப்பட்டுள்ளன. நாம் எதையும் கூறாமல், அவர் எழுதியுள்ளவற்றை அவ்வாறே மேலே தந்துள்ளோம்.

தமிழ் வழிபாடு பற்றிக் குறிக்கும் இடம் ஒன்றில், "அரவின் குட்டி சிறிதாயினும் பெருங்கோல் கொண்டு அடித்தல் வேண்டும்" என்று சாமி. தியாகராசன் எழுதுகிறார்.

மேலே தந்துள்ள அனைத்தையும் படித்துவிட்டு, மானமுள்ள அருமைத் தமிழர்களே, இந்தச் சாமி. தியாகராசனை 'எப்படிப் பாராட்டலாம்', என்பதற்குரிய கருத்துக்களை எழுதுவீர்களாக.

❖❖❖❖❖

# 4

# இறைவன் இறைவி பெயர் மாற்றம்

சமஸ்கிருதமயமாக்குதலில் கொடுமையிற் கொடுமையானது, இறைவன் இறைவி பெயர்களை எல்லாம் வடமொழிப் பெயர் களாக்கியமைதான். தமிழர் சமயக் கலைச்சொற்களும் வடமொழி மயமாக்கப்பட்டமை அதனினும் கொடிய செயல் எனலாம். தமிழரின் இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம், நாடகம் பற்றிய கலைச்சொற்களை சமஸ்கிருதமாக்கி, அவை தொடர்பான நூல்களையும் அழியும்படி செய்துவிட்டனர். தமிழரின் ஊர்ப் பெயர்கள் மக்கட் பெயர்களையும், இயன்றவரை மாற்றினர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும் கூட - மாற்றித் திரிக்க முடியாத வற்றையும்கூட, பெயர்களை மாற்றுவதன் மூலம், அவற்றை நமக்குரியன அல்ல என நம்பவைக்க முயன்றனர்.

இன்றைய ஆங்கிலப் பெயர்க் கலப்பும் கலைச்சொற் கலப்பும் ஆங்கிலேயர்களால் நம்மீது திணிக்கப்படவில்லை. புதிய புதிய கண்டுபிடிப்புக்கள், புதிது புதிதாக வந்து நாம் பயன்படுத்தும், அன்றாட வாழ்விற்குரியவற்றின் பெயர்கள் என இவை தமிழில் நுழைகின்றன. ஒரு பழக்கத்தைப் புகுத்தினால், அது தொற்று நோய்போல் விரைந்து பரவுகிறது. மிக்சி, கிரைண்டர், ஃபிரிஜிடேர் எனப்பல நுழைந்ததால், தமிழன் 'கிட்சனை' விட்டு அடுப்படி அல்லது அடுக்களைக்குள் வரமுடியவில்லை.

நாம் ஒரு விடுதிக்குள் நுழைந்தால், டேபிள், சேர், லஞ்சு, டின்னர், டிபன், வாட்டர், ரைஸ், வெஜிடேரியன், வெஜிடபிள்ஸ், சர்வர், பில், கே , பேய் பண்ணுதல் வரை' ஒன்றுகூடத் தமிழாக இராது.

இன்று ஆங்கிலம் கலந்து பேசுவதை ஒரு நாகரிமாக, மேன்மையாக, உயர்வாக எண்ணுபவர்கள் எல்லாம் தமிழர்களே எனலாம். 'ரைஸ்' கேட்பவன் உயர்சாதி, சாதம் கேட்பவன் இடைப்பட்ட சாதி, சோறு என்று கேட்டால் ஏழை.

இடைக்காலத்திலும் இதே நிலைதான் இருந்தது. ஆனால் அன்று சமஸ்கிருதவாதிகள் வலிந்து புகுந்து நம்மை ஏமாற்றினர். குனிபவனாகத் தமிழனும் இருக்கவே, அவர்கள் பச்சைக் குதிரை ஏற வசதியாய்ப் போனது. எனவே அவர்கள் புகுத்திய நச்சு நோய்க்கு ஆட்பட்டு, தமிழரும் தாமே விரும்பி சமஸ்கிருதமாக் கலுக்கு உடம்பட்டும் - தாமே பலவற்றைச் சமஸ்கிருமயமாக்கிப் பெருமை தேடியும் தாழ்வு மனப்பான்மையில் ஊறிப் போயினர்.

ஆளுக்கொரு முடியைப் பிய்ப்பதுபோல், அனைத்துத் தமிழ்ச் சொற்களும், இடைக்காலந்தொட்டு, சமஸ்கிருதமய மானதால், பல்வேறு துறைகளில் தமிழர்களின் தலை 'மொட்டை' யாகிப் போனது.

இன்று, 'எல்லாம் எங்களுடையதே' என்று தமிழர்கள் பதற வேண்டி உளது. இவற்றை மீட்டுருவாக்கும் முயற்சி இன்னமும் எழுச்சி பெறவில்லை.

## சொக்கர் - சொக்கி

தொடக்க காலத்தில் சொக்கர் என இருந்த பெயர் சுந்தரர், சுந்தரேசர் என மாற்றப்பட்டது. சொக்கி - மீனாட்சி ஆக்கப்பட்டு, அது பிறகு 'அங்கயற்கண்ணி' ஆனது.

சொக்கத் தங்கம் என்பதில்லையா? பொன்னார் மேனியனை அவ்வாறு அழைத்தனர். இன்றும் 'பழைய சொக்கநாதர் கோயில்' என ஒன்றுளது. சொக்கிகுளம் என அழைக்கப்படுமிடம் செல்வர்கள் வாழும் நகரப்பகுதியாகி விட்டது. குளம்போன இடம் தெரிந்திலது.

வான்மீகர் காலத்திலேயே, முன்னைய கடல்கொண்ட கூடல், பெரிய கோட்டை வாயில்களை உடையதாய் இருந்தது. அதை அவர் இராமாயணத்தில் குறிப்பிடுகிறார். ஆலவாயில் என்பது, மிகப்பெரிய கோட்டைவாயில் எனப்படும். அதனால் நகரும் ஆலவாய் எனப்பட்டு, இறைவனும் 'ஆலவாய் அண்ணல்' என அழைக்கப்பெற்றார். தமிழகத்தில் 'வாயில்' என்ற சொல்லுடன் முடியும் ஊர்கள் சில இன்றும் உள.

தமிழ்ச் சொற்களை மட்டுமன்றி, சமயம், கலை, வாழ்வியல் எனப் பல்துறை சார்ந்த நூல்களை, சமஸ்கிருதத்தில் மாற்றி எழுதிக் கொண்டு, கலைச்சொற்கள், ஊர்ப்பெயர்கள், மக்கட் பெயர்கள், இறைவன் இறைவி பெயர்களை எல்லாம் சமஸ்கிருதமாக்கி, பிறகு எல்லாம் சமஸ்கிருதத்திலிருந்தே வந்தன; தமிழில் எதுவுமே இல்லை என உலகம் ஒப்புக்கொள்ளுமாறு செய்து, தமிழரும் இதற்கு உடன்பட்டு, பெருஞ்செல்வம் இருந்து திருடர்களிடம் பறிகொடுத்து, ஏழையானவன் போலத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

நீண்டதொரு ஆராய்ச்சிக்குரிய ஒன்றை, இங்கு நாம் சுட்டிக் காட்ட மட்டுமே செய்கிறோம். இதைத் தொடர வேண்டியதும், இழந்தவற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியதும், இனி இருப்பவற்றைக் காக்க வேண்டியதும் தமிழன் கடமையாகும்.

## ஆரியச் சூழ்ச்சிக் கொடுமைக்கு, வெளிப்படையான சில அடிப்படைச் சான்றுகள்

"திருவள்ளுவரை 'சீவல்லபர்' என்ற ஆரியப்பெயர் சூட்டி அவரை ஆரியராக்க முயன்றனர்.

திருக்குறளின் அறத்துப்பால் - வடமொழித் தரும சாத்திரம்,

பொருட்பால் - அர்த்த சாத்திரம்

காமத்துப்பால் - காம சூத்திரம்

என்று கூறினர். அறிஞர் ச. வையாபுரிப்பிள்ளையே இவ்வாறு எழுதினார்.

பெரியபுராணம் - வடமொழி உபமன்யு பக்தி விலாசத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு,

திருவிளையாடற்புராணம் - வடமொழி ஹாலாஸ்ய மகாத்மியத்தின் தமிழாக்கம்,

சிவஞானபோதம் - ரௌரவாகமத்திலிருந்து எடுத்து எழுதப் பட்டது என இவ்வாறு அவர்கள் வரலாற்றைத் திரித்த கதை பெரிது.

மூவர் தேவாரப் பதிக ஏடுகளைத் தில்லையில் ஓர் அறைக்குள் போட்டு, அடைத்துச் செல்லரிக்க விட்டனர். திருமுறை கண்ட புராணவழி இதை உய்த்துணரலாம்.

"தமிழ்க் கருத்துக்களைச் சமற்கிருதச் சொற்களால் மூடி மறைத்து, அவற்றைத் தங்களுடையதாகக் காட்டிக் கொள்ளவும் துணிந்து இறங்கினார்கள். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், சொல் மாற்றச் சூழ்ச்சி தெரிய வராது. கருத்துக்கள் சொல்லால் விளக்கம் பெறுகின்றன. சொல் இல்லையேல் கருத்தும் இல்லை யாகிறது. சொல்லால் மறைக்கப்பட்ட கருத்தின் சொந்தக்காரர் சொல்லுக் குரியவராகி விடுகிறார்", என்பார், தி. வை. சொக்கப்பா. (சமஸ்கிருத ஆதிக்கம், பெரியார் திறந்தநிலைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை). அவர் 'சிவபோற்றி' என்பதே 'சிவாயநம' என ஆக்கப்பட்டது என்பார்.

## சமயச் சொற்களை மாற்றியமை

தமிழில் பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்பதுபோல விளங்கும்படி கூறக் கூடியவற்றை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மாற்றினர்.

இவற்றைச் சிவநெறி மெய்யியல் வல்லுநர்கள்தான் கண்டு சொல்லவேண்டும். சிலவற்றை முன் எடுத்துக்காட்டாகக் காண்போம்.

மலநீக்கம் - மலபரிபாகம்
பொறி - இந்திரியம்
பூசனை - பூஜா
வழிபடுதல் - அருச்சித்தல்
கருவறை - கர்ப்பக்கிரகம்
ஆனைந்து - பஞ்ச கவ்வியம்
திருமுழுக்காட்டல் - அபிஷேகம்
கும்பிடுதல் - நமஸ்கரித்தல்
திருச்சுற்று - பிரகாரம்

விழைவாற்றல் - இச்சா சக்தி
செயலாற்றல் - கிரியா சக்தி
அறிவாற்றல் - ஞானாசக்தி
மறைப்பாற்றல் - திரோதன சக்தி
அருளாற்றல் - அனுக்கிரக சக்தி

இறையுலகப் பேறு - சாலோகம்

இறையருகுப்பேறு - சாமீபம்

இறையுருப்பேறு - சாரூபம்

இவைபற்றிய பழம்பெயர்கள் அழிக்கப்பட்டு மறைந்து போனதால், அவர்கள் மாற்றி வழங்கிய சமஸ்கிருதப் பெயர்களை இன்று நாம் தமிழாக்கம் செய்ய வேண்டியுளது.

சிவநெறி மெய்யியல் பற்றிய அனைத்துக் கலைச்சொற்களும் சமஸ்கிருதமானதால், மக்கட்கு எளிதில் விளங்காமல், அம் மெய்யியலே பலரறியவொண்ணாத மறைபொருளாகி, மறையவும் ஆனது.

'சைவ சித்தாந்தம்' என்பதே வடமொழிப் பெயரானது. திருவள்ளுவர் 'மெய்யுணர்தல்' என்றார். அதன்வழிப்பட்ட தமிழ்ச் சமயப் பெயரையே இழந்து விட்டோம்.

சிவநெறிச் சமய வல்லுநர்கள், திருமுறைகள் தொடங்கி, அனைத்தையும் ஆராய்ந்து தமிழாகச் செய்து விளக்கினால் மட்டுமே, சிவனியம் மக்கள் சமயமாகும். வடமொழியை நன்கு கற்றாலன்றி, நம்மிடமிருந்து அவர்கள் கொள்ளைகொண்ட விவரங்களை முழுமையாய் அறிய முடியாது.

இன்று வடமொழியும் தமிழும் கற்ற, சமய வல்லுநர்கள் உள்ளனர். ஆராய்ச்சி மாணவர்களை, திருமுறைகளிலுள்ள, தமிழர் சமய மெய்யியல் கலைச்சொற்களைத் தொகுக்கச் சொல்லி இளம் முனைவர், முனைவர் பட்டங்கள் தரலாம்.

## திருமெய்யம்

திருமெய்யம் (திருமயம்) என்ற ஊர் திருப்புத்தூர், புதுக் கோட்டை நெடுஞ்சாலை வழியிடையே உளது. அங்குள்ள இறைவன் பெயர் திருமெய்யன். மெய்யனைச் சத்தியமூர்த்தி ஆக்கினர். மெய்யப்பன் என்றே நகரத்தார் வழங்குவர். அங்கு ஒருமுறை போனபோது, தாயார் திருமுன் வந்தோம். ஐயங்காரிடம் அம்மன் பெயர் கோட்டபோது 'உஜ்ஜீவனத் தாயார்' என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'சாமி, தமிழில் என்ன சொல்லி அழைப்பார்கள்' என்றேன். அவர் முகத்தை மாற வைத்துக் கொண்டு 'உய்ய வந்தாள்' என்றார்.

உய்ய வந்த தாயார் - உஜ்ஜீவனத் தாயாரானதும் அவாள் கைங்கர்யமே என வியந்தேன்.

## திருவண்ணாமலை

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பாடிய திருவண்ணா மலைப் பதிகங்களில் அண்ணாமலை, உண்ணாமுலை என்றே உளது. 'மாலும் நான்முகனும் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்' என்பது நாவரசர் வாக்கு. திருமால் - வேதங்களில் 'வி ஷ்ணு' என்று குறிக்கப்படுகிறார். பிரும்மா, வேதங்களை 'புருஷன்' எனப்படும் கடவுளிடம் கேட்டு உலகிற்கு அருளியதாக வருகிறது. இவர்களும் தேவதைகள் அல்லது தேவதைகள் வரிசையிலேயே வேத மூல நூல்களில் வருகின்றனர். ருத்ரனும் அவ்வாறே குறிக்கப்படுகிறான். ஆயினும் வி ஷ்ணுவுக்குச் சற்றுக் கூடுதல் பெருமை தரப்பட் டிருப்பதாக, வேத ஆய்வாளர் கருதுகின்றனர்.

முதல் வேதமாகிய இருக்குவில் அக்கினியும் இந்திரனும் சோமனும் (சோமபானம்) பேரிடம் பெறுவதாக எமக்குத் தோன்றுகிறது. சோமனை - பரம்பொருள் அளவுக்கு உயர்த்துகிற இடங்கள் உள. நம் அருளாளர்கள் நான்முகன் - பிரம்மாவும் வி ஷ்ணுவும் சிவபெருமானை முடி, அடி தேடியும் காணாததாக நூற்றுக்கணக்கான இடங்களில் வருகிறது. அவர்களுடன் தேவர் களும் காணாதவன், வேதங்களும் தேடிக் காணுதற்கு அரியவன் என்ற திருப்பதிகக் குறிப்புக்கள் தொகுத்து நோக்கற்பாலன. அதாவது சிவ பரம்பொருளே, முழுமுதற் கடவுள் என்ற கருத்தால், இவ் வேதக் கருத்துக்களை மறுக்கும் 'தொன்மம்' இது. வேதங்களை ஏற்பதுபோல் காட்டி மறுக்கும் இடங்களில் இதுவும் ஒன்று.

அண்ணாமலை என்பது உயர்ந்து நிற்கும் மலை. அண்ணாத் தல், அண்ணாந்து பார்த்தல் என்பன உயரப் பார்க்கும் பார்வை யைக் குறிக்கும். எனவே இது இறைவனை அடிமுடி காண முடியாத மலை என்ற பொருளிலேதான் முதலில் ஆளப்பட்டிருக்கும். எனவே அங்குள்ள இறைவனை அண்ணாமலையானாகவும், இறைவியை உண்ணாமுலை ஆகவும் பெயரிட்டு அழைத்தனர் நம் முன்னோர்.

(உண்ணாமுலையை, நாகரிகங் கருதி, வெளிப் படக் கூறாது உண்ணாமலை என்றே அழைப்பதும் உண்டு).

வடமொழியாளருடன் கலந்தபின் 'அருணாசலேஸ்வரர்' எனச் சமஸ்கிருதமாக்கினர். இறைவன் தழல் உருவாய் நின்றனர் என்றனர். அருண - அசலம் = செந்நிறமலை. செம்மலை. அது அண்ணாமலை ஆகாது. உண்ணாமுலையை - அபீதகுசாம்பாள் என்றனர். அம்மன் பெயர் விளங்காததால், மக்களிடையே பரவவில்லை. ஆயினும் அவர்கள் அதனைக் கைவிடுவதில்லை.

திருப்பதிகங்களில் 'அருணாசலத்தைக்' காணவில்லை. நம் தேவார மூவர் முதலிகளை வாயாரப் புகழும் எவரும், இத்தகைய 'சமஸ்கிருதச்' சொல் மாற்றச் சூழ்ச்சிகளை உணர்வதில்லை. இனி இதை மாற்றமுடியாது. பிராமணியமே வெல்லும்; தமிழனும் தமிழும் அழிவை நோக்கியே நகருவர். நாங்கள் மாற்றச் சொல்ல வில்லை; இப்படியெல்லாம் நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதுகூடக் குற்றமென்றால், யாரிடம் முறையிடுவது? முழு முட்டாள்கள் மாநாடு கூட்டினால், தமிழனே தலைமை தாங்குவான். மானமுள்ள ஒரு தமிழனாவது பிறக்கமாட்டானா என நெஞ்சம் ஏங்குகிறது.

## பெருவுடையார்

தஞ்சையில் இராசராசன் ஒரு பெரிய கோயிலைக் கட்டி, அங்கு எழுந்தருளிவித்த சிவனுக்கு இராசராசேச்சுரப் பெரு வுடையார் எனப் பெயர் சூட்டினான். இறைவி பெயர் பெரிய நாயகி. கோயிலைக் கட்டியவன் வைத்த பெயரை விட்டுவிட்டு, பிருகத்தீஸ்வரர், பிருகத் நாயகி என்று மாற்றுவது என்ன நேர்மை?

இராசராசனின் ஆயிரமாம் ஆண்டின் நினைவாக, நடுவண் அரசு வெளியிட்ட நாணயம், அஞ்சல் தலை இரண்டிலும் பெருவுடையார் டெம்பிள் என்று போடாமல், 'பிருகத்தீஸ்வர் டெம்பிள்' என்று போட்டது தவறல்லவா? இவ்வளவிற்கும் அத் துறை அமைச்சர் தமிழரே. தமிழாய்ந்த தமிழர்தான் முதலமைச்சர்!

## பிள்ளையார் பட்டி

கற்பகப் பிள்ளையாரை, கற்பக விநாயகர் என்பதில் ஒரு

மனநிறைவு சிலருக்கு. நல்லவேளை, பிள்ளையார் பட்டியை, வினாயகர் பட்டி அல்லது நகர் என்று மாற்றாமல் விட்டனரே! அதுபோதும்.

அங்குள்ள சிவன் பெயர் மருதீசர். மருது எனும் பெயருடன் சேர்ந்த இறைவன் பெயர் பலவுள. அதனை 'அர்ஜூனவனேஸ்வரர்' என விளங்காத, பொருட் பொருத்தமில்லாத பெயரைப் பெரிய எழுத்தில் போட்டு, மருதீசர் என்ற மூலப்பெயரை (Original name) சிறிய எழுத்தில் போட்டுச் சிவனை அவமானப்படுத்தலாமா? மருதமரம், மருதநிலம் அடிப்படையில் வந்த பெயரில், அர்ஜூன வனம் எங்கே வந்தது. அங்குள்ள அம்மை பெயர் வாடாமலர் மங்கை. இதை மிகப்பெரிய எழுத்தில் அஸோககுஸூமாம்பாள் எனப் போட்டு, வெளிச்சமிட்டுக் காட்டுவது எந்த வகையில் ஏற்கத்தக்கது. வாடாத என்பதற்கு 'அசோக' என்பது மொழி பெயர்ப்பா? விழிபெயர்ப்பா? மலர்மங்கை எப்படிக் குஸூமாம் பாள் ஆனாள்? பார்ப்பனர்கள் துணிந்து தமிழகத்தில் இன்னமும் நடமாடுவதால் இத்தீங்கு வந்ததென்று சொன்னால், 'ஐயோ' நாத்திகன் என்பார்கள். நகரத்தார்களும் உடன்பட்டுச் செய்யும் இந்தப் பாவம், இவர்கள் அனைவரையும் நரகத்திற்குள் தள்ளாது விடாது என்பதுறுதி.

ஒருமுறைக்குப் பலமுறை, தமிழனாகப் பிறந்த ஒரு நகரத் தாராவது சிந்திக்கவே மாட்டாரா?

தாயுமானவரை - மாத்ருபூதம் என்பது நன்றாகவா உளது.

உறையூர் ஐவண்ண நாதரை பஞ்சவர்ண நாதர், அல்லது பஞ்சவர்ணேசுவரர் என்பதிலே, ஏதோ குடித்தவனுக்கேற்படும் மகிழ்ச்சி, இந்தப் பார்ப்பனர்களுக்கு.

தமிழர்களின் உரிமைகளான சமயம், கலை சார்ந்த அனைத் தையும் சமஸ்கிருதத்தில் எழுதி வைத்துக்கொண்டு, தமிழ்நூல் களை அழித்தனர் என்பதற்கு, பெயர் முதல் கலைச்சொற்களை எல்லாம் மாற்றியிருப்பதே தக்க சான்று அல்லவா? உண்மை களையோ, நேர்மை நியாயத்தையோ உள்ளபடி சொன்னால், இவருக்கு ஏன் கோபம் வருகிறது, என்று கேட்கிறார்கள்.

அன்றொருநாள், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் செண்பகத் தமிழரங்கக் கூட்டத்தில், நான் சிறிது சீற்றத்துடன் பேசிவிட்டேன். சிலபோது, உண்மைகளை உணர்ந்தால் வருத்தம் மிகுகிறது. சீற்றம் நம்மை மீறி வருகிறது.

அன்றைய கூட்டத்தில், முன்பின் தெரியாத மூவர் மேடை ஏறி வந்து என்னிடம், "உங்களுக்கு வந்த இந்தக் கோபம் தமிழர்களுக் கெல்லாம் வந்தால்தான் நாம் உருப்படுவோம்', என்றார்கள்.

எங்கள் வீட்டில், "ஏன் இப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறீர்கள். கூட்டத்தில் வந்தவர்களில் எத்தனை பேர் உங்கள் பேச்சைக் கேட்டுத் திருந்தப் போகிறார்கள்? அல்லது உங்களுடன் சேர்ந்து போராடப் போகிறார்கள்? யார் இவற்றை எல்லாம் நினைக்கப் போகிறார்கள்? யாராவது போய்த் தவறுதலாக, ஆள்பவர்களிடம் பற்ற வைப்பான். நாம் மட்டும் கத்திப் பயனில்லை என்று எத்தனை சொன்னாலும்; உடம்பு கெடும் என்றாலும் உங்களுக்கு மேடை ஏறிவிட்டால் எல்லாம் மறந்து போகிறது" என்று பலவாறு திரும்பத் திரும்ப, 'இப்படி உணர்ச்சி வசப்படுவதால் நமக்குத்தான் கேடு; யாரும் கூட்டத்திற்குப் பிறகு இதைப்பற்றி நினைக்கவே போவதில்லை" எனச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

தாயுமானவரை மாத்ருபூதம் என்றால் எனக்குக் கோபம் வருகிறது. வாடாமலர் மங்கையைப் பொருட்பொருத்தமின்றி, அஸோக குஸுமாம்பாள்' என்று பெரிய எழுத்தில் எழுதி வைத்திருப்பதைப் பார்க்கும்போதெல்லாம் என்னுள் ஏதோ ஓர் உணர்வு பொங்கி விடுகிறது. பெருவுடையாரைப் பிருகத்தீஸ்வர் என்று அஞ்சல் தலையில் அச்சிட்டுக் காட்டும்போது, "ஐயகோ! இவர்களுக்கெல்லாம் ஓரழிவு வராதா?' என்று நெஞ்சம் நோகிறது. வழுவலும் நழுவலுமாய் வாழ்பவர் உலகில் நாம் அவற்றுக்கு மறுதலையாக ஏன் பிறந்தோம் என எண்ணும்போது, கண்ணீரே தளும்புகிறது; குரல் கரைந்து போகிறது.

வாழ்நாள் முழுவதும் இப்படியே பழகிப் போய்விட்டது. இனி இந்த இறுதிக் காலத்திலா இது மாறப்போகிறது. ஒரு வங்காளியாக, மலையாளியாக பிறந்திருந்தால் கூட என் குரல் எதிரொலித்திருக்கும்; சிறு பயனாவது விளைந்திருக்கும்.

கல்தரை மீது புல் வளர்க்க முயன்றவன் கதையாகிப் போனது என் வாழ்வு. எனக்குள் ஒரு மன ஆறுதல் பெறுவதே என் முயற்சிகளின் பயனாகும். உண்மையை, நல்லதை, நேர்மையைச் சொன்னதற்காக வெறுக்கப் பட்டவர்கள்; புறக்கணிக்கப் பட்டவர்கள் பலருண்டு. அந்த வரிசையில் எனக்கோர் இடமுண்டு. அதுபோதும் எனக்கு.

பல நிகழ்ச்சிகளில் நான் இறைவன் இறைவி பெயர்களை மாற்றிய, சமஸ்கிருதப் பாவிகளின் நயவஞ்சகத்தை எடுத்துச் சொல்லி, அவற்றின் தமிழ்ப் பெயர்களாகிய - மூல முதற்பெயர்களை மீட்டும் வழக்கிற்குக் கொண்டுவரவேண்டும். சமஸ்கிருதப் பெயர்கள், அவை பொருளற்ற பெயர்ப்புக்களாதலின் அவற்றை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டும் எனக் கூறுவதுண்டு.

மயிலாடுதுறை, செந்தமிழ்ப் பேரவையிலிருந்து, இவ்வாறு ஓரளவு முயன்று தொகுக்கப்பட்ட ஒரு பட்டியல், அச்சிடப் பட்டதை எனக்கு அனுப்பினர். அதை அப்படியே நான் இங்கு திரும்பத் தந்துள்ளேன். இம்முயற்சி தொடரவேண்டும் என்பது என் விழைவு. பட்டியல் பின்னிணைப்பாக அவ்வாறே தரப் பட்டுள்ளது. ஏதும் மாற்றம் வேண்டுமேல் எழுதலாம்.

மேலும் சில கிடைத்தவை கீழே தரப்படுகின்றன. இவை சில நூல்களிற் கண்டவை. இவர்களுக்குச் சிலவற்றை மட்டுமே வட மொழியில் பெயர்க்க வந்துளது. அடியார்க்கருளி - பக்தவத்ஸலன். சில பெயர்க்க இயலாதவற்றை, தெய்வச்சிலையார் - கல்யாண ஜெகந்நாதன் என எவ்விதத் தொடர்புமின்றி எழுதிக் கொள்வதும் உண்டு. உலக நாயகியை - லோக நாயகி என்றாவது மாற்றினால் இவர்களுக்கு மகிழ்ச்சி. இவை பலவற்றைப் பார்க்கும்போது கட்டாயமாக சமஸ்கிருதமயமாக்கியே தீருவோம் என ஓரியக்கமாகச் செயற்பட்டமை தெரிகிறது.

அஞ்சொலாள் என்பதை அஞ்சாதவள் என நினைத்து, அபயாம்பிகை எனப் பெயர்த்தது மடமை அல்லவா? அழகிய சொல்லினள் அன்னை.

அவ்வப்போது எம் கண்ணிற்பட்டவை சில கீழே தரப்படுகின்றன. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் முதல், பலர் சில சில மேற்கோள் காட்டி, தம் வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர்.

அவ்வகையில் நாம் கண்டவை சில இங்குத் தரப்படுகின்றன. பின்னிணைப்பாக நா. தண்டபாணி தொகுத்த பட்டியலுடன் சில மேவி வரலாம். அதனால் தவறெதுவுமில்லை. திரும்ப நினைவூட்டு வதாகக் கொள்க.

| | |
|---|---|
| அடியார்க்கருளி | - பக்தவத்சலன் |
| கேடிலி | - அக்ஷயன், அச்சுதன் |
| மலைமகள் | - பார்வதி |
| மாதொருபாகன், மங்கைபங்கன் | - அர்த்த நாரீசுவரன் |
| தடங்கண்ணி | - விசாலாட்சி |
| கூடுதுறையார் | - சங்கமேஸ்வரர் |
| பிறவி மருந்திறைவர் | - பவ ஔஷதீசுவரர் |
| வேல்நெடுங்கண்ணி | - சக்தி ஆயுதாட்சி |
| கறைமிடற்றண்ணல் | - நீலகண்டன் |
| பெருமாள் | - மகாவி ணு |
| விண்டு | - வி ணு |
| முருகன் | - சுப்பிரமணியன் |
| காளி, கொற்றவை | - துர்க்கை |

| | | |
|---|---|---|
| திருஆக்கூர்: | தான்தோன்றியப்பர் | - சுயம்புநாதர் |
| திருவாடானை: | ஆடானைநாதர் | - அஜகஜேசுவரர் |
| திருவாரூர்: | புற்றிடங்கொண்டநாதர் | - வன்மீகநாதர் |
| திருவையாறு: | ஐயாறப்பர் | - பஞ்சநதீசுவரர் |
| | அறம்வளர்த்த நாயகி | - தர்மசம்வர்த்தனி |
| திருக்கேழ்வேளூர்: | கேடிலியப்பர் | - அட்சயநாதர் |
| திருச்செம்பொன்பள்ளி: | செம்பொன் பள்ளியார் | - சொர்ணபுரீசுவரர் |
| திருப்பனையூர்: | அழகிய நாதர் | - சௌந்தர்யநாதர் |
| திருமழபாடி: | வயிரத்தூண் நாதர் | - வச்சிரதம்பேசுவரர் |
| திருமுதுகுன்றம்: | பழமலைநாதர் | - விருத்தகிரீசுவரர் |
| திருவெண்காடு: | வெண்காடர் | - சுவாதாரண்யேசுவரர் |
| திருஇராமேச்சுவரம்: | மலைவளர்காதலி | - பருவதவர்த்தனி |
| திருக்கோட்டூர்: | தேன்மொழிப்பாவை | - மதுரவசனி |

திருநெய்த்தானம்: இளமடமஞ்ஞை - பாலாம்பிகை
திருப்பைஞ்ஞீலி: நீள்நெடுங்கண்ணி - விசாலாட்சி
திருமயிலாடுதுறை: அஞ்சொல் நாயகி - அபயாம்பிகை
திருவலி தாயம்: தாயம்மை - ஜகதாம்பாள்
பையனூர் (செங்கல்பட்டு மாவட்டம்) - எழிலார்குழலி, எட்டீசுவரர்
திருவெஃகா: யதோத்காரி - சொன்னவண்ணம் செய்த பெருமாள்

கண்ணிற்பட்டவை - ஆங்காங்குக் கிடைத்தவை என்பதால் இவை முழுமையானவை அல்ல. சில பெயர்கள் தவறுபடவும் எழுதப்பட்டிருக்கலாம். இறைவன் பெயர் கிடைத்து - இறைவி பெயர் கிடைக்காதவை சிலவுள. இம் முயற்சியில் மேலும் ஈடுபட்டு, தமிழகம் முழுவதும் தமிழ்ப்பெயர்கள் மட்டுமே எழுதப்பட்டு, வழக்கிற்கு வருமாறு, இந்து அறநிலையத்துறை ஆணையிட்டுச் செயற்படுத்த வேண்டும். ஒருவர் தாம் இழந்த சொத்துக்களை மீட்பதில் தவறேதுமில்லை. இதனை இந்த நூற்றாண்டிலும், வடமொழிப் பற்றாளர் பகைமையாக எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

## ஊர்ப்பெயர் மாற்றம் - திருவரங்கம்

ஆற்றினிடையேயுள்ள மணல் திட்டுகளும் இரண்டு ஆற்றுக்கு இடைப்பட்ட நிலமும் 'அரங்கம்' எனப்பட்டன. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட நிலம் அரங்கம் எனப்பட்டது. திருவரங்கம் என்றது தெய்வத்தன்மை கருதிய அடைமொழி. அதை ஶ்ரீ அரங்கம் ஆக்கி - பிறகு 'அ'வை விடுத்து, ஶ்ரீரங்கம் ஆக்கியது தேவையற்ற செயல். அரங்கன், ரங்கனாகி, அது ரெங்கனாகி, ரெங்கனாதனாகியன எல்லாம் வழுப்பட்ட சொற்கள்.

## திருவேங்கடம்

வேகும் கடம் - வேங்கடமாகும். கடம் - காடு. 'வெண்தேர் ஓடும் கடம் கால் மருங்கில்' (அகம். 179); 'கடம் முதல் சோலைய காடு' (ஐங். 328); 'வெந்துகள் ஆகிய வெயிற்கடம் நீந்தி' (ஐங். 330). இவ்வாறு 'கடம்' - காடு என்ற பொருளில் பழம் பாடல்களில் நிரம்ப வருகிறது. 'வேங்கட நெடுவரை' (அகம். 85); 'வேங்கடத்து

உம்பர்' (அகம் 209). இவ்வாறு இது அம்மலைத் தொடராகிய ஏழுமலை களையும் குறித்தது. அது இன்றைய ஆந்திரம் நெல்லூர் வரைபோகும்.

அதனால் வேங்கடவன், வேங்கடத்தான் என்றனர். திருவேங் கடவன், திருவேங்கடத்தான் நல்ல தமிழன். அவனை வெங்கடவன் ஆக்கி, வேங்கடாசலம், வெங்கட்ராமன், வெங்கிடு, வெங்கு வரை ஆக்கிய கோலங்கள் கணக்கில.

குடந்தை - குடமூக்கு, கும்பகோணம். (தில்லைச்) சிற்றம்பலம் - சிதம்பரம், புளியங்குடி - திண்டிவனம். திருவானைக்கா - ஜம்புகேஸ்வரம், கழுக்குன்றம் - பட்சிதீர்த்தம், ஆய்ப்பாடி - கோகுலம், குரங்காடுதுறை - கபிஸ்தலம், சிங்கவேள்குன்றம் - அகோபிலம், வெண்காடு - சுவேதாரண்யம். பழமலை, முதுகுன்றம் - விருத்தாசலம், நாவலம் பொழில் - ஜம்புத்தீவு. பெரும்புலியூர் - வியாக்ரபுரி.

இத்தகையவும் கணக்கில. மிக நல்ல தமிழர் ஆட்சி ஏற்பட்டு இறைவன் இறைவி பெயர், ஊர்ப்பெயர், மக்கட்பெயர், சமயக் கலைச்சொற்கள், பிற கலைச்சொற்கள் யாவும் தமிழாக்கம் பெற்று, பிறமொழியின களையப்படவேண்டும்.

ஆகமங்களைத் தமிழாக்கவேண்டும். இக்காலத்திற்கேற்பப் புதிய ஆகமங்கள் உருவாக்கவேண்டும்.

திருக்கோயில் வழிபாடுகள் முற்றிலும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

ஹோமங்கள் அறவே ஒழிக்கப்பட்டுத் திருவிளக்கு வழிபாடுகள் போல்பவை நாடெங்கும் பரவவேண்டும்.

## பின்னிணைப்பு

**இறைவன், இறைவி பெயர்களைத் தமிழிலிருந்து வட மொழியாக மாற்றியமைக்கப்பட்ட திருக்கோயில்களின் பட்டி யல்: புலவர் நா. தண்டபாணி (தமிழாசிரியர் - ஓய்வு), செட்டித் தெரு, அம்பல் - பூந்தோட்டம் வழி - 609 503. வெளியீடு: செந்தமிழ்ப் பேரவை, மயிலாடுதுறை. அச் சிற்றறிக்கை:**

தேன்மொழி, வண்டார்குழலி, யாழைப்பழித்த மொழியாள், அழகம்மை, அங்கயற்கண்ணி, பொற்கொடி, தேனமுதவல்லி, பெரியநாயகி, சொக்கநாதன், மருதப்பர், மாணிக்கவண்ணர், குடவழகன், ஆடல்வல்லான், பழமலையப்பன், பிறவிமருந்தீசர், பெருவுடையார் இவைகள் எல்லாம் குழந்தைகளுக்கான பெயர்ப் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட தூய தமிழ்ப்பெயர்களா? இல்லை. தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள இறைவன், இறைவி பெயர்களே, இவை. இவைகள் எல்லாம் தமிழ் இன எதிரிகளால் சூழ்ச்சியால், வஞ்சனையால் அன்றைக்கு இருந்த மன்னர்களைக் கையில் போட்டுக்கொண்டு வடமொழிப்பெயர்களாக மாற்றப் பட்டன.

சூழ்ச்சியாக இப்படி மாற்றி வைக்கப்பட்டதை மறைத்து, சில கூட்டத்தார் தமிழில் வழிபாடு செய்தால் (மந்திரம் சொன்னால்) தேன்மொழிக்கு ஆகாது, யாழைப்பழித்த மொழியாளுக்கு ஆகாது, தஞ்சை பெருவுடையாருக்கு, பெரியநாயகிக்கு ஆகாது, மதுரை சொக்கனுக்குப் புரியாது என்று நம்மைத் தொடர்ந்து ஏமாற்ற முயல்கிறார்கள்.

நாயன்மார்கள் நால்வரால் பாடப்பெற்ற சிவனியப்பதிகள் 274. அவற்றுள் இரண்டு ஈழத்திலும் ஐந்து இந்தியாவின் வடபகுதிகளிலும் உள்ளன. சிலபதிகள் தமிழ்நாட்டிற்கு வெளியே தென்னிந்தியாவில் உள்ளன. ஆழ்வார்களால் பாடப்பெற்ற மாலியப்பதிகள் 108. இப்பாடல் பெற்ற கோவில்களிலும் பாடல் பெறாத கோவில்களிலும் இப்பெயர் மாற்றங்கள் நடைபெற் றுள்ளன. இம்முதல் தொகுப்பில் பாடல்பெற்ற கோவில்களில் செய்த மாற்றங்கள் பற்றியே தொகுக்கப் பட்டுள்ளது.

இறைவன், இறைவி பெயர்கள் தமிழ்நாட்டின் திருக்கோயில் களில் முற்காலத்தில் இருந்த அதே தமிழ்ப் பெயர்களாகவே மீண்டும் மாற்றி வழங்கப்படவேண்டும். அரசு ஆவணங்கள், அறநிலையத்துறை, அனைத்திலும் அவை திருத்தப்பட வேண்டும்.

| ஊர்ப்பெயர் (பழைய தமிழ்ப்பெயர்) | சிவனிய இறைவன் / தமிழ் | இறைவி பெயர்கள் வடமொழி |
|---|---|---|
| 1. அம்பல் (திருவம்பர்) | பெரும்பேர் இறைவன் | பிரம்ம புரீசுவரர் |
| | பூங்குழல் நாயகி | சுகந்த கூந்தளாம்பிகை |
| 2. மாகாளம் | காளகண்டர் | காளகண்டேசுவரர் |
| | பச்சை நாயகி | பயக்ஷய நாயகி |
| 3. திருவிடை மருதூர் | மருதப்பர் | மகாலிங்கேசுவரர் |
| | பெருநலமுலைநாயகி | பிரகத்சுந்தர குசாம்பிகை |
| 4. அரித்துவார மங்கலம் (திருஅரதைப் பெரும்பாழி) | வனநாதர் | பாதாளேசுவரர் |
| | அலங்கார வல்லி | அலங்கார நாயகி |
| 5. திருவண்ணா மலை | அண்ணாமலையார் | அருணாசலேசுவரர் |
| | உண்ணாமுலையம்மை | அபீத குசாம்பிகை |
| 6. ஆக்கூர் | தான்தோன்றி நாதர் | சுயம்புநாதர் |
| | வாளரங்கண்ணி | கட்காரநேத்திரி |
| 7. மதுரை (திருஆலவாய்) | சொக்கநாதன் | சோமசுந்தரர் |
| | சொக்கி, அங்கயற்கண்ணி | மீனாட்சி |
| 8. திருவாவடுதுறை | மாசிலாமணி | பிரகாசநாதர் |
| | ஒப்பிலாமுலையம்மை | அதுலகுச நாயகி |
| 9. கடிகுளம் | கற்பகநாதர் | கற்பகேஸ்வரர் |
| | அழகம்மை | சௌந்தர நாயகி |
| 10. கடுவாப்புத்தூர் | செம்பொன்நாதர் | சொர்ணபுரீஸ்வரர் |
| சிவா அம்பிகை | கந்தரகேஸ்வரி | |
| 11. குருமாணக் குடி | கண்ணாயிரப்பெருமான் | சகஸ்ரநேத்ரேசுவரர் |
| முருகுவளர்கோதை | சுகந்த குந்தளாம்பிகை | |
| 12. திருக்கருகாவூர் | முல்லை வனநாதர் | பிரம்ம புரீஸ்வரர் |
| | கரும்பனையாள் அம்மை | கருப்பரட்சகி |

| | | |
|---|---|---|
| 13. கூடலையாற்றூர் | குறிக்காட்டு அண்ணல் | நர்த்தனவல்லபேசுவரர் |
| புரிகுழல் அம்மை | புரிகுழலீசுவரி | |
| 14. கச்சனம் | கைச்சின நாதர் | கரச்சின்னேசுவரர் |
| (கைச்சினம்) | வெள்வளையம்மை | வெள்வளைமாது |
| 15. திருக்கோடிக் | கோடிக்குழகன் | கோடீசுவரர் |
| காவல் | வடிவுளமங்கை | வடிவாம்பிகை |
| 16. சியாத்த மங்கை | அயவந்திசர் | பிரம்ம புரீசுவரர் |
| | மலர்க்கண்ணம்மை | உபய பு பவிலோசனி |
| 17. சக்கராப்பள்ளி | ஆலந்துறையான் | சக்கர வாகேசுவரர் |
| | அல்லியங்கோதை | திவ்ய நாயகி |
| 18. திருக்குவளை | திருக்கோளிலிநாதர் | சுந்தரேசுவரர் |
| | வண்டார் பூங்குழலி | மீனாட்சி |
| 19. சாயாவனம் | சாய்க்காட்டு இறையோன் | சாயா வனேசுவரர் |
| | குயிலினும் நன்மொழியம்மை | கோஷாம்பாள் |
| 20. சிக்கல் | பால்வண்ணன் | நவநீதேசுவரர் |
| | வேல்நெடுங்கண்ணி | சக்தி ஆயுதாட்சி |
| 21. திருப்பந்துறை | சிவானந்தேசுவரர் | பிரவணேசுவரர் |
| | மங்கலப்பாவை | மங்களாம்பிகை |
| 22. பெரும்புலியூர் | புலிக்கால் இறைவன் | வியாக்ர புரீசுவரர் |
| | அழகம்மை | சௌந்தரநாயகி |
| 23. திருமங்கலக்குடி | மாணிக்கநாதர் | பிராணவரதேசுவரர் |
| மங்கலநாயகி | மங்களாம்பிகை | |
| 24. நீலிவனம் | நீலிஇறை | நீலகண்டர் |
| | விழிஎழிலி | விசாலாட்சி |
| 25. வங்காரம் | உலக நாயகர் | ஜகதீசுவரர் |
| பேரையூர் | உலகநாயகி | ஜகந்நாயகி |
| 26. திருச்செங்கோடு | பாகம்பிரியான் | அர்த்தநாரீஸ்வரர் |
| | பாகம்பிரியாள் | அர்த்தநாரீஸ்வரி |

| | | |
|---|---|---|
| 27. பிரான்மலை | கொடுங்குன்றநாயகன் | உக்கிரிகிரீசுவரர் |
| | குயில்அமிழ்தநாயகி | அயிர்தாம்பிகை |
| 28. திருமகேந்திரப்பள்ளி | திருமேனி அழகன் | சோமசுந்தரர் |
| (கோயிலைப்பாளையம்) | வடிவாள் அம்மை | வடிவாம்பிகை |
| 29. திருமருகல் | மாணிக்கவண்ணர் | இரத்தினகிரிசுவரர் |
| | வண்டுவார் குழலம்மை | ஆமோதளநாயகி |
| 30. கொட்டையூர் | வலஞ்சுழி நாதர் | கோடீசுரர் |
| | பந்தாடியம்மை | கந்துகக்கிரீடாம்பிகை |
| 31. திருக்கூவிளம் புதூர் | கூவிளநாதர் | வில்வனேசுவரர் |
| | அழகம்மை | சௌந்தரநாயகி |
| 32. திருமழபாடி | மழபாடி மணாளன் | வஜ்ரதம் பேசுவரர் |
| | அழகம்மை | சௌந்தர நாயகி |
| 33. காளையார்கோவில் | காளை ஊர்தியான் | சோமேஸ்வரர் |
| | அழகம்மை | சௌந்தரநாயகி |
| 34. கீவளூர் | கேடிலியப்பர் | அட்சயலிங்கேசுவரர் |
| (கீழ்வேளூர்) | வனமுலையம்மை | சுந்தரகுசாம்பிகை |
| 35. கச்சூர் | விருந்திட்ட ஈசன் | கச்சாபேஸ்வரன் |
| | கண்மை உமையாள் | அஞ்சனாட்சி |
| 36. குடவாசல் | கோணநாதன் | கோணேசுவரன் |
| (திருக்குடவாயில்) | பெரியநாயகி | பிரஹன்நாயகி |
| 37. குடந்தை தேனார் மொழி | காசி விசுவநாதர் | சோமநாதர் |
| | காசி விசாலாட்சி | |
| 38. குடந்தை | குடவழகன் | கும்பேஸ்வரர் |
| | மங்கலநாயகி | மந்திர பீடேசுவரி |
| 39. குடந்தை | மடந்தைபாகன் | நாகேஸ்வரன் |
| | பெரிய நாயகி | பிரஹன்நாயகி |
| 40. ஆடுதுறை | குலைவணங்குநாதர் | குலைவணங்கீசர் |
| | அழகுசடைமுடியம்மை | சடாமகுடநாயகி |

| | | |
|---|---|---|
| 41. திருக்கருகாவூர் | மணிவயிரக்கொழுந்தர் | தந்தியோதனர் |
| | காவியங்கண்ணியம்மை | நீலோத்பவவிசாலாட்சி |
| 42. கரூர் (கருவூர்) | ஆனிலையப்பர் | பசுபதீஸ்வரர் |
| | மருள்அருள்நாயகி | கிருபா நாயகி |
| 43. காரைக்காடு | நெறிக்காரைநாதர் | காரைதிருநாதேஸ்வரர் |
| (காஞ்சிபுரம் அருகில்) | காரார் குழலி | கமலாம்பிகை |
| 44. திருக்கழுக்குன்றம் | நம்பிக்கு ஒளித்தபெம்மான் | வேதகிரீசர் |
| | திருமலைச்சொக்கி | திரிபுரசுந்தரி |
| 45. சாக்கோட்டை | அமிழ்தகலயநாதர் | அமுதகடேஸ்வரர் |
| (திருக்கலயநல்லூர்) | அமிழ்தவல்லி | அமிர்தவல்லி |
| 46. சிவபுரம் | சிவபுரநாதர் | பிரம்மபுரிநாதர் |
| | பெரியநாயகி | சிங்காரவல்லி |
| 47. திருச்சிராப் | திருமலைப்பெருமான் அழகன் | மாத்ருபுதேஸ்வரர் |
| பள்ளி | மட்டுவார்குழல் அம்மை | சுகந்த குந்தாளம்பிகை |
| 48. சிறுகுடி | மங்கலப் பேரிறை | கல்யாண சுந்தரேஸர் |
| | மங்கை | மங்கள நாயகி |
| 49. திருச்சுழியல் | திருமேனி நாதர் | தனுநாதர் |
| | துணைமாலை நாயகி | சகாயவல்லி |
| 50. தலைச்சங்காடு | சங்குநாயகர் | சங்கருணாதேஸ்வரர் |
| | பெரும் பேரழகி | பிரகத் சுந்தளாம்பிகை |
| 51. திருச்சோற்றுத் | தொலையாச்செல்வர் | ஓதவனேஸ்வரர் |
| துறை | ஒப்பிலா அம்மை | அன்னபூரணி |
| 52. தலையாலங்- | ஆடல்வல்லான் | நர்த்தனபுரீஸ்வரர் |
| -காடு | திருமடந்தையம்மை | மடந்தை நாயகி |
| 53. திலவைப் பதி | மதிமுத் திறைவன் | மதிமுத்தேஸ்வரர் |
| | பொற்றொடி நாயகி | சொர்ணவல்லி |
| 54. குத்தாலம் | சொன்னவாறு அறிவார் | உக்தவேதீஸ்வரர் |
| (திருத்துருத்தி) | அரும்புவனமுலையம்மை | முகிழாம்பிகை |

| | | |
|---|---|---|
| 55. திருத்தருமபுரம் | யாழ்முரிநாதர் | தருமபுரீசுவரர் |
| (காரைக்கால் அருகில்) | மதனமுதவல்லி | மதுரநாயகி |
| 56. குமாரபுரி | சேய்ஞ்ஞலூர் மேயவன் | சத்தியகிரீசுவரர் |
| (திருச்சேஞ்ஞலூர்) | தோழி ஆய் | சகிதேவி |
| 57. செம்பொன்னார் | செம்பொன்மேனியன் | சொர்ணபுரீஸ்வரர் |
| கோவில் | மருவார் குழலி | சுகந்தவன நாயகி |
| 58. திருமாணிகுழி | உதவிநாயகன் | வாமனேஸ்வரன் |
| | தாமரைக்கண்ணி | அம்பு ஜாட்சி |
| | பங்கயக்கண்ணி | |
| 59. விருத்தாலசம் | பழமலையப்பன் | விருத்தகிரி |
| (திருமுதுகுன்றம்) | பெரியநாயகி | விருத்தாம்பிகை |
| 60. அரிச்சக்கரபுரம் | மால்வணங்கிறையனார் | மணிகண்டேஸ்வரர் |
| அருள்நாயகி | கருணைநாயகி | |
| 61. மயிலாடுதுறை | மயிலாடுதுறையான் | மயூரநாதர் |
| | அமுதசொல்நாயகி | அபயராம்பாள் |
| 62. திருவையாறு | அய்யாறப்பன் | பஞ்சநதீஸ்வரர் |
| | அறம்வளர்த்தநாயகி | தர்மசம்வர்த்தனி |
| 63. கீழையூர் | கடைமுழ நாதர் | சம்ரஷணீசுவரர் |
| (கடைமுடி) | அபிராமவல்லி | அபிராமி |
| 64. கோகுலபுரம் | குழல்மொழிநாதர் | கோகிலேஸ்வரர் |
| | குயில்மொழியம்மை | சௌந்தரநாயகி |
| 65. கண்டியூர் | வீரட்டானர் | வீரட்டேசுவரர் |
| | மங்கலநாயகி | மங்களநாயகி |
| 66. வல்லம் | வல்லநாதர் | வில்வவனநாதர் |
| | வல்லம்மை | புதுமத்யாம்பாள் |
| 67. சீர்காழி | தோணியப்பர் | பிரம்மபுரேஸ்வரர் |
| | திருமலைநாயகி | ஸ்சிரசுந்தரி |
| 68. திருகன்றாப்பூர் | நடுதறியப்பன் | வாஸ்தநாதர் |
| | மாதுமையாள் | மதுரமாது |

| | | |
|---|---|---|
| 69. திருக்களர் | களர்முலைநாதர் | கார்முலைநாதேஸ்வரர் |
| | அழகுமங்கலநாயகி | அழகேஸ்வரி |
| 70. திருமணஞ்சேரி | அருள்வள்ளல்நாயகர் | உத்வாகநாதர் |
| | யாழின்மென்மொழியாள் | கல்யாணசுந்தரி |
| 71. தஞ்சை | பெருவுடையார் | பிரகதீஸ்வரர் |
| | பெரியநாயகி | பிரகன்நாயகி |

| ஊர்ப்பெயர் (பழைய தமிழ்ப்பெயர்) | மாலிய இறைவன் / தமிழ் | இறைவி பெயர்கள் வடமொழி |
|---|---|---|
| 1. சீரங்கம் | பெரியபெருமாள் | ஸ்ரீரங்கநாதர் |
| (திருவரங்கம் | அரங்கநாச்சியார் | ஸ்ரீரெங்கநாயகி |
| 2. உறையூர் | அழகியமணவாளப் பெருமாள் | பிரயோகசக்கரர் |
| | கமலவல்லி | வாசலட்சுமி |
| 3. ஆடுதுறை | வையங்காத்தபெருமாள் | ஜகத்ரட்சகன் |
| (திருக்கூடலூர்) | பூவல்லி | பு பவள்ளி |
| 4. கும்பகோணம் | ஆராவமுதன் | சாரங்கபாணி |
| (திருக்குடந்தை) | படிதாண்டாப்பத்தினி | கோமளவல்லி |
| 5. திருநாகேசுவரம் | ஒப்பார் இல்லப்பன் | சீனிவாசன் |
| (திருவிண்ணகர்) | நிலமகள் | பூமிதேவி |
| 6. திருநறையூர் | நறையூர் நம்பி | வாசுதேவன் |
| | நம்பிக்கை நாச்சியார் | வஜ்ஜீன வல்லி |
| 7. திருக்கண்ணபுரம் | நீலமேகப்பெருமாள் | சௌரிராசன் |
| | கண்ணபுரச்செல்வி | பத்மினி |
| 8. திருக்கண்ணங்குடி | உலகநாதப்பெருமாள் | தாமோதரநாராயணன் |
| | உலகநாயகி | அரவிந்தவல்லி |
| 9. நாகப்பட்டினம் | நீலமேகப்பெருமாள் | சௌந்தரராசப்பெருமாள் / |
| | அழகுக்கொடியாள் | சௌந்தர்யவல்லி |
| 10. திருவெள்ளியங்குடி | வல்வில்எழிலிறையோன் | சிருங்காரசுந்தரன் |
| | பசுமணிவல்லி | மரகதவல்லி |

| | | |
|---|---|---|
| 11. தேரழந்தூர் | ஆமருவியப்பன் | தேவாதிராசன் |
| (திருவழுந்தூர்) | செங்கமலவல்லி | --------- |
| 12. சிறுபுலியூர் | அருள்மாகடல் | சலசயனப்பெருமாள் |
| | திருமா மகள் | தயாநாயகி |
| 13. மயிலாடுதுறை | மருவினிய மைந்தன் | பரிமள ரங்கநாதன் |
| திருவிழந்தூர் | தாமரைவல்லி | பரிமளரங்கநாயகி |
| (திருஇந்தளூர்) | | |
| 14. சீர்காழி | தாடாளன் | திருவிக்ரம நாராயணன் |
| | உலகநாயகி | லோகநாயகி |
| 15. நாங்கூர் | அளத்தற்கு அறியன் | நாராயணன் |
| | தாமரைக்கொடியாள் | புண்டரீகவல்லித்தாயார் |
| 16. திருஆலி | திருவாலி நகராளன் | இலட்சுமி நரசிம்மன் |
| | அமிழ்த கொடிமங்கை | அம்ருதகடவல்லி |
| 17. திருநகிரி | வயலாளி மணவாளன் | கல்யாணரங்கநாதன் |
| | அமிழ்தக் கொடியாள் | அமிர்தவல்லி |
| 18. திருநாங்கூர் | மணிக்கூடநாயகன் | வரதராசப்பெருமாள் |
| (திருமணிக்கூடம்) | திருமாமகள் நாச்சியார் | சீதேவி |
| 19. திருவெள்ளக்குளம் | அண்ணன்பெருமாள் | சீனிவாசன் |
| (அண்ணன்கோயில்) | அலர்மேல்மங்கை | பத்மாவதி |
| 20. திருநாங்கூர் | தாமரையாள்கேள்வன் | பார்த்தசாரதி |
| (பார்த்தன்பள்ளி) | தாமரைநாயகி | பங்கயவல்லி |
| 21. சிதம்பரம் | சித்திரக்கூடன் | கோவிந்தராசப்பெருமாள் |
| தாமரைக்கொடியாள் | | புண்டரீகவல்லி |
| 22. வயிந்திபுரம் | அடியார்க்குமெய்யன் | தாசசத்தியன் |
| | வைகுண்டநாயகி | ஹேம்புஜவல்லி |
| 23. அத்தியூர் | பேரருளாளன் | வரதராசன் |
| (காஞ்சிபுரம்) | பெரியதாயார் | ஸ்ரீபெருந்தேவி |
| 24. திருவேளுக்கை | அழகியசிங்கன் | முகுந்தநாயகன் |
| (காஞ்சிபுரம்) | வேளுக்கைவல்லி | ஸ்ரீபெருந்தேவி |

| | | |
|---|---|---|
| 25. திருநின்றவூர் | பத்தர் ஆவிப்பெருமாள் | பக்தவச்சலப்பெருமாள் |
| | என்னைப்பெற்றதாயார் | சுதாவல்லி |
| 26. சோழசிங்கபுரம் | தக்கான் | பக்தவச்சலம் |
| (திருக்கடிகை) | அமிழ்தவல்லி | அம்ருதவல்லி |
| 27. ஸ்ரீவல்லம் | திருவாழ்மார்பன் | ஸ்ரீவல்லபன் |
| (திருவல்லவாடி) | செல்வத்திருக்கொழுந்து | வாத்சல்யாதேவி |
| 28. திருவண்வண்டூர் | பாம்புஅணைஅப்பன் | கமலநாதன் |
| | தாமரைக்கொடியாள் | கமலவல்லிநாச்சியார் |
| 29. திருவண்பரிசாரம் | திருவாழ்மார்பன் | ஸ்ரீநிவாசன் |
| (திருப்பதிசாரம்) | தாமரைக்கொடியாள் | கமலவல்லிநாச்சியார் |
| 30. திருப்புல்லாணி | தெய்வச்சிலையார் | கல்யாணஜெகந்நாதன் |
| | தாமரைச்செல்வி | பத்மாவதி |
| 31. அழகர்கோயில் | கள்ளழகர் | மால்அலங்கார் |
| (திருமாலிருஞ்சோலை) | எழில் மணிவல்லி | சுந்தரவல்லி |
| 32. திருமோகூர் | கருமுகில்வண்ணன் | மோகூர்ஆப்தன் |
| | மோகூர்வல்லி | மோகனவல்லி |
| 33. திருக்கோளூர் | வைத்தமாநிதிப்பெருமாள் | நிட்சேபவித்தன் |
| | அல்லிக்கொடியாள் | குமுதவல்லி |
| 34. நான்குனேரி | வானமாமலையான் | தோத்தாத்திரிநாதன் |
| | இருபுறத்துணைநாயகி | உபயநாச்சியார் |
| 35. திருப்பதி | திருமலையப்பன் | வேங்கடாஜலபதி |
| (திருவேங்கடம்) | தாமரைக்கொடி | புண்டரீகவல்லி. |

❖❖❖❖❖

# 5

# இருக்கு வேத சாரம்

வடமொழியிலுள்ள நான்கு வேதங்களின் உள்ளேயுள்ள அகச்சான்றுகளின் அடிப்படையிலேயே, இந்நூல்கள் எழுதப் படுகின்றன.

நாகரி எழுத்துக்களில் உள்ள வேதங்களை நேரே படித்தறிவ தென்பது மிகக் கடினமாகும். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர்த்து, மற்றவர்கள் எல்லாம் ஆங்கில வழியிலேயே சமஸ்கிருத மொழியைப் படிக்க முற்படுகின்றனர். இவ்வகையில் **அலைகள் வெளியீட்டக நூல்கள்,** மூலப் படிகளிலுள்ளவற்றையே படித் தறிந்து, அவற்றிலுள்ள அகச் சான்றுகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு எழுதுவதென்ற எங்கள் நோக்கத்திற்குப் பெரிதும் உதவுகின்றன. ஆங்கிலப் பகுதிகளும் உள்ளவாறே இருப்பதால் ஒப்பிட்டறிய உதவுகிறது.

சென்னை அநுராகம் மூலமாக, ஸ்வாமி என்பார் நான்கு வேதங்களையும் பற்றிச் சிற்றேடுகள் நான்கு தந்துள்ளார். சென்னை நர்மதா பதிப்பகம், வடுவூர் நாராயணன் மூலம் நான்கு வேதச் சுருக்கங்களையும் 'உண்மையான' பத்து உபநிடதச் சாரங்களையும் தொகுத்துத் தந்துள்ளது.

பொதுவாக 'வேதம்' என்றதும் நான்கு வேதங்களிலுள்ள சம்ஹிதை - சூக்தம் - மந்திரங்களை மட்டுமே எடுத்து விளக்க வேண்டும். ஆனால் வேத சம்ஹிதைகளுடன் பிராம்மணம் உபநிடதம் ஆகியவற்றையும் சேர்த்தே, 'வேதம்' எனக்கொண்டு, பலரும் விளக்கிவிடுகின்றனர். ஆயினும் இவை பிற்காலத்தனவே.

வேதமூல மந்திரங்களடங்கியவற்றையே நாம் படித்து எழுது கின்றோம். விசய நகர மன்னன் ஹரிஹரன் காலத்து, அமைச்சர் **சாயனர்,** வாய்மொழி மரபாகவே காலங்காலமாக வழங்கிய வேதங்களை உரையுடன் எழுதி வைத்தார்.

வேதங்களுக்குப் பின்பு வேள்வி, சடங்குகளை நடத்தும் முறைகளை விளக்கும் பிராம்மணங்கள் தோன்றின. இவை வேத சமயங்களுக்குச் சடங்குவிதி முறைகளை விளக்குவனவாகத் தோன்றின. உபநிடதம் என்பன வேதங்களின் சாரம்போல் அவற்றின் வேரில் தோன்றி, பிறகு காலந்தோறும் நூறு வகைகளாக வளர்ந்தன. இவை வேத சிரஸ் என்றும் வேதாந்தம் என்றும் கூறப்படுவதுண்டு. ஆரண்யகம் காடுகளில் வாழ்ந்த ரிஷிகள், வேதங்களின் உட்பொருளைத் தேடியுரைத்தவை. 'வேத காலம் கி. மு. 1500லிருந்து 1200க்குள் உருவாக்கப்பட்டிருக்கலாம்' (பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், விகடன் பிரசுரம், 2007).

வேதங்கள் இறைவனால் அருளப்பெற்று, ரிஷிகள் அவற்றை கேட்டுத் தொகுத்துத் தந்தனர் என்பது, முன்னோர் நம்பிக்கையாகும். அவை முழு உருவாக்கம் பெற்றது கி. மு. 1200 என்பர். கி. பி. 14ஆம் நூற்றாண்டில், சாயனர் காலம் வரை சுமார் இரண்டாயிரமாண்டுகள் அவை முழுவதும் நினைவில் வைத்து ஓதப்பட்டும் கேட்கப்பட்டும் வந்தமை வியப்பளிப்பதாகும். இதில் சில மாற்றங்களும் நேர்ந்திருக்கக் கூடுமென்றாலும், அவை மிகுதியாக இருந்திருக்க இயலாது.

ஆனால் பின்னர் அவ் வேதங்களைத் தொடர்ந்து வந்த பிராம்மணம், உபநிடதம் எல்லாம் அவற்றின் வேரிலிருந்து, உய்த்துணர்ந்து வடமொழிச் சடங்குகளையும் தத்துவ விசாரணைகளையும் மிக விரிவாக எழுதிய ஆவணங்களாகும். அவற்றில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் உண்டு.

மஹாயான புத்தமத 'வெறுமைக்கொள்கை' உலகம் மாயத் தோற்றம் என்றது. ஜீவாத்மா என ஒன்றில்லை. ஆத்மாவினுள் பரமாத்மா இருந்து வெளிப்படுகிறது; பிற உலகமெல்லாம் தற்காலிகத் தோற்ற விளக்கங்களே; நிழல்களே. இதிலிருந்தே அத்வைதம் 'இருமை இன்மை' என்பது உருவாக்கப்பட்டது. சமண புத்த மதத் தாக்கத்தால் உயிர்க்கொலை தவிர்க்க வேண்டியதாயிற்று. பிழைப்பு வருமானம் கருதி, சிவனிய, மாலிய சமயம் பற்றியனவற்றையும் கலந்துகொண்டு, தம் தனித்தன்மைகளையும் விட்டுவிடாமல் இவ்வேத வைதிகம் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, பிற யாவற்றையும் தன்னுள் 'சுவீகரித்துக் கொண்டு'

அவற்றை மறைத்தும் ஒழித்தும் மாற்றியும் குழப்பமாக்கி, இன்று பல நூற்றாண்டுகளாக இதனை நிலைநிறுத்தி விட்டது. பழக்கப்பட்டதால் செக்கையே சுற்றுவன போல, சிவனிய மாலியக் கோட்பாட்டாளர்கள், தங்கள் தனித்தன்மையை உணராமல், ஒருசிலர் தவிர, மிகப்பலர் அவ் வட்டத்திற்குள்ளேயே சுற்றி வருகின்றனர்.

## வேள்விகள், வேதங்கள் - மானிட இன வரலாறு

ஆரிய இனம் பூமியின் வட துருவப் பகுதியில் தோன்றி, பிறகு மத்திய ஆசியா வழியாக இந்தியாவிற்குள் புகுந்தது. கைபர், போலன் கணவாய் வழியாகப் புகுந்து, சிந்துநதிப் பள்ளத்தாக்கில், அங்கு வாழ்ந்தவர்களுடன் போராடிச் சிறிது சிறிதாக முன்னேறித் தங்கிப் பிறகு பஞ்சாப் வரை வந்து தங்கியதாகக் கூறுவர்.

வடதுருவப் பகுதிகளில் எழுராத்திரிகள், நூறுராத்திரிகள் கூட, சூரியனைக் காண முடியாதாம். அங்கு ஆறுமாதம் ஒரே பகலாகவும் ஆறுமாதம் ஒரே இரவாகவும் இருக்குமாம். இதனால் அடர்ந்த பெருங்காடுகளிலும், இருளிலும் குளிரிலும் உழன்ற காலை மூன்று தேவைகள் ஏற்பட்டன.

1. நெருப்பு, அக்கினி மிகுந்த தேவைக்குரியதானது. அதைக் கண்டுபிடித்தமை பல தொன்மங்களாக வழங்குகின்றன.

அதர்வ ரிஷிதான் தேவ உலகத்திலிருந்து கொண்டு வந்தான் என்றும் அரளிக் கட்டைகளை உரசி முதன்முதல் தீயை உண்டாக்கினரென்றும் பலவாறு கூறப்படுகின்றன.

ஸ்வாமி எழுதுவது: "மின்னல், மரங்கள் காட்டில் உராய்வதால் உண்டாகும் தீ, அதை உண்டாக்கிக் கொள்ளலாம் என்ற சிந்தனையை ஏற்படுத்தியிருக்கும். கட்டைகளை உராய்ந்து தீ உண்டாக்கவும் எவராவது முயன்று அறிந்திருப்பர். பிறகு அப்படித் தீ உண்டாக்கும் முறையிலிருந்த சிரமத்தால், ஒருமுறை உண்டாக்கப்பட்ட தீயை அணையாமல் பார்த்துக் கொள்ளும் வழக்கும் வந்திருக்கும். நெருப்பின் பயன் அதை இன்றியமையாத ஒன்றாகச் செய்து, அதைப் பற்றிய சிந்தனை மனிதரிடையே வளர்ந்து, தீயினால் நாகரிகம் வளரத் தொடங்கியிருக்கலாம்" (பக்.

18, 19). இதனாலேயே வேதங்கள் அனைத்திலும் 'அக்கினி' தேவன் வழிபாடுகளாக ஏறத்தாழ முக்காற் பங்கு இடம்பெற்றுவிட்டது.

அக்கினியில் குளிர் காய்ந்தனர். ஒருமுறை பெற்ற நெருப்பை இழந்துவிடாமலிருக்க அக்கினி குண்டங்கள் போன்றவற்றைக் கண்டனர். அவற்றில் குளிர் தாங்காத, இருண்ட பகுதியில் வாழ்ந்த தொடக்க காலத்தில் இறைச்சியே மிகவும் விருப்ப உணவானது. அதனால் அவை எதிர்பாராது தீயில் விழுந்தபோது, பதப்படுத்தப் பட்ட உணவானதால், பிறகு அதுவே பழக்கமாயிற்று. வேதத்தில் பழங்குடிகள் - திராவிடர்கள் பச்சை மாமிசம் தின்பவர்கள் என்று வருகிறது.

காலப்போக்கில் அது புனிதப்படுத்தப்பட்டு 'யக்ஞம்' என ஆனது. அதன்பிறகு யக்ஞ வகைகள் பல்கின. யக்ஞம் என்பது முதலில், அதில் படைத்து எடுத்து உண்பதால் வந்ததே. எதையும் புனிதப்படுத்துவதென்பது மனித இயல்பு வழிப்பட்டது. யக்ஞ குண்டத்திலிருந்து இறைச்சி உருகி ஆவியாக மேலே போவதைப் பார்த்து, அது மேலுலகத் தேவர்களுக்கு உணவுகளாகப் போவதாகவும், அதைக் கண்டு அதற்கு ஈடாக வளம் தரும் தேவதைகள் அனைவரும் அங்குள்ளனரென்றும் அக்கினியே அங்கு சென்று உணவைத் தந்து, அவர்கள் மூலம் உலகிற்கு வளம் தரச் செய்கிறான் என்றும் நம்பினர்.

யக்ஞத்தால் தேவர்கள் எல்லா நன்மைகளையும் தருவார்கள், பசியைப் போக்க வளம் தருவார்கள், உடல் வலுத் தருவார்கள், எதிரியை வெல்ல ஊக்கம் தருவார்கள் என்பது போன்று மிகப்பல நம்பிக்கைகள் இயல்பாக உருவாயின.

குளிர் மிகுந்து அடர்ந்து செறிந்து, பல்வகை விலங்கினம், பாம்பினம், பூச்சியினம் எல்லாம் துன்புறுத்தின. இடி, மின்னல் களுக்குக் குறைவில்லை. இவற்றைத் தேவதைகள் மேலுலகத் திலிருந்துதான், கீழே பூமியில் வாழும் தங்களை வருத்துவதாக எண்ணி, அம்மேலுலகத் தேவதைகளை வணங்கலாயினர். அச்சந் தவிர்க்க வரம்தர வேண்டியவை மிகப்பல இருக்கு வேதத்திலுள. இந்திரன், வருணன், சூரியன், இடி, மின்னல், இன்னபிற பலநூறு தேவதைகள் உள்ளனர் என எண்ணி, யக்ஞம் வளர்த்து, அவர்களுக்கு அக்கினி மூலம் அனுப்பி, அத் தேவதைகளின்

சினத்தை அடக்கித் தங்களுக்கு வரமும் வளமும் தருமாறு வேண்டுகிற மந்திரங்கள், வாய்மொழியாக, அவர்களின் தொடக்ககால 'பாஷையில்' பாடப்பட்டன. நாடோடிகளாகப் பாடித் திரிந்ததால், இவை காற்றுவாக்கில் மக்களிடையே பரவின.

இதுவே காலப்போக்கில் 'வேள்வி' நாகரிகமாகிவிட்டது. நம்பிக்கைகள் மிகுந்து 21 யாக வகை எல்லாம் உண்டாயின. 'உஷை' என்ற விடிகாலைப் பொழுது மிக அழகாக வருணிக்கப் பட்டதென்றால், அவர்கள் அந்தத் தீராத, முடிவற்றதுபோன்ற இருளினின்றும் விடுதலை பெற்றபோது பாடியவை அவை. அவ்வாறேதான் காலையிற் பாடும் 'காயத்திரி' மந்திரங்களும் மிகுசிறப்புப் பெற்றன.

வேதங்கள் பழங்கால மக்களின் வாய்மொழிப் பாடல்களே. அவற்றில் வரும் இயற்கை வருணனைகள், வேண்டுதல்கள், தீய சக்திகளிடமிருந்தும் பகைவர்களிடமிருந்தும் தங்களுக்குத் தீங்கு நேராது காக்க வேண்டுதல், பகைவர்களை வெல்ல வழிகாட்டவும் துணை நிற்கவும் வேண்டுதல் எல்லாம் மக்கள் நினைவாற்றலுடன் பல்வேறு குழுக்களாகப் பாடியவையே. அதில் திரும்ப வரும் கூறுகள் - கருத்து, தொடர், சொல், மந்திரம் எல்லாம் இதையே மெய்ப்பிக்கின்றன.

இவற்றை அக்காலத்தே கேட்டுக் கேட்டு, உயர்ந்த அறிவுடன் திகழ்ந்தோர் ஆகிய ரிஷிகள், தொகுத்து மீண்டும் மீண்டும் வாயால் பாடியும் செவியாற் கேட்டும் காலமெல்லாம் தொடர்ந்து அவற்றைப் பாதுகாத்துப் பரப்பி வந்துள்ளனர்.

இவையாவும் இயற்கைச் சூழலுக்கேற்ப, மானுட வாழ்க்கை அமையும் என்பதை மெய்ப்பிப்பன. காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சிகள், அவ்வக் கால மனிதர்கள் தங்கள் நம்பிக்கைகளை வளர்த்து, தாங்கள் வாழ வழிதேடிக் கொண்டதால் விளைந்தவை.

கி. மு. 1500க்கு முன், இவர்கள் இந்தியாவில் நுழைந்து சிந்து நதிப் பள்ளத்தாக்குகளில் திரிந்த காலம் வரை ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு, நாடோடிகளாகவே வாழ்ந்துள்ளனர். சிறுசிறு கிராம அமைப்புக்களைப் பற்றியும் கிராம சபைக்குத் தலைவ ராகும் ஆசை பற்றியும் பல சூக்தங்கள் மந்திரங்கள் உள. எதிரிகள்

கோட்டை, கொத்தளங்களுடன் வாழ்ந்ததாகவும், அவற்றைத் தாக்கிச் சிதைத்து வெல்ல இந்திரன் முதலிய தேவதைகள் உதவிய தாகவும் பல சூக்தங்கள் கூறுகின்றன. குளிர் மிகுந்த நாடுகளில், 'குடிவகைகள்' இன்றும் நாகரிகமாகவே கருதப்படுகின்றன. சோமபானத்திற்கு, அக்கினிக்கு அடுத்த இடம் தந்திருப்பதன் மூலம் இதை அறியலாம். இவ்வாறு அலைந்து திரிந்ததால் இவர்கள் கோயில் கட்டும் பழக்கமுடையவராகவில்லை. அதற்கு ஈடாக அக்கினி வழிபாட்டினராகி - அருவ வழிபட்டாளராகி விட்டனர்.

"வாய்க்கால் வயலில் நீர்பாய வெட்டுவதும், மேயப்போன பசுக்கள் சூரியன் மறையும்போது திரும்பி வருதலும், காலையில் வெளிச்சென்ற குடும்பத்தினர் மீண்டும் இரவில் ஒன்றாய்க் கூடுவதும், மரவீட்டில் வாழ்வதும், வீட்டுக் கூரை தீப்பிடியாம லிருக்க தீயின் அதிட்டான தேவதையான அக்கினியை வேண்டு வதும், வீட்டைச் சுற்றி நீரால் அரண் அமைத்துக் கொள்வதும், மணந்துகொண்ட கணவன் மனைவியைப் புகுந்த வீட்டில் அறிமுகப்படுத்துவதும், முதலிரவுச் சடங்கு முதலியவையும் கூறப்படுகின்றன" (ஸ்வாமி, அதர்வண வேதம். பக். 10).

ஆரியர்கள் சிந்து நதிப்பகுதியில் தங்கியபோது, நதிக்கரை நாகரிகம் தொடங்கிவிட்டது. இந்நிலையில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த அவர்களுள் சிறுசிறு அரசர்கள் உண்டாயினர்.

பிறகு படைவீரர் வகுப்பும் - குழுவும் உண்டாயிற்று. வைதிகப் புரோகிதர் கூட்டமும் தனிப் பெருமையுடன் விளங்கியது. ஆடு மாடு மேய்த்தல், விவசாயம், நெசவு சில குழுக்களின் செயல் களாயின. இவ்வாறு நான்கு வகுப்புக்கள் உண்டாயின.

வீடு வாசல் இல்லாமல் அலைந்து திரிந்த ஆரியர், கோயில் இல்லாத, தெய்வ வழிபாடுகளிலேயே ஈடுபட்டனர். தேவதைகளை, மேலுலகிலிருந்து அருள்புரியுமாறு, யாகங்களில் அக்கினி மூலம் அழைத்து வழிபட்டனர். ரிக்வேதம் வேள்விகளே அவர்களின் ஆன்மிகமாக இருந்ததை உணர்த்துகிறது.

இவ்வாறு யாகம் செய்வதில் வல்லவர்களாக ஒரு குழுவே உண்டாக அவர்களுக்குத் தனி மரியாதை உண்டாயிற்று. இப்படிப்

பட்ட குடும்பங்களிலிருந்து வந்தவர்களே, வேள்விக்கான மந்திரத் துதிகளை அவரவர் பாணியில் இயற்றினர். இன்றளவும் அவற்றில் பல சொற்கள், தொடர்கள் விளங்காத புதிர்களாகவே உள்ளன.

இவ்வாறு வரலாற்று முறையில் இன்னும் முழுமையாக ஆராய்ந்தால், வேதங்கள் பற்றிய பெருமை போற்றப்படும்.

தமிழர்களின் தொன்மைக்கால நாகரிகத்தில், வீரநிலைக் காலம் என்பதொன்று, இறைச்சியுணவு, மது பருகுதல், நேர்த்திக் கடன் என்று உயிரினங்களைப் பலியிடுதல், சகுனம், குறிபார்த்தல் எனப் பல்வேறு மூடநம்பிக்கைகளைப் பின்பற்றுதல், தொழில் அடிப்படையிலும் வாழும் நில அடிப்படையிலும் பல்வேறு குடியினராக - குழுக்களாகப் பிரிந்து வாழ்தல் என்ற பலவும் ஒப்பிடற்பாலன.

அடுத்த செய்தி, மேலே கூறப்பட்ட வேதங்கள், அவற்றின் உள்ளடக்கம், வேள்விகள், நான்குவகை வகுப்புக்கள், திருமணம், ஈமச்சடங்கு போல்வன அனைத்தும் அன்றும் இன்றும் அவர் களுக்குரியன. தமிழர்களுக்கு அவை உரியவை அல்ல.

தமிழர்களுக்கெனச் சில உருவ வழிபாடுகள், இயற்கை வழிபாடுகள், சடங்குகள், மறைகள், வழிபாட்டு (ஆகம) நெறிகள் எனப் பலவும் இருந்தன. முன்பு சுட்டியது போலத் தங்களுக் குரியதைத் தங்களுக்கெனக் கொள்ளாமல், அவர்களுக்கேயுரிய புரோகித வேலையைத் தமிழர்களுக்குச் செய்வதாகக் கூறி, தமிழர் வழிபாட்டுத் தலங்களுக்குள்ளும் புகுந்து அவற்றையும் தாமே செய்வதாகக் கூறி, தன்னல வருமானம் கருதி, தமிழரிடம் நுழைந்து கொண்டு, அவர்களின் உடைமைகளை எல்லாம் உருமாற்றியதும் தங்களுக்குரியவற்றை அவர்கள்மேல் சுமத்தியதும் அவர்களுக்கு உரிய பலவற்றை - வல்லாண்மைக் காலத்தில் அழித்ததும்தான் இப்போது கொடுமை மிக்கவை எனத் தோன்றுகிறது. இதில் அவர்கள் தங்களுக்குரியவற்றைத் தங்கள் வகுப்பாருக்குள்ளேயே செய்துகொண்டு, தமிழருக்கும் தமிழுக்கும் விடுதலை தந்தால்தான் இந் நீண்டகாலப் பனிப்போர் நீங்கும்.

வேதகாலம் இயற்கை நெறிப்பட்ட காலம். அதை ஐரோப்பி யர்கள் உணர்ந்து எழுதியுள்ளனர்.

ஆனால் அதன் பின்பு பிராம்மணம், உபநிடதம், பிரம்ம சூத்திரம், உரைகள், மனுதர்ம சாத்திரம் எனக் காலந்தோறும் தோன்றின. சமண, புத்த, தமிழ்ச் சமயங்களை ஒழிக்கவும் உருத் தெரியாமல் மாற்றவும் அவர்கள் செய்த முயற்சிகளே அவற்றில் வெளிப்படுகின்றன. சமண, புத்த மதச் செல்வாக்கைப் புறந்தள்ள, அவர்களுள் இருந்த புரோகிதக் கூட்டம் செய்த, 'கொள்கை இல்லாக் கூட்டணிக்குத்' தமிழர்கள் இடங்கொடுத்த காலத்தி லிருந்தே தமிழரின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. இப்போது யாரொடும் பகையின்றி, நாம் இழந்தவற்றை மீட்பதும் இருப்பவற்றைக் காக்கவுமே விழிப்புணர்வுப் பேரியக்கம் தேவைப்படுகிறது. இவற்றில் அந்தணர்களும் ஒத்துழைக்கும் நல்ல காலம் பிறக்குமென நம்புவோமாக.

உலகமெங்கும் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருத மொழிக்கு எனத் தனி 'இருக்கைகள்' - துறைகள் உள்ளன. இந்தியாவைவிட ஐரோப்பியர்கள் இன்றும் வடமொழி வேதங்களையும் காப்பியங் களையும் இலக்கிய இலக்கண நூல்களையும் கற்கின்றனர்; ஆராய்கின்றனர். இந்தியாவில் மட்டும் ஏழு பல்கலைக்கழகங்கள் உள. அவற்றிற்காகப் பல கோடிகள் ஓசையின்றி ஒதுக்கப் படுகின்றன.

இவ்வளவு பெருமைக்கும் காரணம் என்ன? ஐரோப்பியர் இந்தியாவில் நுழைந்தபோது, கோல்கத்தாவில் இறங்கினர். அங்கு வாழ்ந்தபோது சமஸ்கிருதம் கற்கத் தொடங்கினர். சர் வில்லியம் ஜோன்ஸ், எச். டி. கோல்புரூக்கு, மாக்ஸ்முல்லர் போல்வார் சிறந்த சமஸ்கிருத அறிஞர்களாகி, வடமொழி வேதங்கள் தொடங்கி அனைத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். இன்று வடமொழி சார்ந்த வேதங்கள்முதல் காப்பியங்கள், நாடகங்கள், பிற இலக்கிய இலக்கண நூல்கள்வரை அனைத்தையும் பற்றிய மொழியாக்க நூல்களும் அவை பற்றிய ஆராய்ச்சிகளும் ஆங்கிலம், செர்மன், பிரெஞ்சு மொழிகளிலும் பிற பல மொழிகளிலும் உள்ளன.

ஐரோப்பியர்கள் சமஸ்கிருதத்தைத் தங்கள் இனமொழி என்று கருதுகின்றனர். இவை சில இந்து மதத்தைவிட, இந்திய ஐரோப்பிய கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பவையாக உள்ளன;

இந்தியாவிற்கு வந்து இறுதியாகக் குடியேறுவதற்கு முன்பான ஆரியர்களின் நிலைமைகளையும் எடுத்துக் கூறுகின்றன என்று கிரிஃபித் கூறுகிறார். மாக்ஸ்முல்லர் வேதங்களைப் பற்றி 'ஆரிய இன மனிதன் முதலில் பேசிய மொழி இதுதான்' என்று கூறுகிறார்.

சமஸ்கிருதத்திற்கு 'இந்தோ - ஐரோப்பிய மொழி' என்றே பெயரிட்டுள்ளனர். பல சொல்லாட்சிகள், சொற்களின் வேர்களில் சமஸ்கிருதம் ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்புடையது என்று ஆராய்கின்றனர். இருக்கு வேதமே மிக முற்பட்டது. யஜுர், சாம வேதங்கள் அதற்குப் பிற்பட்டனவே. இவை இரண்டிலும் ரிக்வேத மந்திரங்கள் அப்படியப்படியே, திரும்ப வருவதை எடுத்துக் காட்டுகின்றனர். அதர்வ வேதம் மிகப் பிற்பட்டது என்று வரலாறு கூறுகின்றனர். 'இருக்கு' வேதத்தைப் பற்றி மாக்ஸ்முல்லர் கூறும்போது, 'அதுமுதலில் உலக வரலாற்றைக் கூறுகிறது' என்று பெருமைபடக் கூறுகிறார். அடுத்து அது இந்திய வரலாற்றையும் ஆரிய இன வரலாற்றையும் கூறுகிறது என்பது அவர் கருத்து. (அன்று திராவிட இனம் என ஒன்று இருந்ததாக நினைவில்லாத காலம்).

இனம், மொழி, கலாச்சார ஒற்றுமையுடையன எனத் தொடங்கிவிட்டதால், சமஸ்கிருதத்தையும் அது சார்ந்த வேதக் கலாச்சாரத்தையும் தற்சார்புடன் எழுதுகின்றனர். மிகச் சிலரே நடுவுநிலையுடன் ஆராய்ந்து, திறனாய்வு நெறிப்படி, குற்ற நற்றங்களைக் கூறுகின்றனர்.

இருக்கு வேதத்தை உரத்த குரலில் பாடவேண்டும். நூறு தவளைகள் கூடிக் கத்துவதை, அவர்களே இதற்கு உவமை கூறியுள்ளனர். ரிக்குகள், ரிக்குகள் பல சேர்ந்த சம்ஹிதைகள் அல்லது மந்திரங்களின் தொகுப்பாக வேதங்கள் உள. இந்தியா விற்கு வந்து குடியேறுவதற்கு முந்திய ஆரிய இனம் பற்றியும் இவற்றில் - குறிப்பாக 'இருக்கு'வில் குறிப்புகள் உள என்றும் கருதுகின்றனர்.

நான்கு வேதங்களும் பல்வேறு ரிஷிகள் பாடியன என்றே குறிக்கப்படுகின்றன. எனினும் இவை ரிஷிகளுக்கு இறைவனால் அருளப்பெற்றவை என்றே நம்புகின்றனர். நான்கு வேதங்களிலும்

சிவபெருமான் அருளியதாக, அவ் வேதங்களுக்குள் அகச்சான்று ஒன்றுகூட இல்லை. இவை வாய்மொழியாகவே பல நூற்றாண்டு களாக, வழிவழியாகப் பாடிக் கேட்கப்பட்டு வந்து, கி. பி. பதினான் காம் நூற்றாண்டில் விசய நகரப் பேரரசில் அமைச்சராக இருந்த **சாயனர்**தான் இவற்றை எழுத்தில் வடித்தார் என்றும் இருக்கு வேதத்திற்கு உரை எழுதினார் என்றும் அறிகிறோம். இவ் இடைப்பட்ட காலத்தில், முன்னே தோன்றியவை எவை, பிற்பாடு சேர்த்தன எவை என்று அறிய வாய்ப்பில்லை என்றும் கூறுகின்றனர்.

ஒவ்வொரு வேதமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பிரார்த்தனை, புகழ்தல் ஆகியவற்றைக் கொண்ட பாடல்கள். இவை மழை, சூரியன், ஐம்பூதங்கள், மேல் உலகத் தேவர்கள் என அனைத்துத் தெய்வங்களையும் புகழ்ந்து, தங்களை வாழ்விக்க வேண்டுவன.

இரண்டாவது, பிராம்மணங்கள். எந்தெந்தச் சடங்குகளில் எந்தெந்த மந்திரங்கள் ஓதப்படவேண்டும் என்பதற்கான நெறிமுறைகள் உள்ளன. இவை பாடலும் உரைநடையும் கலந்தவை; சடங்குகள், தத்துவங்கள் பற்றியவை.

இவற்றுக்கும் நமக்கும் தொடர்பு கிடையாது. இவை ஆரியர்களே தமக்குள் ஆற்றிக் கொள்ள வேண்டியவை. நமக்கென இருந்தவற்றையும் கலந்துகொண்டு, அவர்களுக்குரிய சடங்குகளை அவர்கள் இன்று நமக்காக ஆற்றுவது வருமானம் கருதியதாகும். பிராமணர் பலர் தங்களுக்குரிய இவற்றை, மேலை நாகரிகக் கலப்பால் கைவிட்டுவிட்டனர்; ஆனால் நம்மவர் அவற்றை விட்டு விடாமலிருக்க, நமக்கு அவர்கள் நன்கு பழக்கப்படுத்தி விட்டனர். மேற்கு நாட்டார் நூறுமுறையில் ஆராய்ந்தாலும், இவை அக்கால வரலாறு என விட்டுவிடுகின்றனர். இன்று ஹோமம், யக்ஞம் செய்வார் எவருமிலர். வடநாட்டிலும் இது மிகக் குறைவே. தென்னாட்டிலேதான் வருமானம் கருதி, நாள்தோறும் பல ஆயிரம் ஹோமங்கள் நடந்தவண்ணம் உள்ளன. மூளை வறண்ட தமிழரே இப் பலிக்கு இரையாகின்றனர்.

ரிக்வேத சம்ஹிதை, மேலுலகத் தேவர்கள், தெய்வங்கள் சூரியன் உஷை (விடியல்) அக்கினி ஆகியோரை அழைத்துத் தங்களுக்கு எல்லா நலமும் வளமும் வேண்டுவன.

இருக்கு வேதம் இயற்கையில் தமக்கு அச்சத்தை விளைவித்த இடி, பேய் போன்றவற்றையும் தங்கள் எதிரிகளானவர்களையும் அழிக்குமாறு இந்திரனை வேண்டுகிறது.

அக்கினியே கண்கண்ட தெய்வம். அக்கினி மூலமே மேலுலகத்திலுள்ள தம் தெய்வங்களுடன் தொடர்பு கொண்டனர். மேலுலகத் தேவதைகள், தேவர்களுக்கு வேள்விக் குண்டமே அடையாளம். வேறு சிலைகள், அடையாளம், உருவ வழிபாடு, கோயில் என்பன அறவே எந்த வேதத்திலும் இல்லை.

இவற்றைக் கர்ம காண்டம், ஞான காண்டம் எனப் பிரிப்பர். உபநிடதம், வேதாந்தம், பிரம்ம சூத்திரம் எனப் பிற்பாடு, வேதங் களுக்கு உரையெழுதிய **சாயனர்** மூலம் இவை மிக விரிவாக்கப் பட்டன.

கர்ம காண்டம் என்பது வேள்விகளே. ஆரியர்களுக்கு வேள்விகளே வழிபாடு என்பது நன்கு விளங்குகிறது. ஓரிடத்தில் கூட கோயில் என்ற சொல்லோ, கோயில் உருவ வழிபாடு பற்றியோ எக்குறிப்பும் இல்லை. இவற்றை அகச் சான்றாகத் தேடவேண்டுமே ஒழிய, பின்பு எழுதப்பட்ட விளக்கங்களில் வைத்துக் கூறக்கூடாது.

இவ் வேதங்களுக்கு, அவ்வக்காலங்களுக்கும் தனிமனிதர் களுக்கும் தகுந்தாற்போல் பல்வேறு விளக்கங்கள் (Interpretations) கூறப்பட்டுள்ளன. மேலை நாட்டார் விளக்கம், வடநாட்டு ஆரியர் விளக்கம், தமிழ்நாட்டுப் பிராமணர் விளக்கம், அரவிந்தர் தரும் விளக்கம், விவேகானந்தர் விளக்கம் என எண்ணினால் இவற்றி டையே முரண்பாடுகளும் குழப்பங்களும் காணப்படும்.

சுவாமி விவேகானந்தர் தரும் விளக்கம் முற்றிலும் புரட்சிகர மானது. அதனால் அவரை, ‘வேதம் புதிது செய்த தீரன்’ என்பர்.

இருக்கு பத்து மண்டலங்கள் கொண்டது. சூக்தங்கள் 191. வேத மந்திரங்களின் எண்ணிக்கை 10552. இவ்வேதத்தில் முக்கிய மாகத் தலைமையிடம் பெறுபவர் அக்கினியும் இந்திரனும். இந்திரன் தங்களைக் காக்கும் தெய்வம் என நம்பினர். அவன், மேலுலகில் இருப்பதால், அக்கினி மூலமே வேள்வி செய்து அவிர் பாகங்களை அனுப்பி, வழிபாடுகள் செய்து, தாங்கள் வாழவும்

எதிரிகளை அழிக்கவும் வரம் வேண்டுவர். குறிப்பாக ஆயிரக் கணக்கான சூக்த மந்திரங்களின் திரண்ட கருத்து இதுவே.

ஆடு, பசு முதலான அனைத்து உயிரினங்களையும் பிறபல உணவுப் பண்டங்கள், உடைகள் என மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் நெருப்பில் போட்டு, அக்கினி பகவான் மூலம் மேலுலகத் தேவர்களுக்கு அனுப்பி, அவர்களின் அனுக்கிரகம் பெற்று வாழ்ந்ததை இவை அனைத்திலும் காண்கிறோம்.

சோமபானம் என்பது ஒருவகைச் செடியிலிருந்து கிடைப் பது. அதைப் பிழிந்து குடித்தால் 'போதை' வரும்; எழுச்சி உண் டாகும்; உடல் வலுப்படும்; குரல் வளப்படும். வேதங்கள் முழுவ திலும் சோமபானம் பெறும் சிறப்பிடம் கணக்கிலடங்காது. இருக்கு வேதத்தில் ஒன்பதாவது மண்டலம் முழுவதும் சோம பானத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சோமபானம் சோமன் எனத் தெய்வமாகவே போற்றி வணங்கப்படுகிறது. இப் பானத்தைத் தேவதைகளுக்கு வழங்குவதாகச் சொல்லிப் பருகினர். இதனுடன் சுராபானமும் பருகினர். அது மயக்கம் தந்து, சுகபோகமும் தருமாம்.

தமது மொழிபெயர்ப்பின் முன்னுரையில், ஆர். டி. எச். கிரிஃபித் வேதங்களில் இலக்கியச் சுவையை எதிர்பார்க்காதீர்கள் என்று கூறுகிறார். வில்சன் 'வேதப் பாடல்கள் சில நல்ல நடையில் அமைந்துள்ளனவே தவிர, பொதுவாக அது உரைநடையாகவே உளது. வேதத்தின் மதிப்பு அதன் அமைப்பில் இல்லை; அது தரும் சமூகம், மதம் பற்றிய தகவல்களைப் பொறுத்தது' என்று கூறு கிறார். காவெல் என்பவர், 'மனித நாகரிகத்தில் நாம் எதிர்பார்க்கும் எளிமை, அன்பு, அவலம் போன்ற நாகரிகக் கூறுகளை வேதங்களில் காணமுடியாது. அதன் மொழி, நடை அனைத்தும் செயற்கையாக உள்ளன. சில இடங்களில் மட்டும், குறிப்பாக உஷை எனப்படும் விடியலைப் பாடும் பாடல்களில் மிகச் சிறந்த அழகு ஒளிர்கிறது. ஆனால் இது தொடர்ந்து காணப்படவில்லை. சில உவமை களையே காண்கிறோம்' எனத் தெளிவுபட விளக்குகிறார்.

'ரிக் வேதம் என்பது வரலாறு பற்றியதே; கவிதை நயம் பற்றியதன்று' என்று அவர்களே அதற்கொரு சமாதானமும்

கூறுகின்றனர். அதன் மொழி கிரேக்கம், இலத்தின், கெல்ட், டியூடன், ஸ்லோவேனியா ஆகிய மொழிகளின் சொற்களுடன் தொடர்புடையதாகத் தெரிகிறது என்றும் அவ் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இருக்குவேதம் தவிர்த்துப் பிற யாவும் பிற்பட்டனவே; மேலும் அம் முதல் வேதத்தின் வழிப்பட்டனவே. பிற்கால வளர்ச்சிகளின் மூலவேர்கள் இருக்கில் இல்லாமல் இல்லை. அதர்வ வேதம் மட்டும் பிற்பட்டதென்றும், அதில் பில்லி, சூனியம், பகைவரை அழிக்க, செய்த பாவம் அனைத்திற்கும் பரிகாரம் தேட என வருவன பல என்றும் கூறுவர். இவற்றால் அவ் வேதத்தை ஏற்கத் தயங்கினர் என்பர்.

மேலும் பதினான்காம் நூற்றாண்டுவரை வாய்மொழி யாகவே வழங்கி வந்ததால், காலந்தோறும் அவ்வக் காலத்திற் கேற்பச் சிற்சில சேர்க்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உளது. வேத வியாசர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வேதங்களைப் பகுத்தபோதே, சில மாற்றங்கள் செய்துள்ளார். பதினான்காம் நூற்றாண்டில் சாயனரும் உரை எழுதியபோது, பல திருத்தங்கள் செய்தனராம். பிற வேதாந்தம் எனப்படுபவை மற்றும் சாகைகள், அங்கங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் என்றெல்லா காலந்தோறும் தோன்றியவை பல. இவ்வாறு அவ்வக் காலத்தி தோன்றியவை, அத்வைதக் கோட்பாட்டை உருவாக்கவும், பி சமயங்களை அழிக்கவும், அல்லது அணைப்பது போல் எழுத் அவற்றை விளங்காமற் செய்யவும் அனைத்துமே தங்களிடமிருந்தே வந்தன எனக்காட்டவும் முயன்றவை ஆகும். இவை எல்லாம் அடங்கியனவே வடமொழி நூல்கள்.

இவற்றைப் பிற 'சாதியினர்' படிக்கக் கூடாது என முற்றிலும் மறைத்ததும், பெண்கள் படிக்கக் கூடாதென்று தடுத்ததும், படிக்கப் பக்கத்தில் நின்று கேட்டாலே தண்டனை என்று அச்சுறுத் தியதும் காரணமாக அவை முற்றிலும் மறைபொருளாயின. வேதங்களுக்குள் அவை மறைபொருள் என்று குறிக்கப்பட வில்லை. இன்னார்தான் படிக்க வேண்டுமென்ற குறிப்புமில்லை. நான்கு வருணங்கள் பற்றி ஒரே ஒரு இடத்தில் வரினும், தீண்டாமை போன்ற கருத்துக்களும்

இல்லை. பின்னால் வந்தவர்களே இவற்றை உண்டாக்கித் தாம் வாழ வழி தேடியுள்ளனர். இதனால், உள்ளடக் கங்கள் தெரியாத பொதுமக்களிடம் வேதங்களே உயர்ந்தவை; அவைகள் இறைவனே அருளியவை; அவற்றில் சொல்லப்பட் டனவே 'வேதவாக்கு' - அவற்றை மறுப்பது துவேசம், தோசம், நரகம் புக நேரும் என்றும் கூறிக் கூறியே, காலமெல்லாம் மக்களை மட்டுமன்றி, அருளாளர்களையும் மதிமயங்கச் செய்துவிட்டனர்.

மேற்கு நாட்டவர் வடநூல்கள் பற்றி, இந்தியர்களின் விளக்கங்கள் தவறானவை என்று சுட்டிக் காட்டியுள்ளனர். இங்கே பிறர் அறியாது மறைக்கப்பட்டவற்றை, அவர்கள் ஆங்கிலத்திலும் தங்களின் மொழிகளிலும் மொழிபெயர்த்துவிட்டதால், இங்கு கூறப்பட்ட விளக்கங்களின் முரண்பாட்டை உணர்ந்தனர். அதனால், 'புரோகிதர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சுதந்திரமான தீர்வுகள் பற்றி எதுவும் தெரியாது. அவர்களுக்கு வேதங்களை முற்கால நிலைமைகளோடு பொருத்திப் பார்க்கும் திறமை இல்லை' என்றே எழுதுகின்றனர். "வேதத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளும் வசதி நமக்கு உள்ளது. பொதுவாக இந்தியர் களின் உரைகள் பொய்யாகவே தோன்றுகின்றன', என்று பென்ஃபி என்பவர் கூறுகிறார்.

இவ்வாறு வேதங்களையும் அவற்றின் வழிப்பட்ட உபநிடதங் களையும் பற்றிய விளக்கங்களைத் தந்தவர்களை - சாயனர் உட் பட்ட இந்தியர்களைக் கேலி செய்பவர்களும் பிறவாறு ஆதரிப் பவர்களுமாக இருவகை ஐரோப்பியர்களை நாம் காண்கிறோம்.

ஆ. டி. எச். கிரிஃபித் தாம் மொழிபெயர்ப்பதற்கு முன்னோடி களாக இருந்த பலரைக் குறிப்பிடுகின்றார். "பின் வில்சன், ராத், பென்ஃபி, வீபர், லுட்விக், மாகஸ்முல்லர், கிராஸ்மேன், மோனியர் வில்லியம்ஸ், ஜான் மோயர், வாலிஸ் போன்றவர்களுக்குத் தாம் கடமைப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். ஆயினும் தம் மொழி பெயர்ப்பு பெரிதும் சாயனரை ஒட்டியதே என்று கிரிஃபித் கூறுகிறார்.

இங்கு மூன்று செய்திகளை முக்கியமாகக் குறிப்பிட்டுவிட்டு, இருக்கு வேதத்திற்குள் நுழைய வேண்டும்.

1. மேலே குறிப்பிட்ட அத்தனை அறிஞர்களுக்கும் திராவிட இனம், மொழிகள் பற்றிய அறிமுகமே கிடையாது. அப்படி ஏதோ ஓர் இனம் ஆரியர் வருகைக்குமுன் இங்கிருந்தது, அவர்களிடையே போராட்டம் நடந்தது என்பன தெரிந்திருந்தாலும், 'திராவிட இனம், மொழி' பற்றிய தெளிவான, முழுமையான அறிவு அறவே இல்லை.

19ஆம் நூற்றாண்டில்தான் தென்னாடு போந்த அறிஞர் கால்டுவெல் உள்ளிட்ட சிலரால், திராவிட இனம், மொழி பற்றிய அறிமுகமே தொடங்கியது. இதனால் முற்பட்ட அவர்களில் பலர் இந்திய வரலாறே, ஆரியர் இங்கு புகுந்த பின்தான் தொடங்கியது போலவும், இந்தியக் கலாச்சாரம் என்பதே ஆரியக் கலாச்சார அடிப்படை உடையதே என்பது போலவும் எழுதிவிட்டுப் போயினர்.

இன்று திராவிடம் மற்றும் தமிழ் ஆய்வில் சிறந்து விளங்கிய - விளங்குகிற எமனோ, பரோ, ஜார்ஜ் ஹார்ட் என்றாற் போலும் பலரும் முதலில் சமஸ்கிருதம் கற்ற அறிஞர்களே. இவ் வாய்ப்பு கிரிஃபித், ஜோன்ஸ் போன்ற முன்னே சுட்டியவர்களுக்குத் தொடக்கத்தில் வாய்க்கவில்லை.

இதனால் இந்திய வரலாற்றைப் பிறழ உணர்ந்து, எழுதிப் போயினர். இன்றுவரை நாம் அதிலிருந்து மீளவில்லை. கங்கைக் கரை தொடங்கி இந்திய வரலாற்றை எழுதினரே அல்லாமல், காவிரிக்கரையிலிருந்துதான் தொடங்கவேண்டும் என யாரும் நினைத்திலர்.

2. தமிழர்கள் - திராவிடர்கள் - தஸ்யூக்கள் சூத்திரர்கள் எனப் பட்டதால், வேதங்களையோ அவற்றின் சார்பானவற்றையோ எதனையும் எள்ளளவும் படிக்கக்கூடாது, பக்கநின்று கேட்கவும் கூடாது என்று மறைத்துவிட்டனர்.

அவ்வாறு தெரிந்துகொண்டால் 'தோசம்' வந்துவிடும் என்றனர். கேட்பவர் செவியில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்; இது ஆண்டவன் கட்டளை என மிரட்டினர்.

நம் தேவார நாயன்மார்களுக்கும் பிற திருமுறை, திவ்வியப் பிரபந்த அருளாளர்களுக்கும் 'வடமொழி வேதம் உயர்ந்தது,

சிறந்தது, இறைவனே அருளியது, உலகை வாழ்விக்கத் தோன்றியது' என்றெல்லாம் புகழத் தெரிந்திருந்ததே தவிர, அவற்றின் உள்ளடக் கத்தை யாரும் அறிந்து, குறிப்பிட்டு விளக்கிப் பாடவில்லை.

தேவாரம் முழுவதும் தேடினால், வேதம், வேதாந்தம், ஆறங்கம் என மூன்று தொடர்கள் வருமே தவிர, அவற்றின் புகழ் பாடுமே தவிர, அவற்றின் உள்ளடக்கம் பற்றி ஒருவரி, ஓரடிகூட இராது. மும்மொழி அறிஞர் மு. அருணாசலம் இதனை, 'உதட்டளவில்' பாராட்டுவது என்பார்.

ஆங்கிலேயர்களும் ஐரோப்பியர்களும் தங்களையும் தொடக்க கால ஆரியர் எனக் கருதிக் கொண்டதாற்போலும், அவர்களைத் 'தோசம்' எதுவும் பற்றிக் கொள்ளவில்லை. அவர்களுக்குப் பின்புதான் - ம. ரா. ஜம்புநாதன் போல்வார் அங்கொன்றும் இங்கொன்றும் தமிழாக்கம் செய்தனர். ஆயினும் தமிழர்களிடையே அவை பரவவில்லை.

இன்னொன்று இதை சமய நம்பிக்கை ஆக்கிவிட்டனர். அதனாலும் வேதம் பற்றியும் அதன் தொடர்பானவை பற்றியும் தெரிந்து கொள்ளத் தாமே தயங்கி, அம் முயற்சியில் இறங்காது கைவிட்டனர்.

3. வடமொழி நூல்கள் எல்லாமே ஒரு குறிப்பிட்ட குலத் தார்க்கே உரியது போன்ற மரபு வேரூன்றியது. இவ்வாறு மறைக்கப் பட்டது மறை எனப்பட்டது. வேதம் தொடங்கி பிரம்ம சூத்திரம் என்பது வரை, எத்தனையோ நூல்கள் தோன்றின. (சங்கராச் சாரியார் உண்மையான உபநிடதங்கள் பத்து மட்டுமே. பிறவாறு அப் பெயரால் கூறப்படுவன போலி என்று கூறுகிறார்).

இதனால் இன்று விவரம் அறிய முயன்றாலும், ஏதோ 'கும்மிருட்டில் அடர்ந்த காட்டிற்குள் போனதுபோல்' உளது. சமண புத்த மதங்களை ஒழிக்கவும் சைவ வைணவச் சமயங்களை அணைக்கவும் என அவர்கள் செய்த தந்திரங்கள் பல. மேலும் தங்கள் மேலாண்மையை நிலைநிறுத்த அவர்கள் பிறர்தம் மெய்யியல்கள், கலைகள், பெயர்கள், விழாக்கள், சடங்குகள் பற்றி எல்லாம் தங்களுடையனவாகக் காட்ட தமிழ்ப் பெயர்களையும் கலைச்சொற்களையும் தம் மொழியில் எழுதிக்கொண்டு,

வல்லாண்மை மிக்கிருந்த காலத்தில் மூலப்படிகளை அழித்து விட்டனர்.

எப்பக்கம் யார் சாய்ந்தாலும் அப்பக்கம் அவர்களும் சாய்ந்து, அதை ஒன்றுமிலாது ஆக்கிவிடுவர். உயிர்க்கொலை வேள்வி தீதன்றோ என்றால், அது தேவர்களுக்குச் செய்யப்படுவதால், வேள்வியிற்கொலை கொலை ஆகாது என்பர். யார் சொன்னது, நாங்கள்தான் உயிர்க்கொலையை முதன்முதல் தடுத்த தூயவர்கள் என்றும் கூறுவர். 'எல்லாம் ஒன்றே' என்ற அத்துவைதிகள் நாங்கள் என்பர்; முப்பொருள் உண்மைச் சைவமும் எங்களிடமிருந்து வந்ததே என்றும் கூறுவர். ஆகமங்களில் கூறப்படும் அனைத்தும் உருவ வழிபாடு பற்றியனவாயிற்றே என்றால் அவையும் எங்களுடையனவே என்பர். பரப்பிரம்மமே உண்மை, பிற எல்லாம் நிழல்களே எங்கள் கடவுளர்கள் மேலுலகில் மட்டுமே உள்ளனர், நாங்கள் உருவ வழிபாட்டை வெறுப்பவர்கள், அருவ வழிபாடே எங்களது என்றும் நூல்கள் பல எழுதிக் காட்டுவர். சிவன், விணு, சக்தி (துர்க்கை, கொற்றவை) என்பன மூன்றும் தொன்றுதொட்டுத் தமிழர்களுக்கே யுரிய கடவுளர்கள் அல்லவா; அவர்கள் பற்றிய வழிபாட்டு நெறிகள் தமிழர்களுடையன அல்லவா? இவை எவ்வாறு உங்கள் ஆகமங்கள் ஆகும் என்றால், அவற்றுக்கும் பிற்காலப் புராணங்களை ஆதாரம் எனக் காட்டுவர்.

நான்மறைகள் என்பனவும் தமிழர்க்கே உரியனவாய் இருந்து, அழிக்கப்பட்டன. எவ்வாறு தமிழர்களின் ஆகமங்கள் அழிக்கப் பட்டனவோ, அதுபோல, தமிழ் மறைகளும் அழிக்கப்பட்டன.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று, மாணிக்கவாசகர், சிவனை வடமொழியாளர் உரிமை கொண்டாடுவதை நயமாக மறுத்தார். சிவனைத் தென்னவன், தென்பாண்டி நாட்டான் என்று திரும்பத் திரும்பக் கூறுவார். அவர்,

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்து அறமுரைத்தான் காணேடி

என்பார். ஆலமர் செல்வனாம் தென்முகக் கடவுளை, வடமொழி நான்கு வேத மூலநூல்களிலும் காணமுடியாது. பிற்பாடு புராணங்

களில் எழுதி வைத்துக் கொண்டன ஏற்கத்தக்கவை ஆகா. அவை நம்மைப் பார்த்து நம்மிடமிருந்து எடுத்து எழுதிக் கொண்டவை. வடமொழி வேதங்களாகிய மூலநூல்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு எம்மால் எழுதப்படுபவை இவை.

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமசிவாயவே

என்று திருஞானசம்பந்தர் கூறுவது, வடமொழி நான்மறையாதல் இயலாது. ஏனெனில் அவற்றில் ஒன்றில்கூட - மூலநூல்களில் - சிவனும் இல்லை; நமசிவாயவும் இல்லை. மூலநூல்களை முழுவதும் படித்துவிட்டு நாம் சொல்வது இது. நீங்களும் வேத மூலநூல்களில், பிரமனும் மாலும்போலச் சிவனைத் தேடுங்கள். அதில் வரும் ருத்ரன் - ஒரு தேவதை. நம் சிவனிருந்தால் காட்டுங்கள்.

சமணர்களும் தங்களின் நான்மறை பற்றிப் பல இடங்களில் குறிக்கின்றனர்.

சீவக சிந்தாமணி, அருக தேவரை, 'ஆதி வேதம் பயந்தோய் நீ என்று கூறுகிறது (1242). 'நான்மறை நூல் மொழிந்தவரே' என்பது திருக்கலம்பகம் (75). 'வினையெலாம் அற நெறி வேதம் நான்கினை, மனை துற வாணருக்கு ஓதி' என்று மேருமந்தர புராணம் இயம்பு கிறது (1356). 'ஏதங்கள் நீங்க எழிலிளம் பிண்டிக் கீழ் - புறாவே, வேதங்கள் நான்கும் விரித்தான் விரைமலர்மேல் புறாவே' என்பது, சமண சமய யாப்பருங்கல விருத்தி மேற்கோள் (சூ. 68).

நான்மறை யாள, மும்மதிற் கிழவ (மேற்படி 96)

சமணர்களின் நான்கு மறைகள் எங்கே?

தமிழர்களின், ஆலமர் செல்வன் தந்த நான்கு மறைகள் எங்கே?

நம் ஆதீனங்களோ, சிவ ஆசாரியார்களோ, அந்தணர்களோ, யாரும் பதற்றப்பட வேண்டாம். இவை ஐயங்கள்தான்; வினாக் கள்தான். இன்னும் தேடுவோம்; ஆராய்வோம். சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் பகுதி அதற்குத் தெளிவு தரும்.

இவற்றை மறுக்க விரும்புவோர் மூலநூல்களிலிருந்து சான்று காட்டவேண்டும். பிற்காலத்தில் வடவர் தந்நலம்

காரணமாக வாழ்வு தேடிக்கொண்டு, 'எல்லாம் எமதே' என எழுதிய வற்றைக் காட்டுதல், தவறாகும். மூலநூலில் இல்லாதன, பின்னர் வருமெனில், அவை முன்னதற்கு முற்றிலும் முரணாகவும் இருக்குமெனில், அவை இடையிடையே நுழைக்கப்பட்டன வாகத்தான் இருக்கமுடியும். இனி இருக்கு வேதசாரத்திற்குள், குறிப்பிடத்தக்க சான்றுகளைக் காண்போம்.

இருக்கு முதலான வேதங்கள் மக்களின் பேச்சுநடை போன்ற உலக வழக்கினவாகவே இருந்துள. 'சமஸ்கிருதம்' என்பது பிற்பாடு செம்மைப்படுத்தப்பட்ட மொழியாக, 'செவ்வியல் மொழி' ஆனது என்பர்.

அவற்றில் ஐம்பூதங்கள் மற்றும் இயற்கை பற்றி வருவன வற்றை இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று தமக்கு அச்சம் தருவன வாகக் கருதிப் பாடுவன. இரண்டு அவற்றை வணங்கித் தமக்கு வளமும் நலமும் தருமாறு வேண்டிப் பாடுவன. தெய்வங்களில், முன்பு குறிப்பிட்டதுபோல் இந்திரனும் அக்கினியும் முதன்மை இடம்பெறுகின்றனர். வி ணு, பிரம்மா உட்படப் பிற தேவதைகள் யாவும் சிறு தெய்வங்களாகவே பேசப்படுகின்றன.

இந்திரனிடம் தமக்குப் பகைவர்களான கருப்பு இனத்தவரை அழிக்க வேண்டி, அவலக் குரலுடன் முறையிடுகின்ற சூக்தங்களே மிகுதி. அக்கினி பற்றியவை எல்லாம் வேள்வித் தொடர்புடையன. அக்கினி மூலமே அவர்கள் மேலுலகிலுள்ள தமது அனைத்துத் தெய்வங்கள், தேவதைகள், கடவுளர்கள் அனைவருடனும் தொடர்பு கொள்கின்றனர்.

அறிஞர் ம. ரா. ஜம்புநாதனின் தமிழாக்கம் மணிப்பிரவாள நடையிலிருந்தாலும் உள்ளது உள்ளபடி இருக்குமெனக் கருதுகிறோம்.

நர்மதா பதிப்பகத்தின், வடுவூர் நாராயணன், எளிய தமிழில் தந்துள்ள, 'ருக், யஜூர், ஸாம, அதர்வண வேதங்களும் பத்து உப நிஷதங்களும்' என்ற நூல், ஓரளவு நமக்கு விளங்கும்படி தொகுத்த அரிய நூலாகும். எனினும் இன்றைக்கு ஒவ்வாதன என்று கருதக் கூடிய பலவற்றை அவர் வேதங்களில் அறவே இல்லை; அதில் உயிர்க்கொலை வேள்வி, அசுவமேதயாகம் பற்றி வருவன எல்லாம்

தவறாகக் கொள்ளப்பட்டன என்று துணிச்சலாக மறுத்து விடுகிறார்.

அநுராகம் வெளியிட்டதும் ஸ்வாமி என்பார் மிகச் சுருக்க மாகப் பத்து உரூவா அளவில் தந்துள்ளதுமான நான்கு சிற்றேடுகள், மிகச் சிலவற்றை நன்கு தொகுத்துச் சுருக்கி எடுத்தியம்புகின்றன.

குருவிக்கரம்பை வேலு அவர்கள் தமது நூல்களில், இன்றைய நிலையில் 'ஒவ்வாதன' என்று கருதப்படக் கூடிய அனைத்தையும், அவை வருமிடங்களைச் சுட்டிக்காட்டி வெளிப்படுத்துகிறார். வேதங்கள் பற்றிய அவரது அறிவு வியக்க வைக்கிறது.

அலைகள் வெளியீட்டகம் ஏழு தொகுதிகளாக வெளியிட்டுள்ள, நான்கு வேதங்களும் முழுமையானவை. ம.ரா. ஜம்பு நாதனின் தமிழாக்கம் மற்றும் கிரிஃபித் என்பாரின் ஆங்கில மொழியாக்கம் ஆகியவற்றுடன் பல்வேறு அறிஞர்கள் தந்துள்ள அடிக்குறிப்புக்கள் என, ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் உதவும்படி பதிப்பித்துள்ளனர். அமைப்பும் உள்ளடக்கமும் கூடச் செவ்விதாக அமையும்படி வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் வீ. அரசு இருக்கு வேதம் மூன்று தொகுதிகளையும் 'செவ்விதாக்கம்' செய்து, ஒரு சிறந்த ஆராய்ச்சி முன்னுரையும் (செவ்விதாக்குநரின் குறிப்புகள் என) வழங்கியுள்ளார்.

இச் செவ்விய பதிப்புக்களில் அனைத்து சூக்தங்களுக்கும் கிரிஃபித்தின் ஆங்கிலப் பகுதிகளைத் தந்திருப்பது மனநிறைவு தருகிறது. அறிஞர் ஜம்புநாதனின் தமிழாக்கத்தையும் - அவை மணிப்பிரவாள நடையினவாயினும் மறுபதிப்புச் செய்வது நல்லது. ஓர் எடுத்துக்காட்டு:

பத்தாம் மண்டலம் தொண்ணூறாம் சூக்தம் ரிஷி நாராயணன் புருடனை நோக்கிக் கூறுவது.

**புருடன் - பிரபஞ்சம் தோன்றியதற்கு மூல காரணமாய் இருந்தவன். மனித உடலாக உருவகிக்கப்பட்டுள்ளது (இது அடிக்குறிப்பு).**

இதில் 12ஆம் 'மந்திரம்' வருமாறு:

'பிராமணன் அவனுடைய வாயாய் இருந்தான். அவனுடைய கைகளிலிருந்து இராஜன்யன் கற்பிக்கப்பட்டான். அவனுடைய வாமங்கள் வைசியனாயிற்று. அவனுடைய பாதங்களிலிருந்து ஏனையோர் பிறந்தனர் (இது செவ்விதாக்க மொழிபெயர்ப்பு). கிரிஃபித்தின் ஆங்கில ஆக்கம்:

The Brahman was his mouth, of both his arms was the Rajanya made. His thighs became the vaisya, from his feat the sudras was produced.

Sudras என்பது 'ஏனையோர்' எனச் செவ்விதாக்கம் பெற்றுள்ளது. இதன் அடிக்குறிப்பு வருமாறு:

**பிராமணன் - கடவுளர்களுக்கு துதிகளைக் கூறும் வாயாக இருந்தான்.**

**இராஜன்யன் - அதிகாரத்தையும் ஆயுதங்களையும் கையாள்பவன்.**

**வைசியன் - வர்த்தகன், விவசாயம் செய்பவன்**

**ஏனையோர் - சூத்திரர்கள். திடம், வலிமை, செயல்திறன் கொண்டவர்கள். இவர்கள் உழைப்பால்தான் முழு சமுதாயமும் வாழ்கிறது. இப்பாடல் ஒன்றுதான் ரிக் வேதத்தில் வர்ணங்கள் பற்றிக் கூறுகிறது.**

இவ் அடிக்குறிப்பை நோக்கும்பொழுது, நாமனைவரும் வைசியர்களாக இருப்பது நல்லதா? சூத்திரர்களாக இருப்பது நல்லதா? என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. நம் ஆதீனங்கள் அனைத்தும் கூடி, நமக்கு வழிகாட்ட வேண்டும்.

நம் அகப்பாடல்களில் வருவதுபோல, ஒவ்வொரு சூக்தத் தொடக்கத்திலும் எந்த ரிஷி, யாருக்கு கூறியது என கூற்றுமுறை வருகிறது.

ரிக் வேதம் - மண்டலம் ஒன்று - சூக்தம் ஒன்று: ரிஷி மதுச் சந்தச வைசுவமித்திரன் - விசுவாமித்திரன் மகன். அக்கினியை நோக்கிக் கூறுவது.

**மந்திரங்கள்**

1. **நான், புரோகிதனும் வேள்வியின் தேவனும், இரத்தின**

மளிப்பவனும், ஹோதாவுமான அக்கினியைப் போற்று கிறேன்.

2. பழைய ரிஷிகளாலும் புதிய ரிஷிகளாலும் போற்றத் தகுந்தவனுமான அவன் இங்கு தேவர்களை ஏந்தி வருவானாக.

3. அக்கினியைத் தினந்தோறும் வழிபடுபவன் செழிப்பதும் சிறப்புள்ளதும் மக்களைப் பெருக்குவதுமான செல்வத்தைப் பெறுகிறான்.

4. அக்கினியே! உன்னால் எங்கும் நிகழ்த்தப்படும் இன்னலாகாத வேள்வியானது தேவர்களிடம் செல்கிறது.

5. ஹோதாவும், அறிஞனும், செயலாளனும், சத்தியனும், மிக்க புகழ் உள்ளவனும், தேவனுமான அக்கினி, தேவர்களோடு இங்கு வருவானாக.

6. அக்கினியே! அங்கிரசனே! அளிப்பவனுக்கு உன்னால் செய்யப்படும் நலமெல்லாம் உனக்கே நிச்சயமாகத் திரும்பும்.

7. அக்கினியே! நாங்கள் தினந்தோறும் இரவிலும் பகலிலும் மனதில் வணக்கம் செய்பவர்களாய் உன்னிடம் வருகிறோம்.

8. நாங்கள், துலங்குபவனும் வேள்விகளைப் பாலிப்பவனும், சத்தியத்தை எப்போதும் துலக்குபவனும் உன்னுடைய சொந்த இடத்திலே வளர்பவனுமான உன்னிடம் வருகிறோம்.

9. அக்கினியே! நாங்கள் உன்னிடம் சுலபமாய் வர மகனிடம் தந்தைபோல் இருக்கவும் எங்களுடைய நன்மைக்காக எங்களிடம் எப்பொழுதும் நிலைக்கவும்.

இது ஒருபானை சோற்றுக்கு ஒரு சோற்றுப்பதம். சில சூக்தங்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட மந்திரங்களும் உண்டு.

இதன் விரிவான முதல் அடிக்குறிப்பு வருமாறு:

"இப் பாடல்கள் மிக முக்கியமானவராகக் கருதப்படும் அக்கினி தேவனைக் குறித்துப் பாடப்பட்டதாகும். ரிக் வேதத்தில் இந்திரனுக்கு அடுத்தபடியாக மிக முக்கியத்துவம் வாய்ந்தவர் அக்கினி தேவனே. இவரது தொழில் பூமிக்கும் வானுக்கும் இடையேயான தூதுவர் போன்றது. கடவுளர்களுக்கு இப்பாடல்களைத் தெரிவிப்பதும் மனிதர்கள் கொடுக்கும் அவிர்ப் பாகங்களை அவர்களுக்கு எடுத்துச் செல்வதும் இவரது பணியே.

வேள்விகள் நடக்கும் இடங்களுக்குத் தேவதைகளைத் தனது தீ நாக்குகள் எழுப்பும் ஒலியால் இவர் அழைத்து வருவார். மனிதர்கள் நடத்தும் பல்வேறு புனித வேள்விகளுக்கு இவரே நாயகன். அதனால் இவர் புரோகிதர் எனவும் அழைக்கப்படுகிறார். குறித்த காலத்தில் வேள்விகளை நடத்துவதால் ரித்விஜ் எனவும் ஹோதா எனவும் அழைக்கப்படுகிறார். வேள்விகளில் வழங்கப்படும் பொருள்களை உண்ணுமாறு தேவதைகளை இவர் வேண்டுகிறார். இவரிடம் அளவற்ற செல்வம் உளது. நேரடியாகவும் மறை முகமாகவும் இவர் இச்செல்வத்தை வாரி வழங்குகிறார்".

இவ்வாறு விளக்கம் தரும் முறை, ஒவ்வொரு சூக்தத்திலும் உளது.

சூக்தங்களின் சில கூற்றுவகைகள்: இவற்றை முன் மாதிரியாகத் தந்துள்ளோம்.

***1. 1-4. ரிஷி மதுச் சந்தச வைசுவா மித்திரன் இந்திரனை நோக்கிக் கூறுவது***

***2. 1-113. ரிஷி குத்ச ஆங்கிரசன், உஷையையும் இரவையும் நோக்கிக் கூறுவது.***

***3. 1-174. ரிஷி அகஸ்தியர் இந்திரனை நோக்கிக் கூறுவது.***

***4. 4-37. ரிஷி வாமதேவன் - கௌதமன். ரிபுக்களை நோக்கிக் கூறுவது.***

***5. 5-21. ரிஷி சச ஆத்திரேயன், அக்கினியை நோக்கிக் கூறுவது.***

***6. 6-64. ரிஷி பரத்வாஜன், உஷையை நோக்கிக் கூறுவது.***

***7. 9-1. ரிஷி மதுச்சந்தசன் விசுவாமித்திரன், பவமான, சோமனை நோக்கிக் கூறுவது.***

***8. 9-97. பல ரிஷிகள் பவமான சோமனை நோக்கிக் கூறுவது.***

***9. 10-1. ரிஷி திரித ஆப்தியன் அக்கினியை நோக்கிக் கூறுவது.***

***10. 10-179. மூன்று ரிஷிகள் இந்திரனை நோக்கிக் கூறுவது***

இவ்வாறு ரிஷிகளின் கூற்றாகவே வருமிவற்றை, இறைவனே அருளினான் என்பது, அவற்றைப் புனித நூல்களாக மக்கள்

ஏற்பதற்காக என்று கருதலாம். ஏனெனில் உள்ளடக்கம் முழுவதும் அக்கினி, இந்திரன் போல்வாரிடம் வேண்டுவதாகவே பெரிதும் வருவதால், இவை தொன்மைமிக்க முனிவர்கள் மக்களுக்காகப் பாடியவை போலத் தெரிகின்றன அல்லது மனிதர்கள் வாய்மொழி யாகப் பாடியவற்றை முனிவர்கள் கேட்டுத் தொகுத்திருக்க வேண்டும்.

ஆரியர்கள் குளிர்மிகுந்த நாட்டினராதலின் அக்கினியை வழிபட்டனர். அக்கினியில் குளிர்காய்ந்தனர். அக்கினியில் உயிரி னங்களைப் போட்டு பதப்படுத்தித் தின்றனர். அதுவே மேலும் புனிதப்படுத்தி வேள்வி ஆயிற்று. மேலும் குளிர்மிகுந்த நாட்டி னருக்கு இறைச்சியுணவுடன் சோமபானம் தேவைப்பட்டதில் தவறில்லை.

தமிழர்கள் வெப்பம் மிக்க நாட்டினராதலின், அவர்கள் மழையைக் கடவுளாகப் போற்றினர். 'வான்சிறப்புப்' பாடினர்.

ஆரியர்களின் முதல் வேதமாகிய இருக்கு இவ்வகையில், அவர்கள் சிந்து நதிக்கரையில் நுழைந்தபோது, அங்கு நடந்த போர்களையும் வெற்றிகளையும் தோல்விகளையும் பாடுகிறது. இவை இயல்பானவை.

ஆனால் பிற்பாடு வந்த வேதங்களும் பிறவும் அவர்களின் வல்லாண்மையை நிலைநிறுத்தக் கையாண்ட மந்திர தந்திரங் களாகவும் சூழ்ச்சித் திறன்களாகவும் வளர்ந்து, எந்த வகையிலும் அசைக்க முடியாத நிலையை அவர்களுக்குத் தந்தது.

பரிதிமாற் கலைஞர் குறிப்பிடுவதுபோலத் தமிழ் ஒன்றே அவர்களுக்கு முழுவதும் ஆட்படாது, தன் தனித்தன்மையை இழக்காமலே, அவர்களுடன் கூடி வாழ்ந்தது.

இன்று திராவிட இனத்தின் முழுமை பெற்ற சின்னமாக அடையாளமாகத் தமிழும் தமிழரும் தமிழ்நாடும் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. அதனைத் தந்தை பெரியார் காத்து, நிலைநிறுத்த முயன்றார். அறிஞர் அண்ணாவால் நாட்டு ஆட்சியையே கைப்பற்ற முடிந்தது.

அவர், இயற்கை செய்த கொடுமையால், எதிர்பாராது மறைந்தார். அவரது மறைவுக்குப் பிறகு தொடங்கிய திராவிட இன வீழ்ச்சி, தமிழின அடையாளத்தையே அழித்துவிடுமோ என அஞ்சவேண்டியுளது. மூளைச்சலவை செய்யப்பட்ட அடிமைப்புத்தித் தமிழினத்தை, மீட்க வழி தெரியாமல் திகைக்கின்றோம். பொதுமக்களே முழுவதுமாகத் தமிழுக்கு எதிரான திசையில் செல்கின்றனர்.

இருக்கு வேதத்தில் பகைவர்களை அழித்துத் தங்களைக் காக்க வேண்டிப் பாடுவன பலவுள (1-174-3, 1-176-3, 7-104, 9-15 மேலும் மிகப் பல).

## ரிக்வேதம்

ஸ்வாமி என்பார் வெளியிட்டுள்ள, சிறு கையேட்டிலிருந்து சில பகுதிகளை இங்கே தருவது, மேலும் அவ்வேதம் பற்றிய கருத்துக்களை அறிய உதவும். அவர் தாம் எழுதியவற்றுக்குச் சான்றாக, ரிக்வேத சூக்தம், மந்திரம் ஆகிய எண்களைத் தந்திருந்தால் உதவியாக இருந்திருக்கும்.

"இதில் ரிக் வேதமே பழையது என்று கூறுவர். அதர்வண வேதம் பின்னால் உண்டானதால், கடைசியாக உண்டானது என்பர். அப்படியெல்லாம் இல்லை" (பக். 3).

"ரிக் வேதம் தேவதைகளைத் துதி கூறி வணங்கும் பொருளைத் தருகிறது. பரமாத்மாவையே பல பெயர்களில் செய்யுள்களில் துதிக்கின்றது. பத்து மண்டலங்களை உடையது".

(ஒன்பதாம் மண்டலம் முழுவதும் சோமபானம் பற்றியது. ஒருவகைச் செடியிலிருந்து, பிழிந்து எடுக்கப்படுவது. போதையும் உடல் வலுவும் தருவது. தமிழர்களும் அரிசி, நெல், தேன், பழம், பனங்கள் எனவும் மணங்கமழ் தேறல் எனவும் உண்டாக்கிப் பருகினர். அவர்கள் கிரேக்கத்திலிருந்து சாடிகளில் தேறலை வரவழைத்துக் குடித்து மகிழ்ந்தனர். அவற்றை 'நடுகல்' போன்றவற்றுக்குப் படைத்தனர். ஆயினும் சோமனைத் தெய்வமாக உருவகித்து இருக்குவேதம் ஒரு மண்டலம் முழுதும் கொண்டாடுகிறது. ஸ்வாமி அதையும் பரமாத்மா என்கிறார்).

"இந்த நான்கு வேதங்களில் நான்காவதாகச் சொல்லப்படும் அதர்வண வேதம் அந்தணர்களால் கடைப்பிடிக்கப்படக் கூடாத தான மரணம், உச்சாடனம் எனும் மந்திர தந்திர வேலைகளால் நிறைந்து இருப்பதால் அதிகம் பின்பற்றப்படாது, அதிக வழக்க மின்றி, அதர்வண வேத பரம்பரை அருகிவிட்டது".

"விஞ்ஞான பூர்வமான இதன் வழிகள் உலக வாழ்விற்கு மிக அவசியமானாலும் அழிவு வேலைக்குதவும் சடங்குகளைக் கொண்டதால் அறம் விரும்பிய அந்தணரால் இது ஒதுக்கி வைக்கப்பட்ட வேதமாயிற்று".

"எப்போதும் இருந்து கொண்டிருக்கும் (Eternal) வேதம் கடவுளால் நான்முகனுக்குப் படைப்புக் காலத்தில் உபதேசிக்கப் படுகின்றது. அந்த வேத அறிவை வைத்துக்கொண்டே பிரம்மாவான நான்முகன் உலகங்களைப் படைக்கிறான் என்பது வேதச் செய்தி" (பக். 5).

(ஸ்வாமியின் சொற்கள் உள்ளவாறே தரப்பட்டுள்ளன. இதை யான் சுருக்கித் தந்தால் நம்மவர்கள் நம்பமாட்டார்கள். இன்று ஆங்கிலத்தில் வெளிவந்தால் அது நம்பத்தகுந்ததாக, உயர்ந்ததாக இருக்குமென எண்ணுவோர் பலர். அதுபோலவே சமஸ்கிருதத்தில் ஓதினால், சொன்னால், எழுதினால் அது சாஸ்திரம்; கேள்வி கேட்கக் கூடாதது; இறைவனே அருளுவது என எண்ணுபவர் இன்றும் உளர். ஸ்வாமி இறைவனே அருளியது என்று கூறிவிட்டு, அதில் ஒரு வேதம் 'அறம் விரும்பிய அந்தணரால்' ஒதுக்கப்பட்டது எனலாமா? ஒரே பக்கத்தில் இப்படி முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிறோமே என்று அவரும் நினைக்கவில்லையே. 'நான்மறை அறங்கள்' ஓங்க என்று எவ்வாறு கூறினரோ? படித்துத் தெரிந்து கூறியதா? அல்லது அந்த நான்மறை வேறா? நல்தவம், நல்வேள்வி, மல்க - என 'நல்' அடைமொழி ஏன்? பில்லி, சூனியம் செய்து பிறர்மீது ஏவுவதும் கொடிய பாவங்களைச் செய்து சில யக்ஞச் சடங்குகளால் பரிகாரம் தேடுவதும் நான்மறை அறமாகுமா? அதர்வண வேதத்தை அவசியம் படிக்க வேண்டுகிறேன்.

மதுரைத் தெருக்களில் கண்ணகி, 'சான்றோரும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்? என்று அரற்றியதுபோல, என் ஐயங் களையே எழுதுகிறேன். நான் முடிவு எதுவும் கூறவில்லை. நான்

படித்தவற்றை அப்படியே திரும்ப எழுதியுள்ளேன். வேறு தவறு அறியேன். நடுவுநிலைப் பிராமணியத்தை வெறுத்திலேன். அவர்கள் துணை இன்றி, இனித்தமிழ் வாழாது, வளராது; ஏனெனில் எல்லா ஊடகங்களும் அவர்களிடமே உள்ளன. மேனிலைத் தமிழரெல்லாம் அவர்களையே பின்பற்றுகின்றனர். 'யாரொடும் பகைகொள்ளலன்'. நம் ஆதீனப் பரமாசாரியர்களும் சிவ ஆச்சாரியார்களுமாவது என் ஐயம் தீர்த்தால் நல்லது.

வேதங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கிடைக்கின்றன. சூட்சுமமான ஒலிவடிவில் ஆகாயத்தில் மறைந்துள்ள வேதத்தை, ரிஷிகள் தியான நிலையில் கேட்டு அம் மந்திரங்களை உலகில் பரவச் செய்தனராம்.

இருக்கு வேதமே 'இந்து மதச் சுவடியாம்'.

இறைவனே தன் வாய் தோள் தொடை பாதத்தில் நான்கு வருணங்களைப் படைத்தான் என்று 'இருக்கு' கூறுகிறது. ஸ்வாமியோ, சிந்து நதிக் கரைக்கு ஆரியர் வந்தபின் படிப்படியாக 'சிறுசிறு அரசர்கள்', 'படைவீரர்கள் வகுப்பு', தனிப்பெருமை யுடைய வைதீகப் புரோகிதர் கூட்டம், ஆடுமாடு மேய்த்து விவசாயம், நெசவு செய்யும் 'சூத்திரக்' கூட்டம் - என இப்படி நான்கு வகுப்புகள் உண்டாயின என்று, பரமாத்மா படைத்த இருக்கு வேதத்திற்கு மாறாக எழுதுகின்றார் (பக்.9). எது உண்மை? இறைவன் ஆதியிலேயே படைத்தாரா? அல்லது படிப்படியாகப் புகுத்தப்பட்டதா?

ஸ்வாமி **'கோயில்களின்றியே'**, யாக பூமியில் தேவதைகளை வரவழைத்த உண்மையை எழுதுகிறார். . . தெய்விக பலமும் துணிவும் பெற சோமபானம் அருந்தினர். சோமபானத்துடன், சுராபானம் பற்றிய விளக்கமும் உளது. சிலர் இதைச் சாராயம் என்பதை மறுக்கிறார். ஸ்வாமி 'கோயிலின்றியே' என நயமாக எழுதுவதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

வீடு வாசல் இல்லாமல் அலைந்து திரிந்த ஆரியர் கோயில் இல்லாத தெய்வங்களையே யாகங்களில் அழைத்துக் கும்பிட்டு வந்துள்ளனர். வேள்விகளே அவர்களின் ஆன்மிகச் செயலாக

இருந்து வந்திருக்கின்றதை ரிக்வேதமே முதலில் உணர்த்துவதாகும் (பக். 11). (மும்மொழி அறிஞர் மு. அருணாசலம் வேதங்களிலோ, கீதையிலோ, பிற அத்வைத நூல்களிலோ கோயில் என்ற சொல்லோ, உருவப் பத்தி வழிபாடு பற்றியோ ஒரு சொல்கூட இல்லை என்று கூறியுள்ளார். அவ்வாறிருக்க முழுவதும் கோயில்கள் பற்றிய ஆகமங்கள் எவ்வாறு ஆரியருடையதாகும்? வேதமும் ஆகமமும் எவ்வாறு ஒன்றாகும்? - இவ்வாறு அவர் மட்டுமன்று, அறிஞர்; பி. டி. சீனிவாசரும் கேள்வி எழுப்பி, விடை கூறியுள்ளனர்).

இந்தக் கோயிலில்லா வேதநெறி தழைத்தோங்க, கோயிலுள்ள சைவநெறித்துறை எவ்வாறு விளங்கும்? அவை வேறு வேதங் களாக அல்லவா இருக்க வேண்டும்.

அதர்வண வேதம் பற்றி ஸ்வாமி எழுதுவனவற்றையும் பிற செய்திகளையும் படித்தபின், என்னால் 'நான்மறை அறங்கள்' யாவை எனக் கண்டுகொள்ள இயலவில்லையே? வேறு யாரும் எனக்கு விடை சொல்லாவிட்டாலும், ஆதீனங்கள் இவற்றுக்கு ஏற்புடைய, மூலநூற் சான்றுடைய விடை கூறினால் நல்லதல்லவா? திருப்பனந்தாள் திருமடமாவது, வாய்திறக்குமா?

'வேதநெறி தழைத்தோங்க! மிகு சைவத்துறைவிளங்க! என்பது, அத்திருமடம் எனக்கு அனுப்பிய நூல். அதில் இடம் பெறும் அரிய கருத்துக்கள் இவை:

1. நம் சமயம் வேத உடன்பாட்டுச் சமயமாகவே சொல்லப் பெற்றுள்ளது.
2. மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் இவையும் சைவத்தை வேத உடன்பாட்டுச் சமயமாகவே வரையறுத்து வற்புறுத்துகின்றன.
3. நான்கு வேதங்களும் சைவத்திற்கு உடன்பாடானவை.
4. வேதத்தைவிட்ட அறமில்லை; வேதத்தில் சொல்லப்படாத தர்மம் வேறில்லை.
5. சைவ சமயம் வைதிக சமயம் எனப்படும்.
6. சிவத்தை நோக்கியதே வேதம். 'நல் இருக்கு மந்திரம் கொண்டு, ஒன்றி' வழிபாடாற்றுதல் பற்றிச் சமபந்தர் பாடியுள்ளார்.

இன்னும் நிரம்ப எழுதி, திருமந்திரம், திருமுறை யாவும்

வேதங்களையும் ஆகமங்களையும் போற்றி உரைத்தவற்றை யெல்லாம் காட்டி, மற்றவர்களை எல்லாம் 'ஒருகை பார்ப்பது போல்' எழுதியுள்ள சொல்நடை, ஒரு பெரிய திருமடத்திற்குப் பெருமை தருமா எனத் தெரியவில்லை.

"சைவ ஆதீனங்களுக்கும் திருமடங்களுக்கும் இதை வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் அடக்கி, ஒடுக்கி அப்புறப்படுத்த வேண்டிய தலையாய கடப்பாடு இருக்கின்றது. இதில் எள்ளளவும் மெத்தனம் காட்டல் கூடவே கூடாது".

சீர்வளர்சீர் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் சற்றே நிதானம் காட்டி, எம் கருத்துக்களையும் படித்துவிட்டுப் பிறகு சிந்திப்பாராயின் நல்லது. அவர் அடக்கி ஒடுக்கி ஒழிக்க நினைப்பது தமிழையா? சைவத்தையா? - என்பதும் விளங்கவில்லை.

இனி, மீண்டும் ஸ்வாமியின், 'ரிக் வேதத்திற்கு' வருவோம்.

'வேதங்களுள் சிறியவன் அக்னி, பெரியவன் வி ணு. இந்திரன், ருத்ரன், வருணன், அக்னி, வாயு போன்ற தேவதை களுடன் வி ணு புகழப்படுகிறார்' (அதாவது வேதத்தில் உள்ளபடி ருத்ரன், வி ணு எல்லாம் தேவதைகளின் வரிசையில் உள்ளவர்களே) (பக். 13).

நான்கு வேதங்களுமே சம்ஹிதை, பிராம்மணம், உபநிஷத் என்று மூன்று பிரிவுகளை உடையன. முதலிரண்டும் யாக விதிகள்; உபநிஷதம் இறைவனை அடைய வழிகாட்டும் மெய்யியல்.

வேதத்தில் வரும் கடவுளர்கள், தேவதைகள், அசுரர்கள் பற்றிப் பட்டியலிடும் ஸ்வாமி, வி ணுவே மேலான கடவுளாகக் கூறப்படுவதாக எழுதுகிறார். "ருத்ரனுக்குத் துதி உள்ளது. அவர் பரமாத்மாவிற்கு உட்பட்ட ஒரு தேவதையாகவே கூறப்படுகின்றார். இந்த வேதம் கூறும் ருத்ரன் பின்னாள்களிலேயே சிவன் என்ற சைவக் கடவுளுடன் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கவேண்டும்" (பக். 17).

சிவபரம்பொருள், முழுமுதற்கடவுள் என முழங்குபவர்கள் இதைச் சற்றே, நிதானமான புத்தியுடன் சிந்திப்பார்களாயின் நல்லது.

வேள்வியே - யக்ஞமே வேதத்தின் முழுமையான அடிநாதம். அக்கினியே வேள்வி நாயகன். அக்கினியை, இந்திரன் 'விந்தாக' மாற்றுகிறான். விந்து ஆன அக்கினியே யாகத்தில் விடப்படும் நெய். அவ்வாறு பிறக்கும் அக்கினியை உஷை (காலைப்பொழுது) முத்தமிடுகிறாள் (பக். 18, 19).

இவ்வாறு 'புணர்ச்சியும் யாகமும் ஒப்பிடப்படுகின்றன'.

## கந்தர்வர்

ஸ்வாமி கந்தர்வர் பற்றித் தரும் செய்திகள் சுவையானவை. கந்தர்வர் பெண்களைப் பிடிப்பவர். தெய்விகப் பெண்களை அப்சரஸ்களை இயல்பாக விரும்புபவர். அவர்கள் இளம்பெண் களின் காதலர்கள். விஸ்வாவசு எனும் கந்தருவனின் வாயாக பெண்களின் யோனி குறிக்கப்படுகிறது. குறிப்பாகக் கலியாணம் ஆகாத பெண்களைக் காதலர்களாகக் கந்தருவர் பிடிக்கின்றனர். திருமணத்தின்போது கணவன் திருமணப் பெண்ணை அனுபவிக்கு முன் கந்தருவன் அவளைப் பிடிக்க முயல்வதால் அவனை விரட்ட வேண்டியுளது. ஆயினும் ஒவ்வொரு பெண்ணும் கந்தருவனால் அனுபவிக்கப்படுவதாக ஒரு கருத்து உண்டு (பக். 21, 22)

நம் இந்து சமய வேத விற்பன்னர்களான சாமியார்கள் எல்லோரும் கந்தர்வராக மாறுவதில் என்ன தவறு?

தொல்காப்பியம் கற்பியலில் 'கரணத்தின் அமைந்து முடிந்த காலை, நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்' (நூற்பா 146) என வருகிறது.

திருமணம் முடிந்தபின், களவிலேற்பட்ட மன இறுக்க மெல்லாம் நீங்கித் தலைவன் தன் மனைவியைக் கூடுகிற முதலிரவு நிகழ்ச்சி பற்றியது இது. இதற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை:

'அது முதனாள் தண்கதிர்ச் செல்வர்க்கும், இடைநாள் கந் தருவர்க்கும் பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து நான்காம் நாள் அங்கியங்கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர

வேண்டிற்று. அங்ஙனம் வேதங் கூறுதலான் எனத் தலைவிக்கு விளங்கக் கூறுதல்".

மணவரைச் சடங்கில் ஐயர் ஓதும் மந்திரம் இது. மணமகளை முதல்நாள் திங்கள் (சந்திரன்) கூடுவானாம்; மறுநாள் கந்தருவர் புணருவாராம்; மூன்றாம் நாள் அக்கினிக்கு அவர்கள் அளிப்ப அவன் புணர்வானாம். இம் மூன்றுநாளும் பொறுமையுடன் கழித்து, நான்காம் நாள்தான் அக்கினி மணமகனுக்கு மண மகளைத் தர அவன் தன் மனைவியைக் கூடுவானாம். இம் மந்திரத்தை சமஸ்கிருதத்தில் கூறாமல், தமிழில் கூறவேண்டும் என்பது என் கருத்து. ஏனெனில் தன் மனைவி, ஏற்கெனவே மூவரால் 'கற்பழிக்கப்பட்டு' மணமேடையில், எதிரேயுள்ள அக்கினியால் தரப்பட்டுத் தான் பெற்றதைப் பொருள் தெரிந்து கேட்டால், என்ன நடக்குமோ? யார் அறிவார்? பேரறிஞர் வ. சுப. மாணிக்கனார், இது வேத வழக்கு என நச்சர் கூறுவதை மிகவும் மனம் நொந்து மறுக்கின்றார்.

## அஸ்வமேத யக்ஞும்

நூறு அஸ்வமேத யாகம் செய்தவனுக்கு இந்திர பதவி கிட்டும். யாகம் செய்வது எப்படி?

முதலில் நான்கு கண்கள் உள்ளது போன்ற நாய் பலியிடப் படும். பிறகு குதிரை ஒன்று மந்திரம் ஓதிப் பல தேசங்களுக்கு அனுப்பப்படும். அதைத் தடுத்து நிறுத்திய அரசனுடன் போர் நடக்கும். வெற்றியுடன் குதிரை திரும்பி வந்ததும் யாகம் நடக்கும்.

ஓராண்டு வரை குதிரை சுற்றிவரும். அதுவரை கொண்டாட் டங்கள் நடக்கும். பிறகு வேறு பல பிராணிகளுடன் அக்குதிரையும், புல் விரிப்பில் நிறுத்திக் கொல்லப்படும்.

"அந்தக் குதிரையுடன் யாக அரசனின் ராணி இரவு முழுவதும் படுத்துக் கொள்வாள். குதிரையுடன் சேர்த்து ஒரே துணியால் போர்த்தப் படுவாள். அதாவது குதிரையுடன் பிரதமராணி சேருவதாகச் சடங்கு".

இதனால் யாகம் செய்த அரசனுக்கு ஆசைகள் எல்லாம் நிறைவேறுமாம்; எல்லாத் தேவதைகளும் வந்து அருள்புரியுமாம் (ஸ்வாமி, பக். 23, 24).

## ஸோம யாகம்

ஸோம யாகத்தில் இரவெல்லாம் ஸோமரஸம் பிழியப் படுகிறது. இது தேவதைகளுக்கும் புரோகிதர்களுக்கும் ஸோம ரசம் அருந்தும் பொதுவிழா. இரவு முழுதும் பருகும்படியான அசாதாரண யாகமாம் இது. மேற்கொண்டு விவரம் வேண்டுவோர் ஸ்வாமி எழுதி அநுராகம் வெளியிட்டுள்ள நூலை வாங்கிப் படித்து இன்புறுவார்களாக.

யாகத்தில் பலியிடப்பட்ட மிருகங்களின் மாமிசம் அந்தண ராலும் புசிக்கப்பட்டே வந்துள்ளது. அரசர்கள் யாகப் புரோகிதர் களுக்கு அடங்கியே இருந்தார்கள் (பக். 32). திருஞானசம்பந்தர், 'பறப்பைப் படுத்தெங்கும், பசுவேட்டு எரி ஓம்பும் சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம்' (1-80-2) என்று கோயில் திருப்பதிகத்தில் பாடுகிறார். ஆக, கி. பி. 7ஆம் நூற்றாண்டிலும் பசு, குதிரை, ஆடு அனையவற்றை, வேள்வியிலிட்டு உயிர்ப்பலி செய்துள்ளனர். இது வேதங்களில் விரிவாகவே உளது. பின்னாளில் மனுஸ்மிருதி வரை விளக்கப்படுகிறது.

யக்ஞப் பலியால் (யாகத்திற்காக மேற்கொள்ளப்பெறும் உயிர்ப்பலியால்) சில தேவசக்திகள் திருப்தி அடைந்து உலகத்துக்கு நல்லது செய்கின்றன. பலியாகும் பிராணியும் நல்லகதியை அடைகிறது (தெய்வத்தின் குரல், 5 பக். 335) என்கிறார் சங்கராச் சாரியார்.

வேள்விக்குப் பயன்படுத்துகின்ற பசு, விலங்கு, பறவைகள் போன்றவை, பின்னர் மேலான கதியை அடைகின்றன என்கிறது மனுதர்ம சாஸ்திரம் (5. 40).

கீதை யாகம் செய்து தேவர்களைத் திருப்திப் படுத்தாத வனைத் திருடன் என்று வசைமொழி கூறுகிறது (3-11, 12).

திருவிளையாடற் புராணத்தில் பசு வேள்வி பற்றி வருகிறது. பசுவை எப்படிக் கொன்றனர்?

"வாயைப் புதைத்து உயிர்ப்பு அடங்க வீட்டி மாய்த்தனர்"

வாயை நன்கு கட்டிவிட்டு, மூச்சு அடங்குமாறு செய்து கொன்றனராம்" *(பா. 33).*

எவ்வாறு பசுவைப் போட்டு வேள்வி செய்தனர்?

'வேதம் பணித்திடும் வபையை வாங்கிப் படர்எரி சுவை முன் பார்க்க, குணித்த வானாட்டார்க்கு ஊட்டிக் கோதிலா வேள்வி செய்தான்" *(34).*

வேதம் பணித்தபடி, கொன்ற பசுவின் வயிற்றினுள் இருக்கும் 'வபை'யை எடுத்து (வெள்ளைநிறநிணம்) தேவர்களுக்குத் தரப்பட்ட யாகம் இது.

மேலும் வாஜபேயம் என்பது 21 யாக வகைகளுள் ஒன்று. அதில் 23 பசுக்களைப் பலியிடக் கூறியிருக்கிறது. அந்த மாமிசத்தை, வேள்வி செய்யும் ரித்விக்குகள் (எ) பிராமணர்கள் உண்ண வேண்டுமாம். அந்த 'வபை' என்ற வெண்மை நிற வபையைச் சிறிதளவாவது தின்ன வேண்டுமாம்.

இவ்வாறு வருவன பலவுள. 'இதோ இந்து சமயம்' என்ற நூலில், மலேசியச் சிவநெறிச் செல்வர், இந்து சமயத்தை மிகப் போற்றி எழுதும்போது இத்தகையனவும் நடந்தன என, நடுவுநிலையுடன் பதிவு செய்கிறார்.

"யக்ஞங்கள் (யாகம், வேள்வி) செய்வதே வேதத்தின் தலையாய நோக்கம். பரஞானம் பெறுவது மற்றொரு நோக்கம் என்றும் கூறுவர். வேதம் செய்யப்பெற்ற காலத்தில் முதல் நோக்கமே (வேள்வி) மேலோங்கி இருந்தது. பிறகு வேதக்காரர்கள் தமிழ் மக்களோடு தொடர்புகொண்ட காலத்தில் ஞானம் என்ற பொருள் அவர்களுக்குத் தெரியவந்தது. அதன் விளைவே பின்னர் எழுந்த உபநிடதங்கள்" *(பக். 29 - 31).*

*(திருவின் நாயகன் (எஸ்ஸாரெம் பழனியப்பன்), இதோ இந்து சமயம், மலேசிய இந்து சங்கம், 2003).*

இந்நூல் இந்து சமயப் பெருமைகளை மிக விரிவாக விளக்குவது. இவை குறை நீக்கி, நிறை போற்றும் இடங்கள். யாரும் இது இந்து சமய மறுப்பு நூலோ என்று கருதவேண்டாம்.

நம் வேந்தர்களும் அரசர்களும் வேள்வி செய்ததை, புற நானூறு முதற்கொண்டு, அனைத்து நூல்களும் கூறுகின்றன. காரணம் நம்மவர்களுக்கும் ஊன்சோறும் கள்ளும் தேறலும்தானே மிகப் பிடித்தமானவை. அதனால் வேள்வி செய்து, ஊன்தின்று, ஸோம ரஸம் பருகிப் புரோகிதர்களுக்கு அடங்கி வாழ்ந்ததையே, நம் வேந்தர்களிடமும் மிகுதியாகக் காண்கின்றோம். சங்ககாலம் முதலே, பிராமணியம், மேலிடமான ஆளும்வர்க்கம் அனைத்தை யும் ஆட்கொண்டுவிட்டது. 'உரோம சாம்ராச்சியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்' எனக் 'கிப்பன்' மிகப்பெரிய நூலை எழுதினான். 'சங்க காலத் தமிழர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என, அதைப் போன்றதொரு நூலெழுத நிறையச் சான்றுகள் உள. இதேநிலை இன்றைய அரசியலுக்கும் ஆன்மிகத்திற்கும் ஏற்பட்டுவிட்டது போலும் என எண்ணத் தோன்றுகிறது.

வேதங்களில் வருவன எல்லாம் தேவதைகளே. பிற்காலப் பிராம்மணம், உபநிடதங்களை நினைவிற்கொண்டு, வேதங்களில் 'பரம்பொருள்' பற்றியும் பேசப்படுவதாகக் கூறுகின்றனர். அதிலும் வி ஷ்ணுவே பாற்கடலில் எழுந்த ஆலகால விஷத்தை அருந்தியதாக வருவது வியப்பளிக்கிறது (பக். 27). மேலும் ருத்ரனைப் பாத்திர மாகக்கொண்டு, அந்நஞ்சு அருந்தப்பட்டதாம்.

வி ஷ்ணுவைவிட, ருத்ரன் என்ற தேவதை மிகத் தாழ்வாக எண்ணிக் கூறப்படும் இடங்கள் பலவுள (5-3-3).

ருத்ரனின் பிறப்பைப் பற்றிக் கூறுமிடம் அருவருப்பாக உளது.

'பிரஜாபதி ஆட்டு வடிவில், மான் வடிவிலிருந்த தன் மகளையே புணர்ந்துவிட்டபோது, அவரைத் தண்டிக்க நினைத்த தேவதைகள் கொடுமையான திரவியங்களைச் சேர்த்து உண்டாக்கப்பட்டவரே ருத்ரன். அதனாலேயே பயங்கரமான வராக இருக்கிறார்" (பக். 26).

தமிழ் மறைகளின் உட்பொருளாகச் சிவன் இருக்கின்றான். ஆலின் கீழிருந்து அவனுரைத்த திருமறைகள் வேறு; வடமொழி ரிஷிகளின் பெயரால் வழங்கும் நான்கு வேதங்கள் வேறு. வடமொழியில், இருக்கு வேதத்தில் சிவனையும் சிவனடியாரையும்

மேலும் அவமானப்படுத்தியிருக்கும் இடங்கள் உள. அவற்றை எமது 'சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற பகுதியில் தந்துள்ளோம்.

நாம் எதனையும் எம் கருத்தாக எழுதவில்லை. தொல்பொருள் ஆய்வில், பல அடுக்குகள் கிடக்கும்போது, மேலே உள்ளதுதான் கட்புலனாகும்; சிறிது தோண்டினால் இடையிலுள்ளவை தெரியும்; மேலும் ஆழமாகத் தோண்டினால் உண்மை வெளிப்படும்.

நமக்கு யார்மீதும் பகை இல்லை; சார்பும் இல்லை. பிராமணியம் நடுவுநிலை தவறாதபோது அந்தணியம் ஆகிறது. அதை நாம் போற்றுகிறோம். சுருக்கமாகச் சொன்னால், எமது இந்நூல் உண்மையைத் தேடும் ஒளிக்கதிர் ! வேர்களைத் தேடும் விழுது ! அவ்வளவே !

❖❖❖❖

# 6

# யஜுர் வேத சாரம்

## யஜுர் வேதம்

இருக்கிற்கு அடுத்த இரண்டாம் வேதம் யஜுர் வேதம். ஆரியர்களின் வருகையையும் வாழ்வையும் இருக்கில் காணலாம். யசுர்வேதம் சடங்கு முறைகளைக் கூறுகிறது. பிறப்புமுதல் இறப்புவரை விவரமாகக் கூறப்பட்டுள்ள இவை, அவர்களுக்கு உரியன; நமக்கு உரியன அல்ல.

இது கிரு ண யசுர் வேதம், சுக்கில யசுர்வேதம் என இரண்டு பிரிவுகளையுடையது. கிரு ண - கருப்பு; சுக்கில - வெண்மை. கிரு ண யசுர், ஆரியர்களில் இருந்த ஒரு குறிப்பிட்ட பிரிவின ரதாகலாம் என்பர். அதனிலும் சுக்கில யசுர்வேதமே போற்றப் படுகிறது. கிரிஃபித்தின் விளக்கம் வருமாறு:

> **'யஜுர் என்றால் அறிதல் என்று பொருள். வேள்விகளுக்குத் தேவையான அறிவைப் பெறுவது. பாடப்பெறும் பாடல் களைக் கொண்டது இது. மாயம், மந்திரம் போன்றவற்றைக் கூறுவது அதர்வ வேதம் (பிரம்ம வேதம்). சாதிமுறை பற்றி வருவதால் இது சிறிது பிற்பட்டதாகலாம். சுக்கில யசுரில் தெளிவான பாடல்கள் மிகுதி. இது இரண்டாயிரம் பாடல் களைக் கொண்டது. பெரும்பகுதி ரிக் வேதத்திலிருந்தும் சிறிது அதர்வத்திலிருந்தும் எடுக்கப்பட்டவை இதிலுள. அசுவமேதம், புருஷமேதம் பற்றியவை உரைநடையில் உள்ளன'.**

இது முழுமையாக ஐரோப்பிய மொழிகளில் வெளியிடப்பட வில்லை என்ற குறிப்பையும் கிரிபித் விளக்கியுள்ளார். வீபர், லத்தின் மொழியில் அத்தியாயங்கள் 9,10 ஆகியவற்றை வாஜசநேய சம்ஹிதை என்ற பெயரில் வெளியிட்டாராம். இது புருஷமேத யாகத்தில் பலியிடவேண்டிய ஆண்கள், பெண்கள் பற்றிய விவரங்கள் அடங்கியதாம்.

கிரிபித் கிரு ண யசுர் வேதத்தை ஆங்கில மொழியாக்கம் செய்யவில்லை. எனினும் அவரது சுக்கில யசுர் வேத ஆங்கில உரை மிக விரிவாக உளது.

இதில் ஒரு முக்கிய குறிப்பு என்னவென்றால் தமிழர்கள் மொழியாக்கம் செய்யும்பொழுதும், ஆய்வுரை எழுதும் பொழுதும் வேதம், கீதை பற்றியெல்லாம் செவ்விதாக்கம் செய்தும், இக்காலத்தவர் வெறுக்கக் கூடியவற்றைக் கூடியவரை மாற்றியும் விடுத்துமே எழுதுகின்றனர். ஆனால் ஐரோப்பியர்கள் உள்ளது உள்ளபடி மொழியாக்கம் செய்துள்ளனர்.

உண்மையைச் சொன்னால் இவ் வேதத்தில் வருவனவும் ஆரிய திராவிடப் போராட்டமே. மேலுலகத் தேவர்களை வரவழைக்கச் செய்த யக்ஞம், ஹோமம் அனைத்தும் முதலில் எதிரிகளை அழிக்கத் துணைசெய்யுமாறு இந்திரன் அக்கினி சோமன் போலும் பல நூறு மேலுலகத் தேவர்களை, தேவதைகளை அழைப்பனவே. தங்களுக்கு எல்லா வளமும் நலமும் தரவேண்டுமெனப் பிரார்த்திப்பன அடுத்த இடம்பெறுகின்றன.

முற்றிலும் பிறப்புமுதல் இறப்புவரை செய்வன வேள்விச் சடங்குகளே. பகைவர்கள் மீது சீற்றம் கொண்டு பாடியன பல. சிலவற்றைக் காண்போம்.

*1. அநுவாகம் - 2. அதில் 2. '1 அரக்கர்கள் எரிக்கப்பட்டுள்ளார்கள்; அநியாயர்கள் சுடப்பட்டுள்ளார்கள்.*

*2. அநுவாகம் - 4. அதில் 3. அரக்கர்கள் எரிக்கப்பட்டுள்ளார்கள். அநியாயர்கள் அனலாக்கப் பட்டுள்ளார்கள்.*

*3. அநுவாகம் - 6. அதில் 1. அரக்கர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். அசுரர்கள் அகற்றப்பட்டுள்ளார்கள்.*

*4. அநுவாகம் - 13. அதில் 2. தேவர்கள் என் பிரம்மத்தைப் (அறிவைப்) பெருக்கியுள்ளார்கள். அவர்கள் (பகைவருக்கு) ஏழ்மை தாழ்மையை உண்டுபண்ணியுள்ளார்கள். இந்திரனே! அக்கினியே! இனி எல்லாப் பக்கங்களிலும் என் சத்துருக்களைச் சிதறடியுங்கள்!*

5. அநுவாகம் - 14. அதில் 3. இந்திரனே! அக்கினியே! 99 கோட்டைகளின் தலைவர்களான தாசர்களை நீங்கள் ஒரே மூச்சில் சிதறடித்தீர்கள்!

இவ்வாறு ஆடுமாடுகளுடன் கூடி வாழ்ந்த கிராம மக்களினமென வாழ்ந்தவர்களாக ஆரியர்களும் கோட்டை கொத்தளங்களுடன் கூடிய நகர நாகரிக மக்களினமாக அவர்களின் பகைவர்களும் சித்தரிக்கப்படுவதைப் பல நூறு பாடல்களில் காண்கிறோம்.

பசுவை வெட்டி, ஆகுதி செய்யும் வேள்வி அநுவாகம் 19இல் வருகிறது. அதற்குப் 'பசுவின் மகிமை' என்று தலைப்பிட்டுள்ளனர். பசு யக்ஞத்தில் கொல்லப்படுவதால் மகிமை பெறுகிறது. அதில்,

3. நான் நெய் நிறையும் உன்னை (பசுவை) புவியின் தலையக்ஞஸ்தான அளிப்பு நிலையத்தில் (யக்ஞத்தில் கொன்று) ஊற்றுகிறேன். சுவாஹா!

4. இராட்சதர்கள் தீமை புரிபவர்கள் சுற்றப்பட்டுள்ளார்கள், இப்படி நான் அரக்கர்கள் கழுத்தை வெட்டுகிறேன் (பசுவை).

5. எங்களை வெறுப்பவனை, நாங்கள் வெறுப்பவனை நான் இப்படிக் கழுத்தை வெட்டுகிறேன் (பசுவை வெட்டும்போது சொல்வது).

இவ்வாறு நூற்றுக்கணக்கில் வருகின்றன. ஒவ்வொரு வேள்வி யாகமும் அரக்கர்களை அழித்து, ஆரிய சாம்ராச்சியத்தை நிறுவவே செய்யப்படுகின்றன. அக்கால எதிரி அரசர்களையும் எவ்வாறோ தம் பக்கம் திருப்பி, அவர்களைக் கொண்டும் செய்விக்கின்றார்கள்.

இத்தகைய வேதங்களைப் 'பொது' என்றும் அதை அன்றைய சண்டாளர்கள், அசுரர்கள், இராட்சதர்கள், தஸ்யூக்களாக இருந்து, இன்றும் அவ்வாறே தீண்டாமைக்காட்பட்டு வாழ்பவர்களும் சேர்ந்து, "வேதங்களை இடைவிடாது ஓதி ஓதி மகிழுங்கள்' என்று ஜம்புநாதன் அழைக்கின்றார். நம்மவர்கள் அனைவரும் வேதம் தடக்கும் 'பொது' என்று ஓதுகிறார்கள்.

எம் போல்வார்க்கு இது பெரிய கேள்வியாக முன்னிற்கிறது. பெரியவர்கள்தான் இவ் ஐயப்பாட்டை விடுவிக்க முன்வரவேண்டும்.

"யஜுர் வேதத்தில் அக்கினி, இந்திரன், சூரியன், வி ஞு, சோமன், மருத்துக்கள், புவி, சலம், உஷை, வருணன், ருத்ரன், சரஸ்வதி முதலியவர்கள் முதன்மையான தேவர்கள்". எத்தனை முறை ருத்ரன் வந்தாலும் அவன் தேவதைகளுள் ஒரு தேவதையாகவே வருகின்றான்.

"யக்ஞத்தின் பல வடிவங்களான சோமயாகம், வாஜபேயம், இராஜசூயம், புருஷமேதம், சர்வமேதம், அசுவமேதம், செளந்தரமணி, பிரவர்க்கியம் எனப் பல அங்கங்கள் விளக்கப்பட்டுள்ளன".

"யக்ஞம் என்றால் வி ஞுவுக்குப் பெயர்"

"யக்ஞம் என்றால் புவியிலுள்ள எல்லாச் செல்வங்களுக்கும் பெயர். அவற்றை அரக்கர்கள் குவித்து வைத்திருந்ததை, வி ஞு என்னும் யக்ஞன் இந்திரன் உதவியால் கைப்பற்றினான்".

மேலே காணப்படுபவை ம.ரா. ஜம்புநாதனின் முன்னுரையில் உள்ளவை.

இராஜசூய யாகம் பற்றிய நோக்கம் அநுவாகம் 109இல் உளது. அதில் வரும் ஒரு கருத்து: காடு, கிராமம், சபை சகோதரர்களில் நாங்கள் செய்யும் பாவத்தின், ஆரியன் சூத்திரனுக்குச் செய்யும் பாவத்தின், இரண்டிலொன்றின் அறத்துக்கு மாறான பாவத்தின் பரிகாரன் நீயே! சுவாஹா!

சோமன் (மது) நமது பிராமணர்களின் அரசனாகும்; சத்துருக்களை அழிக்கத் துணை செய்யும் அரசன் வி ஞுவின் பாதமாவான் என்கிறது. அநுவாகம் 115 (காண்டம் 1).

பிதுரு யாகம் யாருக்கு? போரில் வீழ்ந்து இறந்த அவர்களின் பிதுருக்களுக்கு. அவர்கள் தங்களுக்காக உயிர் விட்டவர்களை, சோமனை விரும்பும் தங்கள் பிதுருக்களை அழைத்துச் செய் கிறார்கள் (அநுவாகம் - 126). வேத மூல நூற்படி இதில் நமக்குத் தொடர்பில்லை. வடமொழி மனுஸ்மிருதியும் புராணங்களும்தான் செய்த - செய்யப்போகிற பாவம் அனைத்திற்கும் பரிகாரங்கள் கூறுகின்றன. இதில் அவ்வச் செயலுக்கு ஒரு பரிகாரம், தோச நீக்கங்கட்குப் பரிகாரம்,

சாதிக்குத் தகுந்தபடி பரிகாரம் எனப் பலநூறு பிரிவுகள் உள்ளன. மேலும் பணச் செலவுக்குத் தகுந்தபடி பரிகார பலம் கூடுதலாகக் கிடைக்கும். இது இன்று பிராமணர் களின் வருமானத்திற்கான தொழிலாகிவிட்டது.

*அநுவாகம்: 1-146. சோமபானம் - 22. தேவர்களால் செய்யப்படும் பாவத்தின் பரிகாரன் நீ. மனிதர்களால் செய்யப்படும் பாவத்தின் பரிகாரன் நீ. பிதுருக்களால் செய்யப்படும் பாவத்தின் பரிகாரன் நீ.*

## பரிகாரச் சிக்கல்

வேத மூலநூல்களில், யக்ஞத்தில் ஏதும் குற்றம் குறை நேர்ந்தால் அதை மன்னிக்கும்படி, தேவதைகளுக்குப் 'பரிகாரம்' செய்யும் மந்திரங்கள் வருகின்றன. பிற்பாடு வந்த நூல்கள்தான் பாவமனைத்திற்கும் பரிகாரம் கூறுகின்றன.

அசுவமேத யாகத்தில், குதிரையை வெட்டி, ஆகுதியாக அக்கினியில் போடும்போது, அதன் ஒவ்வொரு அங்கமும் சுவாஹா செய்யப்படுவது, இதைப்போலவே. பசுவை, ஆட்டை, ஆமையை, ஏனைய உயிரினத்தை நெருப்பில் போட்டனர் என்பதை அறிய உதவுகிறது.

*காண்டம் 7 - அநுவாகம் 342 (குதிரையின்)*

*பற்களுக்கு சுவாஹா! தாடைகளுக்கு சுவாஹா! உதடுகளுக்கு சுவாஹா! நாசிகளுக்கு சுவாஹா! கண்களுக்கு சுவாஹா! காதுகளுக்கு சுவாஹா!*

*கீழ் கண்ணிமைகளுக்கு, உயரமான மேற் கண்ணிமை ரோமங்களுக்கு சுவாஹா! மேலமை ரோமங்களுக்குக் கீழான கண்ணிமைக் கேசங்களுக்கு சுவாஹா! தலைக்கு சுவாஹா! புருவங்களுக்கு சுவாஹா! நெற்றிக்கு சுவாஹா! மேல் தலைக்கு சுவாஹா! மூளைக்கு சுவாஹா! கேசங்களுக்கு சுவாஹா! சுமக்கும் பாதத்துக்கு சுவாஹா! . . . கால்களுக்கு சுவாஹா' இடைகளுக்கு சுவாஹா! தொடைகளுக்கு சுவாஹா! அங்கங்களுக்கு சுவாஹா! ஆத்மாவுக்கு சுவாஹா! அனைத்துக்கும் சுவாஹா! (முழுவதும் தர இடமில்லை).*

இவை அனைத்தையும் கூட்டினால் குதிரை திரும்ப வந்துவிடும். புருஷமேத யாகத்தில் மனிதர்களைப் பலியிட்டுள்ளனர். சுக்கில யசுர்வேதம் - அநுவாகம் 396. கிரிஃபித் தரும் விளக்கக்குறிப்பு: "இதுவும் அடுத்த பாடலும் புருஷமேதம் பற்றியது. அசுவமேதம் போன்றே கம்பங்களில் குதிரைக்குப் பதிலாக மனிதர்களையே கட்டிப் பலியிடுவது. ஆனால் மனிதர்கள் நிஜமாகவே பலியிடப் படுவதில்லை. யக்ஞத்திற்குப் பிறகு அவர்கள் எவ்விதப் பாதிப்புமின்றி விடுதலை செய்யப்படுகின்றனர்" (எது உண்மை என்று விளங்கவில்லை).

## நான்கு வருணங்கள்

சுக்கில யசுர் வேதம் - அத்தியாயம் 31 - அநுவாகம் 397. புருஷ சூக்தம் - சிருட்டி.

10. புருஷனை அவர்கள் எப்படி பற்பல பாகங்களாய் பிரித்து அறிவார்கள்? அவன் முகம் எது? கைகள் எவை? அவன் தொடை பாதங்களின் நாமங்களெவை?

11. பிராமணன் அவனது முகமாகும்; அவன் கைகளால் இராஜன்யர்கள் - குணமாவார்கள். அவன் தொடைகள் வைசியர்களாவார்கள்; அவன் பாதங்களினின்று சூத்திரர்கள் தோன்றுவார்கள்.

**இப் பகுதிக்கு கிரிஃபித் தந்துள்ள விளக்கம்:**

"பிராம்மணன் புருஷனுடைய வாயாகக் கூறப்படுகிறான். காரணம், அவன் வாயினால் துதிகளைக் கூறுகிறான். அப் புருஷனுடைய தோள்கள் க்ஷத்திரியனாகக் கூறப்படுகிறது. (ராஜன்ய) பலசாலிகளான இவர்கள் ஆயுதமேந்தி நாட்டைப் பாதுகாக்கின்றனர். புருஷனுடைய பலம் வாய்ந்த தொடையாக (வைசியன்) விவசாயிகளும் வியாபாரிகளும் கூறப்படுகின்றனர். இவர்கள்தான் சமூகத்தின் தூண்களாகக் கருதப்படுகின்றனர். கால்கள் சூத்திரனாகக் கூறப்படுகிறது. இவனுடைய உழைப்பினால்தான் மொத்த சமுதாயமும் செழிக்கிறது."

இந்தப் பகுதி ஒன்றே நான்கு வருணங்கள் பற்றிக் கூறுகிறது.

நாம் ஆரியத் தொடர்புடைய சித்தாந்தங்களை - சமஸ்கிருத மூல நூல்களையும் விளக்கங்களையும் பழிக்கவில்லை. அவை அவர்களுடைய கருத்து; அவர்களின் வரலாறு. (நான்கு வருணங்களும் அவர்களுக்குட்பட்ட குழுக்கள். முதலில் நமக்குத் தொடர் பில்லை. நம்முடன் கலந்த பிறகுதான் வந்தது 'விபரீதம்').

தமிழர்களின் - அல்லது திராவிடர்களின் சித்தாந்தம் வேறு; வரலாறும் பண்பாடும் நாகரிகமும் வேறு.

காலப்போக்கில், பி. டி. எஸ். ஐயங்கார், தமிழர் வரலாற்றில் கூறுவதுபோல, தங்களின் வேள்வி முதலியன வருமானம் தராத சூழல்கள் ஏற்பட்டபோது தங்கள் கொள்கைகளை மறைத்துக் கொண்டு, பத்தி மார்க்கத்துக்கு மாறினர். அதே சமயம் தங்கள் சமுதாய மேன்மை கருதி, தங்கள் கருத்துவழி வாழ்வையும் காத்துக்கொண்டு, தனித்தே வாழ்ந்துகொண்டு, மற்ற அனைவருக் கும் குருமார்கள் போலவும் சடங்கு செய்விக்கும் புரோகிதர் களாகவும் மாறிக்கொண்டு, வருமானம் தேடி வாழ்கின்றனர். பிறப்புவழிச் சாதியைப் புகுத்தினர்.

இந்நிலையில் தமிழர்களுக்கேயுரிய சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை (துர்க்கை) வழிபாடு பற்றிய, பல புராணங் களை உருவாக்கினர். இவை சிறிதளவும் இல்லாத வேதங்களிலும் உபநிடதங்களிலும் இருப்பதுபோல் காட்ட, சிலவற்றை நுழைத் தும், முன்பிருந்தவற்றிற்குப் புதுவிளக்கம் தந்தும் ஆகமங்கள் தங்களுக்குச் சிறிதும் தொடர்பற்றன மட்டுமன்றி, முரண்பட்டன வாயினும் அவற்றையும் தம்மொழியில் ஆக்கிக்கொண்டு, தமிழர்களுக்கேயுரிய மறைகள் ஆகமங்கள், கலைநூல்களை எல்லாம் அழித்து ஒழித்தும் 'எல்லாம் தங்களிடமிருந்தே' வந்தன என்று சாதிப்பது, உலகம் கண்டிராத பெரிய 'சூழ்ச்சித் தந்திர மாகும்'.

அதற்கும் மேலே, 'தமிழர்களுடைய திருக்கோயில்களுக்குள் நுழைந்துகொண்டு, தமிழை துவேஷ பாஷை, தோச பாஷை என இன்றும் கூறி, தாய்த்தமிழை இறைவன்முன் ஓதவிடாதும் அனைத்துச் சடங்கையும் வடமொழி மயமாக்கி, தமிழர்களில் மிக

மேல் நிலையிலிருப்பவர்களையெல்லாம் கையில் போட்டுக் கொண்டு, ஏனையவர்களையும் 'மூளைச்சலவை' செய்து வாழ்வதை, இன்னமும் பொறுத்துக்கொள்ள வேண்டுமா? இவ்வாறு 'உண்மை களை' உள்ளபடி சொல்பவர்கள் பகைவர்களாவார்களா? காலம் மாறாதா? கடவுளர்கள் கண் திறக்க மாட்டார்களா?

ருத்ரனே சிவன் என்பதுபோல், இடையிலே நுழையும் இவர்களின் மாயமந்திர மொழிகளை, யசுர் வேதத்தின் இறுதியில் வருவது கொண்டு, இவர்கள் செய்தன எல்லாம், தவறுபட விளக்கும் ஏமாற்றுவித்தைகளே என்பதை உறுதிப்பட அறியலாம்.

சுக்கில யஜுர் வேதம் - அத்தியாயம் 34, அநுவாகம் 400.

தலைப்பு சிவ சங்கற்பம்:

இதில் முதல் ஆறு பாடல்களும் சிவ சங்கற்பம் என இவர்கள் மொழியாக்கம் செய்துள்ளனர். நல்ல வேளையாக இவற்றுக்கு கிரிஃபித்தின் ஆங்கில மொழியாக்கமும் உளது. சிவனைத் தங்கள் வேதத்திற்குள் இருப்பதாக, இவர்கள் எடுத்த முயற்சிகளில் இது ஒன்று.

வேதங்கள் பிரும்மாவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன என்பர். பல சூக்தங்களில் - நூற்றுக்கணக்கில் விஷ்ணுவே அங்கு பரம்பொருள்போல் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறார். தங்கள் வேதத்தில் இல்லாத சிவனை இருப்பதாகக் காட்டியும் பிராம் மணம், உபநிடதம், புராணங்களில் சிவருத்திரன் எனப் பெயரிட்டு, சைவ சித்தாந்த மூலமே தங்களிடமிருந்து வந்ததாக ஓர் உபநிடதத்தைக் காட்டவல்ல இவர்களை, இப்பகுதி நன்கு 'தோலுரித்துக் காட்டுகிறது' எனலாம்.

## இது வடமொழி மூலம்:

பாடல் 1: மனிதன் விழித்திருக்குங்கால் எந்த திவ்யமான வஸ்து - தூரமாய்ச் செல்லுகின்றதோ, அவன் உறங்கும் பொழுது எது அவனுக்குத் திரும்புகின்றதோ, தூரஞ் செல்லும் சோதியின் ஏக சோதியான அந்த எனது மனம் சிவ சங்கற்பமுடனாக வேண்டும்.

இதற்கு கிரிஃபித்தின் ஆங்கில ஆக்கம்:

1. That which, divine, mounts far when man is waking, that which raturns to him when he is sleeping. The lights one light that goeth to a distance, may that my mind, be moved by right intention.

பாடல் 2: எதனால் தருமம் மிகும் தீரர்கள் யக்ஞும் போர்களில் செயல்களைச் செய்கிறார்களோ, அபூர்வமான எது பிரசைகளில் சேர்ந்துளதோ, அந்த என் மனம் சிவ சங்கற்பமுடனாகட்டும்.

2. Wherby the wise and thoughtful in assemblies, active in sacrifice, perform their duties. The peerless spirit stored in living creatures, may that, my mind, be moved by right intention.

பாடல் 3. பிரசைகளின் அகத்தில் எது பிரக்ஞானம் அறிவு நிலையாகி அமுத சோதியாயுள்ளதோ, எஃதன்னியில் மனிதன் எச் செயலையும் செய்வதில்லையோ அந்த என் மனம் சிவ சங்கற்பமுடனாகட்டும்.

3. That which is wisdom, intellect, and firmness, immortal light which creatures have within them. That without which men do no single action, may that, my mind be moved by right intention.

பாடல் 4: எந்த அமுதத்தால் இறந்ததும் நிகழ்வதும் வரப்போவதும் அனைத்தும் அறியப்பட்டு, எதனால் ஏழு ஹோத்துருக்களுடன் யக்ஞும் விரிக்கின்றதோ, அந்த என் மனம் சிவ சங்கற்பமுடனா கட்டும்.

4. Wherby, immortal, all is comprehended, the world which is and what shall be hereafter. Wherby spreads sacrifice with seven Hotars, may that, my mind be moved by right intention.

பாடல் 5: இரதச் சக்கர நடுவே கம்புகளைப்போல எதில் ரிக்கு, சாமன், யஜுர் வேதம் ஸ்தாபனமாயுள்ளதோ, பிரசைகளின் சித்தம் எல்லாம் எதில் இழைக்கப்பட்டுள்ளதோ, அந்த என் மனம் சிவசங்கற்பமுடனாகட்டும்.

5. Wherein the Richas, Samans, Yajur - verses, like spokes, within a car's nave, are included. And all the thought of creatures is inwoven, may that, my mind, be moved by right intention.

பாடல் 6: வழிகாட்டும் கடிவாளங்களால் நல்ல சாரதி துரிய குதிரைகளை நடத்துவதுபோல், மனிதர்களை எது நடத்திச் சென்று, இருதயத்தினுள்ளே வகிக்கின்றதோ, எது திடமாயும் அதிதுரிதமாயுள்ளதோ அந்த என் மனம் சிவசங்கற்பமுடனாகட்டும்.

6. Controlling men, as, with the reins that guide them, as skilful charioteer fleet - foot horses. Which dwells within the heart, agile, most rapid, may that my mind be moved by right intention.

மூலத்திற்கும் மொழியாக்கத்திற்கும் தொடர்பிருக்கிறதா என எண்ணிப் பார்க்கவேண்டும். ஆயிரம் ரிஷிகளின் பெயர்களை உள்ளவாறே மொழியாக்கம் செய்த கிரிபித், 'சிவன்' என்ற சொல், மூலத்திலிருந்தால் விட்டிருப்பாரா? இங்கே சிவசங்கற்பம் எங்கே வந்தது?

இதையும் ஏதாவது நமக்குத் தெரியாத மந்திரத்தை ஓதி, மாற்றப் பார்ப்பார்கள். இந்த இடத்தில் மட்டும் கிரிபித் தவறியதாகக் கூசாமல் சொல்லப் பார்ப்பார்கள். பல ஆயிரம் மந்திரங்களிடையே, இங்கு மட்டும் சிவன் வருவது வியப்பேயாம். இதை நீங்களே படித்துப் பார்த்து உண்மை தெளியுங்கள். வேதம் - வேதாந்தம் - வேதசிரசு - உபநிடதம் - புராணம் எல்லாவற்றிலும் தமக்குச் சற்றும் தொடர்பில்லாத சிவனையும் சிவநெறிச் சித்தாந்தத்தையும் நுழைத்தனர் என்பதற்கு, இப்பகுதி ஒன்றே முழுமையான சான்றாகாதா?

தமிழர்களில் ஒருவன்கூட இதை உணரமாட்டானா? அனைவருமா மழுங்கிப் போனார்கள்?

சைவ சித்தாந்தமும் உபநிடத மூலவேரிலிருந்து கிளைத்ததே என்று இன்றும் எழுதியும் பேசியும் வரும் சித்தாந்திகள், மேலே காட்டிய ஆறு பாடல்கள் பற்றி என்ன நினைக்கிறார்கள்? யாரேனும் வாய்திறப்பார்கள் என்றே நம்புகின்றேன்.

## ஸ்வாமியின் கருத்துக்கள்

யஜுர் வேதம் பற்றிய பகுதியில், அவ் வேதம் தொடர்பான சில கதைகளையும், இவ் வேதங்களை சுரபேதம் - எழுத்தொலி வேறுபாடின்றி ஓதவேண்டிய முறைகள் பற்றியும் மிக விரிவாக விளக்குகின்றார். இன்று இவ்வேத மந்திரங்களைத் தமிழில் எழுதியும் அச்சிட்டும் வைத்துக்கொண்டு படிக்கிறார்கள். மேலும் சில தொடர்களைக் கூறி 'சமர்ப்பியாமி' என முடிப்பதே நமக்குக் கேட்கிறது. இவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேறு தொழில்களை நாடுவது நல்லது.

யஜுர் வேதத்தைக் கேட்டுப் பரப்பியவர் வைசம்பாயனர்.

வேதங்களுள் யஜுர் வேதமே சிறந்தது.

வேதம் பிரபஞ்சத்திற்கே உரியது. தமிழகத்திலும் கிராமங் களிலும் வேத முழக்கம் கேட்டே வந்துள்ளது. வேத பாராயணத் தால் எல்லா இலட்சியங்களும் கைகூடுகின்றன.

இவ் வேதத்தில் 2198 பஞ்சாதிகள் உள்ளன.

வேதத்தை உச்சரிக்கப்பட வேண்டிய முறையறிந்து ஓத வேண்டும். இன்றேல் தப்பாகிவிடும்.

பலம் - என்ற சொல், வடமொழி வர்க்க எழுத்து முறையில் பலவாறு உச்சரிக்கப்படும். ஒரு வர்க்க எழுத்தைப் பயன்படுத் தினால் ஒரு பொருள்.

பலம் - Palam - இறைச்சி
Balam - பழம்
Ppalam - உடற்பலம்

ஓர் எழுத்திற்குப் பதில் இன்னோரெழுத்தை, ஓர் உச்சரிப் பிற்குப் பதில் இன்னோர் உச்சரிப்பைக் கூறிவிடுவதால் தவறான விளைவு உண்டாகும். ஸ்வர பேதத்தால் ஏற்பட்ட பிழைகள் பற்றிய கதைகளை எழுதியுள்ளார். இன்று ஸ்வர பேதமின்றி உச்சரிப்பவர் நூற்றில் ஒருவராவது உண்டா என்பது ஆராய்ச்சிக்குரியது.

## சுக்ல யஜுர் வேதம் உண்டான விதம்

வைசம்பாயனரிடம் யாக்ஞவல்கியர் வேதாத்யயனம் செய்தார். முனிவர்கள் கூடி, விவாதம் நடத்த முடிவு செய்தபடி வைசம்பாயனர் வராததால், அவருக்கு பிரும்மஹத்தி தோசம் பிடித்துவிட்டது. உடனே அவர், தம் பிரும்மஹத்தி தோஷம் நீங்கும் விரதத்தைத் தமக்காகச் சீடர்கள் எல்லோரும் செய்ய வேண்டும் என்றார். யாக்ஞவல்கியர் போதிய திறமை இல்லாத மற்ற சீடர்கள் வேண்டாம்; நானே செய்கிறேன் என்று பணி வுடனும் மரியாதையுடனும் கூறினார். இதனால் கோபப்பட்ட வைசம்பாயனர், "இம் மாணவர்களை எல்லாம் தேஜஸ் இல்லாத பிராமணர்கள் என்றா கூறுகிறாய்? உனக்கு அகங்காரம் அதிகம். நீ இனி என்னிடம் பெற்ற வேதத்தை விட்டுவிடு" என்றார். யாக்ஞவல்கியர், இதற்கு "உம்மீது கொண்ட அன்பினாலேயே அவ்வாறு கூறினேன். கற்ற வேதத்தை விட்டுவிடு என்று நீர் சொன்னபின் அது எனக்குத் தேவையில்லை", என்று கூறி, தாம் கற்ற யஜுர் வேத சாகைகளை இரத்தத்துடன் கக்கிவிட்டார். அதை சக மாணவர்கள் தித்திரிப் பறவைகளாகி எடுத்துக் கொண்டார்கள். அவர்களே 'தைத்ரீயர்கள்' ஆவர். பிறகு யாக்ஞவல் கியர், தவம் செய்து, தம் குருவிடம் இல்லாத சாகைகள் வேண்டு மென்று, குதிரை வடிவில் வந்து நின்ற சூரியனிடம் கேட்டு, பதினைந்து புதிய சாகைகளைப் பெற்றார். இவற்றைச் சூரியனி டமிருந்து பெற்றதால், இவற்றைப் பின்பற்றுவோர் 'வாஜிகள்' எனப்படுகின்றனர்.

இவ்வாறு சுக்ல யஜுர் வேதம் உண்டானது. இதற்கு வேறுவித வரலாறும் உண்டு.

சிலர் இவற்றை நம்புவதில்லை; வேறு சிலர் அனைத்துமே நம்பப்படுவதாகும் என்றனர். இதை வெளிநாட்டு அறிஞர்கள் அறியாதது வியப்பில்லை. நம் நாட்டு அறிஞர்கள் நம்புகின்றனர்.

வேதத்தைப் பரமாத்மா (குதிரைமுகப் பெருமானாகிய ஹயக்ரீவர்) வந்து, நான்முகனாம் பிரும்மாவுக்குப் போதித்த தாகவும் உளது.

வேதச் சொற்களுக்குப் பொருள் விளங்கவில்லை. இதனால் ஆளுக்கொரு பொருள் கூறுவர். நேர்பொருள் வேறு; நிழல் பொருள் - குறிப்புப் பொருள் வேறு.

வேதம் பலவகைகளில் விளக்கப்படுகிறது. அவ்வவர்க்கு ஏற்ற விளக்கம் தந்துள்ளனர். 'இப்படிப் பல முறைகளிலும் விளக்கப் படும் வேதம் புரிந்துகொள்ளப் படாததாகவே இருக்கிறது' என்கிறார், ஸ்வாமி.

வேதங்களிலிருந்து அனைத்து விஞ்ஞானமும் கலைகளும் வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவற்றைவிட யாகங்கள் பற்றியும் தேவதைகள் பற்றிய விளக்கமும் கற்பனையைவிடவும் விசித்திரமான வரலாறுகளும்தானே பெரிதாக வேதத்தில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது? - இவ்வாறு வினவுகிறார், ஸ்வாமி.

ஆயினும் எல்லோரும் மேற்கண்டவாறு புகழ்வதால் நம் அறிவுக்கு எல்லாம் எட்டாத நிலையில், வேதத்தில் அவை எல்லாம் இருக்கத்தானே வேண்டும் என்று, நம் யூகத்திற்கு இடம் வைத்து முடிக்கிறார், ஸ்வாமி.

❖❖❖❖❖

# 7

# சாம வேத சாரம்

சாமவேதம் இனிய பாடல்கள் அடங்கியது என்பதும் இராவணன் கயிலைமலையைத் தூக்கியபொழுது, சாமகானம் பாடி சிவபெருமானை மகிழ்வித்து, மன்னிக்கப்பட்டான் என்பதும் புராணச் செய்தி. இத்தொன்மம் நம் திருமுறைகளில் மிகுதியாகப் பாடப்படுகிறது. திருநாவுக்கரசர் தம் பதிகந்தோறும், முடிக்கும் தறுவாயில் இத்தொன்மத்தைக் குறிப்பிடுகிறார்.

இருக்கு வேதம் ஒன்றே தொன்மையானது. சாம வேதத்தில் 1875 சூக்தங்கள் உள்ளன என்றும் அதில் 75 மட்டுமே இதற்குரியன என்றும் பிற எல்லாம் இருக்கிலிருந்து கொள்ளப்பட்டவை என்றும் கருதுகின்றனர். சாமவேதம் இசைப்பாடலாய்த் தனித்து நிற்கிறது. அதனால் அது திராவிடரிடமிருந்து, சிவனை வழிபடுதற்காகப் பிற்காலத்தே பெறப்பட்டிருக்கலாம் என்ற ஐயம் எழுகிறது.

1. இவை இயற்கையை ஆதிமனிதன் பார்த்த பார்வைகளாகத் தோற்றுகின்றன. இடி, மின்னல் என அஞ்சியும் பிறவாறு ஐம்பூதங்களும் தங்களுக்கு வளம் தரவேண்டுமென்றும் பாடப்பட்டுள்ளன.

2. அவற்றில் வானியல், பூவியல், பூதவியல் (கணியம் - சோதிடம்), பிற அறிவியல் எல்லாம் உள்ளன என்று யூகிக்கப்படுகின்றன.

3. மிகப் பல பாடல்கள் தங்களைத் தங்களின் எதிரிகளிடமிருந்து காக்க வேண்டுவனவே. இதற்கு அடிக்கடி அழைக்கப்படுபவன் இந்திரனே. அவன் துணையால் பகைவரின் கோட்டை கொத்தளங்களை அழித்து, வெற்றி கொண்டாடும் செய்திகளும் இந்திரனுக்கு நன்றி கூறும் பாடல்களும் பலவுள.

4. முழுபரம்பொருள் - பரமாத்மா என்பதும் 'யூகமே'; மேலுலகில் இந்திரன் உட்பட வி ஷு, ருத்ரன், வாயு என இவ்வாறு சுமார் நூறு தேவதைகள் குறிக்கப்படுகிறார்கள். அவர்களில் யாரும் இவ்வுலகில் இல்லை. கண்கண்ட 'அக்கினி' ஒன்றே இவ்வுல

கிற்கும் மேலுலகத்திற்கும் தொடர்புபடுத்தும் ஒரே தெய்வம். இதனால் அத்துவைதம் எனத் தெளிவாக மிகப் பிற்பாடு உருவகிக்கப்பட்ட 'தத்துவத்திற்கான' மூலவேர்கள் என இவற்றை எண்ணலாம்.

கடல்போன்ற சூக்தங்களும் மந்திரங்களும் உணர்த்துவன வற்றில் திரும்பவரும் கூறுகளே மிகுதி. தேவதைகள், கருத்துக்கள், வேண்டுகோள்கள், தொடர்கள், சொற்கள் எல்லாம் திரும்பத் திரும்ப வருவதால் சலிப்புத் தட்டும். இவை வாய்மொழி மரபுகள். மக்களின் இப்பாடல் மரபுகள் 'ரிஷிகளால்' தொகுக்கப்பட்டுள்ளன. இதனால் இவை யார் பாடியது என்று கூறப்பட முடியாதவை. எனவே இறைவனால் அருளப்பெற்றன என்று கூறப்படுகின்ற மரபு உருவாயிற்று. தமிழிலும் கடவுளரே சங்கத் தலைமை ஏற்றனரென்றும், காப்பியம் பாட அடியெடுத்துக் கொடுத்தனர் என்றும் கூறுவதுண்டல்லவா?

வேதம் என்றால் அறிவு. அதில்தான் உலக அறிவுடைமையே உருவானது. அதற்கு நிகரில்லை. அவையே எல்லா நலன்களையும் தரும். தமிழ் அத்தகைய மந்திரசக்தி உடையதன்று என்று மிகப் பெரியவர்களே அச்சுறுத்துவதால், வேதமூல நூல்களில் நுழைந்து எடுத்துக்காட்ட வேண்டியுளது.

ஒருசில பார்க்கலாம்: **சாமவேதம்**

காண்டம் 1: தேவதை 1 - 10 அக்கினி (தொடக்கமே அக்கினியைப் பரவுகிறது). ரிஷி: 1, 2, 4, 7, 9 பரத்வாஜர். 3. மேதாதிதி. 5. உசனர். 6. சுநீதி புருமீடர்கள் 8. வத்சர். 10. வாமதேவர். (அக்கினியைப் பாடிய ரிஷிகள் இவர்கள்)

1. அக்கினியே! ஒளிவீச ஹவிசை அளிக்க துதிக்கப்பட்டவனாய் ஹோதாவாக தர்ப்பையில் உட்காரவும்.

அடிக்குறிப்பு: கிரிஃபித் எழுதியது - ஹவிஸ் - அவியுணவு என்பது தமிழ். நெய் முதலான பொருள்களாம்.

ஹோதாவர் - அவியை அளிப்பவனாகிய அக்கினி.

தேவதைகளை அவியை வாங்க வருமாறு அழைப்பவனாம்.

அவன் தனது ஓசை எழுப்பும் தீ நாக்குகளால் தேவதைகளை அழைக்கிறானாம்.

(மேலை நாட்டவர்களே தரும் விளக்கங்கள் இவை). மேலும் இச் சூக்தம் பற்றி கிரிஃபித் கூறுவது: அக்கினி; தீயின் கடவுள். ரிக் வேதத்தில் மிகச்சிறந்த கடவுளான இந்திரனுக்கு அடுத்தவன் அக்கினி. வானுக்கும் மண்ணுக்குமிடையே அக்கினி ஒரு தூதுவன். இடையீட்டாளன், தேவதைகளுக்குப் பத்திப் பாடல்களைக் கூறுபவன். வணங்குபவர்களிடமிருந்து அவியை எடுத்துச் செல்பவன்).

இந்த முதல் சூக்தத்தில் 10 மந்திரங்கள் உள்ளன. அதில் ஆறாவது இது: "அக்கினியே! சகலமான சத்துருவினின்றும் மனிதர்களின் வெறுப்பினின்றும் எங்களைப் பாதுகாக்கவும்".

இவ்வாறே பாராட்டு, வணக்கம், எதிரிகளை அழிக்கத் துணை கேட்டல் என்று, தொடர்ந்து வேதம் முழுவதும் விரவி யுள்ளன. காண்டம் 8இல் இறுதியிலுள்ள எட்டாம் மந்திரம்.

"அரக்கர்களை அழிப்பவனே! உன்னை அவர்கள் வெல்ல முடியாது".

பச்சை மாமிசத்தைத் தின்னும் அறிவற்றவர்களை எரிப் பவனே! உன்னுடைய தெய்வீக அம்பிற்கு எவரும் தப்ப முடியாது.

இதன் ஆங்கில ஆக்கம் (கிரிபித்) வருமாறு:

Agni, from days of old thou slayest demons: never shall Rakshasas in fight overcome thee. Burn up the foolish ones, raw flesh devourers let none of them escape thine heavenly arrow.

காண்டம் 20. தேவதை 1 - இந்திரன். இதைப் பாடியவர்கள் பெயராக 7 ரிஷிகள் பெயர்கள் உள்ளன. கண்வன், வத்ஸன், கருதககக்ஷடன் முதலானவர்கள்.

4ஆம் மந்திரம்: 'வெகு சித்துக்களைக் கொள்பவனே! பலர்களால் துதிக்கப்படுபவனே; பாலை நாடும் ஆத்ம விருப்பத்தின் அறிவோடு ஒவ்வொரு சோமனிலும் நீ வரவேண்டும்!

*காண்டம் 30. தேவதை 1 -4, 7-10 இந்திரன். 5, 6 வருணன். 8 ரிஷிகள் குறிக்கப்படுகின்றனர். நிருமேதன், வசி டன், பரத்வாஜன், பருச்சேபன், வாமதேவன், மேத்யாதிதி, பர்கன், மேதாதிதி, மேய்யாதிதி!*

*மந்திரம் 4. சதா காலம் சத்துருக்களைக் கொல்லும் எங்கும் காண்பவனான இந்திரனை அழைக்கிறோம். ஆயிரமாயிரமான கோபத்தோடு வீரர்களின் தலைவனே! வெகு ஐசுவரிய முள்ளவனே! யுத்தங்களில் எங்களுக்கு உதவிசெய்து ஐயமுண்டாக்கவும்!*

*காண்டம் 55. தேவதை 1- 12. பவமானன் (சோமன் பெயர்தான் அது).*

*மந்திரம் 1. சேனாதிபதி சூரனான சோமன் ஜயம் தேடிக் கொண்டு ரதத்தின் முன்பக்கம் சந்தோஷமுடன் (சண்டைக்குச்) செல்லுகிறான்; அவன் சேனை சந்தோஷமுடன் இருக்கிறது. நண்பர்களுக்காக இந்திரனின் அழைப்பை சுபமாய்ச் செய்து கொண்டு பலமுடனான உடையைக் கொடுக்கிறான்.*

*மந்திரம் 8. பலமுள்ள சோமன் பாலில் நன்றாய் நனைந்து கொண்டு இந்திரனுக்காகவும் இன்பத்திற்காகவும் பலத்தைத் தூண்டிக் கொண்டு பெருகுகிறான்; சத்துருக்களை அழித்துப் பகைவர்களைப் பாழாக்குகிறான். விரும்பும் ஐசுவரியத்தை அளிக்கும் பலத்தின் ராஜாவான சோமன் சத்துருக்களை நாசம் செய்கிறான்.*

*காண்டம் 85இல் மொழிபெயர்ப்புக் கிடைக்காமல் ஆங்கிலமே உளது.* Chapter II. Soma pavamana.

1. These rapid soma drops have been poured through the purifing sieve, To bring all felicities.

Chapter III 2. Drink gladdening crusther of the fold, praisworthy, with most mighty sway, destroyer of hundred forts.

*காண்டம் - 162 தேவதை 1, 2, 7-10. இந்திரன் 3-6. இந்திராக்கினி 11, 12.*

*ரிஷி: 1,2. மேதாதிதி காண்வன். 3-6. விசுவாமித்திரன். 7-10 பர்கன். 11,12. சோபரி காண்வன்.*

*1. மனிதர்கள் முதன்மையாய் பருகுவதற்குத் துதிகளால் என்னைப் போற்றுகிறார்கள்; ரிபுக்கள் ஒருமையுடன் சுவரத்தை எழுச்சியாக்குகிறார்கள். ருத்திரர்கள் உன்னையே முதன்மையாக தாகம் செய்கிறார்கள்.*

*4. இந்திராக்கினியே! தாசர்கள் பற்றியிருந்த 90 கோட்டை களை ஒரு பெருஞ்செயலுடன் சாய்த்து சிதறடித்தீர்கள்.*

வேதம் முழுவதும் இவைபோலவே காணப்படுகின்றன. இவை ஆரியர்கள் இங்கிருந்த திராவிடர்களுடன் - அல்லது பழங்குடி மக்களுடன் சண்டையிட்ட பொழுது, சோமபானம் பருகிப் பலத்துடன் போரிட்டுள்ளனர்.

அவர்கள் எதிர்த்து அழித்தவர்கள் கோட்டை கொத்தளங் களுடன் பெரிய நகர்ப்புற மக்களாகத் தெரிகின்றனர்.

இவற்றை முதலில் பாடியவர்கள் ஊர், பேர் தெரியாத மக்களாகவே இருக்கமுடியும்; உதிரிகளான இவற்றைத் தொகுத்துப் பாடியவர்கள் ரிஷிகள் போல் தெரிகிறது. இவற்றின் உள்ளடக்கத்தைப் பார்த்தால் ஐந்தாம் வகுப்புப் படித்தவன்கூட, தேவதைகளிடம் வேண்டிக் கெஞ்சிக் கூத்தாடுமிவற்றை, இறைவன் அருளியதாக ஒப்புக்கொள்ள மாட்டான். இதில் வரும் ருத்திரர்கள், தேவதைகளின் வரிசையில் வருபவர்கள். ருத்ரசிவன் எனப் பிற்பாடு இணைக்கப் பார்ப்பதும் அதைச் சைவர்கள் நம்புவதும் வேடிக்கையாகவுளது.

அநுராக வெளியீடான, ஸ்வாமி தந்துள்ள சாமவேதம் 32 பக்க அளவினதாகும். சாமவேத மூலநூலை விட்டு விலகி, பிற்பட்ட காலத்துப் பிராம்மணம், உபநிடதம், புராணங்களையும் இணைத்து எழுதியதாக அது உளது. காலத்திற்கேற்றபடி வியாக்கியானம் செய்ய, பலருக்கு முடிகிறதென்றால், சமஸ்கிருதம் பலருக்கும் தெரியாத அரிய மொழியாக இருப்பதுதான் காரணம்.

எப்படி வேண்டுமானாலும் விளக்கங்கள் எழுதட்டும். நமக்கு அதில் வருத்தமில்லை. ஆனால் நம் சமயத்தை இணைத்து,

தமிழுக்கு மந்திரசக்தி இல்லை என்று 'கேவலப்படுத்தி' வடமொழியிலுள்ள இத்தகைய 'புலம்பல்கள், வேண்டுகோள்கள், ஆசைகள்' எல்லாவற்றையும் நம்மீது சுமத்தி, சமண புத்த மதங்களை ஒழிக்க நம்மை அரவணைத்து, இன்று நம்மையும் நம் மொழியையும் இழிவுபடுத்தும் இவர்களை 'வெளிப்படுத்திக்' காட்டவே, இவை எழுதப்பட வேண்டியவையாயின.

இதுவரை எழுதியவை எல்லாம் 'சாமவேதம்' என்ற மூல நூலின் தமிழ், ஆங்கில மொழியாக்க நூலிலிருந்து எழுதப் பட்டவை. நாம் எடுத்துக்கட்டி எழுதியவை அல்ல. ஸ்வாமி தருவதைச் சுருக்கிப் பார்க்கலாம்.

இசை இந்த வேதத்திலிருந்து பிறந்து வளர்ந்தது. இறைவன் உலகங்களைப் படைக்கத் திருவுள்ளங் கொண்டபோது, வேதத்தை வெளியிட்டருளினான். இறைவனிடமிருந்து கேட்ட இது நான்முகன் மூலமாகப் பரவியது.

ஒன்றாகப் பெரியதாக இருந்த வேதத்தை வியாஸர் நான்காகப் பிரித்தார்.

நாராயணோ உபநிடதம் ஸாம வேதத்தை ஆதித்த மண்டலத் திலுள்ள பிரகாசிக்கும் ஒளியாகச் சொல்கிறது.

'வேதங்களுள் நான் ஸாமவேதம்' என்கிறார் இறைவன் (கீதை)

சாமவேதத்தில் முக்கியமாக தியானம், வழிபாடு, பக்தி, இவற்றையே உயர்ந்த இலட்சியமான கடவுளை அடையக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் எதுவும் சாமவேத மூலநூலில் காணப்படவில்லை. (இக்கருத்தை நம் கையிற்கிடைத்துள்ள வேதங்களுடன் யாரேனும் பொருத்திக் காட்டினால், பெரு மகிழ்ச்சி அடைவேன்)

## குழப்பம்

ஸம்ஹிதையை மட்டுமே வேதம் எனச் சிலர் ஒப்புக் கொள்ளும்போது, பிராம்மணம், உபநிடதம், ஆரண்யங்களையும் சேர்த்தே வேதம் என்போரும் சிலர் உண்டு.

'அக்னி' என்ற சொல்லால் இங்கே பரமாத்மாவே படைக்கப் பட்டுள்ளார். 'தத்வமஸி' என்பது கடவுளையும் ஜீவனையும் பற்றியதாக உள்ள மந்திரமாகும். (ஸாம வேதத்தினுள் இம்மந்திரம் எங்குள்ளது?).

"அந்த பிரும்மமாகவே நீ இருக்கிறாய்' என்று பொருள். (இது பிற்காலத்தில் உருவாக்கிய அத்துவைதம். இதற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் என்ன தொடர்பு? இரண்டு சித்தாந்தங்களும் ஒன்றா? வேறா? முதலாளித்துவமும் கம்யூனிசமும் ஒன்றா, வேறா? எனக்கு விளங்கவில்லை. விளங்கியவர்கள் விளக்கினால் நல்லது. இவற்றுள் உயர்வு தாழ்வு இல்லை. ஆனால் இரண்டும் வெவ்வேறு சித்தாந்தங்கள் என்பது பற்றியோ, இரண்டும் ஒன்றே என்பது பற்றியோ விளக்க வேண்டுகின்றேன்).

ஸாமவேத சிரசு ஸ்ரீமந் நாராயணன் என்று திருவெட் டெழுத்து மந்திரத்தை விளக்குகிறது. (சிவனும் 'சிரசில் உள்ளாரா? இல்லையா?) பல பக்கங்களில் ஸ்வாமி வி ணுவே உலகைப் படைத்து, காத்து, அழிக்கும் பரம்பொருள் என்றும், கடவுளை நேரே வி ணுவென்றே வேதம் கூறுகிறதென்றும் பிற தேவதை களைக் கூறினாலும் வி ணுவே பரமாத்மா என்றும் மிக விரிவாக விளக்குகின்றார் (பக். 9-15).

அடுத்து ஸ்வாமி பிரும்மம் என்று பிரமாவின் பெருமையை யும் அதன்பின் அக்கினியையும் வேதங்கள் புகழ்வதை விளக்கு கின்றார்.

ஸ்வாமி அக்கி ரியின் பெருமையை அளவு கடந்து புகழ்ந்து அது வாழ்க்கைக்கு முக்கியமானது என்பதால் கடவுளின் பிரதி நிதியாகி, யக்ஞச் சடங்குகள் செய்யப்படுகின்றன என்று கூறுகிறார். அடுத்து ருத்ரன் பற்றி அவர் கூறுவதைச் சிவனடியார்கள் தெரிந்து கொள்வது கட்டாயம்.

"நெருப்பையே கடவுளாகத் தொழும் மதமும் உண்டாயிற்று. நெருப்பே, செந்நிறமுடைய அழிக்கும் தேவதையான ருத்ரனாக, மிகக் கோபமுடையவனாகக் கூறப்பட்டது. துப்பாக்கி வெடி குண்டு பீரங்கி முதலிய கொலைக்கருவிகள் அழிவை உண்டாக்கு பவையாக, சிவந்த அக்கினியைக் கக்குபவையாக இன்றும் இருப்பதை அறிகிறோம்.

காமத்தின் மிகுதியும் சூடேறிய உணர்வாக அக்கினியாகத் தகிக்கின்றது. இதனால் ஆசையாகிய மோகமும் அக்கினியின் தமோகுணமாகக் கூறப்பட்டது பொருத்தம் என விளங்குகின்றது" (பக். 24).

இந்த அதியற்புத வேதசார விளக்கங்களைத் திருப்பனந்தாள் ஸ்வாமிகளின் திருப்பாதங்களுக்குக் காணிக்கையாக்கி, அப்பெரிய வரது அடுத்த நூல் இது பற்றியதாக வெளிவரவேண்டும் என்று 'பிரார்த்திக்கின்றோம்'.

ஸாம வேதம், ஐந்தாவது காண்டம் ஸாம வேத 154ஆவது மந்திரம். கடவுளைத் தேடிப் போகிறவர்களுக்கு ஸோமனும் புஷனும் துணையாகிறார்கள்.

ஸோமனும் புஷனும் வேறுவேறாகச் சொல்லப்படினும், 'படைப்பதாலும் ஊக்கி இயக்குவதாலும் 'ஸோமன்' எனப்படு வதும் கடவுளே என்றும், போஷாக்களித்துப் பாதுகாப்பதால் அவரே 'புஷன்' எனக் குறிப்பிட்டுள்ளார் என்று கூறுபவர் உண்டு.

இந்த ஸோமன்தான் வேள்விகளில் பருகப்படும் ஒருவகை பானம் - மது. இது ஒரு செடியிலிருந்து பிழிந்து எடுக்கப்பட்டு, தேவதைகளுக்குப் படைக்கப்பட்டு, ரித்விக்குகளால் குடிக்கப்படு கிறது.

கள்கூட பலம் தருவது என்பர். ஸோமனும் அத்தகையதே. இந்திரன், ஸோமனாகிய புஷன் இருவரும் செல்வத்திற்கும் அறிவிற்கும் அதிபதிகள். அவர்களை வாழ்த்தி, உலகம் வாழ ஸாம வேதம் அருளுரை கூறி முடிவதாக ஸ்வாமி தம் நூலை முடித்துள்ளார் (ஸாமவேதம் 1875).

## இராவணனும் சாம வேதமும்

வடமொழியால் இங்குள்ளவர்களில் அறிஞர் முதல், உலக நடையறியாதார் வரை குழம்பிப்போய், ஒருவரை ஒருவர் பகைத்தும் தத்தம் கருத்தே சரி எனச் சாதித்தும் அல்லற்பட நேர்கிறது.

வடமொழி மூல சம்ஹிதை - சூக்தம் - மந்திரங்களை மட்டும் பார்த்தால் கிடைக்கும் உண்மைகள் வேறு.

வடுவூர் நாராயணன், ஸ்வாமி போல்வாரும் சிலபோது மேற்கு நாட்டவரும் வேதம் - பிராம்மணம் - வேதாந்தம் எனப்படும் உபநிஷதம் மூன்றையுமே சேர்த்து, வேதம் எனக்கொண்டு விளக்கி விடுகின்றனர்.

உண்மையில் வேதங்களுக்கு மிகப் பிற்பட்டவை உபநிஷத்துக்கள். மேலும் உபவேதங்கள், சாகைகள் (கிளைகள்) எனப் பிற்காலத்தே நிரம்ப எழுதியுள்ளனர். உபநிஷதங்கள் 285 என்றும் 108 என்றும் அபிதான சிந்தாமணி கூறுகிறது.

வடுவூர் நாராயணனும் முடிந்த மட்டும் குழப்புகிறார். மொத்த உபநிஷதம் 108. ஆனாலும் அங்கீகரிக்கப்பட்டவை பத்து மட்டுமே என ஒரு பட்டியல் தருகிறார் (பக். 26). அவர் வேதாந்தங்கள் என்று ஆறு வகைகள் சொல்கிறார். இவை தவிர வேதாங்கம் என்ற பகுதியும் உண்டு என்றும் ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியே சாகைகளும், உபநிஷதங்களும் உண்டு என்றும் முக்கியமாக உபநிஷதங்கள் பத்து மட்டுமே என்றும் கூறுகிறார். பிரச்னோபநிஷதம், ஈசோபநிஷதம், கேனோபநிஷதம், கடோபநிஷதம், ஐதரேயம், தைத்திரியம், முண்டகம், மாண்டூக்யம், பிருகதாரண்யகம், சாந்தோக்யம் என்பன அவை. நவீன காலத்தில் நூற்றுக் கணக்கான உபநிஷதங்கள் புதிதாகப் புனையப்பட்வை. அவை ஏற்கப்படவில்லை. மேலே சொல்லப்பட்ட பத்து உபநிஷதங்களே எல்லோராலும் ஏற்கப்பட்டவை (பக். 40).

பல ஆயிரம் கோடிப் பணக்காரர் ஒருவர் ஒரு கடை - 'மால்' திறந்தார். அங்கே அரிசி முதலிய தானியவகைகளும் கிடைக்கும்; மருந்து வகைகளும் கிடைக்கும்; புதிய காய்கறிகளும் கிடைக்கும்; உடைகள், பொன் வைர அணிகளும் கிடைக்கும் எல்லாம் கிடைக்கும் என விளம்பரம் செய்தார். இதனால் எல்லோரும் அக் கடையையே நாடிச் சென்றதால், பிற பொருள்களை விற்ற அத்தனை கடைகளும் படுத்துப்போயின. இத்தந்திரத்தையே வடமொழியாளர் செய்தனர். இந்தியச் சித்தாந்தங்கள் எனப்படும் அனைத்தையும் தம்மிடமே இருப்பதாக, எல்லாவற்றையும் எழுதி வைத்துப் பரப்புரை செய்து, பிற அனைத்தையும் அழித்து ஒழித்து விட்டனர். அவற்றுள் தமிழர் சமயங்களும் அடங்கிப்போயின.

இராவணன் விசிரவசு என்ற பிராமண முனிவருக்கும் கேகசியி என்ற அரக்கிக்கும் பிறந்தவன். அதனால் அவன் தந்தை வழியில் ஒரு பிராமணன். இராமாயணத்தில் 'இராவணன் ஒரு பிராமணன்' எனக் குறித்தற்கான இடங்கள் உள்ளன. அவனைப் பற்றியும் பிற்காலப் பலவிதமான கதைகள் வழங்குவதை அபிதான சிந்தாமணியைப் படித்து அறியலாம்.

அவன் சிவ பத்தனானது, ஆரியர்கள் மீது ஏற்பட்ட வெறுப்பினால் ஆகலாம். அவன் 'அடர்த்து அருள் செய்யப்பெற்ற' புராணச் செய்தி, சைவத் திருமுறைகளில் நிரம்ப இடம்பெறக் காரணம், அவனது சிவ பத்திமையேயாகும். இராமன் சத்திரியன், கரிய நிறத்தவன், பிராமணன் அல்லன். அவன் சூர்ப்பணகையிடம்,

சுந்தரி! மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிற்று அன்றால்
அந்தணர் பாவை நீ! யான் அரசரில் வந்தேன் என்றான்

என்பது கம்பர் வாக்கு (சூர்ப்பணகைப் படலம், 49).

பிராமணர் யாரும் சிற்பவேலை செய்து கல்தச்சராகக் கண்டிலம். ஆனால் சில்ப சாத்திரமும் எம்முடையது என்றனர்.

பழங்காலத்தில் பார்ப்பன மகளிர் இசை, கூத்து, நாட்டிய, நடனங்களில் ஈடுபட்டதாக அறிந்திலம். ஆயினும் நாட்டிய சாத்திரம் எமது என்றனர்; இசையும் எமதே என்றனர்.

ஆகம வழிபாடு பத்தி வழிபாடு, கோயில் வழிபாடு, உருவ வழிபாடு தமிழருடையன. பிராமணர்களுக்கு வேதவழி வேள்வியே வழிபாடு; அது முற்றிலும் அருவ வழிபாடு. திருக்கோயில் வழிபாடுகளை வெறுத்த முன்னோர்களின் வழிவந்த அவர்கள் ஆகமங்களை, அவர்கள் மொழியில் எழுதிவைத்துக் கொண்டு ஆகமங்கள் எல்லாம் எமதே என்று ஆரவாரிக்கின்றனர். தமிழர்களது அனைத்தையும் அழித்துவிட்டு, இன்று கோயில்களையும் சொந்தங் கொண்டாடி, ஹோமங்களையும் விடாது, மக்களை மூடநம்பிக்கையில் மூழ்கடித்துப் பெருவாழ்வு வாழ்கின்றனர்; வாழட்டும். ஆனால் நம் தாய்த்தமிழைக் கேவலப்படுத்தும் அவர்களுக்கு புரோகிதத்தை விட்டுவிட்டு வேறு தொழில்களைக் காட்டிக் கொடுப்பதே தமிழ் வாழ வழிவகுக்கும்.

❖❖❖❖❖

# 8

# அதர்வ வேத சாரம்

இதனை அதர்வண வேதம் என்றும் குறிப்பிடுவர். அதர்வர்தான் முதன்முதல் நெருப்பைக் கண்டறிந்து, யக்ஞத்தில் பயன்படுத்தியதால், ஏனைய மூன்று வேதங்களும் இவர் பெயரைக் குறிப்பிடுகின்றன.

இருக்குவே மிகப் பழைமையான முதல்வேதம். அதன் பிற்பாடு தோன்றிய யஜுர், சாமம் இரண்டும் சேர்த்து, முதல் மூன்று வேதங்கள் (த்ரயீ) என்பர். அதர்வ வேதம் பிற்பட்டது என்பர்.

அதர்வ வேதத்தை அந்தணர்கள் அதிகம் போற்றவில்லை. அதனால், அதைப் பின்பற்றி ஒழுகும் வைதீகர்கள் அருகிவிட்டனர், என்பர், ஸ்வாமி (அதர்வம் - பக். 6) இதுபற்றி அவர் தொகுத்துக் கூறுவன அறியத்தக்கன: "தெய்விக ஆசி வழங்கும், வசீகரணம் தரும். உச்சாரணம் (ஓட்டுதல்) செய்யக்கூடியது. விரோதிகள், தீயசக்திகளிடமிருந்து காத்துக்கொள்ள, தெய்விகக் காப்பைப் பெற, நண்பர்களை ஆசீர்வதிக்க, கடவுளை தேவதைகளைத் துதிக்க, மனித அமானுய (பேய், பில்லி, ஏவல், சூன்ய) தாக்குதல்களிலிருந்து தப்பிக்க, சூதாட்டத்திலும் போரிலும் தொடர்ந்து வெற்றிபெற, விரோதிகளை வெல்லவென்று அனைத்திற்கும் ஏற்ற மந்திரங்களை, வழிகளைப் போதிப்பதால் அச்சத்தைத் தவிர்க்கும் வேதமாக, இம்ஸைகளிலிருந்து காத்துக் கொள்ளும் வேதமாக அதருவவேதம் உளது" (பக். 4).

பல்வேறு தோஷங்களிலிருந்தும் வேள்விகள் முதலியவற்றில் குறைகள் நேரும்போதும் அவற்றை நிவர்த்தி செய்யும்படியான பிராயச்சித்த வழிகள் பல இதில் கூறப்படுகின்றன.

அதர்வம்: 20 காண்டங்கள், 731 சூக்தங்கள், மந்திரங்கள்: 5848

அதர்வன் முதலில் அரணிக் கட்டைகளை உரசி அக்கினியை உண்டாக்கியவன். இதை மேலுலகிலிருந்து கொண்டுவந்த

தேவதையே, அக்கினி தேவன் என்றும் கூறுவர். அக்கினி மூலமே மேலுலகத் தேவர்களுடன் உறவு கொண்டதாக வேதங்கள் முழங்கு கின்றன. அக்கினி தன் தெய்விக வலிமையால் அசுரராம் தங்கள் பகைவர்களை அழித்தானாம்.

அதர்வன் பிரதம புரோகிதனாக வேள்விச் சடங்குகளை நெறிமுறைப்படி நடத்துபவன் என்று கூறுவர். அதனால் இதற்குப் பிரம்ம வேதம் என்றும் பெயருண்டு. ஹோதா, அத்வர்யு, உத்காதா மூவரும் பிற வேதங்களை நடத்த உதவும் உதவிப் புரோகிதர்கள்.

இவ் வேதமே பிரம்மத்துடன் ஒன்றுபடும் மோட்சம் பற்றிக் கூறுகிறதென்று, இதைப் பின்பற்றுபவர் கூறுவர். ஆயினும் ஆசி வழங்குதல், சாபமிடுதல், மயக்குதல், துதித்தல் முதலியனவே இதிலுளது என்று கிரிபித் கூறுகிறார். அவர் கூறுவனவற்றைக் காண்போம்.

"அதர்வம் மற்ற மூன்று வேதங்களுக்கும் பின்னர் வந்தது. ரிக் வேதம் ஒன்றே மூல வேதம். யஜுர், சாமம் இரண்டும் பொது வானவை. அதர்வம் ரிக் வேதம் போல் மூலநூல், வரலாற்று நூல்".

பேராசிரியர் விட்னி அதர்வத்தின் மொழியும், உள்ளடக்கமும் கொண்டு பார்க்கும்போது, அது பிற்பட்டது என்றே தெரிகிறது என்பார்.

பேராசிரியர் வீபர் "பிராம்மண மதம் ஆதிக்கம் வகிக்கத் தொடங்கிய காலத்தில், அதர்வ சம்ஹிதை தோன்றியதாகலாம். பிராம்மண சகாப்தத்தின் பாடல்கள் இதிலுள்ளன" என்று கூறுகிறார். (அந்தணர்கள் இதிலுள்ள பில்லி, சூனியம் போலும் பல பகுதிகள் தம்மவை என்று சொன்னால் தங்களுக்கு இழுக்காகும் என்று கருதியே, இவற்றை ஏற்கவில்லை எனத் தெரிகிறது. ஆனாலும் இதில் வரும் ஆயுஸ்ஹோமம், தோஷப் பரிகாரம், பிராயச்சித்தம் போலும் சடங்குகள், பிற ஹோமங்கள் போல்பவையே அவர்களுக்கு இன்றளவும் வருமானம் தேடித்தர உதவுகின்றன. வெளிநாட்டவர் தரும் வரலாறு இது).

"அதர்வம் மூடநம்பிக்கைகளிலும் பரம்பரைக் கருத்துக் களிலும் மூழ்கியுளது". பேராசிரியர் கிரிபித், இவ் வேதத்தின் உள்ளடக்கச் சுருக்கத்தை, தமது முன்னுரையில் மிக விரிவாகவே

தந்துள்ளார். அதன் தமிழாக்கம் 'அலைகள் வெளியீட்டக' நூலில் தரப்பட்டுள்ளது.

"ரிக், யஜுர், சாம வேதங்களில் அதர்வ வேதம் பற்றிய குறிப்பே இல்லை.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகுதான் இதனை நான்காம் வேதம் என்று குறிப்பிட்டனர்".

"தீய தேவதைகளிடமிருந்து பாதுகாப்பு, பாம்புக்கடி, விஷப்பூச்சிகளினால் ஏற்படுவனவற்றுக்கு மூலிகை மருந்துகள், ஆசி கூறுதல், சாபமிடுதல், காதலில் வெற்றி பெறல், சூதாட்டத்தில் வெல்லுதல் எல்லாம் இதிலுள".

காண்டம் 14: திருமணச் சடங்குகள்

15: அலைந்து திரியும் பிச்சைக்காரர்கள்

16 , 17 : சில செப்பிடு வித்தைக்காரர்கள்

18: இறுதிச் சடங்குகள், முன்னோர்க்கு 'திவசம்' செய்தல் (உணவளித்தல்)

20: இந்திரனுக்குத் துதி

"பிராம்மணங்களிலும் உபநிடதங்களிலுமுள்ள பிரபஞ்ச உற்பத்தி, பிரம்மம் போன்ற புதிரான பகுதிகளும் அதர்வத்திலுள. இந்நூலில் ஐரோப்பியர்களின் சுவைக்கு (மன உணர்வுகளுக்கு) ஒவ்வாத பல பகுதிகள் உள்ளன. பொருள் புரியாதவை, சோர் வூட்டுபவை, அருவருப்பானவை போன்ற சில உண்டு. ஆயினும் இதன் ஆன்மிகப் பகுதி, மத நம்பிக்கையுடைய ஒரு இந்துவை வசிகரிக்கிறது".

அலைகள் வெளியீட்டகத்திலுள்ள, பேராசிரியர் கிரிபித்தின் முன்னுரைப்படி பார்த்தால், ஒரு சாதாரண மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல்வேறு நிலைகளிலுள்ள அனைத்து வாழ்க்கை நிலைகளுக்குமுரிய சடங்குகள் பற்றியவை இதிலுள. இவை அனைத்தும் அவர்களே அவர்களுக்குச் செய்து கொண்ட சடங்குகள், பிறர்க்குரியன அல்ல. நமக்கு உரியன அல்லவே அல்ல.

விவசாயம், ஆடுமாடுகளைப் பேணிக் காத்தல், கிராம வாழ்க்கை பற்றியனவாகப் பல சூக்தங்கள் உள. கிராம சபைகள் பற்றிய கருத்து முக்கியமானது.

விவசாயியைப் போல வியாபாரியைப் பற்றியும் பல பாடல்கள் உள. அவன் முதலில் இந்திரனைப் பணிந்துவிட்டே வியாபாரம் செய்யப் புறப்படுகின்றான். இந்திரனும் ஒரு வியாபாரி போன்றவனே. மக்கள் அளிக்கும் அவியைப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு அவன் வளத்தை அளிக்கின்றான். இவ்வாறு எழுதும் கிரிபித், வியாபாரி பற்றி வரும் மேலும் பல செய்திகளையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இவர்களும் அவர்களின் குழுவினரே.

“வியாபாரியின் நோக்கம் லாபமே. அதனால் தொழிலில் நேர்மையாக இருக்க வேண்டும் என்ற நினைப்பு அவனுக்குக் கிடையாது. கடன் தொல்லை இருந்தால் அதிலிருந்து விடுதலை பெற அவன் தெய்வங்களிடம் முறையிடுவான். கடனைத் தீர்க்க எந்த முயற்சியையும் செய்யமாட்டான். கடனைத் திருப்பித் தராமலேயே, அதிலிருந்து விடுபட முயல்வான், வெற்றிபெற பிரார்த்திப்பான். தவறு செய்தால் மன்னிப்புக் கேட்பான். (தவறு செய்துவிட்டுக் கழுவாய் தேடி, மந்திரம் ஓதி, ஹோமம் செய்து தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையை - உணர்வை ஊட்டும் பகுதிகள் பலவுள).

அநுராகம் வெளியிட்ட, சிற்றேட்டில் ஸ்வாமி தருவனவும் இவைபோன்றனவே. “கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட வேதத்தில் செய்யக் கூடியதும் உண்டு; செய்யக் கூடாதவையும் இருக்கும்’ என்று ஸ்வாமி சமாதானம் கூறுகிறார். (வேதம் பாவம் நீக்கும் வழிகளையும் மனிதருக்குப் படிப்பிக்கின்றது: ஸ்வாமி. பக். 4).

இனி அதர்வ வேதத்தினுள் நுழைந்து, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சான்றுகள் மட்டும் காண்போம். இவை இன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் கிடைப்பதால், இவை பற்றிய முன்னைய ஆய்வு நூல்கள் உட்பட, அனைத்தையும் தொகுத்துக் கற்று, ஒவ்வொரு வேதமாக பிஎச். டி. எனும் முனைவர் பட்ட ஆய்வுக்கு மேற்கொள்ளலாம். இதுபோலவே உபநிடதங்களை 285 என்றும் 108 என்றும் 31 என்றும் 10 உபநிடதங்களென்றும்

கூறப்படுவதால், அவற்றையும் தனித்தனியே ஆராய்ந்து உண்மை காணுதல் தகும். மற்றும் சாகைகள் என்னும் வேதக் கிளைகள் கணக்கற்றவை உள என்று கூறுகின்றனர். பிராம்மணங்கள், உபவேதங்கள், வேத அங்கங்கள், வேத அந்தம் அல்லது வேதசிரஸ் அல்லது வேதாந்தம் என்றெல்லாம் கூறுவன பற்றியும் பிரம்ம சூத்திரம் அதன் உரைகள் பற்றியும் ஆராயவேண்டும். இவற்றின் பின்னணியில், வரலாற்று வழிப்பட்ட அடிப்படைகளில் ஆதி சங்கரர், இராமானுசரின் பணிகள் மிக ஆழமாக ஆராயப்பட வேண்டும்.

புராணங்கள் பற்றியவை மிக முக்கியமானவை. பொதுவாக இவற்றைத் தொடக்ககால வேர்கள் எவை, பின்னர் ஏற்பட்ட இடைச்செருகல்கள் எவை எனப் பிரித்தறிய வேண்டும். வட மொழிக்கே உரியவை மூலவேர்கள். சமண, புத்தச் செல்வாக்காலும் கடுமையான தாக்குரவாலும் ஏற்பட்ட மாற்றங்கள் மிக நுட்பமாகக் கண்டு தெளிய வேண்டியவை.

சிவனியம், மாலியம், கொற்றவையியம் மூன்றும் (சைவ வைணவ சாக்தம்) தமிழ் வேருடையவை. வேள்விகள் வழக்கிழந்த போது, பிராமணியம் தான் வாழவேண்டியும் சமண புத்தச் செல்வாக்கை ஒழிக்க வேண்டியும் அவர்களால் இவற்றில் பல ஏற்கப்பட்டன. இந்நாட்டு மக்களின் உள்ளங்களில் வேரூன்றி யிருந்த, மேலே கூறிய வழிபாடுகளையும் தம்மிடமிருந்து வந்தனபோல் காட்ட முயன்ற, 'சமஸ்கிருத ஆதிக்க' வரலாறு, வரன்முறையாக ஆராயப்படவேண்டும்.

*1. அருவ வழிபாட்டினர் உருவ வழிபாட்டில் நுழைந்தது எவ்வாறு?*

*2. மேலுலகத் தேவதைகளையும் தேவர்களையும் அக்கினி என்ற தேவன் மூலம் இங்கிருந்து அங்கு தொடர்பு கொண்ட வரலாறும் வேள்விகள் ஒன்றையே வழிபாடாகக் கொண்டு அத் தேவதைகளுக்கு அவிகளை அனுப்பி வரம் வேண்டி நின்ற பலவகை வரலாறுகளும் ஆராயப்படவேண்டும்.*

*3. திருக்கோயில் என்ற சொல்லோ, கோயில் வழிபாடு பற்றியோ, ஒரு சொல்கூட இல்லாத நிலையில், பிற்கால உபநிடத,*

புராண நூல்களில் இக்கடவுளரைக் கலப்படமாக்கிக் கொண்டு, தமிழர் வழிபாட்டுச் சமயங்களை 'சமஸ்கிருதமயமாக்கியதை' மிகத் துல்லியமாய் ஆராய்ந்து, கோடிட்டுக் காட்டவேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வடமொழிக்கு ஆட்பட்ட, பழக்க 'தோசத்தால்' எந்தச் சிவநெறிச் செல்வரையும் அம் மனப்பான்மையிலிருந்து மீட்க முடியவில்லை (எமது விழிப் புணர்வு இயக்கமே இழந்தவற்றை மீட்டு, இருப்பவற்றைக் காத்து, திருக்கோயில் வழிபாடுகளில் சீர்திருத்தம் கொண்டுவரப் போகிறது).

4. உண்மையான சிவநெறி யாதென சிவநெறி மெய்ம்மை களைத் தனிப்படுத்தி, அதன் தனிச்சிறப்புத் தன்மைகளை உரு வாக்க, ஆய்வுகள் தோன்ற வேண்டும். அவற்றைப் பிற சமயங் களுடன் ஒப்பிட்டும் உறழ்ந்தும் காட்டியாக வேண்டும். (இதற்கு எங்களைப் பின்பற்றி இவ் ஆய்வுகளைச் செய்யவும் செய்வார்க்கு உதவவும் உண்மைச் சிவநெறிச் செல்வர்கள் முன் வரவேண்டும்).

5. வடமொழி நூல்கள் அனைத்தும், ஆப்பிரிக்கக் காடுகள் போல, வழி தெரியாத இருள் மண்டலங்களாக உள்ளன. நாகரி எழுத்தில் மூல நூல்களைப் படிப்பவர் தொகை மிகமிகக் குறைவு. கிரந்த எழுத்தில் படிப்பவராகக் கூறப்படுபவரும் மிகச் சிலரே. பெரிதும் ஆங்கில வழியிலேயே சமஸ்கிருதம் பயிலப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாய்மொழியாகவே வழங்கி வந்து, கி. பி. 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டன என வரலாறு கூறுகின்றனர். இவற்றில் அவ்வக் காலத்திற்கேற்பச் சேர்க்கப் பட்டனவும் இருக்கலாம். விடப்பட்டனவும் இருக்கலாம். இப் பொழுதும் ஐரோப்பியர் முதல் வடமொழி வல்லுநராம் இந்தியர் வரை பலருக்கும், இவ் வேதங்களில் வரும் பல சொற்களுக்குப் பொருள் தெரியவில்லை. பல சூத்திரங்கள், மந்திரங்கள் பற்றி உண்மை அறிய முடியவில்லை என அவர்களே கூறுகின்றனர்.

6. இதனால் வேதத்தைப் பற்றி விளக்கும்போது மூல நூலுக்குள் மட்டும் (Text) எடுத்துக்காட்டிக் கூறுபவர் எவருமிலர். பிற்பட்ட பிராம்மணம், உபநிடதமாம் வேதாந்தம், ஆறங்கம், புராணம் எல்லாவற்றையும் கலந்து எழுதிக் குழப்புகின்றனர். (எங்களுடைய இந்நூல் மூலநூல்களின் (Text) உள்ளேயுள்ள

வற்றை மட்டுமே விளக்குவன என்பதை மீண்டும் நினைவுறுத்த விரும்புகிறோம்).

**அதர்வ வேதம் - சில பகுதிகள்** *(சுருக்கித் தரப்படுகிறது)*

காண்டம் 1.7. அக்கினியை அழைப்பது. தேவரே! அக்கினியே! நீ தீய கெட்ட தேவதையைக் கொண்டுவா! ஏனெனில் போற்றப் படும் நீயே தஸ்யுக்களின் சம்ஹாரன்.

. . . பிறகு இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அவர்களது சிரங்களைத் துண்டித்திடுக.

**காண்டம் 16 – 2 ஈயம்:**

வருணன் ஈயத்தைப் புகழ்கிறான். அக்கினி ஈயத்தை அனுகூலம் செய்கிறான். இந்திரன் எனக்கு ஈயத்தை அளித்தான். அதுவே சகஜ சத்துரு அழிப்பதாகும்.

4. எங்கள் பசுவையோ, குதிரையையோ, புருஷனையோ நீ இம்சித்தால், இந்த ஈயத்தால் நீ எங்கள் வீர புருஷர்களை அழிக்காமலிருக்க குத்திக் கொல்வோம்.

இதற்கு கிரிபித் தந்துள்ள அடிக்குறிப்பு: ஈயம் என்ற உலோகம் தீய சக்திகளை விரட்டும் என்று கருதப்படுகிறது. இங்கிலாந்தில் குதிரையின் குளம்பில் அடித்த ஈயத்தாலான லாடத்தை வீடுகளில் பாதுகாப்பாக வைப்பது வழக்கமாம்.

22ஆம் சூக்தம் மஞ்சள் காமாலையை நீக்குவது பற்றியது. காமாலை நோயுள்ளவனைச் சுற்றி மஞ்சள் நிறப் பொருள்களைப் பரப்பி வைக்கவேண்டும். சூரியனின் செந்நிறக் கதிர்கள் இந் நோயைக் கொல்லும். இவ்வாறு பல நோய்களுக்கான மூலிகைகள், நீக்கும் வழிகள் கூறப்பட்டுள்ளன. ஆயினும் அம் மூலிகைகளை இனம் காண முடியவில்லை என்று எழுதுகின்றனர். குட்டம், சுரம் போலும் நோய்கள் பற்றி வருவன பல. மேலே ஒரு சான்று மட்டும் காட்டியுள்ளோம்.

காப்புக்காக தாயத்துக்களை, மந்திரித்து அணிவது பல பாடல்களில் வருகிறது. தாயத்தை 'மணி' என்று கூறுகின்றனர்.

வேள்வியில் காக்கவேண்டும் முறை: பிராணனே! அபானனே!

என்னை மிருத்யுவினின்று காப்பாற்றுங்கள், சுவாஹா, சோதி சகமே! செவி சக்தியால் என்னைக் காவல் செய்யுங்கள், சுவாஹா! சூரியனே! கண்ணால் என்னைப் பாலனஞ்செய்! சுவாஹா!

இதைப் போலத் துதிப் பாடல்களும் இடம்பெறுகின்றன.

1. *நீ ஓஜசு, எனக்கு ஓஜசை அளி, சுவாஹா!*
2. *நீ சக்தி, எனக்குச் சக்தியை அளி, சுவாஹா!*
3. *நீ பலம், எனக்குப் பலத்தை அளி, சுவாஹா!*
4. *நீ ஆயுசு, எனக்கு ஆயுசை அளி, சுவாஹா!*
5. *நீ செவி, எனக்குச் செவியை அளி, சுவாஹா!*
6. *நீ கண், எனக்குக் கண்ணை அளி, சுவாஹா!*
7. *நீ பெருந்துணை, எனக்குப் பெருந்துணையை அளி: சுவாஹா!*

இது ஒரு தாயத்தை நோக்கிக் கூறுவது என்கிறார் கிரிபித்.

இவ்வாறு பல இடங்கள் உள. இவை சான்றுக்காகத் தரப்பட்டன.

**4-108:** முதலில் பிராமணன் தோன்றினான். அவனுக்குப் பத்து முகங்கள், பத்து வாய்களாகும். அவன் சோமனை முதலில் பருகினான், அவன் விஷத்தை இரசமன்னியில் செய்தான்.

இதற்கு கிரிபித் விளக்கம்: பிறப்பிலிருந்தே பிராம்மணனுக்கு சில தெய்வீக சக்திகளும் சில சலுகைகளும் இருந்ததாகக் கூறப் படுகிறது. (சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வரும் இந்த நம்பிக்கை இன்றும் உளது போலும் எனத் தோன்றுகிறது. ஏனெனில் தன்னைத் தமிழன் என்று சொல்லிக் கொள்பவன் எழும்பவே மாட்டேன் என்கிற 'தோஷத்தில்' அகப்பட்டுள்ளான்).

ஆரியர்கள் அக்கினியில் போட்ட மாமிசத்தைத் தின்றதால், தங்கள் எதிரிகளைப் பச்சை மாமிசம் புசிப்பவர்களைக் கொல்லு கிறோம் என்று கூறுகிறார்கள் (8-439-23). (தஸ்யூக்களைப் 'பச்சை மாமிசம் தின்பவர்', என்று பல இடங்களில் வருகிறது).

"சூதாட்டத்திலோ சபையிலோ நீ எப்பொய்யைப் பேசுகிறாயோ, இலாபம் விரும்பி எப்பொய்யை நீ பேசினாலும்

அச்சமமான இழையினாலேயே நீங்கள் கவர்ந்துகொண்டு, இழுக்குகளை எல்லாம் அதில் நாசம் செய்யுங்கள்" (12-476-52).

அதே பகுதி 16இல், 'பசுக்கள் ஏழு மேதைகளைச் சூழ்ந் துள்ளன' என்று வருகிறது. அதற்கு கிரிபித் அளிக்கும் விளக்கக் குறிப்பு:

"இதுபற்றி ஒரு கதை உளது. சதபத பிராம்மணத்தில் கூறப்பட்டுள்ளது. ஐதரேய பிராம்மணத்திலும் வருகிறது". "தேவதைகளுக்கு முதலில் ஒரு மனிதனைப் பலியாகக் கொடுத் தனர். பலியின் பலன் (சாரம்) அவனிடமிருந்து வெளியேறி, ஒரு குதிரையினுள் புகுந்தது. ஆகவே, குதிரை பலியிடப்பட்டது. அதன் பலன் ஒரு எருதினுள் நுழைந்தது. பின் எருது பலியாகக் கொடுக்கப்பட்டது. அதனுடைய சாரம் ஒரு செம்மறி ஆட்டுக்குள் புகுந்தது. செம்மறியாடு பலி கொடுக்கப்பட்டது. அதன் பலன் ஒரு வெள்ளாட்டிற்குள் புகுந்தது. அதுவும் பலி கொடுக்கப்பட்டது. அதன் சாரம் பூமியில் நுழைந்துவிட்டது. ஆகவே, பூமியைத் தோண்டினார்கள். அதன் சாரம் நெல், பார்லி ஆகிய இரண்டில் காணப்பட்டது. இந்த இரண்டில் எல்லா சாரங்களும் சேர்ந்திருந் தன. ஆகவே இந்த இரண்டை அவியாக அளிப்பவனுக்கு மற்ற எல்லாவற்றை அளிப்பதற்கும் மேலான பலன் கிடைக்கும்".

பிராம்மணங்கள் அனைத்தையும் கற்றால், இவ்வாறு வேள்விகள், ஹோமங்கள் செய்வதற்கான நெறிமுறைகள் நிரம்பக் கிடைக்கும். பொதுவாக இன்றும் திருக்கடவூர் சென்றால், ஒவ்வொரு நாளும் பல நூறு ஹோமங்கள் நடக்கின்றன. ஆயுஸ் ஹோமம், சுதர்சன ஹோமம், கணபதி ஹோமம் என மிகப்பல. தமிழகத்திலேதான் வீடுகள் தோறும், கோயில்கள் தோறும் ஒரு நாளைக்கு சராசரி ஆயிரம் ஹோமங்களேனும் நடக்கும். இவற்றில் 'சுவாஹா' செய்யப்படும் பொருள்கள் - உயிர்க்கொலை மட்டும் தவிர்த்து - அரிசி, உணவு வகை, பால், நெய், பழங்கள், தானியங்கள், உடைகள் என அத்தனையும் மக்களுக்குப் பயன்படுவன. அவை யாவும் அக்கினி மூலம் மேலுலகிலுள்ள தேவர்களுக்கும் தேவதை களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. உலகிலேயே பிச்சை எடுக்கிற இனம் தமிழினம் மட்டுமே. ஒவ்வொரு திருக்கோயிலின் எதிரிலும் இத்தகைய திருவோடு

ஏந்தும் 'சிவனடியார்களை', 'ஆழ்வாராதிகளை'க் காணலாம். பழனி மலைமீது ஏறும் படிகள் அனைத்திலும் இந்தப் பிச்சை எடுக்கும் பக்த கோடிகளைக் காணலாம்.

இவ்வாறு மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் அக்கினியில் போடுவதால் பலகோடி பெறுமான பொருள்கள் எரிந்து சாம்பலாகின்றன. தீர்த்தக் குடமெடுத்தல் என்று, மக்கள் தீர்த்தத்தையே - நீரையே குடத்திலேந்திச் சென்று திருமுழுக் காட்டினர். இன்றும் சில கிராமங்களில் இது நடைமுறையிலுளது. பூத்திருவிழா, பூச்சொரிதலென்று பூக்குடலைகளையே தூக்கிச் சென்று, இறைத் திருமேனிகளை அணி செய்தனர்.

இன்று பாற்குடம் எடுத்தலென்று, ஆயிரம் ஆயிரம் பாலபி சேகம் நடக்கிறது. இரண்டு 'டாங்க்' பாலபிசேகமாம் காளி யம்மனுக்கு; செய்தி வெளியிடுகிறது ஒரு செய்தி மலர். சிங்கப்பூரில் குருக்கள் கை வலித்ததால், குழாய் மூலம் விநாயகருக்குப் பாலபிசேகமாம். எல்லாம் ஆகமப்படி நடக்கின்றன.

இவை அனைத்தையும் பயன்படுத்தி, இந்த நாட்டைப் 'பிச்சை' என்று கையேந்தாத மக்களை உருவாக்கலாமே. கோயிலுக்குள் அருச்சகர் தட்டேந்திப் பெறுவன 'தானம்' என உயர்ந்த சொல்லால் குறிக்கப்பட்டாலும் அதுவும் ஒருவகைக் கையேந்தல்தானே! திருக்கோயில் நிதியனைத்தும் இவற்றை எல்லாம் நீக்கப் பயன்படவேண்டும்.

"முதல் ஆயிரம் ஆண்டில் (First Millennium) ஐரோப்பா வையும் இரண்டாமாயிரமாண்டில் ஆப்பிரிக்க நாடுகளையும் மதம் மாற்றினோம். இந்த ஆயிரமாண்டிற்கு ஆசியாதான் நமது குறி (ஆசிய மக்களை அறுவடை செய்வோம்)" என்று போப் கூறுகிறார். இதன் பொருள் என்ன? பாமர இந்து மக்களை விலைக்கு வாங்கி அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கும் ஒரு பெரிய வியாபாரம் நடக்கிறது; நடக்கப்போகிறது".

இவ்வாறு ஸ்ரீ ராமகிரு ண மடம் வருந்துவதை, அதன் இதழ் 2002இல் வெளியிட்டதை, சிவநெறிச் செல்வர் எடுத்துக் காட்டியுள்ளார் (இதோ இந்து சமயம், மலேசிய இந்து சங்கம், 2003).

இந்த வருத்தம் நியாயமானதுதானா என்று சற்று நிதானமாக எண்ணிப் பார்க்கவேண்டும். இந்து சமயப் பெயரில் மாட்டிக் கொண்டுள்ள ஒரு 'சைவ சமயி' அல்லது 'வைணவ சமயி' தனக்குப் புண்ணியம் என்று, கடவுளர்க்குத் தங்கத்தேர், வைரமுடி, வெள்ளிக் கவசம், மாணிக்கமாலை, முத்துச்சரம் என்று காணிக்கை கொடுக்கின்றார். இறைவனோ 'எனக்குப் புல்லிலை எருக்கமா யினும் அன்பொடும் அருளொடும் தந்தால் போதும்', என்கின்றார்.

தன்னலமிக்க மனிதன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் புண்ணியம் சம்பாதிக்கின்றான். நம் திருக்கோயில்கள் 'வணிகத் தலம்' ஆகிவிட்டன. பழங்காலச் சமணனும் புத்தனும் போல, கிறித்தவன், பள்ளிக்கூடம் கட்டுகின்றான்; மருத்துவமனை அமைக்கின்றான். அவன் ஏழைகளுக்குப் பொதுநலம் கருதி எல்லாப் பணிகளையும் செய்கிறான். ஒரு கிறித்தவன் தன் சமயம் சார்ந்த மக்களைப் பொதுநலம், மனித நேயம், அருளுள்ளம் படைத்த தொண்டுள்ளம் கொண்ட உணர்வுடையவர்களாக உருவாக்குகின்றான். ஆயிரம் பேரில் சிலர் தவறிழைத்தாலும் மிகப்பலர் அன்னை தெரசா போல நடந்து கொள்கிறார்கள். தாயுள்ளம் கொண்டவர்களினால்தான் ஏழைமக்கள் மதம் மாறிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்து சமயப் பெரியோர்கள், 'எங்கள் சமயத்திலேயே இருங்கள். ஆனால் எல்லாவற்றையும் நாங்கள் கடவுளுக்கே செய்வோம். அதனால் எங்களுக்குப் புண்ணியமுண்டு. ஏழைகளே உங்களுக்குச் செய்வதால் எங்களுக்கு ஆவதென்ன? இன்னும் இன்னும் மேலும் மேலும் நாங்கள் கோயில்களையே பணக்காரக் கோயில்களாக்குவோம். டாடா, பிர்லா, பஜாஜ், அம்பானியுடன் எங்கள் கடவுளரைப் போட்டியிட்டு நாளும் கோடி ஈசுவரர்களாக ஆக்குவோம். தவிர, பொதுநலனுக்கு ஏதோ கடுகளவே காட்டு வோம்' என்றால், எந்தச் சமயம் பெருகும் வளரும், மேம்படும்?

பத்தி என்ற ஒன்று இவர்களைக் கட்டிப் போட்டிருக்கிறது; அதுவும் பசி மிகுந்திடில் பத்தியும் பறந்துபோம் என்பதுறுதி.

பரிகாரங்கள் பெருகி, அரசியல்வாதிகள் எல்லோரும் பெரும் பத்தர்களாகி, மாநிலம் விட்டு மாநிலம் போய்த் தொழுது, தாங்கள்

செய்த, செய்யப் போகிற பாவம் அனைத்திற்கும் கடவுளர்களிடம் மன்னிப்புப் பெற்றுவிடுகிறார்கள். இதையே இந்து சமயம் ஊக்குவிக்கிறது. இவற்றை எல்லாம் கருதாமல், எம் போல்வார் உண்மையை வெளிப்படுத்தும்போது நிதானம் இழந்து சீறிப் பாய்ந்து பயனில்லை. தவறினால் அருட்தந்தை போப் சொன்னதே நிறைவேறும்.

அக்கினி காரியம், வேள்விகள், ஹோமங்கள் கூடவே கூடா. கோலம் போடுங்கள், விளக்கேற்றுங்கள், மலர்களால் அணி செய்யுங்கள், தாய்மொழியில் உள்ளமுருகிப் பாடுங்கள், கூட்டு வழிபாடு செய்யுங்கள். பொதுநலம் பேண வேண்டியதன் சிறப்பை எடுத்துரையுங்கள்.

இறைவனை வழிபடத் 'தரகர்கள்' வேண்டாம். திருக் கோயில்களில் 'புண்ணிய வாணிகம்' வேண்டாம்.

தியான மண்டபங்கள் அமையுங்கள், மன ஓர்மையைப் பேணுங்கள்!

திரு. வி. க. கோயில்களில் 'நிதி' சேரக்கூடாது என்றார். சேர்ந்தால் நீதியும் பத்தியும் அங்கு நிலைக்காது என்றார்.

வேள்வி ஹோமங்களும் பரிகாரங்களும் முற்ற முடிய ஒழியும் நாளே, தமிழர் சமயங்கள் தழைக்கும் காலமாகும்.

செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடி வருந்தவேண்டும், அழ வேண்டும், திருந்த வேண்டும், மீண்டும் செய்யேன் என உறுதி பூணவேண்டும்; இறைவா என்னை மன்னித்துவிடு என்று திருத்தாள்களில் விழுந்து வணங்கித் தொழ வேண்டும்.

எனக்குத் திருமணம் நடக்க அருள்செய் எனத் தமிழில் வேண்டுங்கள், எனக்குக் குழந்தை வரம்தா என்று பாடல் புனைந்து பாடி வேண்டுங்கள்; நேர்த்திக்கடன் என்று நீங்களும் பயன் பெற்று, பிறரும் பயன்பெறுமாறு சடங்குகளை நடத்துங்கள்.

வேத மூலத்தில் பிரமனும் விஷ்ணுவுமே தேவதைகளில் முக்கியமானவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

"பிரமனால் இப்புவி ஸ்திரமாக்கப்பட்டுள்ளது. உயர்நிலைக் கப்பட்ட சோதி பிரமனாவான். மேலும் குறுக்கும் வைக்கப்

பட்டுள்ள இந்த வானம் பிரம்மமாகும்". (10 - 455- 25). 'இப்பாடலின் பொருள் பரம்பொருள். பரம புருஷன்' என்பது கிரிபித்தின் விளக்கம்.

ருத்ரனைப் பாத்திரமாக்கி, வி ணு, பாற்கடல் நஞ்சை அதில் ஊற்றிக் குடித்ததாக வேதம் கூறுகிறது. எந்த இடத்திலும் வேத மூல நூலில் ருத்ரன் போற்றப்படவில்லை. அவனது சொல்லுக்கேற்பக் கோபக்காரன், கோபத்தால் சிவந்து தணலாக மாறுபவன் என்பன வெல்லாம், வேள்வியில் வரும் தேவதைகளின் வரிசையில் வருவதேயாம்.

சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் - என்ற எமது பகுதியையும் கண்டு தெளிவு பெறுக. 'வடமொழி வேதங்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்பது பற்றி எம் கருத்துக்களையும் படித்தால், நாங்கள் எவ்வகையிலும் வேதங்களைப் பழிக்கவில்லை என்ற தெளிவு ஏற்படும்.

ஒருவேளை ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்திலரேல், இந் நாவலந்தீவு எனப்படும் நாடு எவ்வாறு வளர்ந்திருக்கும்?

சற்றே எண்ணிப் பாருங்கள்!

தெற்கே குமரிக் கண்டத்திலிருந்த காலந்தொட்டுத் தமிழர்கள் வானநூல் வல்லுநராய்க் கணியர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் கோள்களையும் விண்மீன்களையும் மிகத் துல்லியமாய்ப் பெயரிட்டு அழைத்துள்ளனர். வெள்ளியை வெண்மீன் (சுக்கிரன்) என்றும் செவ்வாயைச் செம்மீன் என்றும் சனியைக் கரிய நிறங் கருதி மைம்மீன் என்றும் ஆறுபுள்ளி வடிவினதாகலின் கார்த்திகை நட்சத்திரத்தை அறுமீன் என்றும் ஏழுபுள்ளி வடிவினதை எழுமீன் என்றும் இவ்வாறே அனைத்தையும் 'அளந்து அறிந்தவர் போல' அறைந்துள்ளனர்.

மேலும் கோள்களைக் கொண்டு மழை வருங்காலம், பருவ மாறுதல்கள் போன்றவற்றைக் கணக்கிடும் 'அறிவராக' விளங்கி யுள்ளனர். முழுத்தம் என நல்லநாள்கூடப் பார்த்துள்ளனர். போருக்குப் போகும்போது, நல்ல நாள் பார்த்து 'புறவீடு' போயுள்ளனர்.

ஆனால் செய்த பாவத்திற்குக் 'கழுவாய்' என்று, பணம் செலவழித்துப் பிராயச்சித்தம் தேடிற்றிலர். செய்த வினையை நுகர்ந்தே தீரவேண்டும் என்பது இவர்கள் விதி. நல்வினை, தீவினைப் பயன் மறு பிறவியிலும் தொடரும். ஒருவர் செய்த தீய வினையை நுகரும்போது ஏற்படும் வலியைத் தாங்க அழ வேண்டும்; வருந்தவேண்டும்; திருந்த வேண்டும். மீண்டும் நல்வினை செய்தே அதிலிருந்து விடுபடவேண்டும்.

பரிகாரம் என்று பணம் செலவழித்து, ஏதேனும் யக்ஞம், சடங்கு, தானம் என்று செய்தும் கடவுளர்க்குச் செலவழித்தும் தப்பித்துவிடலாம் என்பதை விதைத்த பெருமை பிற வேதங்களில் அருகியும் அதர்வ வேதத்தில் பெருகியும் காணப்படுகின்றன. பிற்காலப் புராணங்கள் இதற்குப் 'பரிகாரக் களஞ்சியம்' என ஆயிரம் விதிமுறைகள் காட்டவே, பாவம் என்று தெரிந்து செய்பவனும் பரிகாரம் உண்டு என்று செம்மாந்து திரிகின்றான்.

இன்றைய இந்தியாவின் ஊழலின் ஊற்றுக்கண் இப்பரிகார மகிமையே. இதனைப் பிற சமயங்களிலும் பிற நாடுகளிலும் காண இயலாது.

மிகப் பெரிய ஊழல் செய்யும் ஓர் அமைச்சர் திருப்பதி போகிறார். அடுத்த மாநில முதலமைச்சர் திருநள்ளாறு போந்து, சனீசுவர பகவானுக்குப் பணம் செலவழித்துப் பரிகார வழிபாடு செய்கிறார்.

ஒரு மாநில முதலமைச்சராக வர விரும்பும் தேவியார், அவ்வாறு வர, வரம் வேண்டி யாகம், யக்ஞம் எல்லாம் செய்கிறார்.

முறை மன்றங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஊழல் குற்றவாளி, கைதானதும் 'பிணையம்' வாங்குவது போலவும் முன் பிணையம் வாங்கித் தப்பிக்க நினைப்பது போலவும் இப் பரிகாரங்கள் அனைத்தும் கடவுளர்களிடம் பணம் செலவழித்துப் பிணையம் வாங்கித் தப்பிக்க வழிகாட்டும் நெறிகளாகிவிட்டன. இவற்றுக்கெல்லாம் அதர்வ வேதம் போல்வனவும் மனுஸ்மிருதி போல்வனவும் புராணங்களும் ஏனைய வடமொழி நூல்களுமே காரணமாகும்.

ஆகவே, ஆரியர் வரவால் இந்தியம் - குறிப்பாகத் தமிழினம், திராவிட இனம் மீள முடியாத அறியாமையில் மூழ்கி அழிந்து வருகிறது என்றே புலனாகிறது. பெரிய பெரிய திருமடங்கள், சமயாசாரியார்களே தவறாக வழிகாட்டும்போது, வேறு என்ன செய்ய இயலும்? அரசியல்வாதிகள் - பகுத்தறிவாளர் உட்பட - அனைவரும் இம் மூட நம்பிக்கைகளுக்கு அடிமையாகிவிட்டனர். ஒவ்வொரு நாளும் நாளிதழ், வார மாதத் தாளிகைகள், தொலைக் காட்சிகள் அனைத்தும் இராசிபலன் என்ற பெயரால், நூற்றுக் கணக்கான பரிகார விளம்பரங்களே செய்கின்றன. இவற்றிலிருந்து மீள வேண்டுமேல் ஒரு விழிப்புணர்வுப் பண்பாட்டுப் பேரியக்கம் தேவைப்படுகிறது.

❖❖❖❖❖

# 9

# சேக்கிழார் திருவுள்ளம்

# சண்டீசர் வரலாறு

(சண்டேசுர நாயனார் புராணம்)

புராணங்கள் மூவகைப்படும். உண்மை ஒன்று மக்களிடையே வழங்கி வழங்கிக் காலந்தோறும் கால் கை முளைத்துப் பழங்கதை களாகித் தொன்மங்களாகும் (தொன்மம் - புராணம்). இறையனார் அகப்பொருளில் காணப்படும் முச்சங்க வரலாறு இது போன்றதே. உண்மை ஒன்றின் வளர்ச்சி அது.

பொய்யாக, புனைவாக, சில உட்கருத்துக்களுடன் ஒருசில அடிப்படைகளிலிருந்து புராணிகர்களால் கட்டப்படுபவை. வடமொழிப் புராண வகைகள் இதில் சேரும்.

மூன்று, இலக்கிய வடிவம்பெறும் தொன்மங்கள். இவை படைப்பவனின் திறமையை வெளிப்படுத்தும். அவன் தான் சொல்ல வந்ததைக் குறிப்பால் உணர்த்துவான். இத்தொன்மங்கள் இலக்கிய ஆய்வில் முக்கிய இடம்பெறும்.

மேனாட்டார் இலக்கியமாவதற்குரிய அடிப்படை இலக்கியக் கொள்கைகள் மூன்று என்பர். இவை உலகளாவிய இலக்கியம் அனைத்திற்கும் பொருந்துபவை. அவை Imagery, Symbolism, Mythology என்பன (உருக்காட்சி, படிமம், தொன்மம்).

இத்தொன்மம் நேர் உண்மையன்று; மறைமுக உண்மை (Indirect truth) என்பார் ரெனே வெல்லக்கு.

சண்டேச நாயனார் வரலாறு உண்மை அடிப்படையில், காலச் சூழலுக்கேற்பத் தொன்ம வடிவாக்கப்பட்டுள்ளது. (mythology, Myth making போன்ற நூல்களைப் பயிலுதல் வேண்டும்).

## கருதுகோளும் கண்கண்ட உண்மையும்

சமண புத்த தாக்குதல்களுக்கு அஞ்சியும் பிற (சூத்திர) அயல் சாதிகளனைத்திடமிருந்தும், பிரிந்தே தனித் தீவுகள் போலத் தமது 'மேன்மையை'க் காத்துக் கொள்ளலாம் என்ற கருத்தாலும் வைதிகப் பிராமணர்கள் தனித்தனிக் கூட்டமாக, வெவ்வேறு ஊர்களில், கூடி வாழ்ந்துள்ளனர். மேலும் இது வெளியே சிவவேதியர்போல் தமிழரிடையே காட்டிக்கொள்ளவும், உள்ளே வேதம் ஓதுதல் முதல் வேள்வி செய்வது வரை கைவிடாதிருக்கவும் உதவியானது.

அவ்வாறு அவர்கள் வாழ்ந்த ஊர்களில் ஒன்று சோழ நாட்டில், மண்ணியாற்றுத் தென்கரையிலிருந்த சேய்ஞலூர். சோழமன்னர்கள் திருமுடி சூட்டிக்கொள்ளும் ஊர்களில் ஒன்று என்பது, அவர்கள் மன்னர்களின் ஆதரவுபெற்று வாழ்ந்ததைக் காட்டுகிறது.

**செம்மை வெண்ணீற்று ஒருமையினார், இரண்டு பிறப்பினார், மும்மைத் தழல் ஓம்பிய நெறியார், நான்கு வேத முறை பயின்றார்** வாழ்ந்தனராம். ஓது கிடை சூழ் சிறுவர்கள் - வேதம் பயிலும் சிறுவர் கூட்டம். அவர்களும் ஆசான்மாரும் முழங்கிய வேத ஒலி, வானில் முகிற் கூட்டத்தையே ஒதுங்கச் செய்ததாம். இவர்கள் செய்த வேள்விகளின் 'அவி' யுணவை உண்ணத் தேவர்களும் அங்கு வந்தனர். அங்கு 'ஓம தேனுக்களும்' - (ஹோமத்தில் பலியிடுவதற்காக வளர்க்கப்படும் பசுக்கள்), அவற்றுக்கான 'சமிதைகளைக்' கொண்டுவரும் ஆடவரும் இருந்தனர்.

ஓம தேனு; தேனு - பசுக்கூட்டம். இது பசுக்கள் தரும் 'பஞ்ச கவ்வியம்' பொருட்டும் வளர்க்கப்பட்டன. 'ஓமதேனு' - என்பது வேள்வியிலிடப்படும் பசுக்கள் என்றே பொருள்படும்.

வேதம் வேறு; வேதாந்தம் வேறு. எவ்வாறு? வேதங்கள் தோன்றிய மிகப் பழமையான காலம் வேறு. பிற்பாடு உபநிடதம், உபவேதம், சாகைகள், பிராம்மணம், பாஷியங்கள், உரைகள் எல்லாம், வேதத்திலுள்ள சிலவற்றைப் பின்பற்றியவை குறைவே. கிறித்துவ ஊழிக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இவை, பிற சமயங்கள் பரவாமல் தடுக்கவும் அச்சமயவுண்மைகளைத் தாமும்

ஏற்றுக்கொண்டு தம்முடையன எனக்காட்டி மக்களைத் தம்பால் ஈர்க்கவும் இவ்வாறு பல திறத்தனவாய்க் காணப்படுகின்றன. தமிழர்க்கும் வைதிகம் அயற்சமயமே. ஆனால் நம் சாத்திர தோத்திரங்களை எல்லாம் தம்மதாக்கி வைத்துக்கொண்டு, நம் மூலநூல்களை அழித்துவிட்டனர். இதனால் 'வேதநெறி' என்னும் போது, நம் நற்சமய நெறிகளையும் அவை கொண்டிருப்பதாகக் கூறியே, நம் அருளாளர்களும் மயக்கத்தை ஊட்டிவிட்டனர். வைதிக சைவம் என்ற குழப்பம் உருவானது. அதிலிருந்து தெளிவு பெறுங்காலம் வந்துளது.

''வேதங்களில் பாடங்கள், பாடபேதங்கள் உண்டு'. இப் பாடாந்தரங்கள் பிற்சேர்க்கை. இவற்றை, சாகை என்றும் கூறுவர். 'சாகை ஆயிரம் உடையார்' என்பது சம்பந்தர் வாக்கு *(2-94)*.

ஒவ்வொரு சாகையிலும் ஸம்கிதை, பிராம்மணம், ஆரண்யகம் என்ற மூன்று பிரிவுண்டு. இத்தகைய சாகைகளின் முடிவாகவே, அந்தமாகவே உபநிஷத் அமைந்திருக்கிறது. எனவே அது வேதாந்தம் ஆகிறது.

யக்ஞங்களைச் செய்வதே (யாகம், வேள்வி, ஹோமம் செய்வதே) வேதத்தின் தலையாய நோக்கம்! பரஞானம் பெறுவது வேதத்தின் மற்றொரு நோக்கம் என்றும் கூறுவர். வேதம் செய்யப் பெற்ற காலத்தில் முதல் நோக்கமே மேலோங்கி இருந்தது. பிறகு வேதக்காரர்கள், தமிழ் மக்களோடு தொடர்பு கொண்ட காலத்தில், 'ஞானம்' என்ற பொருள் அவர்களுக்குத் தெரிய வந்தது" (திருவின் நாயகன், 'இதோ' இந்துசமயம், மலேசிய இந்து சங்கம், *2003*, பக். *26)*.

இவற்றைத் தெளிவுடனும் நடுவுநிலையுடனும் எண்ணிப் பாருங்கள். வேத மூலநூல்களே அவர்களின் சொந்தச் சரக்கு; அவர்களின் சமயக் கோட்பாடு. இன்றும் அம் மனப்பான்மையை யும் பயிற்சியையும் கைவிட்டிலர்.

வேதாந்தம் எனப்படும் உபநிடதங்கள் தொடங்கிப் புராணங்கள் வரையிலுள்ள அனைத்தும் பிறரது 'உடைமைகளை' அவ்வப்போது தம்மவற்றுடன் இணைத்துக் கொண்டவை. இதனால் வேதாந்தம் எவ்வாறு வேண்டுமானாலும், அவரவர்

விருப்பப்படி விளக்கியுரைக்க இடம் தருகிறது. எந்த மத 'உண்மையையும்' அது விழுங்கி, நன்கு செரித்துக்கொண்டு, அதனை எதிர்க்கவும் இடம் தருகிறது; மறுக்கவும் இடம் தருகிறது; ஏற்கவும் செய்வதுபோல் காட்டிக் கொள்கிறது.

உலகமே வியக்கும்படியான 'உண்மை விளக்கங்களையும்' அதில் காணமுடிகிறது; அந்த உலகமே வெறுக்கும்படியான, அருவருப்பானவற்றையும் கொண்டுள்ளது.

தமிழர் சமயங்கள் தனித்துவமுடையவை. ஆனால் இன்று அவை முற்றிலும் வடமொழிக் கலைச்சொற்களுட்பட, அனைத்தையும் கொண்டு, விளங்காமற் போய்விட்டது. எனினும் நம் அருளாளர்கள், ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளில் (களப்பிர, பல்லவ, நாயக்கர் காலம்) நடந்த, வடமொழி வல்லாண்மை வழிகளிலிருந்து, தமிழை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் காப்பாற்றியே வந்துள்ளனர்.

1) இது தமிழருடையது 2) இது தமிழருடையதை அது எடுத்துக் கொண்டதால், அதை வெளிப்போக்கில் மட்டும் ஆதரித்துப் பாடியது. 3) இது அவற்றை அடியொண்ட மறுத்தது எனப் பிரித்தறிய நிறைய வாய்ப்புத் தந்துள்ளனர்.

சேய்ஞலூர் வேதியர்கள், பசுக்களை அவைபற்றிய 'பஞ்சகவ்வியம்' சிவவழிபாட்டிற்கு உதவுகின்றன என்பதால் வளர்த்தனர் என்பது, மறைமுகமாக அவர்கள், 'பசுவையும் வேள்வியிலிட்டுத்' தீ ஓம்பினர் என்பதையே காட்டுகிறது. இல்லையென்றால் பசும்பால் கொண்டு சிவனை வழிபட்டவரைத் தண்டித்திருப்பார்களா? மேலும் பசுக்களைச் சிவவழிபாட்டிற்கு உதவும் என வளர்த்தவர்களாக இருந்தால், மண்ணியாற்றங்கரையில் விசார சருமனார் இயற்றிய, அதி அற்புதமான, மணலாற் செய்த சிவக்கோயில் திருமுழுக்காட்டு நிகழ்வைக் கேள்விப்பட்டதும், எல்லோரும் அங்கு சென்று ஆடியும் பாடியும் சிவனை வழிபட்டிருப்பார்களே? விசார சருமனாரின் தந்தையார் எச்சதத்தன் இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்றதற்காகத் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடி இருப்பரே!

கதை நேர் எதிராகவல்லவா போகிறது. உடனே அவ் அந்தணர்கள் வேள்வியில் பசுக்களைக் கொல்லவே அவற்றை

வளர்த்தனர் என்று சேக்கிழார் கூறியிருப்பாரே என்று கேள்வி எழுப்புவீர்கள். காலச்சூழலால், அவர் இதை மறைமுகமாக நன்கு உணர்த்தியுள்ளார் என்பதே, நாம் இங்கு விளக்குவது.

நாம் விளக்குவன எல்லாம் சேக்கிழார் 'திருவுள்ளக் கிடக்கை' - என்பதை மறவாதீர். 'இதோ, இந்து சமயம்' நூலிலிருந்து மேலும் சிலவற்றைக் காண்போம்.

'பண்டைத் தமிழரிடையே கடவுளர்க்கு நேர்த்திக்கடனாக உயிர்களைப் பலியிடும் பழக்கம் நிலவி வந்திருக்கிறது, என்பதைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. வேதங்களிலும் உயிர்ப்பலி செய்து, வேள்விகள் நடந்துள என்பது நன்கு விளக்கப்படுகிறது.

வேள்விகளில் பறவை, விலங்குகள் அவிசாகவே - தேவருணவாகவே இருந்ததால், வேள்விகளில் உயிர்வதை செய்யலாம் என்கிறது மனுஸ்மிருதி (5. 23).

தமிழ்ச் சமய நெறி மரபு உயிர்க்கொலையை அறவே தவிர்க்கச் சொல்வது என்பதைத் திருக்குறள், திருமந்திரம் வழி அறியலாம்.

திருஞானசம்பந்தர், தமது தில்லைத் திருப்பதிகத்தில் இதை வெளிப்படையாகப் பாடியுள்ளார்.

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய. . .

பறம்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய (1–80–1, 2)

'பசுவேட்டு எரியோம்பும்' என்பதற்கு, வேறுபொருள் கூறுவதனாற் பயனில்லை.

"வேத வேள்விகளில் உயிர்ப்பலி - குறிப்பாகப் பசுக்கள் பலியிடப் பெற்றதைக் காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளே கூறியும், அதற்கு ஆதரவு தெரிவித்தும் இருக்கிறார்.

சாத்விகமான வாழ்க்கை முறைக்கென்று ஏற்பட்ட பிரிவினரிடமே உயிர்களை வதை செய்யும் அம்சம் இருப்பதாகத் தோன்றும் யாகங்களை வேதங்கள் விதித்திருக்கின்றன என்றால், அதில் நியாயம் இல்லாமல் இருக்குமா? என்று கூறி, யாகங்களில்

உயிர்கள் பலியிடப் பெறுவதற்கு நியாயம் கற்பிக்க முயல்கிறார் சங்கராச்சாரிய சுவாமிகள்.

யக்ஞப் பலியால் (யாகத்திற்காக மேற்கொள்ளப்பெறும் உயிர்ப்பலியால்) சில தேவ சக்திகள், திருப்தி அடைந்து, உலகத் திற்கு நல்லது செய்கின்றன. பலியாகும் பிராணியும் நல்ல கதியை அடைகிறது - இது அவர் கற்பிக்கும் நியாயம். (*தெய்வத்தின் குரல், 5-335*).

வேள்விக்கும் பயன்படுத்துகின்ற கொடி, மரம், பசு, விலங்கு, பட்சிகள் போன்றவை பின்னர் மேலான கதியை அடைகின்றன என்கிறது மனுதர்ம சாஸ்திரம் (*5 - 40*).

கீதை என்ன சொல்கிறது?

யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்யுங்கள். அந்தத் தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு நலத்தைச் செய்வார்கள். இப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு மேலான நன்மை பல அடையுங்கள். இவ்வாறு அவர்களால் (தேவர்களால்) கொடுக்கப்பெற்று (அதற்காக) அவர்களுக்குக் கைம்மாறு செய்யாது நுகர்பவன் திருடனாவான் (*3 - 11, 12*).

திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்ற படலத்தில், பசுவை வதைத்து, வேள்வியில் போட்டு, வெந்தபின், அதன் வெண்மை நிற வபையை - நிணத்தைத் தின்பது பற்றி மிக விளக்கமாக வருகிறது.

தர்மத்துக்காகச் செய்ய வேண்டியது எப்படியிருந்தாலும் பண்ண வேண்டும். ஹிம்சை என்று பார்க்கக்கூடாது (*தெய்வத்தின் குரல் 2- 283*).

வேள்விக்கென்றே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டன. உலக நன்மையை முன்னிட்டே நடைபெறுவனவாகிய வேள்விகள் செய்யப்படும்போது அது பசுவதை ஆகாது (மனுதர்மம் *5 - 39*).

‘பிராமணர்கள் செய்வதில் மிக உயர்ந்த யாகமாகக் கூறப் பெறுவது வாஜபேயம். (யாகம் *21*இல் அந்தணர் மற்றும் அரசர் களால் செய்யப்பெறும் யாக வகை). அந்த யாகத்தில் *23*

பசுக்களைப் பலிகொடுக்கச் சொல்லியிருக்கிறது. மேலும் ஹோமம் செய்யும் பிராமணர் (ரித்விக்குகள்) இடாவதாரணம் என்பதாகப் பசுவின் இன்ன இன்ன அங்கங்களிலிருந்து, இந்த அளவு மாமிசம் சாப்பிட வேண்டும் என்றும் சொல்லப் பெற்றிருக்கிறது".

*(யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாவங் களினின்றும் விடுபடுகின்றனர். கீதை 3 - 13).*

பசு வேட்டபின் அதில் இன்றைய நிலையில் குன்றிமணி அளவும் விழுங்கத்தான் வேண்டும் என்கிறார், மகா சுவாமிகள்.

சிரார்த்தத்தில் வரிக்கப்பெற்ற - நியமிக்கப்பெற்ற அந்தணன், புலால் உண்ணலாகாது என்று எண்ணி உண்ண மறுத்தால் அவன் 21 பிறவிகள் பசுவாய்ப் பிறப்பான் (மனுதர்ம சாஸ்திரம் 5 - 35).

திருவின் நாயகன் தமது இந்து சமய விளக்கத்தில் சண்டே சுவர நாயனார் பற்றிக் குறிப்பிடுகிறார். அண்மையில் கன்று ஈன்ற பசு ஒன்று தன்னை முட்ட வந்தது என்பதற்காக அதனைக் கோலினால் இடைச்சிறுவன் அடித்தபோது, அவன் மீது கோப முற்று, அவனை விலக்கிப் பசுமேய்க்கும் தொழிலை விசார சருமனார் தாமே மேற்கொண்டார் என்று சேக்கிழார் பாடுகிறார். உண்மையில் அவ்வூர் அந்தணர்கள் வெண்ணீறுபூசி பசுவேட்டு, எரி ஓம்பியதால்தான், விசார சருமர் வெறுப்புற்று, ஊர்ப்புறத்தே சென்று, மண்ணியாற்றங்கரையில், யாருக்கும் தெரியாமல், மண்ணாலேயே சிவ ஆலயம் அமைத்துப், பால்முழுக்காட்டி வழிபட்டார். சேக்கிழார் சொல்வது இது.

சேய்ஞலூர் வேதியர்களை, 'செம்மை வெண்ணீற்று ஒருமை யினார்' என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார். வெண்ணீறு பூசுவதில் மட்டும் மிக உறுதியானவர்கள். உடனே இரண்டு பிறப்பினர், மூன்று எரி ஓம்புநர், நான்கு வேதம் பயில்பவர் என்பது ஏன்?

எல்லாம் வெளிவேடமே என்பார் போல் இக்கருத்து உளது. சான்றோர்கள் தாம் சொல்ல வந்த கருத்தை - தம் உள்ளக் கிடக்கையை அந்நூலுள் - பாடலுள் எங்கேனும் புதைபொருள்

போல் வைத்திருப்பர். பிற எல்லாம் நேர் எதிரானவை போலவும் இருக்கும். நுண்மாண் நுழைபுலமுடையாரே இதனைக் கண்டு கொள்வர். வேள்வி மல்கும் சேய்ஞலூரில் எவ்வகை வேள்விகள் நடந்தன.

யாகம் நிலவுஞ் சாலைதொறும் மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகரவரும் மாலும் அயனும் ஊரும் படர்சிறைப் புள்
மாகம் இகந்து வந்திருக்கும் சேக்கை எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கந்தெனவும் நாட்டும் யூப ஈட்டமுள

யாக சாலைகள் தோறும், மறையவர்கள் 'ஈந்த' அவியுணவை உண்ண திருமாலும் அயனும் தம் ஊர்திகளாகிய கருடனுடனும் அன்னத்துடனும் வானத்திலிருந்து வந்து இறங்கினர். இந்திரன் வந்த யானை அங்கு வந்தது. யாகத்திற்கு நாட்டப்படும் யாகத் தம்பங்கள் பல இருந்தன. அவ்வூர் இவ் வாகனங்கள் தங்குமிடம் போல் இருந்தது.

**இங்கு திருமாலையும் பிரமனையும் இந்திரனையும் அழைத் தவர்கள் சிவனை அழைக்கவில்லை என்று வெளிப்படையாகத் தெரிகிறது.**

எமக்கு எதனையும் மழுப்புவதில் விருப்பமில்லை. சிவன் இவர்களுக்கு எல்லாம் தலைவனாதலின், அழைக்க வேண்டாதா யிற்றாம். சி. கே. சு. அவர்கள் தரும் விளக்கம் இது. ஒரு வங்கியில் எல்லா ஊழியரையும், ஒரு திருமண விருந்திற்கு அழைத்துவிட்டு, அவர்களுக்கு எல்லாம் தலைவராகிய மேலாளரை அழைக்காமல் விட்டுவிட்டு, பிறகு கீழ் உள்ளவரை அழைத்தது தலைவரையும் அழைத்தது போன்றதே என்பது, அத்தலைவரை அவமானப் படுத்தியதாகாதா?

சேய்ஞலூர் வேதியர்கள் சிவ வேள்வி செய்திலர்; செய்ய விரும்பிலர் என்பதே பொருள்.

மக்கட் சமுதாயமே இறைச்சி தின்று, மது பருகி வாழ்ந்த காலம் அது. இதில் மட்டும் அப்பழங்கால நிலை ஒன்றுதான். அதனால் வேதியர்கள் தாங்கள் சிவ வேள்வி செய்து, சிவ வேதியராக மாறுவதாகக் கூறியே தமிழருடன் இணைந்தனர். ஆனால் தங்கள் சுய குணத்தால், சிவ வேள்வியைச் செய்யாமலே

ஏமாற்றியும் வாழ்ந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தக்கனும் இங்கு வரும் எச்ச தத்தனும் ஆவர். அதனால் அவர்கள் தண்டிக்கப் பட்டனர் என்பதைத் 'தச்சனையும் எச்சனையும் தலையறுத்து' என்று மாணிக்கவாசகரும், 'தக்கனது பெரு வேள்வி சந்திரன் இந்திரன் எச்சன் அருக்கன் அங்கி, மிக்கவிதாதா வினொடும் விதி வழியே தண்டித்த விமலர்' என்று ஞானசம்பந் தரும் (முதுகுன்றம் 2) பாடுவர். இவற்றிலிருந்து வாழ்வு கருதி சிவவேடம் பூண்ட, வேத வேள்வியரிடையே, விசார சருமனார் உண்மையான சிவவேதியராகத் திகழ்ந்து, அப் போலிகளை எதிர்த்து நின்றார் என்பதே உண்மை. இன்றைய அந்தணாளரி டமும் இவ் இரு வகையினரை நாம் இனம் காணமுடியும். இதுவே வேதனை தரும் செய்தி.

சேய்ஞலூரில் காசிப கோத்திரக் குடியில் மணியையும் தந்து நஞ்சினையும் அளிக்கும் நாகப்பாம்பு போல, நல்லதும் தீயதுமான இரண்டுக்கும் ஒருவனாக எச்சதத்தன் என்பவன் உளனானான்.

விசார சருமனை ஈன்றது நற்செயல்; சிவ வழிபாட்டைக் குலைத்தது தீச்செயல். சுவாமி விவேகானந்தர் பிராமணியம் பற்றி இதே கருத்தைக் கூறியுள்ளது மிகவும் பொருந்தும் போலும் (தமிழண்ணல், தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?) யக்ஞம் தமிழில் எச்சம் எனப்பட்டது. அவருக்கு மறையின் துறை விளங்கவும் மன்றில் நடம் செய்பவர் சைவ வாய்மை வளரவும் விசார சருமன் என்ற மகன் பிறந்தார். அம்மகனார் மறை பயின்றாராயினும் சிவனார் அருளிய ஆகமங்கள், முந்தை அறிவின் தொடர்ச்சியினால் வாய்க்கப்பெற்றார். அச்சிறிய பெருந்தகையார், 'அலகில் கலையின் பொருட்கு எல்லை (சிவனாரின்) ஆடுங்கழலே எனச் சிந்தனையில் தெளிந்தார்.

சேய்ஞலூர் வேதியரிடையே, விசார சருமனார்க்குச் சிவபெரு மானிடம், பிறவித் தொடர்பால் வந்த பேரன்பு உளதானது.

> 'நடமே புரியும் சேவடியார் நம்மையுடையார்' எனும் மெய்ம்மை
> உடனே தோன்றும் உணர்வின்கண் ஒழியாது ஊறும் வழியன்பின்
> கடனே இயல்பாய் முயற்றிவரும் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
> திடம்நேர் நிற்கும் செம்மலார் திகழும் நாளில் ஆங்கொருநாள்

இவை அனைத்தும், அவ் வேதியரினின்றும் பிரித்து, சிவன்பால் இவர் உள்ளும் புறமும் கொண்ட பேரன்பை விளக்குகின்றன.

அடுத்து பசுவின் பெருமையைச் சேக்கிழார் விரித்துரைக் கிறார். சிவனுக்குத் திருமுழுக்காட்ட ஆன் ஐந்தும் தருதல், திருநீற்றைத் தரும் பெருமை, காளை ஊர்தியாதல் முதலிய சிறப்புக்கள் கூறப்படுகின்றன.

ஒருநாள் வேதம் ஓதும் இளைஞர் கூட்டத்துடன் போவார், வழியிடையே, ஒரு புனிற்றாவை, நிரை மேய்க்கும் இடையன் கோல்கொண்டு அடிப்பதைப் பார்த்து, மனம் வருந்தி, அவனை விலக்கிவிட்டுத் தானே அவ் ஆனிரையை மேய்க்கத் திருவுளங் கொண்டு, மறையவரின் இசைவையும் பெற்று அன்றுமுதல் ஆனிரை காத்து, மேய்த்துவரும் பணியை மேற்கொள்கின்றார்.

இவ்வாறு கடமை தவறாது, நன்கு ஆனிரைகளை மேய்வித்து, மாலையில் வேள்விக்கு வேண்டிய சமிதைக் குச்சிகளுடன் நெருப்புண்டாக்குதற்குரிய தீக்கடைகோலாம் அரணிக் கட்டை களையும் சேகரித்துக் கொண்டு வந்து, பசுக்களை அவரவர் வீட்டில் சேர்ப்பித்தார்.

ஓம தேனுக்கள் வேள்விக்குரியன. அப்பசுக்கள் முன்னிலும் கூடுதலாகப் பயன்தரவே, பிரமசாரியாம் சருமனார் மீது வேதியர்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர்.

இடையே ஒருநாள் இளையோர் மணலால் வீடு கட்டி மகிழ்வதுபோல், சருமனார் ஆத்திமர நிழலில், ஒரு மணல் மேட்டில், சிவ ஆலயம் போலவே ஒன்றை மண்ணினாற் கட்டி, பசுக்கள் தாமே பொழியும் பாலைக்கொண்டு, திருமுழுக்காட்டி மகிழ்ந்தார். ஆத்திமலர் முதலான பல மலர்களைச் சேகரித்துச் சூட்டிப் பார்த்து இறையன்பில் மூழ்கினார்.

இவ்வாறு பல நாட்கள் வரன்முறைப்படி சிவபூசையாம் அருச்சனை செய்து மகிழ்ந்தார்.

இதன் பெருமை அறியாத ஒருவன் மண்ணியாற்றங்கரையில், விசார சருமர் செய்யும் சிவபூசைபற்றி, அவ்வூர் அந்தணரிடம் கூறினான்.

இதனைக் கேட்ட அந்தணர்கள் அவையைக் கூட்டி, 'பொச்சம் (வஞ்சனை) ஒழுகும் மாணவகன் பொல்லாங்கை' விசாரிக்க என்று, அவர் தந்தை எச்ச தத்தனை அழைத்து வரச் செய்தனர். 'உன் மகன் செய் தீங்கு தன்னைக் கேள்' என்று கூறி வெகுண்டனர். அந்தணாளர் ஆகுதிக்குப் பயன்படும் பசுக்களை, மேய்ப்பவன்போல் காட்டி, ஓட்டிச் சென்று 'கந்தமலி பூம்புனல் மண்ணி மணலில் கறந்து, பால் உகுத்து தன் மனத்துக்கு வந்தபடியே செய்கின்றான்' என்று கண்டித்துப் பேசினர். இதைக் கேட்ட தத்தனும் முன்பு இதை யான் அறியேன்; எனவே இத் தீங்கை அந்தணர்கள் பொறுக்கவேண்டும். இனி இது நடந்தால் அது என் குற்றமாகும்' என மன்னிப்புக் கேட்டுச் செல்கின்றார்.

இங்கேயுள்ள 'மறைபொருள்களை' உய்த்துணர, நுண்மாண் நுழைபுலம் வேண்டாம், சிறிதளவு அறிவே போதும். 'செம்மை வெண்ணீற்று ஒருமையினார்' அன்றோ அவ் வேதியர்கள்? இத்திருப்பணி கேட்டு மனம் மகிழ்ந்திருக்க வேண்டுமே? இதனை 'மகன் செய் தீங்கு' எனலாமா? 'பொல்லாங்கு' என்று கூறலாமா? 'தன் மனம்போனபடி செய்கின்றானாம்' என்ற வேதியர்கள், தம் வாயாற்கூடச் 'சிவபூசை' செய்கின்றானாம் எனக்கூற மனம் இல்லையே! மணலில் பாலை 'உகுத்தான்' - கொட்டினான் என்பது இழிசொல் அல்லவா?

உண்மையில் விசார சருமர், இவ் வேதியர்கள் 'பசுவேட்டு எரி ஓம்பியதையே' வெறுத்தார் என எண்ண இடமுளது. அவர்கள் வெண்ணீறு பூசியதும், தங்களைக் காத்துக்கொள்ளப் போட்ட வெளிவேடமே என்பது புலனாகிறது.

உண்மையில் கண்டு மகிழ்ந்து கொண்டாட வேண்டிய ஒன்றை, 'மா பாதகம்' என்பதுபோல் பேசுவதேன்?

எச்ச தத்தனும் மறுநாள் மறைந்து சென்று, தம் மகனார் செயலை உளவறிய முற்பட்டார். அங்கு ஒரு குரா மரத்தின் மேலேறி மறைந்திருந்து, தம் மகனார் செய்யும் சிவபூசையைக் கண்டார்; அளவிலாச் சீற்றம் கொண்டார்.

உடனே மரத்தைவிட்டு இறங்கி, வாய்க்கு வந்தபடி வசை மொழி கூறி, மகனார் முதுகில் அடிமேல்அடி அடித்து, நையப்

புடைத்தார். விசார சருமரோ, சிவ பூசனையில் ஆழ்ந்து, திருமஞ் சனம் செய்து கொண்டிருந்ததால் வலி எதுவுமே தோன்றவில்லை. இதைக் கண்ட எச்சதத்தன், பாற்குடத்தைக் காலால் இடறிச் சிதறடித்தார்.

சிந்தும் பொழுதில் அதுநோக்கும் சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினால்
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க்கு அதுவே முறைமையினால்
வந்து மழுவாயிட எறிந்தார், மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்

தந்தை என அறிந்தும் தண்டித்தவரைச் சிவபெருமான் தோன்றி, 'இனி உனக்கு நாம் அடுத்த தந்தை' எனக் கூறி, சிவநெறித் தொண்டர்களுக்கு அதிபர் ஆக்கிச் சண்டேசப் பதமும் தந்து அருள்கின்றார்.

உண்மையான சிவ வேதியராயின், வரலாறு வேறுவிதமாகத் திரும்பியிருக்கும்.

வெண்ணீறு பூசி, வேத வேள்விகளும் செய்வது இரட்டை வேடமன்றி வேறென்ன? வேள்வியை - அக்கினி வழிபாட்டை - அது சிவ வேள்வியேயாயினும் அதனைச் சிவநெறி ஏற்றதும் தவறே. அந்தணாளரும் சிவநெறிச் சார்புடையார் போலக் காட்டிக் கொண்டு, தம் தனித்தன்மையை விடாது, கூடி வாழ்ந்து, வேள்விகள் செய்ததும் தவறு.

சமணம் புத்தம் முதலான புறச் சமய நெறிகளைப் பரவ விடாமல் தடுக்க, இவ் வைதிகத் தமிழியக் கொள்கையில்லாக் கூட்டணி அமைந்ததே, தமிழுக்கும் தமிழர்க்கும் பேரிழப்பாய்ப் போயிற்று.

எச்ச தத்தனைப் பற்றிச் சேக்கிழார் கூறிய, 'அருமை மணியும் அளித்து, அதுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல் வாழ்வது', அவ் இனத்தவர் சிலரிடம் இன்றும் காணப்பெறுகிறது.

உண்மையில் சமண சமயம் பரவாமல் தடுக்க உதவியன தமிழிசையும் சிவநெறியும் தமிழரின் பத்திமையாழமுமேயாம். அவற்றின்பால் தம்மைக் காத்தளித்ததற்காக, ஏழேழ் பிறப்புக்கும்

நன்றி காட்ட வேண்டிய, இப் பிராமணியம் நன்றியின்றி நடப்பது கொடிய 'பாவம்' அல்லவா?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

இன்றும் தமிழர்கள் விழித்துக்கொண்டு, உண்மைகளை உணர்ந்து, நம் திருமுறைகளும் திருக்குறளும் காட்டும் நெறியில் வாழ முற்பட்டால்,

மீண்டும் தமிழ் அந்தணாளர் குலம் வளரும், பல்கும், சிறக்கும். அதன் வழியே ஒற்றுமைப்பட்டு அனைவரும் ஒரு முகப்பட்டுத் தமிழராய் வாழ்வோம்.

நடந்த உண்மைகளை எல்லாம் நாம் இங்கு எடுத்துக் காட்டுவது, இவற்றைப் படிப்பவர்கள் இருபால் மக்களும் ஒற்றுமைப்படவே யல்லாமல், வேற்றுமைப்பட அன்று.

இன்றைய அந்தணர் அனைவரும் முழுவதும் அருமைத் தமிழர்களே. எனவே நாம் அனைவரும் ஒருமையுடன் வாழ்வதே, இனி அனைவரும் மேன்மேலும் சிறக்க வழிவகுக்கும்.

❖❖❖❖❖❖

# 10

# சேக்கிழார் திருவுள்ளம்

# மனுநீதிச் சோழன் வரலாறு

சிவநெறி மெய்ம்மையியல் தனித்தன்மை உடையது.

முப்பொருளுண்மை

வினைக் கோட்பாடு

உருவ வழிபாட்டுப் பத்திமை நெறி

இம் மூன்றும் 'அறிவியல்' வழிப்பட்டவை; தமிழர் கண்டவை; தமிழர்க்கே உரியவை.

இடைக்காலத்தில், எல்லாவற்றையும் சமஸ்கிருதமயமாக்கிய காலகட்டத்தில், தமிழர்தம் சமயமும் சமஸ்கிருதமாக உருமாற்றப் பட்டு, அனைத்துக் கலைச்சொற்களும் சமஸ்கிருதமாக்கப்பட்டன. இதனால் அவை விளங்காமற் போயின. பொதுமக்களுக்குச் சிவநெறி உண்மைகள் சென்று சேரவில்லை.

'வைதிக சைவம்' - என்றே, முரண்பட்டவற்றை ஒன்றாக்கினர்.

## வினைக் கோட்பாட்டு விளக்கம்

செய்த வினைக்குப் பயன் உண்டு; எதிர்விளைவு உண்டு

சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று (307)

என்று, எளிய உதாரணம் காட்டி இதை நிலை நிறுத்துவார், திருவள்ளுவர். உங்கள் கையால் தரைமீது ஓங்கி அடியுங்கள்; உடனே வலிக்கிறதல்லவா? கடுங்கோபம் தனக்கு ஆக்கம் தரும் எனக் கருதுபவன் கெடுவதுறுதி என்பதற்குச் சொன்ன உவமை இது. எச்செயலுக்கும் பயன் - விளைவு உண்டென்பதை ஐயமற நிறுவுகிறது.

உலகில் நாம் செய்யும் செயல்களும் அவற்றின் பயன்களும் ஒரு தொடர்ச்சியுடையன என்பதை மறுக்க முடியாது.

பிரார்த்த கன்மம் - அனுபவ கன்மம். பிரார்த்த கன்மவாதனை - ஊழ்வினைப் பயன்.

ஆகாமிய கன்மம் - மூவகைக் கன்மங்களுள் ஒன்று. அது வருத்தமான சனனத்தில் செய்யப்பட்டு, மறு சனனத்திற்கேதுவான கன்மம்.

சஞ்சித கன்மம் - சென்ற சனனங்களிற் செய்யப்பட்டுப் பலன் அனுபவிக்காமல் நின்ற கன்மம்.

இவை நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியிற் கண்டவை.

பொ. சங்கரப்பிள்ளை (B.A. (Lond), B.Sc., (Econ) (Hons) (Lond), B.Com (Hons) (Lond), M.Sc., (Econ) (Lond) எழுதிய 'சைவ சித்தாந்தம்' எனும் நூலில், அவர் விளக்குவனவற்றைக் காண்போம்.

"வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை மூப்புச் சாக்காடு பிணி முதலியவை முற்பிறவிகளிற் செய்த வினைகளின் விளைவுகளாகும். இவற்றை அனுபவிக்கும்போது மேலும் வினைகள் செய்கிறோம். இவ்வினைகள் மேலும் வினைப் பயன்களை விளைவிக்கின்றன. ஒரு பிறவியிற் செய்த வினைகள் சூக்கும உடம்பில் வித்தாகக் கிடந்து மறுபிறப்பிற் பயிராகின்றன. இப்பிறப்பிற் செய்யும் வினைகள் மறுபிறப்புகளிற் பயனை அளிக்கலாம்".

**"ஓர் ஆன்மா செய்த வினைப்பயன் அந்த ஆன்மாவைத் தவறாது சென்று பிடிக்கும்.** அதாவது பிறவிகள் தோறும் தொடரும் அறச்செயல்கள் இன்பத்துக்கும் பாவச் செயல்கள் துன்பத்துக்கும் காலாகும்."

**"அனுபவித்துக் கழிக்கும் வரைக்கும் வினைப்பயன் ஆன்மாவை விடாது தொடரும்" (பக். 76 - 78).**

மேலும் அறிஞர் பொ. சங்கரப்பிள்ளை தரும் கருத்துக் கோவையின், ஒரு சிறு பகுதியையும் எண்ணிப் பார்க்கலாம்.

நாம் ஒரு செயலைச் செய்து, முன்செயலின் பயனை நுகரும்போது, புதிய வினைக்குக் கால்கோள் செய்கிறோம். இதை ஆகாமியம் - எதிர்காலத்தில் விளைவினை எனலாம். மக்களின் ஒவ்வொரு செயலும் வாக்கும் சிந்தனையும் இவ் ஆகாமியத்துக்கு அடிப்படையாகும். இது செய்த பிறவியிலேயே பயனை விளை விக்கலாம்; மறுபிறவியில் பயன் தரலாம்; உடனடியாக அப்பிறவி யிலேயே ஒரு பங்கைத் தந்து, எஞ்சியதை மறுபிறவியிலும் தரலாம்.

வினைப்பயன் காலவரிசைப்படி நிகழ்வதில்லை. அதன் வலிமை, எளிமைக்கு ஏற்ப முன்பின்னாக விளைவுகளைத் தரக்கூடும்.

ஒரு பிறப்பில் செய்த வினை பல பிறப்புக்களுக்குப் பின்பு பயனை அளிக்கலாம். (ஒருவன் செய்த வினைப்பயனை அவன் மட்டுமேயன்றி, அவன் குடியும் அதன் ஏழு பரம்பரையும்கூட அனுபவிக்க நேரும் என்பது வள்ளுவம்).

முன்பு செய்து இப்போது அனுபவிப்பது 'பிராரப்தம்' - ஊழ்வினை எனப்படும்; நுகரப்படாது - அனுபவித்துக் கழிக்கப் படாது, ஒருவனிடம் வெளிப்படக் காலம் பார்த்துக் கிடப்பது 'சஞ்சிதம்' - வினைக் களஞ்சியம்' - பழவினை எனப்படும்.

ஆக, வினைத் தொடர்ச்சி ஒரு முடிவற்ற சங்கிலித் தொடர் போன்றது. **"பழவினையை மாற்ற முடியாவிடினும் ஆகாமியம் எமது கையிலிருக்கிறது. ஆதலால் தனது வருங்காலத்தை ஆன்மாவே நிச்சயிக்கிறது"** என்பது அவர் வாக்கு.

சிவ மெய்யியலாம் இவ்வினைக்கோட்பாடு, காரண காரியத்துடனும் உலக நிகழ்வுகளுடனும் தனி மனித வாழ்வு நிலைகளுடனும் ஒப்பிட்டு ஆராயற் பாலதாகும்.

வினையின் பயனை நுகராமல் தப்பிக்கவே முடியாது. இதற்குப் 'பரிகாரமே' இல்லையா என்றால், நல்வினை செய்து, முன்னதின் அடி வலுவாக விழாமல் காத்துக் கொள்ளலாம், வருந்தியும் திருந்தியும் அழுதும் பிற்பாடு நல்லது செய்து அதன் பயனை நுகர வேண்டுமே தவிர, முன்னதின் விளைவைவிட்டுத் தப்பிக்கவே இயலாது.

இது சிவனியம். திருவள்ளுவரும்

எனைப் பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று (தீவினை அச்சம் 207, 208)

'வீயாது' என்பதை இரு குறள்களில் ஆள்வது காண்க.

செருமானிய அறிஞர் எச். டபிள்யூ - சோமெருஸ் என்பவர் (H. W. Schomerus) சைவ சித்தாந்தம் பற்றிச் செருமன் மொழியில் எழுதிய நூல், மிக விரிவாக சிவனியக் கோட்பாட்டை விளக்கு கிறது. அதன் ஆங்கில ஆக்கம், பெரிய அளவில் 400க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்டது. அதில் சிவனிய வினைக் கோட்பாடு பற்றி மிக விளக்கமாக உள்ளவற்றில் சில வரிகளை மட்டும் அவ்வாறே ஆங்கிலத்தில் காண்போம்.

செய்த வினைப் பயன்களை, இந்த உயிர் நுகரும் முறைகள் பற்றி நன்கு விளக்கிவிட்டு, அது எவ்வகையிலும் மாற்ற முடியாது என்று கூறுகிறார்.

"No deed dies wihout generating fruit. consuming the fruit is unavoidable; they don't decay and you can't pass them on to someone else. Each soal must consume what it has sown. As one deed does not cancel another, a good deed does not make up for a bad one.

**'These two kinds of deed are built up by the thoughts, words and actions. One deed is not destroyed by another. If you think carefully you can see that consumption is unavoidable (Prak. II - 13)**

Admittedly this same verse notes, with apparent approval, that in the Vaidiga - Saiva system one deed can replace another, i.e. by giving money for holding sacrifices. But no other text supports this suggestion, so perhaps it was not the siddhantins in general, but just umapati , the brahmin of Chidambaram temple, who mentioned the value of spending money for ritual - purposes (p.110)

ஓர் உயிர் தான் செய்த வினைப்பயனை நுகர்ந்தே தீர

வேண்டும். அதை மற்றவர்க்கு மாற்றிக் கொடுக்க முடியாது. ஒரு வினையை, பிறிதொன்றால் நீக்க முடியாது. அதாவது தீய தொன்றை, நல்லதொன்றால் மாற்றிக்கொள்ள இயலாது. (இதையே தமிழறிஞர் ஒருவர், 'ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டு, கும்பாபிசேகம் செய்தால் முன்னது நீங்கிவிடாது; இரண்டையும் தனித்தனியே அனுபவித்தே தீரவேண்டும்' என்று விளக்கியுள்ளார்)

ஆனால் வைதிக - சைவ அமைப்பில் ஒன்றை மற்றொன்றால் நீக்கலாம் என்றும் பணம் செலவழித்து ஹோமங்கள் செய்து, செய்த பாவத்தைப் போக்கிவிடலாம் என்றும் குறிக்கப்படுகிறது. ஆனால் வேறு எந்தச் சிவநெறிச் சாத்திரமும் இதை ஏற்கவில்லை. சிதம்பரத்தைச் சேர்ந்த பிராமணராகிய உமாபதிசிவம் மட்டுமே, பணம் செலவழித்து, பிராயச்சித்தச் சடங்குகள் செய்து பாவத்தைப் போக்கலாம் என்று கூறியுள்ளார் (சிவப்பிரகாசம்).

ஒரு செருமன் நாட்டு அறிஞர் எவ்வளவு நுட்பமாய் உண்மை கண்டு விண்டுரைக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இந்நூலில் இத்தகைய அரிய கருத்துக்கள் நிரம்பவுள.

வினைக்கோட்பாடு பற்றிய இவை அனைத்தும் வடமொழி யிலுள்ள அனைத்து நூல்களுக்கும் எதிரானவை. அவர்கள் கருத்துப்படி, ஒருவன் செய்யும் எத்தகைய பாவத்திற்கும் பரிகாரம் உண்டு. அவர்களின் அதர்வ வேதம், பாவங்கள் செய்து தப்பிக்க ஒருவன் செய்ததை மற்றவன்மீது ஏவிவிட, பணம் செலவழிப்ப தற்கு ஏற்ப, மிகப் பெரிய ஹோமம், பிராயச்சித்த சடங்குகள் செய்து விடுபட வழிகாட்டுகிறது. வேதங்கள், உபநிடதங்கள், மனுதர்ம சாத்திரம், சாணக்கியரின் கௌடில்யம், புராணங்கள், சோதிட நூல்கள் அனைத்தும் 'பரிகாரக் களஞ்சியங்கள்'. எவ்வகைப் பாவம் செய்தாலும் விடுபடப் பணம் செலவழித்தாற் போதும்.

இன்றைய 'இராசி பலன்கள்' அனைத்தும் பரிகாரம் செய்ய வழிகாட்டும் விளம்பரங்கள் ஆகிவிட்டன.

தொன்றுதொட்டு வரும் இத்தீமையை விளக்கி, நம் சிவநெறி மேன்மையை நிலைநாட்டவே, சேக்கிழார் பெருமான் மனுநீதிச் சோழன் கதையை இணைத்துள்ளார்.

பாயிரம், திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு எனத் தாம் பாடும் முன்பகுதிகளில், பிறநூல்கள், காப்பியங்கள் போல வருணனைகள் புனைகின்றார். அதுவே இயல்பும் இயற்கையுமாகும். ஆனால் திருநகரச் சிறப்பில், வேண்டுமென்றே, சிவ நெறியினர்க்கு அதன் தனித்தன்மையை உணர்த்த வேண்டுமென்றே மனுநீதிச் சோழன் வரலாற்றைக் கொண்டு வருகிறார்.

சிலப்பதிகாரத்தால், இவ்வரலாறு தொன்றுதொட்டு வருவதென அறிகின்றோம் (வழக்குரை காதை. *20: 53 - 56*).

வடமொழி மனுவின் நூல் 'மனுதரும சாத்திரம்' அது சாதிக்கு ஏற்பவும், தீமைக்குத் தகவும் பற்பல பரிகாரச் சடங்குகளை விவரிப்பது.

சேக்கிழார் கூறும் மனு, 'மானுடர்க்கு அரசனாகிய செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப் பெற்ற நீதியும் தன்பெயராக் கினான்' ஆவன். வடமொழி சார்ந்த மனுவல்லன் என்பதற்கே, இவ்வரசனை 'செம்மையின் மெய்ம்மனு' என்று கூறுகிறார். பரிகாரங்கள் கூறும் மனுவின் பெயரை வைத்தே, அவை தவறென்று உலகிற்கு அறம் உரைக்கும் ஒரு மனுச்சக்கரவர்த்தியை, நமக்கு அறிமுகப்படுத்துகிறார், சேக்கிழார்.

இவையாவும் அவர் திட்டமிட்டு நமக்கு, நம் சிவநெறிச் செல்வத்தை உணர்த்துவனவாகும்.

வேத நெறியை, நூலுள்ளே பலவாறு பாராட்டும் அவர், தமிழர் தம் தனித்தன்மையை விதந்து ஓதி, பிறவாறு காலத்திற்கேற்ப உதட்டளவில் கூறுவன வேறு; உண்மைகளை உளந்திறந்து கூறுவன வேறு என உணர்த்துகிறார்.

அம்மன்னனுக்குப் பிறந்த தவமகன், அரசர்க்குரிய அனைத்தும் கற்று, இளவரசன் என்னும் தன்மை எய்துதற்கு அணியன் ஆனான். ஒருநாள் அவன் வாத்தியங்கள் முழங்க, இளையர் பலர் புடைசூழ, மாடவீதியில் தேரேறி வலம் வந்தான். மனிதர் எவரது கண்ணிலும் படாது, துள்ளி ஓடிவந்த பசுங்கன்று ஒன்று, தேரின் ஊடே பாய்ந்தது, சக்கரத்தில் அடிபட்டு இறந்தது. இது இளவரசன் குற்றமன்று. அதுவும் திடீரென 'ஊடே' பாய்ந்ததால், இறக்க நேர்ந்தது.

இளவரசன் கொடியதொன்று தன்னால் நடந்துவிட்டதே என்று திகைத்து, தேரிலிருந்து இறங்கிக் கீழே வீழ்ந்தான். தன் தந்தைக்குப் பழிதேடி விட்டதாக வருந்தினான்.

வந்த இப்பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்றால் ஆற்றுவது அறமேயாகில்
எந்தையீது அறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன்
சிந்தைவெந் துயரம் தீர்ப்பான் திருமறையவர்முன் சென்றான்

மறையவர் முன் ஏன் சென்றான்? இத்தகைய பழி பாவங்களுக் கெல்லாம், கழுவாய் செய்ய வழிகாட்ட வல்லவர்கள் அவர்களே என்ற நம்பிக்கை பரவலாக மக்களிடம் இருந்துளது

அந்தணர் என்றால் தண்ணளி உடையவர்கள். அறமல்லாத நெறியில், கழுவாய் - பிராயச்சித்தம் கூறுபவர் அந்தணர் ஆகார். "அவர்கள் அந்தணர்கள் ஆகாது மறையவர்களே ஆகி நின்றார்கள் - என்று முடித்துக் காட்டும் குறிப்புப் பெறும் பொருட்டுப் பின்னர் 'மறையவர்முன்' என்றார்", என சி. கே. சு. அவர்கள் விளக்கம் எழுது கின்றார். இதிலிருந்து வடமொழி மறைகள் பரிகார வழி காட்டு வன என்ற உண்மையை அவர் தயங்கித் தயங்கிக் கூறுவது தெரிகிறது.

நம்மவர்கள் இவ்வாறு தயங்கித் தயங்கி, உண்மைகளை வெளிப்படையாகக் கூறாமல் மழுப்ப முயன்றதாலேதான் பல உண்மைகள் மக்களுக்கு உணர்த்தப்படாமலே போயின. 'அந்தணர் விதித்தவாற்றால் ஆற்றுவது அறமேயாகில்' - என்று மன்னவன் மனம் மட்டுமா ஊசலாடுகிறது; நம் மனமும் 'பாவத்தைக் கழிக்கப் பணம் செலவழித்தால் போதும்' என்பதை ஆசையால் ஏற்கவும், அறநெறியாகுமா என்பதால் தயங்கவும் என இவ்வாறு ஊசலாடத்தானே செய்கிறது.

அறிஞர் பொ. சங்கரப் பிள்ளை கூறுவன காண்மின்: "நாம் அனுபவிக்கும் துன்பமும் இன்பமும் நம் மனநோயைக் குணப்படுத் தும் மருந்துகளாகும்".

"இன்பங்களுக்காகப் புண்ணியம் செய்வது வியாபாரமாகும்".

"செய்த வினையின் பயனை நாம் அனுபவிக்க வேண்டும்".

"இறைவனை வணங்கினால் அவன் பாவங்களை மன்னித்து விடுவான் எனச் சிலர் எண்ணுகின்றனர். மன்னிப்புக் கேட்டுவிட்டு அதே பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள்.

கொள்ளையடித்த, களவெடுத்த காசில் ஒரு பங்கைக் கொடுத்தால் பாவம் மன்னிக்கப்படும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இக் காசிற் கோயில் கட்டுகிறார்கள். குளங்கள் வெட்டுகிறார்கள். பூசைகள் செய்விக்கிறார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகிறார் கள். பூசாரிகளுக்கும் கோவில்களுக்கும் காசு கொடுத்து புண்ணி யத்தை வாங்கலாம் எனச் சிலர் எண்ணுகிறார்கள். போரில் தமக்கு வெற்றியளிக்குமாறு இறைவனை வேண்டுகிறார்கள். களவெடுக்கப் போகுமுன் காளிக்குப் பூசை செய்கிறார்கள். சமயத்தின் பேரில் துவேஷங்களைப் பரப்புகிறார்கள்; கொலை செய்கிறார்கள். சிலர் பாவமன்னிப்புக் கொடுப்பதற்கு, இவ்வுலகில் தம்மைத் தாமே இறைவனின் பிரதிநிதிகளாக நியமித்து விட்டனர். இவையாவும் மோகங்களினால் உண்டான பேதை உணர்ச்சி களாகும்.

தாபன மதங்கள் இவற்றைப் பயன்படுத்தி வியாபாரம் செய்கின்றன" (சைவ சித்தாந்தம், பக். 80 - 82).

பெரும்பாலான மக்களின் ஆசையும் நடப்பும் இதுதான். இதை ஏற்பது பிற நூல்களே தவிர, சிவனியம் அன்று. இக் கருத்தையே, சேக்கிழார் பெருமான் தம் மாக்கதையைத் தொடங்கும்போதே, நிலைநிறுத்துகிறார்.

வடமொழி மறைகளை நம் அருளாளர்கள் ஏற்பது போல்தான் வானளாவப் புகழ்கின்றனர். ஆனால் இங்கு அதன் அடிப்படைக் கருத்தை அவர்கள் ஏற்கவில்லையே?

கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்துவிட்டது. மணி ஓசை கேட்ட மன்னன் அதிர்ந்து போனான். ஒரு பசு இவ்வாறு மணியை அடித்ததைக் கேள்விப்பட்டதும், மன்னன் அமைச்சரை நோக்க, அவர்களுள் தலைமை அமைச்சன் நிகழ்ந்ததைச் சொன்னான். அதைக்கேட்ட அரசன் ஆ உறும் துயரைத் தான் எய்தினான். அவன் வருந்தித் துடிப்பதைக் கண்ட அமைச்சர்கள் 'இதற்காக வருந்த வேண்டாம்; கோ (பசு) வதை செய்தார்க்கு, மறை ஓதும் அந்தணர்கள் விதித்த பிராயச்சித்த வழிகள் உள்ளன. அவற்றின்படி செய்வது அறமாகும்' என்றார்கள்.

அவர்கள் மீது அரசன் சினம் கொண்டு, மறுக்கின்றான். 'பரிகாரம் தேடலே வழக்கென்றால், இப்பசு உறும் துன்பத்திற்கு

அது மருந்தாகுமா? என் மகனை இழந்துவிடுவேனோ என எண்ணி எல்லோரும் ஏதேதோ சொல்கின்றீர்! 'நீங்கள் கூறிய இச் சழக்கிற்கு 'நான் இசைந்தால் தருமந்தான் சலியாதோ? ஒரு நாட்டை ஆள்பவன் தன் மக்களையும் உயிர்களையும் காக்க வேண்டும். அவற்றுக்குத் தன்னாலும், தன் அதிகாரிகளாலும் பகைவராலும் கள்வராலும் பிற உயிர்களாலும் வரும் ஐந்து அச்சங்களையும் தீர்த்து அறத்தைக் காக்க வேண்டுமல்லவா? ஒருவன் ஓர் உயிரைக் கொன்றால், அவனுக்குக் கொலைத் தண்டனை விதிக்க நேரும். இதுவே மற்றவர்க்குத் தீர்வென்றால் மன்னவனாகிய எனக்கும் அது பொருந்துமன்றோ? இல்லை யெனில் தொன்மைமிக்க தமிழ்மனுநூல் முறைமை, என்னால் அழிக்கப்பட்டது என்ற பழி வந்து நேருமே' என்றான் அரசன்.

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதி அமைச்சர்
நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்,
பொன்றுவித்தல் மரபன்று, மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ தொன்னிலங் காவல ! என்றார்

அமைச்சர்கள் 'கொன்றுவிடல்' மரபன்று; வேதங்கள் மொழிந்தபடி - அறம் செய்தல் அதாவது கழுவாய் செய்தல் தொன்றுதொட்டு வரும் மரபாகும் என்றார்கள். அதுகேட்ட அரசன் கடுஞ்சினமுற்றான். 'மறை மொழிந்த அறம்' என்பதை மறுத்து, 'இவ்வண்ணம் பழுதுரைத்தீர்' என்றான். மேலும்,

அவ்வுரையில் வரும்நெறிகள் அவை நிற்க; அறநெறியின்
செவ்விய உண்மைத்திறம் நீர் சிந்தை செயாதுரைக்கின்றீர்

என்று மன்னன் கூறுவதில், சேக்கிழார் திருவுள்ளம் புலனாகிறது. அறநெறி, அவர்கள் கூறிய மறைநெறி அன்று என்பதுதானே கருத்து.

தன் மகன் 'உயிர் கொன்றானாதலினால், அவனைக் கொல்லு தலே' துணி பொருளாம்' என அரசன் கூறவே அவர்கள் அஞ்சி அகன்றனர். பிறகு ஓர் அமைச்சரை அனுப்ப, அவரும் மறுத் தொழிந்தார்.

ஒரு மைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் உணரான்
'தருமந்தன் வழிச்செல்கை கடன்' என்று தன்மைந்தன்
மருமந்தன் தேர்ஆழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ? தான்!

இத்தகையவை, தொன்மைமிக்க வீரநிலைக் காலத்தே நடந்திருக்கக் கூடும். இது கடிய தண்டனைதான்! 'தொன்மங்கள் நேர்முக உண்மைகளல்ல; மறைமுக உண்மைகள் (Indirect truth) என்பதை உளங்கொண்டு இதை நோக்கவேண்டும். செய்த வினைக்கு அதனளவு பயனை நுகர்ந்தே தீரவேண்டும் என்ற சிவநெறி மெய்யியலை வலியுறுத்துவதற்கு வந்தது இது. பிராயச் சித்தம் - கழுவாய் - பரிகாரம் என்று பணம் செலவழித்தோ, பிறவாறு ஹோமங்கள் சடங்குகள் செய்தோ தப்பிக்க முடியாது என்பதே தமிழ் அறநெறியாகும்.

வேத வைதிகம் வேறு; ஆகமச் சிவநெறி வேறு. வேதங்களைப் பொதுவாகப் புகழ்வது வேறு; அவற்றினிடையே உள்ள அடிப் படை வேறுபாடுகளை உணர்வது வேறு. சேக்கிழார் பெருமான் தமிழரின் சிவநெறி மெய்ம்மை இயலை, இதன்மூலம் வற்புறுத் தியுள்ளார் என்பது தெளிவு.

மனம் திறந்து சொன்னால், உண்மையை ஒளிவு மறைவின்றிச் சொன்னால், இந்திய நாடு இன்று ஊழலில் சிக்கி, அதனையே அறவழி எனக் கொண்டு சீரழிவதற்கு இம்மனப்பான்மையை வளர்த்துவிட்டதே காரணமாகும்.

யாரும் எம்மீது சினங்கொள்ளாது கேட்பீரேல், இன்று திருக் கோயில்கள் என்பன புண்ணிய வாணிகத் தொழில் நிலையங்கள் ஆகிவிட்டன; பத்தி என்பது நற்பண்பு, தூய அறநெறி போன்ற வற்றை வளர்க்காமல், பணம் செலவழித்துப் புண்ணியம் தேடவும், செய்த - செய்யப்போகிற அனைத்துப் பாவங்களையும் போக்கி யருளும் தெய்விகத் திருநிலையங்களாகவும் முற்படுகின்றன.

இந்தியநாடு சீர்பட வேண்டுமேல், திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தங்கள் பல உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொது இடங்களிலும் திருக்கோயில்களிலும் அக்கினிச் சடங்கு கள் - ஹோமங்கள் சட்டப்படி தடை செய்யப்பட வேண்டும்.

இறைவனுக்குப் பூவும் நீரும் கொண்டு பூசை செய்வோம். தனியே இருந்து தியானிப்போம். தனியே இன்னிசை பாடித்

துதிப்போம். கூட்டு வழிபாடு ஆற்றுவோம். பலவகைக் கலைகள் வழி - இசை, நாட்டியம், ஆடல்பாடல் - கொண்டாடுவோம்.

தேங்காய், பழம் அருச்சனை தவிர்ப்போம். ஏத்தி ஏத்தித் தொழும் அருச்சனையை ஏற்போம்! வரிசையில் சென்று, தொன்னையளவு நீரை ஊற்றி, பூக்களைத் தூவி வணங்கி மேற்செல்வோம்! இறைத் தீண்டாமையை ஒழிப்போம்! இறைக் கருவறையை ஒளி ஊட்டுவோம்; நறுமணப் பொருள்கள் கொண்டே திருமுழுக்காட்டுவோம்! அலங்காரம் செய்வோம்! கடவுள் பெயரால், மக்களுக்குப் பயன்படும் எப்பொருளையும் நெருப்பில் போடவேண்டாம்; வீணாக்க வேண்டாம். அவை மக்களுக்குப் பயன்படட்டும். பணக்கார வருவாய் மிகுந்த கோயில்கள் என வளர்ப்பதைத் தவிர்த்து, உடனுக்குடன் அச்செல்வம் மக்களுக்குப் பயன்படுமாறு திட்டமிடுவோம். இறைவன் நம்மை மனம் மகிழ்ந்து வாழ்விப்பான்!

❖❖❖❖❖

# 11

# இயற்கை வழிப்பட்ட
# வடவர் வேள்வியும் தமிழர் வழிபாடும்

இதுகாறும் வடமொழி பற்றி ஆராய்ந்த பலரும் வேத மூல நூல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நோக்கமால், வேதாந்தம், வேத சிரசு, பிராம்மணம், உபநிடதம், உபவேதங்கள், வேதச்சாகைகள், உரைவிளக்கப் பா யங்கள், புராணங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியே விளக்கங்கள் எழுதி ஆய்வு மேற்கொண்டு போயினர்.

மற்ற சிலர் வேதாந்தம் எனப்படும் உபநிடதம் போலும் தொன்மைமிக்க சிலவற்றைத் தம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர்.

வடமொழி வேதங்கள் பிறர் படிக்கலாகாது, பக்கநின்று கேட்கலாகாது என மறைக்கப்பட்ட மறைகள், நாகரி எழுத்தி லுள்ளதால் அதை இன்றும் படிப்பார் தொகையை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களைத் தவிர, வடமொழிப் பட்டப் படிப்பு, ஆய்வுக்கல்வி யாவும் ஆங்கில வழியிலேயே கற்கப்படு கின்றன. 'ஸ்ருதி' என்பதற்கு ஏற்ப, வடமொழி மந்திரங்கள் செவி வழியாகக் கேட்டுக் கேட்டே ஓதப்படுகின்றன. எனவேதான் வேதக்கல்வி என்பது **வேத மூலநூற் கல்வியாகாமல், வேதாந்தக் கல்வி** என்றே, அனைவராலும் விளக்கப்படுகின்றன.

வடமொழி வேதமூல நூல்கள், இங்கு மறைக்கப்பட்டன; இடைக்காலத்தும் வேதமும் ஆறங்கமும் என்று மட்டுமே நாவுக்கரசர் முதல் அனைவராலும் 'மொட்டையாகக்' குறிக்கப்படுகின்றனவே தவிர, அவற்றிலுள்ள உள்ளடக்கம் பற்றி, நம் அருளாளர் எவரும் குறித்திலர். ஏனெனில் அவர்கள் அவைபற்றி அறிந்திலர் - அறிய விரும்பிலர் என்றே தோற்றுகிறது.

மேனாட்டார் மாக்ஸ்முல்லர் தொடங்கி மிகப் பலர், வேதங்களை செருமன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். அவை முழுவதாக இல்லாமல், பகுதி பகுதியாக

அங்கொன்றும் இங்கொன்றுமாக மட்டுமே உள்ளன. இலத்தின் மொழியிற்கூடச் சில பகுதிகள் - ஒன்றிரண்டு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் குறிப்பிடும் கிரிஃபித் என்பார், அவற்றைக் கற்றும் தாம் முயன்றும் ஒரு முழுமையான முறையில் பயனுள்ள பல அடிக்குறிப்புக்களுடன் ஆங்கிலத்தில் தந்துள்ளார். இது முழுவதும், அலைகள் வெளியீடான நூலில் தரப்பட்டிருக்கிறது.

தமிழில் என். ஆர். ஜம்புநாதனே முதன்முதலாக மணிப் பிரவாளம் போலும் நடையில், வேதங்களைத் தமிழாக்கம் செய்தார் என்று தெரிகிறது. அதனை உள்ளவாறே, மீண்டும் பதிப்பித்தால் பயனுடையதாகும். அதன் அடிப்படையிலும், ஆங்கில ஆக்கத்தை முழுமையாகச் சேர்த்தும் நான்கு வேதம் பற்றி, வந்துள்ள தமிழாக்க நூல்கள் மிகவும் பயனுடையன என்றே கூறவேண்டும்.

**இவ் வேதங்களையும் பிற்பட்ட உபநிடதங்கள் போலும் அனைத்தையும் பிரித்தே நோக்கவேண்டும். இதை யாரும் இதுவரைச் செய்திலர்.**

பிள்ளையார்பட்டி, திருக்கோயில்கள் பற்றிய கருத்தரங்க மலரில் உள்ள குறிப்பு பின்வருமாறு:

"யக்ஞங்களைச் (யாகம், வேள்வி) செய்வதே வேதத்தின் தலையாய நோக்கம். பரஞானம் பெறுவது வேதத்தின் மற்றொரு நோக்கம் என்றும் கூறுவர். வேதம் செய்யப்பெற்ற காலத்தில் முதல் நோக்கமே மேலோங்கி இருந்தது. **பிறகு வேதக்காரர்கள் தமிழ் மக்களோடு தொடர்பு கொண்ட காலத்தில், ஞானம் என்ற பொருள் அவர்களுக்குத் தெரிய வந்தது. அதன் விளைவே பின்னர் எழுந்த உபநிடதங்கள்".**

இதுவே வரலாற்றுவழி உண்மையாகும். உபநிடதங்களை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் அவை 285, 108, 31, 10 எனப் பலவாறு கூறப்படுகின்றன. அபிதான சிந்தாமணி இதைக் குறிப்பிட்டு 108 உபநிடதப் பெயர்களைக் கூறுகிறது. வடுவூர் நாராயணனும் மற்றும் பல மேற்கு நாட்டு அறிஞர்களும் பத்து உபநிடதங்களே உண்மையானவை என்று கூறுகின்றனர்.

தமிழர்களுக்கேயுரிய சிவ, மாலிய, கொற்றவை வழிபாடுகள் பற்றியும், சிவனிய மெய்யியல் பற்றியும் இருந்த தமிழ் நூல்களை முற்றிலும் அழித்துவிட்டு, அவற்றைச் சில வடமொழிப் போலி உபநிடதங்களில் எழுதி வைத்துள்ளனர்.

தமிழ் மறைகள் அழிக்கப்பட்டன.

தமிழ் ஆகமங்கள் அழிக்கப்பட்டு, அவற்றில் சிலவற்றை சமஸ்கிருதமயமாக்கி எழுதி வைத்துக் கொண்டனர். முற்றிலும் அருவ வழிபாட்டினராகிய அவர்கள், பி. டி. சீனிவாச அய்யங்கார் கூறுகிறபடி, பாரத காலத்திற்குப் பிறகு பெரும்பாலான வேள்விகள் செல்வாக்கை இழந்ததால், தாங்கள் வாழவேண்டியும், வருமானம் தேடவேண்டியும் தங்கட்கு முற்றிலும் பொருந்தாத ஆகம வழிபாட்டின் பக்கம் திரும்பினர்.

அவ்வாறு திரும்பியதைக் கூடக் குறை சொல்வதற்கில்லை. அவற்றை எல்லாம் தம்மதாக்கிக் காட்டி, தம்மிடமிருந்தே அவை வந்தனபோல் உணர்த்த அனைத்தையும் உருமாற்றி விட்டனர்.

இன்று சமஸ்கிருதச் சமயக் கலைச்சொற்களை வைத்தே, இந்தச் சிவநெறி வெற்றுவிரிவுரை அறிஞர்கள், மக்களுக்கு விளக்க முற்படுவதால், இந்நெறி சார்ந்த மெய்ம்மையியல் யாருக்கும் போய்ச் சேரவில்லை. சுருங்கச் சொன்னால் சிவ வழிபாட்டையும் சிவநெறி மெய்யியல்களையும் இவர்கள் முற்றிலும் மக்களுக்குப் போய்ச் சேராவாறு, ‘இருட்டடிப்புச்’ செய்துவிட்டனர். இதற்குப் போலி உபநிடதங்களும், உருமாற்றி எழுதி வைத்துக்கொண்ட ஆகமங்களும் புராணங்களும் காரணமாகும். வேதத்திற்குப் பிற்பட்ட வடமொழி நூல்கள் அனைத்தும், வாழும் இடத்திற் கேற்ப நிறம் மாற்றிக்கொண்டு, பிற உயிர்களைப் பிடித்துத் தின்னும் தங்கள் இயல்பையும் விடாத, நிறம் மாறும் ஓந்தி, பல்லி போன்றவையாகும். அந்நூல்கள் மட்டுமன்றி, அவர்களில் பலரும் அதுபோலவே வாழ்வதுதான் வேதனை தருகிறது.

இவர்கள் வடமொழிச் சடங்குகளையும் வேள்வி, ஹோமங் களையும் தங்கள் குலத்திற்குள் மட்டுமே செய்து கொண்டால் நமக்குக் கவலை இல்லை.

எத்தனையோ பிராயச்சித்த, பரிகார ‘ஹோமங்களை’ உற்பத்தி

செய்து, அவற்றை ஓதும் போதும், என்ன ஓதப்படுகின்றன என்றே தெரியாதவாறு ஒவ்வொரு நாளும் தமிழர்தம் கோயில்களிலும் வீடுகளிலும் புகுந்துகொண்டு, பிறப்பு, திருமணம் முதல், சாவு சார்ந்த ஈமச் சடங்குவரை செய்து, தட்சிணை பெறுவதாலேதான் மனச் சங்கடமே ஏற்படுகிறது. இதை வைத்துக் கொண்டு, தமிழ் மந்திர சக்தி அற்றது, தமிழில் வழிபட்டால் 'தோஷம்' பற்றிக் கொள்ளும்; பத்தியையும் பரிகாரங்களையும் கூறிப் பணம் பறிப்பதே ஆகமநெறி - என்றெல்லாம் சொல்லி தமிழை நீசபாஷை என்னும்போதுதான், நாம் இவ்வளவும் எழுதி விளக்க நேர்கிறது.

தமிழர்கள் முழுமையாய் விழிப்புணர்வு பெற்றால், சமணர் களுக்கு நேர்ந்ததாகக் கூறப்படும் 'கதியைத்' தாமும் அடைய நேருமே என்று, இவர்களில் ஒருவராவது எண்ணிப் பார்க்கவில்லை. எவ்வாறு இலஞ்சம் - கையூட்டுக் கொடுப்பதும் தவறு, வாங்கு வதும் தவறோ, அதுபோலவே தமிழரிடம் சமஸ்கிருதச் சடங்கு களைப் புகுத்துவதும் குற்றம்; அதை மூடத் தமிழர் ஏற்பதும் தவறு. தமிழை இழிவுபடுத்துகின்றவர்களும் அதை மடமையால் ஏற்கும் தமிழர்களும் ஆகிய இருவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒருமுறை முன்னைய, காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள், ஆண்டாள் 'தீக்குறளை சென்றோதோம்' என்று, திருக்குறளை ஓதக்கூடாது என்று பாடியதாகப் பேசியது, தமிழகம் எங்கும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. இதை விளக்குவதற்காகத் தமிழறிஞர் **கீ. இராமலிங்கனார்**, காஞ்சிபுரம் சென்று சுவாமிகளைச் சந்தித் துள்ளார். அப்போது சுவாமிகள் இராமலிங்கனாரிடம் தமிழில் உரையாடாமல், தம் துணையாளரிடம் சமஸ்கிருதத்தில் கூறி, அதை அவர் மொழிபெயர்த்துக் கூறினாராம். அதற்கு இராமலிங் கனார், "சுவாமிகளுக்குத்தான் தமிழ் தெரியுமே; தமிழிலேயே உரையாடலாமே' என்றாராம். அதைக்கேட்ட அத்துணையாளர், "இன்று வெள்ளிக்கிழமை, பூசை நேரம், இப்புனிதமான நேரத்தில் சுவாமிகள் நீசபாஷையில் பேசமாட்டார்கள்" என்றாராம். இதே மனநிலை ஒவ்வொரு பிராமணனின் ஆழ்மனத்திலும் இருந்து சமயம் நேரும்போது, வெளிப்படுகிறது.

உண்மையில் தமிழர்கள் யாரும் சமஸ்கிருத மொழிக்கும் தெலுங்கிற்கும் பகைவர்கள் அல்லர். இத்தகைய சூழல்கள், இப்

பகுத்தறிவுக் காலத்திலும் நீடிக்கலாமா என்பதே எமது வினாவாகும். நம்மையும் நம் மொழியையும் இழிவுபடுத்திவிட்டு, மானமுள்ள தமிழர் கொதித்தெழும்போது, அவர்களைச் சமஸ்கிருத - பிராமணப் பகைவர்கள் என்பது என்ன நியாயம்?

எங்களுடைய இந்நூலினைக் கற்பவர், உறுதியாக மன மாற்றமும் மான உணர்ச்சியும் பெறுவர் என நம்புகிறோம். தமிழகத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்படும் எனவும் எண்ணுகிறோம்.

## வேத மூலநூல்கள் உணர்த்தும் உண்மைகள்

ஆரியர்கள் சூரிய ஒளியைக் காண ஆண்டு முழுவதும் தவமிருக்க வேண்டிய வட துருவப் பகுதியில் வாழ்ந்து, தாங்க முடியாத குளிரால் வாடி, மத்திய ஆசியாவுக்குள் நகர்ந்து, இந்தியாவுக்குள் புகுந்து கங்கை யமுனைச் சமவெளியில் பரவியவர்கள்.

தொடக்கத்தில் அவர்கள் வாழ்ந்த பழங்காலத்தில்தான் அக்கினியும் சூரியனும் கடவுளர்கள் எனப் போற்றப்பெற்றனர். (இதற்கு மாறாகத் தமிழர்கள் மழையைக் கடவுள் எனப் போற்றியதை 'வான்சிறப்பு' மூலம் திருவள்ளுவர் அறிவுறுத்து கிறார். வடதிசையை அவர்கள் புண்ணியதிசை என்று நம்பிக்கை கொண்டு ஒழுகிய காலத்தில், சேக்கிழார் தென்திசையே புண்ணிய திசை என அடித்துச் சொன்னார். பலவற்றில் தமிழும் ஆரியமும் முரண்பட்டவை - தொடர்பற்றவையாக இருந்தது முற்கால நிலை).

வானோங்கி வளர்ந்துநின்ற மரங்கள், சிலபோது காற்றினால் ஒன்றுடன் ஒன்று மோதி உராய்ந்தபோது, அதிலிருந்து நெருப்புத் தோன்றவே, அதைக் கண்ட இம் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. நெருப்பு குளிர்காய உதவியது; சூரியனைக் காணாது இருண்ட சூழலில் வெளிச்சம் தந்தது. எனவே அது தங்களுக்குப் பாதுகாப்பானது என உணர்ந்தனர்.

மரங்கள் உராய்ந்து நெருப்புத் தோன்றுவதைக் கண்ட அவர்கள், அதுபோல் மரக் கட்டைகளை உராய்ந்து நெருப்பை உண்டாக்க முயன்றனர். இதில் அரணிக் கட்டைகள் எளிதில் நெருப்புண்டாக்க உதவின. இதைக் கண்டுதவிய அதர்வன் என்ற 'ரிஷி' வேதங்கள் அனைத்திலும் போற்றப்படுகின்றான்.

நெருப்பைக் கண்டாற் போதுமா? அது அணைந்து விடாமல் தொடர்ந்து காக்கவேண்டும். அதற்கே அக்கினிக் குண்டங்களை உண்டாக்கினர். அவற்றில் பறவை, விலங்கினம் விழுந்தபோது, அந்த இறைச்சி, தின்பதற்கு எளிதாகவும் சுவையாகவும் இருந்தது.

வானோங்கிக் கூவி எரியும் நெருப்பில், அதில் போட்ட உயிரின இறைச்சிகள் உருகி, ஆவியாகி மேலே போவதைக் கண்டு, அவை மேலுலகில் உள்ள தேவர்களுக்கும், தேவதைகளுக்கும் உணவாக அக்கினியால் கொண்டு செல்லப்படுகின்றன என நம்பினார்கள். அதில் மீந்ததையே தாங்கள் எடுத்து உண்டார்கள்.

இவ்வாறே தாமும் நெய்யூற்றி, ஆகுதி பெய்து, அவி உணவைத் தேவர்களுக்கு அனுப்பி, அவர்களின் அருளைப் பெற அவை உதவின என நம்பினர். இதனாலேயே வானுலகத் தேவதைகள் தங்களுக்கு மழையையும் வளத்தையும் தருவதாக நம்பியதால், அவர்கள் வழிபாடும் சமயமும் அதுவானது. அக்கினி வழிபாடு தவிர, கோயில் வழிபாடு, உருவ வழிபாடு பற்றிக் கனவிலும் கருதினார்களில்லை. கீதை மூலமும் இவற்றையே அறிகிறோம்.

இதிலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றதே ஏகான்ம வாதம் எனப்படும் அத்துவைதம். பின்னால் அது உலகளாவிய பெயருடன் பெருவளர்ச்சி கண்டது. (இதிலும் தமிழர்களின் கோயிற்கலை, உருவ வழிபாடு, முப்பொருளுண்மை, பிராயச் சித்தத்திற்கு இடம் கொடாத வினைக் கோட்பாடு, பத்திமை நெறி எல்லாம் நேர்மாறானவை. இதுவே ஆகமக் கோட்பாடு. வட மொழியில் எழுதி வைத்ததால், இது அவர்களுக்கு எவ்வகையிலும் உரியதாகாது).

அவர்கள் இந்தியாவிற்குள் நுழையும் முன்பே, இருக்குவேதப் பாடல்களில் பெரும்பகுதி தோன்றிவிட்டன. இங்கு வந்தபிறகும் யசுர், சாமம் எனத் தோன்றியவை, இருக்குவினுள் இருந்து பிரிந்தவையே. வியாசருக்கு முன்பு வேதம் ஒரே நூலாகவே இருந்துளது. இதனால் ஆய்வாளர்கள் 'இருக்கு' என்று சொன்னால், அதுவே போதும் என்று கூறியுள்ளனர். பிறகு இம் மூன்றையும் சேர்த்து 'த்ரயீ' என அழைத்தனர். அவ் வேதங்களி லேயே, யக்ஞங்களில் குறைகள் ஏற்பட்டால் அவற்றுக்கான பரிகாரங்கள் பற்றியும், பிற குற்றங்கள் மன்னித்துவிடக் கூடிய சடங்குகள் பற்றியும் தேவதைகளால் ஏற்படும் தோசங்களைக்

களைவதற்கான மந்திரங்கள் பற்றியும் நோய் நொடிகளை நீக்கும் பச்சிலை மருந்துகள் பற்றியும் சிறுசிறு குறிப்புக்கள் உள்ளன.

இவை அனைத்தையும் தொகுத்து, மேலும் மிகப் பல மந்திர தந்திர வகைகளை இணைத்து உருவாக்கப்பட்டதே 'அதர்வ வேதம்'.

இந்தியாவிற்குள் இவை நான்காக, வேத வியாசரால் வகுக்கப்பட்ட பின்பும், இங்கிருந்த பழங்குடி மக்களுடன் பழகிய பின்பும் இவர்கள் தங்களுக்கு என முதன்முதல் வகுத்துக் கொண்டவையே, வேள்வி செய்முறைகளைக் கூறும் பிராம்மணம், உபநிடதம், மற்றும் பிற யாவுமாகும்.

இவர்கள் ஆடுமாடுகளுடன், ஒரு கிராம வாசிகளைப் போலவே நுழைந்தமை பற்றியும் இங்கு இருந்தவர்கள் நூறு கோட்டைகள், 99 கோட்டைகள், கொத்தளங்கள், வீடுகள் என நகர்ப்புற நாகரிகத்துடன் வாழ்ந்தனர் என்பது பற்றியும் இருக்கு வேதத்தின் மூலம் மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

இங்ஙனம் வந்த காலத்தில் இவர்களில் கிராமசபைத் தலைவர்களாகி ஆள்பவராக மாறிய குழுக்களும் (சத்திரியர்), வாணிகம் செய்யும் குழுக்களும் (வைசியர்), அடித்தொழில் செய்யும் குழுக்களும் (சூத்திரர்), புரோகித தொழில் செய்து வழிகாட்டும் மேல் சாதிக் குழுக்களும் (புரோகிதப் பார்ப்பனர்) என அவர்களுக்குள்ளேயே பிரிவுகள் தலை தூக்கின.

சிந்துவெளியிலும் பிறகு கங்கைச் சமவெளியிலும் பரவிய போது, இங்கிருந்த 'தஸ்யூக்கள்' எனப்பட்ட கரிய நிறத் திராவிடர் களுடன் சண்டையிட்டனர். திராவிடர்களில் மேல்நிலையில் இருந்தவர்களைக் கையில் போட்டுக் கொண்டும் நிறத்தாலும் தோற்றத்தாலும் மற்றவர்களை வியப்புடன் பார்க்க வைத்தும், பகைவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து, அவர்கள் தாமே தோற்கச் செய்தனர். போரைவிடத் தங்களின் பல்வேறு சூழ்ச்சித் திறன்களாலேயே இங்கு அவர்கள் நிலை கொண்டனர்.

குளிர் மிகுந்த வழிகளில் வந்ததால் மகளிர் பலர் வழியிலேயே இறந்துவிட்டனர். இதனால் இங்கு வந்தபோது ஆடவர் தொகை மிகுதியாகவும் மகளிர் தொகை குறைவாகவும் இருந்ததால், இங்கிருந்த மகளிரை மணந்தனர் பலர். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை 'உபநயனம்' என ஒரு குறிப்பிட்ட வயதில், சடங்கு

செய்வித்துப் பிறகே தம்முடன் ஏற்றுக் கொண்டனர். தங்களின் நால்வகைப் பிரிவை இங்கே புகுத்தி, மேலும் 'கலப்பு' நேராதபடி, தீண்டாமையைக் கடைப்பிடித்தனர். பெண்கள் இங்கு பிறந்தவர்களாதலின், அவர்களைப் 'பாவப் பிறவிகள்' என்றும் சூத்திரர்போல் அவர்களும் தம் வேதங்களை ஓதவோ, கேட்கவோ கூடாதென்றும் விதிகள் வகுத்தனர்.

தெற்கே கடல்கோள்கள் நடந்து முடிந்த சூழலில், ஆரியர்கள் தெற்கிலும் வந்தனர் என்பதை, எஸ். கே. பாண்டியன், தமது `The Hidden Heritage என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

"It is during this period, the Aryans started their southward migration to India. It is mentioned in the Zend Avastha that the paradise of the Aryans was in the Arctic region, there. the sun was seen only once in the year. But Snow - once fell so heavily that the country became round. Owing to excessive cold, the Aryans left it and started for the south. From Rig veda 1 - 22, 16 - 21 appears the southward migration of the Aryans under their leader Vishnu. Sir George Grierson's linguistic survey confirms D. Hoernles famous theory that the Aryans driven forward by the change of climate in central Asia entered India through the high and difficult passes of Gilgit and chitral and established themselves in the fertile plains between the Ganges and the Jamuna. They followed a route which made it impossible for their women to accompany them. They took to themselves wives from the daughters of the dusky Dravidian aborigines. Here by contact with a different and in their sentiment, imferior race, caste came into being. This is probably the background in which sloka 32 in Chapter IX of Bhagawad Gita catergorizes all women as of 'sinful birth' along with Vaisyas and Sudras, Since the women - folk were drawn mainly from non - Aryan stock, their sons had to be born again through the ritual of upanayana to attain equality with them. This is the theory of the twice born of the Dwijas (p. 4, 5)

இவ்வாறு ஆங்கிலப் பகுதிகளை, இடையிடையே தரக் காரணம், நாம் சொன்னால் நம்பமாட்டார்கள். பிராமணர்கள் இவ்வாறு கலப்படமாகிப் போனதால் 'இரு பிறப்பாளர்' ஆயினர். எனினும் சமுதாயத்தில் தங்கள் மேன்மையையும் மேலாண்மை யையும் காப்பாற்றி வருகின்றனர். பரிதிமாற் கலைஞர்

கூறியிருப்பதுபோல, வசதி படைத்த செல்வர்கள், முதலாளிகள், நிலக்கிழார்கள், கோடீசுவரர்கள், பெரும் செல்வாக்குடையவர்கள் பக்கம் சார்ந்து, அவர்களைத் 'தம்மவர்' போல் ஆக்கிக்கொண்டு, மற்றவர்களை அடிமைகள்போல் - தங்களுக்குக் கீழ்ப்பட்டவர் களாகவே நடத்துவதில் இவர்கள் மிக வல்லவர்கள்.

பிராமணப் புரோகிதர்களோ, தங்களைப் பூசுரர்கள் நிலத்தில் வாழும் கடவுளர்கள், கடவுளுக்கும் மேலானவர்கள் என்று சொல்லிச் சொல்லி, அவ்வாறே ஒதுங்கி நடந்து, எல்லோரையும் நம்ப வைக்கவும் வல்லவர்கள்.

இராமனுக்கு முடிசூட்டுவதாக அறிவித்ததும் தயரதன், வசிட்டரை அழைத்து இராமனுக்கு அரசியல் ஆட்சி பற்றிய அறிவுரை கூறச் சொல்கிறார். அப்போது வசிட்டர், இராமனிடம் அந்தணரை எப்படி மதிக்க வேண்டும் என்று சொல்வதாக ஒரு பாடலைக் கம்பர் புனைந்துள்ளார்.

கரிய மாலினும் கண்ணுத லானினும்
உரிய தாமரைமேல் உறைவானினும்
விரியும் பூதம்ஓர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால் (1413)

இன்றும் பிராமண அந்தண ஆசாரியர்கள், தங்களைக் கடவுளைவிட மேம்பட்டவர் என்றே கருதுகின்றனர். கம்பரே, மும்மூர்த்திகளை மட்டுமன்றி - ஐம்பூதங்களை மட்டுமன்றி - 'மெய்ம்மையினும்' மேலானவர் என்பது அதிர்ச்சியளிக்கிறது.

பொதுவாக 'ஸ்மார்த்த - வைதிகப் பிராமணர்க்கும் சிவ வழிபாட்டிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நான்கு வேதங்கள் பற்றிய முன் பகுதிகளில் ருத்ரன் என்பவன் தேவதைகளில் ஒருவனாகக் கூறப்பட்டிருப்பதுடன் மட்டுமன்றி, அவனது பிறப்பு முதலியனபற்றி, அவமானப்படுத்தும் வகையில் - அருவருக்கத்தக்க வகையில் விளக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளோம். பிரும்மாவைப் பற்றிக் கூடச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. வேதத்தின் தலைவன் அல்லது வேதங்களை அருளியவன் என்று புகழப்படுகின்றான். விஷ்ணுவுக்குத் தந்துள்ள அளவுகூடச் சிறப்பாக 'ருத்ரன்' குறிக்கப்படவில்லை. இவை வேத மூல நூல்படி உள்ளவை. ஆனால் உபநிடதங்களில் சிவருத்திரன் என ஒன்றாக்கி, வேதத்திலேயே சிவன் பற்றி வருகிறது என்று எழுதி வைத்திருப்பது,

அப்பட்டமான முரணாகும். சிவன் - சிவ வழிபாடு பற்றி உபநிடதங்களில் நுழைக்கப்பட்டவற்றை நம்பி, நம்மவர்கள் இப்பொய்ம்மையை, 'உண்மை' என ஏற்று மிக விரிவாக எழுதி யிருப்பன எத்துணை மூடத்தனம் என்பது வெட்கந்தரும் செய்தி யாகும். மேனாட்டார் பலர், வேதங்கள் சிவனை ஏற்காதது மட்டு மன்றி, பழித்துப் பேசியுள்ளன என்று ஆராய்ந்து கூறியுள்ளனர்.

அண்மையில் ஆங்கில நாளேட்டில் (The Hindu, 4 - 2 - 2011) ஆகம வல்லுநர் என்று டாக்டர் பிரபாகர் ஆப்தே என்பவரைக் கண்டு, அவர் கூறியவற்றை ஒரு கட்டுரையாக விரிவாக வெளியிட் டுள்ளனர். தம் கூற்றில் தமிழ், தமிழர் என்ற சொல்லே வராதபடி, பிராமணருக்குரிய 'குசும்போடு' தான் அவர் பேசியுள்ளார்.

``warning up to his subject, are says that available evidence suggests a long history of a group of vedic people who were devoted to Vishnu as the supreme God"

வி ஹுவை பரமாத்மா - முழுபரம்பொருள் என்று கூறி யிருப்பதுபோல், சிவனை யாரும் பரம்பொருளாக, வேதங்களில் குறித்திலர். இருந்தும் சிலர், 'Siva has vedic root' என்று கூசாமல் எழுதுகின்றனர். சிவனைக் குறிக்காதது மட்டுமன்றி, இருக்கு வேதத்தில் சிவ வழிபாட்டினரை மூன்று இடங்களில் அருவருக்கத் தக்க முறையில், அவமானப் படுத்தியும் கூறியுள்ளனர்.

## வீரநிலைக் காலத் தமிழர் வழிபாடு

### தமிழர் உருவ வழிபாட்டின் தோற்றம்

மிகத் தொன்மைமிக்க காலத்தில் மாந்தர்கள் விலங்கின வாழ்க்கையிலிருந்து, சிறிது முன்னேறியிருந்தனர். வேட்டை யாடுவதும் தங்களுக்குப் பயன்படும் விலங்குகளை வளர்ப்பதும் வாழ்வாக இருந்த காலம் அது. அவர்களின் உடற்கட்டு, இன்றைய மாந்தரைவிடப் பல மடங்கு உயரமும் பருமனும் தோற்றமும் உடையதாக இருந்தது. இன்று கோயிற் சிற்பங்களில் காண்பன போல இருந்திருக்கலாம். அன்று 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று உலகத்தியற்கை' என்று பாடுவதுபோல் மிக இயல்பாகப் போரிடலே வாழ்வாக அமைந்திருந்தது. கிரேக்கர் களின் வீரநிலைக் காலம் பற்றி சி. எம். பௌரா மிக விரிவாக எழுதியுள்ளார். அதைப்போல, தமிழரது வீரநிலைக் காலம் பற்றி,

தமிழ் ஈழப் பேரறிஞர் க. கைலாசபதி ஓர் ஆய்வுப் பனுவல் வரைந்துள்ளார். இக்காலத்தில் மிகப் பயன் தருவனவாகக் கருதப்பட்ட ஆன் இனம் - பசுக்கூட்டம் செல்வமாகக் கருதப் பட்டது. மாடு - என்ற சொல்லுக்கே செல்வம் என்பது பொருளா யிற்று. திருவள்ளுவர் 'கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை', என்பார்.

இதனால் பழங்காலச் சிற்றூர்களில், ஒரூரில் உள்ள ஆனிரையைப் பக்கத்து ஊர்க்காரர் களவில் கவர்ந்து தம் ஊர்க்கு ஓட்டி வருவதும், இதை அறிந்த உரிமையாளர்கள் பின்னாலேயே விரைந்து வந்து, அவ் ஆனிரைகளை மீட்பதுமே தொடக்ககாலப் போர் நிலைகளாக இருந்தன. இத்தொடக்ககாலப் போரை 'வெட்சித்திணை' என்றனர். இப்போரில் நிரையை மீட்கப் போரிடுபவர்கள், பேரவலத்திற்கு ஆளாவதுண்டு. இப்போரில் தன் உயிரைக் கொடுத்து நிரையை மீட்டவனுக்கு, அவனது அடை யாளமாக ஒரு கல்லை நட்டுப் போற்றி வழிபட்டனர். தொல்காப் பியரும் வெட்சித்திணையிலேயே 'நடுகல்' பற்றி விளக்குகின்றார்.

நிரை இவண் தந்து, நடுக லாகிய
வெள்வேல் விடலை (புறம். 261)

ஆனிரையை மீட்டுத் தந்து, தான் உயிர்விட்டு, இன்று நடுகல் ஆகிய வீரன்.

கறவை தந்தவன்
அணிமயிற் பீலிசூட்டி, பெயர்பொறித்து
இனி நட்டனரே கல்லும் (புறம். 264)

மறவர், பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம். 67)

முதலில் கல் ஒன்றை, அம் மறவனைப் புதைத்த இடத்தில் நட்டுள்ளனர்; பின்னர் அடையாளம் தெரிதற்காக அக்கல்லில் பெயரைப் பொறித்துள்ளனர்; அதன் பின்பு பெயரும் பீடும் (பெருமையும்) சேர்த்துப் பொறித்துள்ளனர்.

இந் நடுகல்லுக்கு மதுவைப் படைத்து, வழிபட்டுள்ளனர்.

நடுகற் பீலிசூட்டி, நார்அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ – (புறம். 232)

என்று அதியமான் அஞ்சியை ஔவையார் பாடுகிறார். நார் அரி என்பது தேறல் மது.

பலரும் சென்று வரும் பெருவழிகளிடையே இக்கற்கள் நடப்பட்டுள்ளன. அதனால் போவார் வருவார் அதைத் தொழுது சென்றுள்ளனர்.

நிரை. . . பெயர்ந்து. . . விலங்கியோன் கல்லை,
இரவல! தொழாதனை கழிதல் ஓம்புமதி (புறம். 263)

ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகற் கைதொழுது பரவும் (புறம். 306)

கணவனை இழந்தவள் நடுகல்லைத் தொழுததாகத் தெரிகிறது. இந்நடுகல்லைத் 'தெய்வம் நின்றான்' என்று புறப்பொருள் வெண்பா மாலை குறிப்பிடும் *(252)*.

இதுவே சிறிது சிறிதாக வளர்ந்து, இந் நடுகல்லிற்கு, இன்று காலை நண்பகல் இரவு பூசை என்று ஒரு கோயிலில் நடைபெறுவதுபோல, அன்று நாட்காலைப் போதில் 'பலி' எனப் பூசை படைத் துள்ளனர். நடுகல்லை நன்னீராட்டி உள்ளனர். (அபிடேகம்); எண்ணெய்க் காப்பிட்டுள்ளனர்; நறும்புகை (இன்று சாம்பிராணி என்பர்) எடுத்து, அதாவது 'தூபம்' காட்டி வழிபட்டுள்ளனர்.

இல்லடு கள்ளின் சில்குடிச்சீறூர்ப்
புடைநடு கள்ளின் நாட்பலி ஊட்டி
நன்னீராட்டி, நெய்ந் நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் (புறம். 329)

இதுவே மேலும் வளர்ந்து, மரத்தாலும் சுடுமண் எனப்படும் செங்கல்லாலும் சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டும் வழிபடப் பட்டுள்ளது.

தமிழர் உருவ வழிபாட்டின் தொடக்கம் இது. ஆரியரது அக்கினி வழிபாடு; வேள்வியே படையல். அது உருவ வழிபாடு பற்றி அறியாத ஒரு நாகரிகம். இவை அவரவர் சூழலுக்கேற்ற இயல்பென்று கொள்க.

தமிழரது உருவ வழிபாடு. வேதங்கள் அருவ வழிபாடு. அவை அக்கினி - வேள்வி பற்றியவை. மேல் உலகத் தேவதைகளை - கண் காணாதவற்றை - அக்கினி மூலம் வழிபடும் முறை அது.

இது கண்கண்டவற்றை வழிபடுவது. ஒரு கல்லை, முதலில் ஒரு பெருவீரனுக்கு அடையாளமாக, பிறகு அதனையே தெய்வமாக, மேலும் வளர்ந்து கடவுள் வழிபாடாக இங்கு திருக்கோயில் வழிபாடு மலர்ந்துள்ளது.

கோயில் என்ற சொல்லோ, உருவம் பற்றியோ, அதை நேர்நின்று வழிபடுவது பற்றியோ அறியாத ஒரு நாகரிகம் கொண்ட வேத வைதிக சமூகம், எங்ஙனம் கோயில்கள் பற்றியும் கோயிற்கலைகள் பற்றியும் வழிபாட்டு முறைகள் பற்றியும் நூல்கள் எழுதியிருக்கும்? ஆகமங்கள் தமிழருடையன. அவை கூறும் சிவன், திருமால், கொற்றவை (சக்தி) மூன்றும் தமிழர் வளர்த்த கடவுள் வழிபாடுகள்.

ஆக, கோயில் எல்லாம் இங்கே; கோயிற் கலை பற்றியன எல்லாம் அங்கே; வழிபாடெல்லாம் இங்கே. இவை பற்றியவை யாவும் அங்கே. இவ்வாறு முற்றிலும் முரண்பட்டவை வேத வைதிகர்களினால் எழுதி வைத்துக் கொள்ளப்பட்டன என்றால், தமிழருடையவை அழிக்கப்பட்டு, சமஸ்கிருதமயமாக்கப்பட்டன என்பதுதானே பொருள்?

ஒரு செருமானிய அறிஞனுக்கு விளங்கும் இது, இங்குள்ளவர் களுக்கு சற்றும் விளங்காமற்போனது அறியாமையா? அடிமைத் தனமா? எண்ணிப் பாருங்கள்!

## தமிழரின் நிலத் தெய்வ வழிபாடு

தொன்மை மிக்க பழங்காலத்தில் தமிழர்கள் தாம் வாழ்ந்த நிலத்தினடிப்படையில், அங்கு தோன்றிய நிறத்தினாலும் தமக்கு அவை உதவிய திறத்தினாலும் அவ் வியற்கையையே வழிபட்ட முறை, வியப்புக்குரியதாகும். அதற்கு ஒரு குறியீடின்றி, ஐம்பெரும் பூதமென்றும் குறியாமல், காட்சிதரும் இயற்கைக்கே, பொங்க லிட்டு, விழா எடுத்துக் கொண்டாடி வழிபட்டு வந்துள்ளனர். பிற்பட்ட காலத்திலேதான் அவற்றுக்கும் திருவுருவ அடையாளம் வைத்து வழிபடலாயினர்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (951)

காடுகள் பசுமையாய் இருத்தலினால், அக்காடுகளையே 'மாயவன்' என்று - கரிய நிறத்தவன் - அல்லது பச்சைமா மலை போல் மேனியன் எனக் கருதினர். அக்கடவுள் அவற்றில் உறைவதாக எண்ணி வழிபட்டனர்.

மலைகள் சூழ்ந்த (பகுதியில்) செவ்வானில் சிவப்பு ஒளி நிறைந்து, அம்மலையே கடவுள்போல் காட்சியளிப்பதை வைத்து அதனைச் செந்நிறமுடைய சிவன் என வழிபட்டனர். தீம்புனல் உலகம் என்னுமாறமைந்த மருதநிலக் குடிகள், தங்கள் குழுவுக் கொரு ஆளும் தலைவனைக் கொண்டு வாழும் நிலைக்கு முன் னேறினர். வேல் கைக்கொண்டும், ஆளும் கோல் கைக்கொண்டும் முல்லை நிலத்தின் தொடர்ச்சியாக, அங்கு மந்தைகளை மேய்ப்பவன் போல, இங்கு மக்களை ஒரு நெறிப்படுத்தி ஆளும் முறை வளர்ந்தது. அத்தகைய ஆட்சிமுறையை 'வேந்து' என்றவர் கள், அவ்வாறு ஆள்பவர்களுக்கெல்லாம் தலைவனாக, உலகை ஆளும் ஓர் இறைவன் உண்டெனக் கொண்டு, அவனை வேந்தன் என வழிபட்டனர். ஆனால் பிற்காலத்தே, அவ் வேந்தனை இந்திரன் என அழைத்தது, வடவர் தொடர்பால் ஏற்பட்டது. ஆயினும் அவ் வழிபாடே 'பொங்கல் வழிபாடாயிற்று' என்று கருத இடம் தருகிறது. மருதத்துடன் மிக நெருங்கிய நிலப்பகுதி நெய்தல். பரந்த வெளியில் ஞாயிற்றின் கதிர்கள் தன் ஒளியைப் பாய்ச் சுங்கால், பற்பல வண்ணங்களைக் கண்டனர். வானவில்லில், ஏழு வண்ணங்கள் போல, ஒளி வண்ணங்களால் சூழப்பட்ட அக் கடலையே - பெருமணல் உலகாகிய அதனையே கடவுளாக வழி பட்டனர். வண்ணனே பின்னர் வடவர் தொடர்பால், வருணன் எனப் பாட வேறுபாடு கொண்டது எனக் கருத இடமுண்டு.

முதலில் குறிஞ்சி நிலத் தெய்வமாகச் 'சேயோன்' எனக் குறிப்பிட்டது சிவனையே ஆகும். செந்நிறத்தவன் என்பதே பொருள். தமிழண்ணலின் தொல்காப்பியம் - மாணவர்க்கான கருத்துரைப் பதிப்பில் சேயோன் சிவன் எனவும் குறிக்கப் பெற்றனன் என விளக்கம் எழுதியுள்ளமை காணலாம். மாயோன் - கரு நிறத்தவன். சேயோன் - சிவன், சிவந்த நிறத்தவன். சிவபெரு மானைக் குன்றினுக்கும் மலைக்கும் உருவகமாகக் கூறும் இடங்கள் பல உள. இமயமலையையே சிவனாகக் கருதி வழிபட்டதுண்டு.

திருவண்ணாமலை எனும் பெயர், மாலும் பிரமனும் அடி முடி காணமுடியாத அண்ணா + மலையாக ஓங்கி நின்றனன் என்றே முதலிற் பொருள்படும்.

திருமுதுகுன்றப் பதிகங்களில், சிவனையும் முதுகுன்றையும் பிரிக்காமல், ஒன்றென உருவகப்படுத்துமிடங்கள் உள;

அத்தன் முகுகுன்றைப் பத்தி யாகிநீர்
நித்தம் ஏத்துவீர்க்கு உய்த்தல் செல்வமே

ஐயன் முதுகுன்றை, ஈசன் முதுகுன்றை எனச் சம்பந்தர் பாடுவன காண்க.

ஆரூரர், திருப்பைஞ்ஞீலிப் பதிகத்தில், 'அந்தி வானமும் மேனியோ சொலும் ஆரணீய விடங்கரே' என்று செக்கச் சிவந்த, சூரியன் மலையில் சேரும் அந்தி வானத்தை, சிவபெருமானுக்கு உவமிக்கிறார். திருவஞ்சைக் களப் பதிகத்தில், 'அந்தித் தலைச் செக்கர் வானே ஒத்தியால், அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே' என அவர் பாடுகின்றார். திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் அவர் இதனையே குறிப்பிடுகிறார். 'தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற் சேராத சிந்தையான், செக்கர் வான் அந்தி அன்னானை' என்று பாடுவதிலுள்ள நுட்பங்களை ஓதி உணர்தல் வேண்டும்.

குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சேயோனை முதலில் வழிபட்டது சிவனையே என்பது இதனாலும் புலனாகிறது. ஒரு குன்றை மாலை அந்தி நேரத்தில், மூன்றாம் வளர்பிறை தோன்றும்போது பாருங்கள். அம்மலையே பிறை சூடியதுபோல் காட்சியளிக்கும். அதன்மீது அடர்ந்த காடுகள் சடைமுடியாகவும், உச்சியில் தாங்கிவிழும் அருவிகள் கங்கை போலவும், பாம்புகளே அதன் அணிகலன்களாகவும் விளங்குகின்றமை புலப்படும். தொன்மை மிக்க காலத்தில் மலைகளும் காடுகளும் அடர்ந்த சூழலில் வாழ்ந்த மக்கள், தங்கள் கடவுளைச் 'சோயோன் - சிவன்' என்று மலையையே வணங்கினர் எனக் கோடலில் தவறின்று.

'முருகன் நம் முன்னோன்' என்பது தொடர்பான ஆய்வு நூலொன்று தனியே உருவாகிறது. சிவ வழிபாடும் முருகன் வழிபாடும் ஒன்று கலந்த வரலாறு அதில் விளக்கப்படும்.

வடமொழி வேதங்களில் வரும் நூறுவகைத் தேவதைகளில் ஒன்றான ருத்ரனுடன் சேர்த்து, ருத்ரசிவன் என வேதங்களிலேயே சிவனிருப்பதாகப் பிற்கால உபநிடதங்களும் புராணங்களும் கதை கட்டிவிட்டன. ருத்ரன் பற்றிய தோற்றமும் வளர்ச்சியும் வேறு; சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் வேறு என்பது நாம் விளக்கும் உண்மையாகும்.

பரசமய எதிர்ப்புக் காலத்தில், கொள்கை இல்லாக் கூட்டணி அமைந்தபோது, ‘சிவருத்திரன்’ என்றெல்லாம் நூறுவகைக் கற்பனைகளை எழுதி நம்ப வைத்துவிட்டதால் அவை உண்மையாகிவிடா. சிவனை ருத்திரனாகப் பிற்காலப் புராணங்களும் புராண வழிப்பட்ட நூல்களும் விவரிக்கின்றன. ஆயினும் தேவாரத் திருப்பதிகங்களுக்குள் இக்கற்பனை இடம்பெற வில்லை. தன்னை மதிக்காத வேள்விகளையும் அவற்றில் அவியுணவை உண்ண வந்த பிரமன், விட்டுணு, தேவர்கள் முதலான அனைவரையும், சிவன் அவர்கள் தலைகால் விளங்காமல் அலறியடித்து ஓடஓட விரட்டியடித்தான் என்பதே அடிக்கடி கூறப்படுகிறது. சிவன் செந்நிறத்தவன்; பொன்னார் மேனியன், அழல்போலும் வண்ணத்தன் என்பதால், அவனை ருத்ரன் எனல் ஏலாது. எவ்வாறு பார்த்தாலும் சுண்ணாம்பு நீர் பாலாகிவிடாது.

❖❖❖❖❖

## 12

# சிவ வேதியரும் வேத வேதியரும்

கிறித்துவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஆரியர் சிந்து நதிக்கரையில் புகுந்தனர். அதற்கு முன்பிருந்தே அவர்களின் இருக்கு வேதப் பாடல்கள் மக்களிடையே, வாய் மொழியாக வழங்கின.

அவர்கள் கங்கைச் சமவெளியில் பரவியபோது, அவர்களுக் குள்ளேயே நான்கு வருணங்கள் உருவாயின. வேதங்களும் நான்காகப் பகுக்கப்பட்டன.

அவர்களுக்கு முன்பிருந்தே, இப்பகுதிகள் அனைத்திலும் செல்வச் செழிப்புடனும் கோட்டை கொத்தளங்களுடனும் நாகரிக மேம்பாட்டுடனும் திராவிடப் பழங்குடிகள் வாழ்ந்தனர்.

ஆரியர்கள் குளிர் மிகுந்த பகுதிகளிலிருந்து வந்து, அழகிய செந்நிற வண்ணத்துடன் விளங்கியதால், இங்கிருந்த கரிய நிறத் தவர் வியப்புடன் நோக்கும் நிலை ஏற்பட்டது மிக இயல்பான நிகழ்வாகும். ஐரோப்பியர் வந்தபோது, அவர்கள் நிறமும் தோற்றமும் கருதி, 'வெள்ளைப் பரங்கியரைத்' துரை என எண்ணிய மனநிலை போன்றது இது.

மேலும் குளிர் மிகுந்த வழிகளில் ஆடு மாடுகளுடன் வந்தவர் களில், குளிர் தாங்காமல் மகளிர் பலர் இறந்து போயினர். அதனால் இந்தியாவில் குடியேறியபோது, ஆடவர் தொகை மிகுதியாகவும் மகளிர் தொகை குறைவாகவும் இருந்தன. இதனால் இங்குள்ள மகளிரை மணந்த ஆரியர் ஒரு பிரிவினராயினர். அங்கிருந்து வந்த மகளிரை மணந்தவரும் இப்பிரிவில் சேர்ந்தனர். விசுவாமித்திரர் வழியினர், அனுமன் வழியினர், இராவணன் வழியினர் போல்வார் இப்பிரிவினர் என்பர்.

தூய ஆரியர் எனத் தம்மைக் கருதிக் கொண்டவர்கள் இவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதினர். இதனாலேற்பட்ட மன வேறுபாடுகளால், இவர்களில் பலர் தெற்கு நோக்கித் 'துரத்தப்' பட்டதாகவும் கூறுகின்றனர்.

தென்னாட்டிலும் வந்து புகுந்தவர்கள் தாங்கள் நிலைக்க ஏற்பட்ட பகுதிகளில் தங்கி, அங்கங்கு இருந்த மக்களுடன் கலந்தும் (குருதிக் கலப்பு உட்பட), தங்கள் தனித்தன்மையை (வாழ்வு தேடுதற்காக) விடாமலும் வாழத் தலைப்பட்டனர்.

இவ்வாறு பாரதம் முழுவதும், பி. டி. எஸ். கூறுவதுபோல, முன்னர் தமிழும் அதன் கிளைமொழிகளுமே பேசும் நாடாக இருந்தது, பின்னர் அப் பல்வேறு கிளைமொழிகளை, சமஸ்கிருத மயமாக்கியதால், வெவ்வேறு மொழியினராகப் பிரிய நேரிட்டது. இதனால் தமிழகம் வடவேங்கடத்தொடர் (நெல்லூர் வரை), தென்குமரி ஆறு பாய்ந்த பகுதிக்குட்பட்டு, வழங்கும் நாடாகிப் போனது.

இவ்வாறு மற்ற கிளைமொழிகள் பலவும் முதிர்ச்சி பெறாதனவாக இருந்ததால், ஆரியக் கலப்புக்குட்பட்டு, தங்கள் தனித் தன்மையை - தமிழ்த் தன்மையை இழந்துபோயின. தமிழ் ஒன்றே அதற்கு ஆட்படாது, நூறுவித ஆரியத் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து இன்றும் தனித்த - திராவிட - அடையாளமாகத் திகழ்கிறது. இதனையே அறிஞர் கால்டுவெல்லும் அவரைக் கற்றதால் பரிதிமாற் கலைஞர் போல்வாரும் உறுதி செய்து எழுதியுள்ளனர்.

தமிழகம் போந்த பிராமணர்களும் பலவகையாகப் பிரிந்தனர். இங்கும் குருதிக் கலப்பு ஏற்பட்டது. இன்றும் தமிழகப் பிராமணர் களிடம் வழங்கும் உறவுமுறைப் பெயர்களும் அவர்களுக்கெனத் தனித்து வழங்கும் வட்டார வழக்குச் சொற்களும் இதற்குப் போதிய சான்றாகும். இத்தகையவர்களை வடநாட்டவர், ‘பிரஹ்ம ராட்சதர்கள்’ என அழைத்தனர் என்பார் பி. டி. எஸ். அவர்கள்.

அற்றைச் சூழலில் தமிழரிடையே அவர்களுக்கே உரிய தனித்த இலக்கியம், மொழிவழக்கு, நாகரிகம், வழிபாட்டுச் சமயநெறி, இயல் இசை நாட்டிய நாடகம், சிற்பம் ஓவியம் போலும் நுண்கலை வளர்ச்சி எல்லாம் மிக முதிர்ந்த, செம்மைப்பட்ட செவ்விய நிலையில் இருந்தன.

இதனால் இந்த ஆரியப் பார்ப்பனர் மூவகையாகப் பிரிந்தனர்.

முதல் வகையினர் வேந்தர்கள், மன்னர்களால் குடியேற்றப் பட்டவர்கள். தமிழ் வேந்தர்கள் வேள்வி ஆசையில் மூழ்கி, அதுவே வாழ்வாய், அவர்களை மேல்நிலையில் இருத்தி, அவர்கள் சொற்படி கேட்டு, கீழ்ப்பட்டு நின்றனர். இதனால் தமிழ்க்கலை வல்லுநர் எனப்படும் பாணர், பாடினியர், விறலியர், கூத்தர் எல்லாம் வாழ்விழந்து போயினர்.

தமிழக வேந்தர்களாம் மேனிலையினரைக் கையகப்படுத்தி யதால், பிராமணியம் வாழவும் தமிழியம் தாழவும் ஒரு தொடக்கம் ஏற்பட்டுவிட்டது.

பிறிதொரு வகையினர். தமிழருடன் கலந்து, தூய தமிழரா கவே மாறி வாழ்ந்தனர். 'வேளாப் பார்ப்பான், வாளரம் துமிப்ப' என, வேள்வி செய்யாது, சங்குவளையல் முதலியன செய்த பார்ப்பனர் பற்றி, அகநானூறு (24) கூறுகிறது. கபிலர், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பாலைக் கௌதமனார், தாமப்பல் கண்ணனார் எனப் பலர், சிறந்த - உயர்ந்த - தமிழ்ப் புலவர்களாயினர்.

பிறிதொரு வகையினர் வேள்வி செய்பவர்களுடன் வந்த புரோகிதர்கள். இவர்கள் வேத வைதிகர்கள். இவர்களே தமிழரின் சடங்குகளை எல்லாம் தாம் செய்வதாகக் கூறி, அவர்களின் சடங்குமுறை - பழக்க வழக்கங்களை ஏற்பவர் போல் காட்டி, தங்கள் மந்திரங்களையும் ஓதி, அதை ஒரு வருமானம் தரும் தொழிலாக்கிக் கொண்டனர்.

இப் புரோகித வழிப் பார்ப்பனர்களாலேதான் நாம் இன்றளவும் அல்லற்படுகின்றோம்.

இம் மூவகையினரும் தனித்தனியேயும் செயற்படுவர்; வாய்ப்பு நேரும்போது, ஒற்றுமைப்பட்டுச் சேர்ந்தும் கொள்வர்.

## வடக்கில் பரவிய சமணமும் புத்தமும்

வடக்கே ஆரியர்கள் கைக்கொண்ட உயிர்க்கொலை வேள்வி முதலான, மனித நேயமும் ஆன்ம நேயமும் இல்லாத பல அருவருப்பான நடைமுறைகளை எதிர்த்து, மகாவீரரும் புத்தரும்

திராவிட நாகரிகக் கூறுகளின் அடிப்படையில், புதிய சமய நெறிகளைத் தோற்றுவித்தனர்.

சந்திரகுப்த மௌரியன் காலந்தொட்டு, சாணக்கியரின் வழிகாட்டுதலில், பல்வேறு மந்திர தந்திரங்கள் மூலம் சமணமும், புத்தமும் மக்களிடையே பரவி நிலைத்துவிடாமல் செய்தனர். அந்தச் சமயங்களின் நல்ல பண்புகள் எல்லாம் தங்களிடமிருப்ப தாகக் காட்டி, அவற்றின் வளர்ச்சிகளை விளங்காமற் செய்தனர்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே சமண, புத்த சமயங்கள் தமிழகத்தில் கால்கொள்ளத் தொடங்கின. பாண்டிய நாடு - கழுகுமலை - குமரிமுனை வரை இவை மிகு செல்வாக்குடன் திகழலாயின. இவற்றுள் புத்த மதத்தைவிட, சமணம் மக்கள் ஆதரவையும் அரசியல் ஆதரவையும் பெற்றுப் பரவியதால், இங்கிருந்த புரோகிதப் பார்ப்பனக் கூட்டம் நிலைகுலைந்து போனது. தங்கள் வாழ்வு அழியாமல் காப்பாற்ற வழி தேடியது. அது அறிவார்ந்த கூட்டமாகவும் குழுவாகவும் இருந்ததால் இது சாத்தியமாயிற்று. அவர்கள் கைக்கொண்ட 'உபாயங்கள்' அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தன.

தமிழர்களும் காலப்போக்கில் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டனர். அவர்களின் ஓவியர் குடி, ஆவியர் குடி, ஆய் குடி, பதினொரு வகை வேளிர் குடி போல்வன, அவர்கள் வாழ்ந்த நிலப் பகுதிகளால் ஏற்பட்டன. தங்கள் நிலத்திற்கேற்ற தொழில்களிலும் ஈடுபட்டனர். ஆனால் இவர்கள் பார்ப்பன ருடன் பழகிய பின், உழுவதற்கென்று ஒருகுடி, வேட்டையாடுதற் கென்று ஒருகுடி, சலவைக்கு ஒருகுடி, முகம் மழிக்க ஒருகுடி, ஆடல்பாடலுக்கு என்று பொட்டுக் கட்டித் தனிப்படுத்தும் ஒருகுடி எனப் பலநூறு குடிகளாகப் பகுத்து, அவர்களிடையே பார்ப்பனர் கைக்கொண்ட, தீண்டாமையும் நுழைந்து தனித் தனியே பிரிந்து கிடக்கலாயினர். பிள்ளை, முதலி, எட்டி (செட்டி), படையாட்சி, மறவன், அம்பலகாரன், இடையன், ஆயன் என ஆயிரம் பெயர்களை எண்ணிப் பார்த்தால் அவை நிலம் அல்லது தொழில்வழிப்பட்ட பெயர்களாக இருக்கும்.

இவைபோலவே கல்வி கற்பதற்கும் கற்பிப்பதற்கும் என்றே ஒரு குடிவழியை உருவாக்கி, அதில் பார்ப்பனரும் - அவர்களுடன்

ஒன்றிப்போன கணியர், அறிவர் போல்வாரும் தனியே வளரலாயினர். இதனால் பல்வேறு தொழிலினர்க்கும் வணிகர்க்கும் தொழிலதிபர்கட்கும் செல்வர்க்கும் தமிழிலக்கியம் பற்றி எதுவுமே தெரியாது; சமய நடைமுறை என அருச்சனை, வழிபாடு தவிர அவற்றின் திட்பநுட்பம் எதுவும் தெரியாது. இன்றைய நிலையும் அதுவே.

தமிழாசிரியர் எனத் தொழில்வழி ஒரு பிரிவை உண்டாக்கி, அவர்களுக்கு மட்டுமே தமிழும், தமிழிலக்கியமும் உரிமையுடையனபோல ஒதுக்கிவிடும் நிலை இன்றும் நீள்கிறது. ஓர் உயர்நிலைப் பள்ளியிற் கூட, தமிழாசிரியர்களுக்கு மட்டுமே தமிழ் சொந்தம். பிறதுறை ஆசிரியர்கள் இதனை ஏறெடுத்தும் பாரார். உயர்கல்வித் துறைகளிலோ, தமிழ் பற்றிய எதுவுமே தெரியாது - ஒரே சுழியம்தான்.

உலக மொழியாளரிடையே காணாத பேரவலம் இது. இச்சூழலில்தான் திருக்கோயில் பூசனைகள் - சுத்தப்படுத்தலும் அலங்கரித்தலும் மட்டும் செய்யும் குயவர் எனப்படும் வேளார் குடிவழியினர் இருந்தனர்.

இடைக்காலச் சோழர் காலம் முடிய, இன்று காசியில் நடைபெறுவதுபோல, இறைவனைத் தொட்டு, பூவும் நீரும் கொண்டுசென்று தாம்தாம் வழிபடும் முறையே இருந்துளது.

‘பரார்த்த பூசை’ எனச் சொல்லும், அப்பட்டமான அறியாமை வழிப்பட்ட, தன்னல நோக்குடைய வழிபாடு தேவாரத்தில் காணப்படவில்லை. 12ஆம் நூற்றாண்டில்தான் சிவகோசரியார் என்ற ஆதிசைவர் வருகிறார்.

தேங்காய் பழம் அருச்சனைத் தட்டு, அதிலே காசுபோடுதல் எல்லாம் எந்த இடத்திலும் காணப்படவில்லை. அருச்சிக்கக் காசு கேட்பார்; அதற்குப் பலவகைக் கட்டணம் வசூலிப்பார் இலர்.

திருமுறைகள் கூறுகிற அருச்சனை முறைபற்றிய சில சான்றுகள் மட்டும் காண்போம். இவை அனைத்தும் திருஞானசம்பந்தர் பாடியவை.

அந்தணர்கள் சிவபெருமானைத் தாமே வழிபடுகிறார்கள்.

(அ. ச. ஞா. தொகுத்த 'தேவாரத் திருப்பதிகங்கள்' நூலில் உள்ளபடி எண்கள் தரப்பட்டுள்ளன).

அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல். . . (55)

நெய்தவழ் மூவெரி காவலோம்பு நேர்புரி நூன்மறையாளர் ஏத்த
மைதவழ் மாடம் மலிந்த வீதிமருகல். . . (56)

மந்திர வேதங்கள் ஓதும்நாவர் மருகல் நிலாவியமைந்த சொல்லால்
செந்தமிழோர்கள் பரவி ஏத்தும் சீர்கொள் செங்காட்டங்குடி. . .(62)

இப்பதிகத்தில் (திருமருகல் - செங்காட்டங்குடிப் பதிகம்) வேதம் ஓதுபவர் தனியே தொழுவதும், செந்தமிழோர்கள் பரவி ஏத்தித் தொழுவதும் தனித்தனியே நிழ்ந்தமை ஒரே பாடலில் வந்துளது காண்க.

திருவீழிமிழலைப் பதிகத்தில், திருஞான சம்பந்தர் மேலும் தெளிவாகப் பாடுகிறார்.

செந்தமிழர், தெய்வமறை நாவர், செழுநற்கலை
தெரிந்தவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர். . . (3660)

இவ்வாறு சிவ வேதியரையும், செந்தமிழர்களையும் பிரித்துச் சுட்டுவதோடு, பிறரும் சேர்ந்து, அவரவர் தாமே அருச்சனைகள் செய்தனர் என்று குறிப்பிடுவதை இதன்மூலம் அறிகின்றோம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு நிலை இது.

கீழைத் திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகத்தில், அவரே கூறுவதையும் காண்போம்.

போதொடு நீர்சுமந் தேத்தி, முன்நின்று
அடி கையினால் தொழவல்ல தொண்டர். . . (50)

இந்த இடத்திற்கு இவ் எடுத்துக்காட்டுக்கள் போதும் என்று நினைக்கின்றோம். இவற்றில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எண்ணிப் பார்த்தால், ஒருவேளை மனத்தெளிவு ஏற்படக்கூடும்.

ஆகமங்களிலும் காணாத, திருமுறைகள் பாடாத இதனை மட்டும் ஆகம முறைப்படி செய்கிறார்களாம். ஆகமம் ஆகமம்

என்று வாய் எரிகுண்டு வீசும் இவர்களுக்கு, தாம் செய்வன பல ஆகம நெறி அல்ல என்பது விளங்கவில்லையே. ஆகமப்படி என்றால் வருமானம் போய்விடுமே; வயிறு சுருங்கிவிடுமே!

எங்களைக் கேட்டால் 'பரார்த்த பூசை' என்றால், அது பூசனையே அன்று. வழிபாட்டிலுமா 'தரகு' வேலை. வழிபடுபவர் கொடுக்கும் - செலவழிக்கும் பணத்திற்கேற்ப வரவேற்பு, மாலை, புண்ணியமாம்.

இறைமையுடன் இரண்டறக் கலப்பது வழிபாடு. இதில் தரகு எங்கிருந்து வந்தது?

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில், சேக்கிழார் கூறுகிறபடி, சிவகோசரியார் என்ற ஆதிசைவர் கோயிலுக்குள் வந்து விடுகிறார். (திருக்கோயில் வழிபாட்டு நெறிமுறைகளைத் திருமுறைகள் கூறுகிறபடி, தொகுக்க வேண்டும்). அவர் பணியும் பூசனை மட்டுமே. பூசுதல்: தூய்மைப்படுத்தலும் அலங்கரித்தலும். வடநாட்டில் காசி போன்ற திருத்தலங்களில் பண்டாக்கள் இன்றும் இப்பணியை மட்டுமே செய்கின்றனர். பிற்பாடு வந்த இத்திருப்பணியை ஆதி சைவர்கள் மட்டுமே செய்து வந்தனர். இவர்கள் பிராமணர்கள் அல்லர். ஸ்மார்த்த பிராமணர்களை இவர்கள் மதிப்பதில்லை. இவர்களிடையே திருமணக் கொள் வினை கொடுப்பினை இல்லை.

முன்பு சொன்னவாறு, சமணமும் புத்தமும் தமிழ்நாடு முழுவதையும் - பெரும்பகுதி ஆட்கொண்டபோது, இந்தப் பிராமணியம் தான் வாழ ஒரு 'தந்திரம்' செய்தது. வடநாட்டில் எவ்வாறு சமண, புத்த மதங்களின் நல்ல கருத்துக்களையும் செயல் முறைகளையும் தாமே ஏற்றுக்கொண்டு, அவற்றை விளங்காமற் செய்து, மறைமுகமாகத் தங்கள் 'வல்லாண்மையை' நிலைநாட்டி அவற்றை விரட்டி அடித்தனரோ, அதே வேலையை, இந்தப் பிராமணியம் தமிழர் சமயங்களுக்கும் செய்யத் தலைப்பட்டது.

தமிழகம் பத்திமை நெறி வழிப்பட்டது; நடுகல் வழிபாடு தொடங்கி, உருவ வழிபாட்டில் பல்வேறு 'பரிமாணங்கள்' கண்டது. உலகிலேயே திருக்கோயில் கட்டும் வழக்கையும் சிற்ப வழிப்பட்ட இறைத் திருவுருவங்களையும் வடிவமைத்து வழி பட்டது. நான்கு நிலத்தெய்வ வழிபாடுகளாகிய மாயோன்

(திருமால்), சேயோன் (சிவன், முருகன்), வருணன் (வண்ணன், சூரியன்), வேந்தன் (மருதநிலத் தலைவன்) என்பன பழைமை யானவை; இயற்கை வழிப்பட்டவை.

இவற்றுள் நெய்தல், மருதநில வழிபாடுகள் அருகிச் சடங்கு அல்லது திருவிழாப் போலும் நிலைகளில் நின்றுவிட்டன. முதலிற் கூறிய சிவ - முருக வழிபாடும், திருமால் வழிபாடும் நிறுவனச் சமயங்களாயின. வெற்றி எனப் பொருள்படும் கொற்றம் - அதனைத் தரும் கொற்றவை வழிபாடு, முருக வழிபாடுபோல மக்கள் வழிபாடாகி உலகெலாம் பரவியது. (சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பகுதியில் காண்க).

எங்ஙனம் நோக்கினாலும் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை - சக்தி வழிபாடு மூன்றும் தமிழருடையன. இவற்றின் வேரும் விழுதும் இங்குள்ளன.

பிற்கால போலி உபநிடதங்களிலோ, புராணங்களிலோ, ஆகமங்களிலோ இவை காணப்படுமாயின், அவை தமிழரிட மிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை என்பது தெளிவு.

அறிஞர் மு. அருணாசலம் கூறுகிறபடி, வடமொழியில் 'சகஸ்ர நாமம்' எனவரும் நாமாவளிகள், இம்மூன்று தெய்வங் களுக்கே உள்ளன.

வடநாட்டில் சமண, புத்த நெறிகளைக் கால்கொள்ளாமற் செய்தது போலவே, இங்கும் தமிழருடையவற்றை அழித்துவிட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தமது மொழியில் எழுதி வைத்துக் கொண்டு, இன்றளவும் தமிழரை மிரட்டி வாழ வழிதேடுகின்றனர்.

இதனால் வேத வேதியரில் ஒரு கூட்டத்தார், தம்மைச் சிவ வேதியர் என அழைத்துக் கொண்டனர். எனினும் இவர்களிடையே மறைமுகமான கூட்டு இருந்தது.

தென்னாடு போந்த, ஐரோப்பியப் பாதிரிமார், தமிழில் ஈடுபட்டதனால், தாம் செய்யவந்த சமயப் பரப்புதலை விடத் தமிழ்ப்பணி செய்தலையே மிகுதியாக மேற்கொண்டனர். பாதிரிமார் போலவே சிவவேதியர் முழுமைத் தமிழராயினர்; தமிழ்ப்பணி ஆற்றினர். இந்நிலையில், காலப்போக்கில் சிவ வேதியர்க்கு வேத வேதியர் மீது வெறுப்பும் தமிழின் மீது

அளவுகடந்த பற்றும் ஏற்பட்டது. இவ்வகையில் தலைமை சான்றவரே திருஞானசம்பந்தர்.

இவர்களிடையே இருந்த வேறுபாடுகளை, சேக்கிழார் பெருமான் நன்கு உணர்ந்திருந்தார். அவர் காலத்தும் பிராமணிய மேலாண்மை மிக்கிருந்ததால், தமது நூல் அழிக்கப்படாமல் காப்பற்றப்பட வேண்டுமேல், உண்மைகளை மறைமுகமாக உணர்த்த வேண்டிய கட்டாய மேற்பட்டது.

நமது தேவாரத் திருமுறைகளையே, தில்லையில் ஓர் அறையில் போட்டுப் பூட்டி, அடைத்து, செல்லரிக்க வைத்த வரலாற்றை உண்மையுணர்வுள்ள தமிழர்கள் உணராது விடுப்பரோ?

'பிள்ளை பாதி, புராணம் பாதி' என, சிவ வேதியராக மாறிய சம்பந்தருக்கு, மிகுதியாகப் பாடிய சேக்கிழார், தமது திருத் தொண்டர் காப்பியத்திற்கு, ஆதி சைவராகிய ஆலால சுந்தரரையே தலைவராக்கினார்.

ஆரூரர் இமயமலை சேர்ந்ததைப் 'பொங்கு பேரொளி' போந்தது என்றார். 'தென்திசை வந்த நாவலர் கோன்' என்றார். நம்பி ஆரூரரை, உபமன்னிய முனியும் தொண்டரும் வணங்கச் செய்தார். இங்கு,

> தேசம் எலாம் விளக்கிய தென்திசை
> பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை

என்று பாடுகிறார். இவ் ஆதிசைவர்கள், சைவ வேளாண் மரபினர் போன்ற குடியினர். கி. பி. 12ஆம் நூற்றாண்டளவில், இவர்களை, அப்புறப்படுத்தும் முயற்சிகளில் இவ்வேதியர்கள் முயன்றதால் ஆதி சைவர்கள் தங்களின் வாழ்வாதாரம் கெடாதிருக்க, தாங்களும் வேதம் ஓதி, தங்களையும் 'மறையவர்' 'வேதியர்' என்று கூறிக் கொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள்.

இவர்களை, 'மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலம்' என்பார் சேக்கிழார். வழி வழி அடிமை செய்து வந்தவர் வேறு; புதிதாக வந்து நுழைந்தவர் வேறு என்பது தோன்றவில்லையா? 'சைவ அந்தணர் குலம்' என்பார். 'அருமறை நாவன் ஆதி சைவன் ஆரூரன்' என்று தெளிவாகச் சுட்டுவார்.

அருமறை நாவன் ஆதிசைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என் எழுத்து

பிற வேதியர்களை விலக்கி, ஆதி சைவ வேதியர்களே, சிவனுக்கு அடிமை செய்ததை, உறுதி செய்ய வந்தது, இப்புனைவு வரலாறு எனில் தவறாகாது. உண்மையிலேயே சிவநெறித் தொண்டர் வரலாற்றைப் பதிவு செய்த பெருமையாலும் ஆரூரர் சிவநெறி உலகில் பேரிடம் பெற்றார்.

## முப்போதும் திருமேனி தீண்டுவார்

வேத வேதியராக இருந்து சிவ வேதியராக மாறியவர் ஒரு சாரார். அவர்களின் மூலவேர் ஸ்மார்த்த பிராமணியம். சங்க காலம் முதல் இங்கு வந்து வாழ்ந்தவர் வேறு; பல்லவர்களால் குடியேற்றப்பட்டவர்கள் வேறு; நாயக்க மன்னர்கள் குடியேற்றிய தெலுங்குப் பிராமணர்கள் வேறு; இவர்கள் பிற்காலத்தில் வந்தவர்கள்.

தொன்றுதொட்டு சிவ மறையவராக இருப்பவர்கள் தமிழ் மூலவேர் உடையவர்கள். இவர்களையும் சிவ வேதியர் என்பதால் குழப்பமுண்டாகும். அதைத் தவிர்க்குமாறு, சேக்கிழார் கூறுமிடங் களை நுட்பமாய் அறியவேண்டும்.

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்காலம் ஆனவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ?

இவற்றில் வரும் ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த சிந்தனைக் குரியது. மெய்ப்போதம் - சிவஞான போதமாகிய அறிவு. விதிமுறைமை தமிழர்க்குரிய சிவ ஆகம நெறிமுறை. முதற்சைவர் -

ஆதிசைவர். முக்காலமும் இவர்களுக்கே உரிமையுண்டு என்பதால், இடைப்புகுதல் தகாது என்பதாம். வழிவழியே, குலப்பெருமை எனும் தொடர்கள் கருதற்பாலன. முப்போதும் என்றால் போதாதா? 'செல்காலம், நிகழ்காலம், வருங்காலம்' என்பது ஏன்? இடைப்புகுத முயன்றாரை, விலக்குவதன்றோ இது. சிவ வேதியர்க்கே என்பதைப் பிரிநிலை ஏகாரமாக்கி, 'பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால், போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்', என்ற திருமந்திரத்தை எடுத்துக் காட்டுகிறார், சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார். சேக்கிழாரின் குறிப்புணர்ந்து எழுதிய உரை இது.

இங்கு ஆதிசைவர் அருச்சிப்பர் என்று கூறிய சேக்கிழார், ஆதி சைவராம் ஆரூரரை, "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அற்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார், தூமறை பாடும் வாயார்" என்றது உற்றுநோக்கற்பாலது. இவற்றுக்குப் பொருள் வெளிப்படையாகும். 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்திஏத்தித் தொழுவோம் யாமே' என்பார் ஔவையார். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர், முருகனைப் பலவாறு ஏத்திஏத்திப் பாடிப் பரவி, 'யான் அறி அளவையின் ஏத்தி' என முடிப்பார். திருவள்ளுவர் இதனைப் 'பொருள்சேர் புகழ்புரிதல்' (பாடுதல்) என்பார். மாணிக்கவாசகர், 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்' என்பார். இத்தனைக்குப் பிறகும், தவறான விளக்கம் தருவார் துறக்கம் புகுவரோ, நரகம் புகுவரோ, அறியோம்!

அன்று தமிழில் மந்திரம் எனப்படும் தூய தமிழ் மறைகள் பல இருந்ததைத் தொல்காப்பியம் எழுவகை யாப்பினுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. மேலும் சிவபெருமான் ஆலின்கீழிருந்து அருளி யது தமிழ்மறைகள்; அவை வடமொழி வேதங்களல்ல என்பதை விலக்குதற்கே 'தூய மறை பாடும்' என்றார்.

## திருஞானசம்பந்தர் காலச் சூழ்நிலை

திருஞானசம்பந்தர் தமக்கு முன்பே, மூன்று நான்கு நூற் றாண்டுகளாக, வைதிகர்கள் தாம் வாழ சமணத்தை ஒழித்தாலே

முடியும் என முயன்று, அயர்ந்து, தமிழகத்தில் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகச் சிற்றூர்களில் (வேள்விக்குடி, வேதகுடி) கூடி வாழ்ந்த காலமாகும். புத்தம் தூய நன்னெறியினதே யாயினும், தென்னாட்டில் அரசியல் செல்வாக்குப் பெற்றிலது. ஆனால் ஓரளவு பரவியமையும் சமுதாய சீர்திருத்தங்களில் ஈடுபட்டமையும் தெரிகிறது. ஆயினும் அவர்களின் நூல்கள் பரவாதவாறும் அவர் களின் அருமை பெருமைகள் அறியப் படாதவாறும் அழித்து ஒழிக்கப்பட்டன.

ஆனால் சமணத்தை அவ்வாறு அடக்கி ஒழிக்க முடியவில்லை. சமணம் களப்பிர, பல்லவ அரசுகளால் போற்றப் பட்டதால், கன்னிக் குமரிமுதல் தமிழ்நாடெங்கும் பரவி, வைதிகத்தை வேரறுக்க முயன்றது. பாண்டிய நாட்டில் எங்ஙனம் முழுவதும் பரவி இருந்தது என்பதையும் அதை முறியடிக்க சம்பந்தர் எடுத்த முயற்சிகளையும் அறிவோம். இச்சூழலை மேலும் விரிவாக ஆராய்ந்து பெருநூலாக எழுதலாம். தமிழகத்தில் வாழ்ந்து, வேள்வியாசையில் மூழ்கிய தமிழக அரசர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டிருந்த வைதிகம், நிலைகுலைந்த போது, தமிழர்களின் பத்தி வழியை உணர்ந்து அதன் பக்கம் சாய்ந்து, வேத வேதியரிலேயே, மிகப்பலர் சிவ வேதியராக வேடம் புனைந்து, மாறிக்கொண்டு வாழ வேண்டியதாயிற்று. வேதவழி, கவுணிய கோத்திரத்திற் பிறந்து, சிவ வேதியரான வழியில் வந்தவரே சம்பந்தர். இங்ஙனம் ஆயிரக்கணக்கானவர் மாறினர். பொதுமக்கள் சமணத்தின் கடுந்துறவு, திகம்பரர் பற்றிய வெறுப்பு, அர்த்தமாகதி யும் சமஸ்கிருதமும் பற்றிய பிறமொழி ஆதிக்க நுழைப்பு முதலியவற்றில் எதிர்ப்புக் கொண்டிருந்தனர். எனவே தாங்கள் (பிராமணர்) வாழ வேண்டுமேல் சைவமும் தமிழும் ஆகிய இரண்டையும் துணையாகப் பற்றிக்கொள்ள வேண்டியவர் களாயினர்.

ஆயினும் இவர்கள் தங்கள் வேதவழியையும் விடாமல், தமிழியத்தையும் தழுவிக்கொண்டு, கடைசிவரை 'இருபிறப்பாள ராகவே' வாழலாயினர். சிவ வேதியராக மாறிக்கொண்டு, வேத வைதிகத்தைக் காப்பாற்றிக் கொண்டு, சைவ சமயத்தையே சமஸ்கிருதமாக்கிய திறமை வியக்கயற்பாலது.

தமிழர்களின் ஆகம வழியும் தமது நெறிப்பட்டதே என்று காட்டுவார் போல, இவர்கள் செய்த குழப்பங்கள் கணக்கிலடங்கா. முற்றிலும் முரண்பட்ட வேதவழி எங்கே? தமிழரின் பத்தி வழிபட்ட ஆகமநெறி எங்கே? ஆதித் தமிழர்களிடமிருந்து வந்த ஆகம நெறிகளை - நூல்களை அழித்துத் தம் கருத்தைப் புகுத்தி, பத்தி வழி ஆகமத்தையும் தமதாக்கிக் கொண்ட கொடுமையை ஒரு செருமானிய அறிஞர் நன்கு விளக்கியுள்ளார்.

'தமிழ் நூல்களை மொழியாக்கம் செய்து கொண்டு, திரித்து எழுதி மூலநூல்களை அழித்தனர். அறைகளில் பூட்டி வைத்துக் கறையானுக்கு இரையாக்கினர். பதினெட்டாம் பெருக்கில் ஏடுகளைப் போட்டால் புண்ணியம் என்றனர். சொக்கப்பனை என்று எரியூட்டினர்.

தமிழர்களும் அவர்கள் வயப்பட்டு, எல்லாம் வடமொழி யிலிருந்து வந்தன என்றால் பெருமை என நம்பினர். காலம் அவர்களின் வல்லாண்மைக்குத் தமிழரை அடிப்படுத்தியது.

சமணத் தீர்த்தங்கரர்கள், தம் சமயத்தைப் பரப்ப வந்து, முதலில் தமிழ் மக்களின் வெறுப்புக்கு ஆளாயினர். மற்றபடி அவர்களில் இல்லறத்தாரும் அந்தணாளரும் தமிழுக்கும் தமிழர்க்கும் பெருந் தொண்டாற்றினர். இன்றைய கிறித்தவம் போலக் கல்வி, மருத்துவம், பசி போக்குதலில் ஈடுபட்டுச் சமுதாயப் பணி ஆற்றினர். இன்று, 'பள்ளி' என அழைக்கும் சொல்லே, அவர்கள் இங்கு கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுக்குச் சான்றாகும்.

எனினும் அவர்களின் துறவுக்கோலம் - அளவுகடந்த நோன்புகள் போல்வன பல பொதுமக்களிடையே வெறுப்பை யுண்டாக்கின.

எனவே இந்தக் குழப்பமான சூழலில் வேத வைதிகப் பிராமணியம் சிவவேதியப் பார்ப்பனியமாக மாறியது, தமிழர் களும் தங்கள் தமிழியப் பண்பாட்டைக் காக்க இதுவே வழி எனத் தவறாக நம்பி, இவ் வேத வைதிகர்களுடன் 'கொள்கை யில்லாக் கூட்டணி' சேரவும் வேண்டியதானது. இது ஏறத்தாழ மூன்று

நான்கு நூற்றாண்டுச் சூழ்நிலையாகும். இக் 'கொடுமைகள்' ஒரு செருமன் நாட்டு அறிஞருக்குத் தெரிந்திருந்தது, தமிழனுக்குத் தெரியாமல் போனது, அவனது அடி முட்டாள்தனத்தின் வெளிப்பாடே'.

செருமன் அறிஞரின் கருத்துக்களில் ஒரு பகுதியை மட்டும் காண்போம்.

"The Saivagamas stand next to the Vedas, or even above them, as their scriptural authority. . ."

"moreover, the Agama literature is practically unknown in Europe. . . "

". . . the relation of the Vedas to the Agamas, we discover that even at that early time many did not recognise the authority of the Agamas, and indeed were hostile to them.

"Unlike most works, the Agamas do not emphasise the supremacy of the Brahmins, so the Brahmins may well have opposed them, and certainly did see to it that they were not widely known. Many Agamas disappeared, either being destroyed or not copied and circulated. . ."

"Instead of being read and studied they have been or will be destroyed by insects . . ."

"D. Savariroyan, Secretary of the Tamil Archaeological Society, is of the opinion that the Agamas reprecent the oldest productions of Dravidian literature; that they were written in pre-historic times in the Dravidian (Tamil) tongue, and that most of them were lost in the great flood which swept away a large area of south of what is now cape comorin, the chief settlement of the old Dravidian; and that some part only of the old Agama literature was later translated into Sanskrit and preserved in that form (p. 6-8, H.W. Schomerus, Saiva Siddhanta, Translated from German by Mary Law, M. B. Publishers, Delhi, 2000).

ஒரு செருமானிய அறிஞர் தமக்குத் தெரிந்தவரை தரும் உண்மைகளில் ஒரு பகுதி மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது.

பிராமணர்கள் ஆகமங்களை வெறுத்தார்கள்; அழித்தார்கள் என்ற இவ்வுண்மையையும் அவை தொன்மைமிக்க காலத்தில் தமிழருடையனவாக இருந்து அழிந்தன அல்லது அழிக்கப்பட்டன என்பதும் தெளிவாகத் தெரிகிறது. மு. அருணாசலம் தமது சைவ ஆகம விளக்க ஆங்கில நூலில், அவை கிரந்தத்தில் எழுதப்பட்டு, நெடுங்காலம் வடநாட்டுப் பிராமணர்க்கே தெரியாமல் இருந்தன என்றும் தமிழருடையனவாகிய அவை அழிக்கப்பட்டுப் பிறகு சமஸ்கிருதத்தில் எழுதி வைக்கப்பட்டன என்றும் கூறியுள்ளார்.

பி. டி. சீனிவாச அய்யங்கார் அத்துவைத - ஸ்மார்த்த - பிராமணர்கள் கோயில்களுக்குள் நுழைவதையே வெறுத்தார்கள் என்றும் ஆகம நெறியும் வேத நெறியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்றும் எழுதியுள்ளார். இங்கு தரப்பட்ட, செருமானிய அறிஞரின் கருத்துக்களுடன் இவை ஒப்பு நோக்கத் தக்கன.

❖❖❖❖❖

# 13

# வேத வைதிகமும் தமிழ்ச் சிவநெறியும் கொள்கையில்லாக் கூட்டணி

திருநாவுக்கரசரே, கி. பி. ஏழாம் நூற்றாண்டில் முதலில் சமணச் செல்வாக்கிற்கு ஆட்பட்டு, பிறகு விழித்துக் கொண்டு, முதன்முதலாக அச்சமணத்தையும் - அது கொணர்ந்த புறச்சமயப் பிறமொழிப் படையெடுப்புக்களையும் தடுத்துத் தகர்த்து, நூறுவகை அல்லற்பட்டு, தமிழுக்கும் தமிழர்க்கும் விடுதலை தேடித் தந்தார். அவர் தடம் அமைத்த பாதையில், அவர்களை வெறுத்துப் பாடியதுடன், தமிழ் வளர்ச்சியில் எல்லையற்று ஈடுபட்டார் சம்பந்தர். அவர் தமிழுக்கு மாறியதால் அவருக்குத் தனிச்சிறப்புத் தரப்பட்டது. சம்பந்தர் தம் குலத்தை முதலிற் காத்தார். தமிழைக் காக்கத் தாம் ஆளாகியதோடு, தம் குலத்தையும் மடைமாற்றம் செய்தார்.

அ. ச. ஞானசம்பந்தன் தம் பெரியபுராண ஆராய்ச்சி நூலில், "திருஞானசம்பந்தரை நாம் நினைப்பதுபோல் சைவ சமயத்தைப் பரப்புவதற்கும் அதன் பெருமையை வெளிப்படுத்தவும் அவதரித்த பெரியாராகச் சேக்கிழார் கருதினதாகத் தெரியவில்லை," என்றே குறிப்பிடுகிறார். அவரது முதல் நோக்கம் தம் குலத்தவர்க்கு எதிரான சமணத்தை வீழ்த்துவதே எனவும், அவ்வாறு வீழ்த்த வேண்டுமேல், அச்சமண நெறியில் மூழ்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பி, அத் தமிழர்க்குரிய சமயம், பண்பாடு நாகரிகத்தை எடுத்துக்காட்டி, அவர்களின் துணையுடன் தம் கருத்தைப் பரப்பி, இச் சமயப்போரில் வெற்றி காணவும் போரிட்ட புரட்சி வீரராகவே அவரைக் காட்டுகிறார் எனவும் விளக்குகிறார் (பக். 137). முழுவதுமாக நம் திருமுறைகளைக் கற்பதுடன், சம்பந்தர் வாக்கு கள் அனைத்தையும் தொகுத்து ஆராய்ந்தால், இக் 'கொள்கை யில்லாக் கூட்டணியின்' தலைவர் சம்பந்தரே என்பது விளங்கும்.

நம் அருளாளர்கள் எத்தனை விதத்தில் வடமொழியையும் வேதங்களையும் வாயளவில், புகழ்ந்து பாடினாலும், அவையாவும் தமிழ்ச் சிவனை வழிபடவே எனப் பதிகங்களை முடிப்பதனால், இவை மறைமுகமான வேத, வைதிக, ஆரிய, வடமொழி எதிர்ப்புணர்வை வளர்த்தவையே என்பது புலப்படும்.

எங்ஙனம் ஆழ்ந்து ஆராய்ந்தாலும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அப்பரும் பதினேழாம் நூற்றாண்டில் குமரகுருபரருமே தமிழ்ப் போராளிகள் - தமிழர் விடுதலை மறவர்கள். தமிழர்க்குப் புத்துயிர் - மறுமலர்ச்சி தந்தவர்கள் என்ற கருத்து உறுதிப்படும்.

இதனால் 'நான்மறை வல்ல ஞானசம்பந்தன்' எனப் பல இடத்தும் கூறிக்கொண்டு, 'தமிழ் ஞானசம்பந்தன்' என்றும் பாடி சம்பந்தர் இக் கொள்கை இல்லாக் கூட்டணியைத் தனித்தனியே வைத்தும் இரண்டும் சேர்ந்தும் நடைபோட வைத்தார். நம் நாயன்மார்களும் வடமொழி வேதங்களை உதட்டளவில் பாராட்டவும், சிலபோது அவ்வேதங்களும் தேடிக் காண இயலாதவன் எங்கள் சிவன் என்றும், சிவனையே 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' எனப் பாடவும் வேண்டிய சூழல் ஆனது. இது கொள்கை இன்றித் தற்காப்புக்காக ஏற்பட்ட கூட்டணி என்பதற்கு மிகப்பல சான்றுகள் உள. ஒரு சில காண்போம்.

## திருநாவுக்கரசர்

'ஆரியன் கண்டாய்' - என்றவர், 'அண்ணாமலை யுறை எம் அண்ணல் கண்டாய்' என்பதால், தம்மவரே சிவன் என்பதை அடுத்த அடியில் நிறைவு செய்கிறார் *(6479)*.

ஆரியந் தமிழொடு இசையானவன் (5404)

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் (7104)

செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி (2055)

எனப் பிரபந்தத்திலும் வருகிறது. மேலும் அப்பர் பெருமான்,

செந்தமிழோடு ஆரியனைச் சீரியானை (6710)

என்று திருவாவடுதுறைப் பதிகத்தில் பாடுகிறார்.

தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழல் சேர (834)

என்பது சம்பந்தர் வாக்கு. சம்பந்தர்,

நாலுவேதம் ஓதலார்கள் நம்துணை என்றிறைஞ்சச்
சேலுமேயும் கழனி சூழ்ந்த சிரபுரம் மேயவனே (1–512)

என்று பாடும்போது, அவர்கள் 'நம் துணை' என்று தஞ்சம் புகுந்த இடங்கள், நம் திருக்கோயில்கள் என்று தெரிகிறது. 'நீறு தாங்கி நூல் கிடந்த மார்பினரை, கொன்றை நாறுதாங்கும் நம்பெருமான், காப்பாற்றியது, அந்தத் திருநீறு பூசியதாலேதான் என அறிகிறோம் *(530)*. 'சைவவேடம் தான் நினைந்து ஐம்புலனும் அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான்' *(575)* என்னும்போது, சம்பந்தர் தாம் மட்டுமன்றி, தம்மவர் அனைவரையும் இக்கூட்டணிக்கு வந்தால் காப்பாற்றப்படுவீர்கள் என்று உணர்த்துவது தெரிகிறது.

ஆயினும் இக்கால அரசியல் கட்சிகள் போல, வேத வேதியர் - சிவ வேதியரானாலும் சிலர் மட்டும் தங்கள் மூலத்தை மறந்திலர். சமயத்தைப் பரப்ப வந்த போப் ஐயர் அனைய ஐரோப்பியப் பாதிரி மார்கள், தமிழ் மாணவர்களாகவே - தமிழ்ச் சான்றோராகவே உள்ளும் புறமும் மாற நேரிட்டது போன்ற தன்மையையே சம்பந்தர் முதலான சிவ வேதியர்களிடம் காண்கின்றோம்.

தமிழ் இவர்களை எல்லாம் ஆட்கொண்டது என்றுதான் கூறவேண்டும். தம்மை வாழவைத்த தமிழை நீசபாஷை எனக் கூறித் திரிபவர்கள் உறுதியாக நரகம் புகுவர். செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்தி இல்லை, இது சத்தியம். சமணத்தை ஒருவாறு இக் 'கூட்டணி' வலுவிழக்கச் செய்த பிற்பாடு, எந்தத் தமிழையும் தமிழர் சமயங்களையும் கொண்டு, சமணத்தை வைதிகம் வென்றதோ, அதே வைதிகம் பிற்பாடு தமிழரின் நூல்கள் அனைத்தையும் மொழிமாற்றம் செய்தது. தமிழர் கலைச்செல்வம் அனைத்தையும் அழித்தும் ஏமாற்றியும் தமிழரின் பத்திமையையே முதலீடாக்கி, அதன்மூலம் அவர்களை மூடர் களாக்கி, சடங்கு செய்கிறோம், பரிகாரம் தேடித் தருகிறோம், புண்ணியம் சம்பாதித்துத் தருகிறோம் என்று கூறியது. இதனால் புரோகித வேலைகள் 'புரோக்கர்' வேலைகளாகித் தமிழகத்தில்

உலகம் காணாத கொடுமைகள் நாள் நடைமுறையாக நடைபெறுகின்றன.

நம் சமய குரவர்களும் 'சாமானியமானவர்கள்' அல்லர். பொதுமக்களும் செல்வர்களும்தான் 'கூமுட்டைகளாகிப்' போயினர். நம் தமிழர் சமயச் சான்றோர்கள், வெளியே இவ்வேத வைதிகர்கள் சிவ வேதியர்களாக வேடம் புனைந்தாலும் அவர்களை ஓர் எல்லையிலேயே வைத்தனர். கோயில்களுக்குள் அவர்களை நுழைய விடவில்லை. ஆதி சைவர்களுக்குரிய உரிமைகளைப் பறித்துவிடாமல் காக்கவே, இவர்களும் வடமொழி மந்திரம் ஓதி, இம் மூடமக்களிடம் செல்வாக்கை இழக்காமல் காப்பாற்றிக் கொண்டனர். இவர்கள் பாடிய பதிகங்கள், பாசுரங்கள், இலக்கியங்கள் அனைத்திலும் இவ்வேத வைதிகத்தைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் மறுத்தும் தாக்கியும் நகை யாடியும் பாடியுள்ளனர். நுண்மாண் நுழைபுலமுடையார் இதை அறிவர்.

அரிய நான்மறை அந்தணர் ஓவாது
அடிபணிந்து அறிதற்கு அரியானை – திருவலிவலம்

அருமறைப் பொருளே அங்கணா, எங்குற்றாய் என்று
தேடிய வானோர்சேர் திருமுல்லை வாயில்

இவை உணர்த்தும் உண்மைகள் யாவை?

ஆரூரரை அறிமுகம் செய்யத் தொடங்கும்போதே '**அருமறைச் சைவம் ஓங்க**' என்ற சேக்கிழார், சம்பந்தரை அறிமுகம் செய்யத் தொடங்கும்போது, '**வேதநெறி தழைத்தோங்க**' என்றுதான் பாடுகிறார். அடுத்துத்தான் 'மிகுசைவத் துறை விளங்க' என்று தொடர்கிறார். நுட்பமான வேறுபாடு விளங்க வில்லையா?

வேத வைதிகரின் வாழ்வாதாரமே தடுமாறும் சூழலில், அவர்கள் சிவவேதியர் ஆனால் தவிர வாழ முடியாது என்ற நிலைதான் அன்று இருந்தது. இதுவே பொதுவான சூழல்.

அங்ஙனம் மாறிய குழுவினர்கள் வழிவழி வந்த அனைவருக்கும் முதற்பணி 'வேதநெறி தழைத்தோங்க வேண்டும்' என்பதுதான். அதற்குத் துணை வேண்டுமே; அதனால்தான் மிகு

சைவத் துறை விளங்க' என்றார். 'சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கப்' பிறந்தவர். 'திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகன்' என்பன எல்லாம் காண்க. 'அந்தணர் ஆகுதி பெருக, வண்டமிழ் செய் தவம் நிரம்ப' என இருபாலும் சிறக்க எனலும் காண்க. இவை எல்லாம் உண்மைகளை உணர்த்தவில்லையா, உங்களுக்கு!

திசையனைத்தின் பெருமை எலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெறுக.

இதில் 'அசைவில் செழுந்தமிழ் வழக்கு' என்பதற்கு சிவக்கவிமணி 'தமிழ்நாட்டின் தெய்வ வழிபாட்டு வழக்கு'; 'அயல்வழக்கின் துறை வெல்ல' - என்பதும் இக்கருத்தையே வலியுறுத்துவதாகவும் விளக்கம் எழுதியுள்ளார். 'அயல் வழக்கு' என்பது சமணம், புத்தம் மட்டுமல்ல, வைதிகமுமாம். இதனையே அப்பேராசான் குறிப்பாய் விளக்கியுள்ளார்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழருடன் தமிழராக வாழ்ந்த பார்ப்பனியத்தால், தமிழுக்குத் தீங்கேதும் விளைய வில்லை. ஆனால் பல்லவர் காலத்தில் - ஐந்து நூற்றாண்டுகளில் அவர்களால் குடியேற்றப்பட்ட பிராமணர்களாலும் நாயக்கர் காலத்தில் குடியேறிய தெலுங்குப் பிராமணர்களாலுமே, தமிழுக்கு மிகக் கூடுதலான தீமைகள் ஏற்பட்டன. இவர்களால் முன்பிருந்த, தூய தமிழ்ப் பார்ப்பனர்களும் கெட்டு முட்டி தூக்கிப் போயினர்.

## சம்பந்தர் தரும் தற்குறிப்புக்கள்

நான்மறை ஞானசம்பந்தர் *(44)*, கவுணி ஞானத்துயர் சம்பந்தன் *(151, 2500)*, இறையை (சிவனை) அடி ஆயும் அந்தணர் காழியுள் அணி ஞானசம்பந்தன் *(184)*, நல்லுயர் நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன் *(436)*, நான்மறை நாவன் நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன் *(830)*, கவுணியர் குலபதி *(1217)*, தழங்கெரி மூன்று ஓம்பும் தொழில் தமிழ் ஞானசம்பந்தன் *(1415)*, திருநீற்றைப் போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன் *(2188)*.

சிவனைத் தொழுது உலகில் இழுகுமலம் அழியும் வகை
கழுவும் உரை கழுமல நகர்ப்,
பழுதில் இறை எழுதுமொழி தமிழ்விரகன் வழி
மொழிகள் மொழிதகையவே (3525)

'இறை எழுதும் மொழி தமிழ்' - என்பது, எழுதாக் கிளவியாகிய வடமொழி வேதத்தை வேறுபடுத்திக் காட்டுகிறது. இவற்றால் வேத வேதியர் சிவ வேதியராக மாறினாலன்றி, வாழ முடியாத ஓர் அரசியல் சூழல் ஏற்பட்டது என்பதும் அவ்வாறு அவர்களைத் துடிதுடிக்க வைத்தவை புத்த சமண சமயங்கள் என்பதும் புலனாகின்றன.

களப்பிரர் காலத்தில் சமணமே அரசியல் ஆதிக்கம் பெற்ற மொழியானது. அது வைதிகத்தை வாட்டி வதைத்தது.

நாடெங்கும் சமயவெறிப் போட்டிகள்; கொலைகள், கலவரங்கள் நடந்தன. வைதிகப் பிராமணியம் நெற்றியில் நீறு பூசியே வெளியில் தலைகாட்ட முடிந்தது. வீடுகள், ஊர்கள், தீக்கிரையாயின. இவர்களின் வழிபடுமிடங்கள், மடங்கள், வாழுமிடங்களை அவர்கள் அழிக்க, அவர்களுடையவற்றை இவர்கள் அழிக்க முயன்றனர். (எங்கும் களேபரம் - அதாவது களப்பிரர் காலத்துக் கலகப் போராட்டங்களை இவ்வாறு குறித்தனர்).

சிவனியம் மாலியம் கொற்றவை (சக்தி) இயம் ஆகிய மூன்றுமான, தமிழர் சமயமெனும் 'தமிழியமும்' தன்னைக் காத்துக்கொள்ள அறப் போராட்டத்தில், முழுமூச்சாய் ஈடு பட்டது. இச்சூழலில் தங்களைச் சரணடைந்து வாழ வழி தேடிய அந்தணியப் பிராமணியத்தை, இந்நாட்டின் தமிழியச் சமயமும் பொதுமக்களும் ஆள்வோர் சிலரும் ஆதரித்தனர். ஆனால் இது ஒரு கொள்கை இல்லாக் கூட்டணி; பொது எதிரி எனக் கருதிய புத்த சமண சமயங்களை விரட்ட இவை ஒன்றுபட்டன.

காலப்போக்கில் அப் புறச்சமயங்கள் பல்லவர்கால உச்ச கட்டம் வரை போராடிப் போராடி, பிற்காலத்தில் அவையும் தமிழுக்கு அரும்பணி ஆற்றியும்கூட, இங்கு நிலைகொள்ளாமற் போயின.

இச்சூழலில் வைதிகமும் தமிழர் சமயம்போலக் காட்டிக் கொண்டு, தமிழ்ச் சமய நெறிகளை ஏற்பதுபோல் காட்டிடவே, ஒன்றை ஒன்று தழுவிக் கொள்ளலாயின. முரண்பட்ட இரண்டு எங்ஙனம் ஒன்று சேரும்?

இன்றைய அரசியலை ஒப்பிட்டு நோக்குங்கள். 'நிரந்தர நண்பர்களும் இல்லை; பகைவர்களும் இல்லை' என்று கூறி, இன்றைய அரசியல்வாதிகள் 'சந்தருப்ப வாதம்' பேசுவதை ஒப்பிட்டு, எண்ணிப் பாருங்கள்.

இடைக்காலத்தும் அந்தணப் பார்ப்பாரையும் அவர்தம் வேதங்களையும் இவர்கள் வாயளவில் புகழவும், அவர்களின் வேள்விகளில் சிவ வேள்வியைச் சேர்க்கவும், சிவனையே 'வேதம் ஓதி', 'வேத நாயகன்', 'அருமறை பாடும் வாயான்', 'அந்தணன் கண்டாய், ஆரியன் கண்டாய்' என்று நம் அரனையே அவர்களுக் குரியமையாக்கிப் பாடவும் இவ்வாறு பலபடியாக, 'ஒற்றுமை முழக்கமிட' நேர்ந்தது.

கூட்டணி அமைந்தாலும் அதில் ஒரு கட்சி தலைமை ஏற்றுத் தன்னுடன் சேர்ந்த கட்சியைத் துணைக் கட்சியாக்கித் தன் கைக்குள் போட்டுச் சுருக்கி, மடக்கி, ஒடுக்கி ஆள்வதுபோல், தமிழியத்தை ஆரியப் பிராமணியம் 'அணைப்பது போல் காட்டி' அனைத்தையும் நூற்றாண்டுகள் தோறும் படிப்படியாகத் தன் மயமாக்கிக் கொண்டது. ஏன்? 'தமிழியத்தை' விழுங்கிவிட்டது என்றே கூறலாம்.

நம் சமய குரவர்கள் வேதங்களைப் படித்தறிய வாய்ப்பில்லை. பிறர் படிக்கவோ, கேட்கவோ கூடாது என மறைக்கப்பட்டவை அம் 'மறைகள்'. எனவே ஆரியர்கள் சொன்னவற்றை நம்பிப் பாடித் தொலைத்தனர். எனினும் ஒரு சிலவற்றை அறிந்திருந்தனர்; ஒரு சிலரேனும் உண்மை தெரிந்திருந்தனர்.

இதன்படி, நம் சமய குரவர்களும் அவ்வடமொழி வேதங் களை, மறைமுகமாகத் தாக்கியே பாடியுள்ளனர் என்ற உண்மை களை இதுகாறும் யாரும் முழுமையாக வெளிப்படுத்திலர்.

தேவாரங்களுக்கும் உரையெழுதக் கூடாது, விளக்கக் கூடாது, விளக்கினால் அதன் புனிதம் கெட்டுவிடும் என்ற மரபு, கடந்த நூற்றாண்டு முடிய மிகக் கண்டிப்பாக இருந்தது.

அதனால் நாமும் நம் முன்னோர் மொழிந்த பொருள்களின் உண்மைத் தன்மைகளை, அவற்றின் வரலாற்றுப் பின்னணியுடன் அறியமுடியாமல் போனது.

புத்த, சமணச் செல்வாக்கை, தமிழின் துணை கொண்டுதான் விரட்டினர். தமிழரின் இசைக்கலையை முதலில் எடுத்துக் கொண்டு மக்களை ஈர்த்தனர். தமிழரின் பத்திப் பாடல்கள் இசைப் பாடல்கள்; கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் 'எத்துணையோ இசைப் பரிபாடல்கள்' இருந்து அழிந்தன. கடைச்சங்க ஊழியில் பிறந்த இசைப் பரிபாடல்கள் திருமால், செவ்வேள் (சிவநெறி), கொற்றவைக்கு உரியனவாய் இருந்தன. அவை எழுபது எனச் செவிவழிச் செய்தி கூறவும், இன்று 24 பரிபாடல்களே கிடைத்துள்ளன. தமிழரது இசையூற்றை நிறுவுவன அவை. காரைக்காலம்மையார் அதற்குப் புத்துயிர் தந்தார். திருஞான சம்பந்தர், அப்பரை வழிகாட்டியாகக் கொண்டு 23க்கு மேற்பட்ட, பண்களில் பாடி ஊர் ஊராகச் சென்று, மக்களை சமண புத்த சமயங்களுக்கு எதிராகத் திரட்டினார். அது தமிழிசைக்கு நிகரற்ற பணியாயிற்று.

சமண மதம் சார்ந்து, பிறகு தம் சொந்தச் சிவநெறிக்கு மாறிய திருநாவுக்கரசர், மகேந்திரப் போத்தரையன் என்ற மாமன்னனால் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாயினர். அவரே தமிழராய்த் தமிழுக்காகவும் தமிழருக்காவும் அரும்பணி யாற்றிய 'முதல் சுதந்திரப் போராட்ட வீரர்' - யானைக் காலில் இடற வைத்தது முதல் நஞ்சூட்டியது வரை எண்ணிப் பார்த்தால், ஒரு விடுதலை மறவர் படவேண்டிய துயரனைத்தையும் தாங்கிய பெருமைக்குரியவர். அவரை நம் 'வேளாளப்' பெருமக்கள், ஏனோ பின்பற்றித் தமிழுக்காகப் போராட முன்வந்திலர். காந்தியடி களைப்போல, தமிழரின் சுதந்திரத்திற்காக, 'அகிம்சை', வழியில் போராடிய அறப்போராளி அவர்.

திருஞானசம்பந்தரோ வன்கண்மையை ஒழிக்கவழி வன்கண்மையே - என்பதுபோல (பாலகங்காதர திலகர், சுபாசு சந்திரபோசு வழியினர் போல) நேர் எதிர்நின்று போரிட்ட, விடுதலைப் போராளி.

அன்று வைதிகரிலும் தீவிர வைதிகராகவே பலர் இருந்திருப்பர். சிலர் நெற்றியில் 'வெண்ணீறு பூசிக்கொண்டு, தமிழ் மக்களுடன் கலந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பர். சிலர் வெளியே நாடகமாடி, உள்ளே 'கறுப்பு' வைத்து வாழ்ந்திருப்பர்.

தமிழரிலும் வைதிகத்தை - வைதிகரை அறவே வெறுத்தவர் இருந்திருப்பர். தம்மை அண்டி வந்தனரே என்று, ஆதரித்தவரும் இருந்திருப்பர்.

வைதிகப் பிராமணர்கள், கூட்டம் கூட்டமாகவும் சிற்சில ஊர்களிலும் கூடி வாழ்ந்தனர். அந்த அளவு தற்காப்புத் தேவைப் பட்டது.

ஆனால் சமண, புத்த செல்வாக்கைப் பெரிதும் குறைத்தபின், தங்கள் 'சுயரூபத்தை' மெல்ல மெல்ல வெளிப்படுத்தினர். அரசர்களையும் வள்ளல்களையும் மேலதிகாரப் பிரபுக்களையும் தங்கள் கைகளில் போட்டுக்கொண்டு, மற்ற தொழிலினராகிய உழைப்பாளிகள் அனைவரையும் தம்மைத் தொழுது வாழ்பவராக மாற்றினர்.

மெல்லவே, தமிழர்கள் 'பத்தி வலையிற் படுவோராகலின்' அதில் கை வைத்தனர். வேதத்திற்குப் பிறகு தோன்றிய உபநிடதங்களில் பத்து மட்டுமே உண்மையானவை என வடுவூர் நாராயணனும் பிறர் பலரும் கூறியுள்ளனர். பிற்பட்ட போலி உபநிடதங்களில் சிவருத்ரன் எனக்கூறி, நுழைய முற்பட்டனர்.

ஆகம வழிப்பட்டது தமிழர் சமயம்; வேத வழிப்பட்டது வைதிக சமயம். தொன்று தொட்டு வந்த ஆகமங்களை அழித்தனர். ஆகமம் என்ற சொல்லுக்கே 'கடந்த காலத்திலிருந்து வந்தது' என்பதே முதற்பொருள். தமிழ் ஆகமங்களை மொழியாக்கம் செய்து, மாற்றித் திருத்தி, மறுகோலம் செய்து, தமிழரின் ஆகமங்களைத் தங்களுடையதே என வாதிட்டு, தமிழருக்குரிய வழிபாடு சடங்கு முதல் அனைத்தையும் தாமே செய்வதாக வழிவகுத்துக்கொண்டு இன்று 'ஆகமப்படி செய்வது வடமொழி வழியே' என மிரட்டவும் செய்கின்றனர். நமக்கு இவர்கள் சலவை செய்வதாக, மழித்தல் வேலை செய்வதாக, உழவு செய்வதாக,

தொழில் செய்வதாகத் துணையாகியிருப்பரேல், உற்றுழி உதவியவராகி இருப்பர்.

ஆனால் இவர்களோ புரோகிதம், சோதிடம், அருச்சனை எனப் புகுந்துகொண்டு, நோவாமல் நொடியாமல் பணம் சம்பாதிக்கப் பழக்கப்பட்டு விட்டனர்.

ஆகமங்களை அழித்துப் புதிய ஆகமங்களை அரைகுறையாக எழுதி, தமிழர் பத்திமைச் செல்வம், கோயிற்கலைகள் எல்லாம் தாமே தந்தவை எனக் காட்டலாயினர். கல்லைச் செதுக்கும் ஓர் உளியைக் கைப்பிடிக்கத் தெரியாத இவர்கள் 'சில்ப சாத்திரம்' என எழுதிக்கொண்டு, அவையும் தமதே என்றனர்.

ஆலமர் செல்வன் தந்த தமிழ் அருமறைகளையும் அழித்தனர். இவற்றுக்கெல்லாம் சான்றாதாரம் உளது.

தமிழர் செல்வமாம் சிவநெறி மெய்யியலையும் தம்மிட மிருந்து தமிழர்கள் கற்றுக்கொண்டதே என நிறுவ, தமிழ் மூல நூல்களை அழித்துவிட்டனர். வடுவூர் நாராயணனும் பிறரும் கூறிய பத்து உபநிடதங்கள் தவிர போலியான பலவற்றை எழுதி சிவநெறிச் சமய உண்மைகளை சமஸ்கிருதப்படுத்தினர். சமயக் கலைச்சொல் ஒன்றுகூடத் தமிழல்லாமல், வடமொழி மயமாக்கினர்.

சிவஞான போதமே - முதல் நூலா? வடமொழி வயப்பட்ட வழிநூலா என வாதிட வைத்தனர்.

வடமொழியறிஞர் வேதம் என்று மட்டும் கூறாது, வேதாந்தம் என்றே கூறுவர். ஏனெனில் வேதம் உண்மையானது, பொது வானது. அதில் வடவர்க்கே உரியவை உள. பின்னால் நூறுவகை உபநிடதம், சாகை, பிராம்மணம், புராணம் எனக் கூட்டிக் கொண்டு, வேதாந்தம் என்று பேசும்போதுதான், அவர்களின் வேடம் முழுமை பெறுகிறது. இவற்றுக்கு நூறுவகை விளக்கம் (Interpretation) கூறுவர். ஒருவர் கூறுவதற்கும் மற்றொருவர் கூறுவதற்கும் தொடர்பிருக்காது. நாம் ஒரு இக்கட்டான கேள்வி கேட்டால், அதற்கும் ஒரு போலி விடை உடனே தரப்படும். இவர்கள் 'வேதம் என்று மட்டும் கூறி நில்லாது, வேதாந்தம் -

ஆறங்கம் என்று கூறுவன அனைத்தும் தமிழரை ஏமாற்றப் பயன்படுத்திய கருத்தாக்கமாகும்.

தமிழர் சமயங்களை உருமாற்றி, எல்லாம் வடமொழி வழிப்பட்டனவே என்று காட்ட, இவர்கள் சமயக் கலைச் சொற்களை சமஸ்கிருதமயமாக்கியதால் அச்சமய உண்மைகள் பொதுமக்களுக்கு விளங்காமற் போயின. திருநீறு பூசுவதும், சைவச் சாப்பாடுமே சிவநெறி என மக்களை எண்ண வைத்துவிட்டனர்.

வணக்கத்திற்குரிய வச்சிரவேலு முதலியார் முதல், ஆனந்த ராசனார் வரை, இச்சேற்றில் அகப்பட்ட, 'களிறுகளாயினர்'. நம் பெரியவர்கள் பலரும்,

வரலாற்றுவழி ஆய்வு
வாழ்வியல்வழி ஆய்வு
வாய்மையியல் வழி ஆய்வு

என மூன்று திறன்களில் ஆராய்ந்திருக்க வேண்டும். இவை மூன்றும் ஒன்றினொன்று தொடர்புடையவை. ஆனால் இவர்கள் வாய்மையியல் வழி - தத்துவ நெறிகளிலேயே மூழ்கிப் போயினர்'. தத்துவ வழியை அவர்கள் சமஸ்கிருத மயமாக்கிவிட்டதால் - தமிழ்க் கலைச்சொற்கள்கூடக் காணக்கிடைக்காமற் போனதால், தமிழ்ச் சான்றோரே தடுமாற நேரிட்டுவிட்டது.

வாழ்வியல் வழி ஆராய்ந்திருப்பரேல், நம் தமிழியம் இளையோரை ஈர்த்திருக்கும். வரலாற்று நெறிமுறைகளின்படி அணுகியிருப்பரேல், முன்பே பல உண்மைகள் துலங்கியிருக்கும்.

நம் சமய உண்மைகளை சமஸ்கிருத மயமாக்குமுன் சமயக் கலைச்சொற்கள் சமஸ்கிருதமாக்கப்பட்டு, அவற்றுக்கீடான தமிழ்ச் சொற்கள் மறக்கடிக்கப்பட்டு, மறைந்தே போயின. தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார், தம் தமிழர் மதம் என்ற நூலில், இவ் வடமொழிச் சொற்களைத் தம்மாலும் நீக்கி எழுத முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறே தமிழர் கலைகள் அனைத்தையும் சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம், மருத்துவம், வானியல் போலும் எதனையும் விட்டுவைத்திலர்.

இன்று இவற்றைத் தமிழில் மீட்டுருவாக்கம் செய்ய முயலும் அறிஞர்கள் திகைக்கின்றனர். மூலவேர்களை அழிப்பதில் மிக வல்லவர்கள் இவ்வாறு தமிழின் சிறப்பனைத்தையும் 'தின்று' விட்டனர்.

## சம்பந்தர் அருள் வாக்குகளிற் சில

மிழலையுள் வேதியர் ஏத்தி வாழ்த்த (35)

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர்
நாளும் அடிபரவ (55)

நெய் தவழ் மூஎரி காவலோம்பும் நேர்புரி
நூன் மறையாளர் ஏத்த (56)

மந்திர வேதங்கள் ஓதுநாவர். . . செந்தமிழோர்கள்
பரவி ஏத்துஞ் சீர்கொள் செங்காட்டங்குடி (62)

(இவ்வாறு செந்தமிழோர்களை வேதியரிடமிருந்து பிரித்துப் பாடுமிடம் மேலும் சிலவுள).

அந்தணர் அல்லல் தீர்க்கும் அப்பனார் (79)

மறை முத் தீயானவன் சிவன் எம் இறை (112)

வேத வைதிக அந்தணர்கள் சிவ வேதியராகிச் சிவனை வழிபட்டதையும் அவர்கள் அம் மறைமொழிகளையே தமிழரின் சிவன்முன் ஓதியதையும் பல நூற்றுக்கணக்கான பாடல்களில் பதிவு செய்துள்ளார் ஞானசம்பந்தர்.

## சமண புத்த சமய வெறுப்பு

வேறு எவரையும்விட சமண, புத்த சமயங்களை மிக்க கடுமையாகப் பலநூறு பாடல்களில் சாடி, பழித்து, நகையாடிப் பாடுகிறார் சம்பந்தர். அந்த அளவு அடிபட்ட தம் குலத்தைக் காப்பாற்ற அவர் துடிதுடிப்பதை அறிய முடிகிறது.

பல்சமணும் புத்தரும் நின்று அலர்தூற்ற (42)

என்று அவர்கள் செயல் கூறப்படுகிறது.

ஒண் துவரார் துகிலாடை மெய்போர்த்து உச்சி
கொளாமையுண் டேவுரைக்கும், குண்டர்களோடு அரைக்
கூறையில்லார் கூறுவதாம் குணமல்ல கண்டீர் (53)

இடு துவர்க் காயொடு சுக்குத் தின்னும் நிலை அமண்
தேரரை நீங்கி நின்று, நீதரல்லார் தொழும் மருகல் (63)

புத்தரொடு பொறியில் சமணும் புறம் கூற (பிரமபுரம் 10)

ஆலும் மயிலின் பீலி அமணர், அறிவில் தேரர்
கோலும் மொழிகள் ஒழிய (புறவம் 10)

புத்தரொடு அமணரை மிகப் பழித்துப் பாடிய பாடல்கள் பலநூறு உள. சேக்கிழார், பரசமயங்களாம் புத்த, சமணங்களை ஒழிப்பதும் அவற்றின் வழி தமிழைக் காப்பதும் தம் கொள்கை எனக் கொண்டு இவ்வகையில், சம்பந்தர் ஒரு புரட்சி மறவராய்த் திகழ்வதை நன்கு விளக்கிப் பாடியுள்ளார்.

"அமண் முதலாம் பரசமயப் பவம் பெருக்கும், புரைநெறிகள் பாழ்பட. . . சிவம் பெருக்கும் பிள்ளையார்".

'திரு மறையும் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகன்' எனக் குறிக்கின்றார். சம்பந்தரை, 'பர சமயக் கோளரி' என்றே அழைக்கின்றார்.

இவை அனைத்தையும் முழுவதுமாகப் பட்டியலிட்டு, ஆராய வேண்டும். சமண ஆதிக்க காலத்தில் வைதிகர்கள் நிலை என்ன? அதனை ஒழித்துக் கட்ட, இவ் வேதியர்கள் சிவ வேதியரான வரலாறு யாது? 'கொள்கை இல்லாக் கூட்டணி' எவ்வாறு அமைந்தது. அப் புறச்சமயங்களை விரட்டிவிட்டு, அவ்வாறு விரட்டத் துணை செய்த 'தமிழியம்' அனைத்தையும் இந்தப் பிராமணியம் விழுங்கிய வரலாறு யாது? சிறிதும் நன்றியின்றி, தம்மைக் காத்த தமிழையே இவர்கள் 'நீசபாஷை' என்று, இன்றளவும் ஓதுவதைப் பொறுக்கவியலுமா? சமணர்கள் தாமே கழுவிலேறினராம். இவர்கள் அதை நினையாதது ஏன்? இன்றளவும் இவர்களின் சூழ்ச்சித் திறன் பலித்தது. இனியும் பலிக்கவிடல் தகுமா?

## 'நான்மறை' பற்றிய ஐயங்கள்

என்னதான் கூட்டணி அமைத்தாலும், எத்தனையோ வகை மாற்றங்கள் செய்தாலும், தமிழர்கள் அடிப்படையான தங்களின் தனித் தன்மைகளைக் கைவிட்டிலர்; இழந்தன பலவெனினும் மீட்டுருவாக்கம் மட்டுமே தேவைப்படுகிறது. அதற்கு விழிப் புணர்வு - பொதுமக்களிடையே பரவ வேண்டும்.

பார்ப்பனியமும் தமிழாலும் தமிழர்களாலும் தங்களுக்குப் பல நன்மைகளும் விளைந்திருப்பினும், இன்னமும் தங்கள் தனித்தன்மையை விடாமலும், தொடர்ந்து செய்துவந்த வழிவழித் தீமைகளை, வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம், வெளிப்படுத்தியும் கூடி வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய தமிழ்மொழியின் தடுமாற்றத்திற்குப் பார்ப்பனரை விடத் தமிழர்களே பெருங்காரணமாக உள்ளனர். அவர்களின் தந்நலமும், வெளிவேடங்களும் ஆங்கில மோகமும் தமிழை அழித்தேனும் தாம் வாழ மட்டுமே முந்தும் மனப்பான்மையும்தான் அடிப்படைக் கரணியங்களாகும்.

வடமொழியிலுள்ள வேதங்களாகிய நான்மறை மூலநூல் களையே நம்புதல் வேண்டும். அவை தவிர்த்த பிராம்மணம், உபநிடதமாம் வேதாந்தம், சாகைகள், பாஷியங்கள், உரை விளக்கங்கள், புராணங்கள், வடமொழியில் எழுதி வைத்துக் கொண்ட ஆகமங்களுட்பட எல்லாவற்றிலும் நம் தமிழ்த் தொடர்புடைய சிந்தனைகள், சமய நுட்பங்கள், கலைச்சொற்கள், இன்னபிற பலவும் காணப்படுமாயின் அவை நம்மிடமிருந்து பெற்றுக் கொண்டவை - பறித்துக் கொண்டவை, திருடிக் கொண்டவை என்றும் கூறலாம். தமிழ் மூலநூல்களை முற்றிலும் அழித்துவிட்டு, அவை தம்மவை எனக் காட்ட முயன்ற 'மோசடிகள்'. இத்தெளிவு வரலாற்று வழி ஆய்வுகளிலேதான் வெளிப்படும்.

ஆங்கிலம் நம்மை என்னதான் ஆட்டிப் படைத்தாலும், மேனிலையில் அது நம்மை வளர்க்கத் துணை நிற்கிறதேயன்றி, நம்மிடமிருந்து எதனையும் 'களவாடிக் கொண்டு' நம்மை ஒன்றுமில்லாத முழு மூடர்களாக ஆக்குவதில்லை. வடமொழி

நம் சமயம், வழிபாடு, சடங்குகள், கலைகள் அனைத்திலும் நம்மை 'மொட்டை அடித்து' 'நாமம்' போட்டு, 'பட்டை "தீட்டி, காதுகளில் பூச்சுற்றி ஏமாற்றிவிட்டது. இதிலிருந்து மீளவே - மீட்கவே இனி நாம் முயலவேண்டும்.

நீதியில் ஒன்றும் வழுவேன், நிட்கண்டகஞ் செய்து வாழ்வேன்,
வேதியர் தம்மை வெகுளேன், வெகுண்டவர்க்குந் துணையாகேன்
(பதி. 73)

திருவாரூர்ப் பதிகத்தில், சுந்தரர் இங்ஙனம் பாடவேண்டிய சூழ்நிலை யாது?

பதிகப் பின்னணி, பதிக நுண்பொருள், குறிப்புப் பொருள் முதலியனவும் அறியமுடியாதபடி செய்துவிட்டனர்.

'வெந்த நீறுமெய் பூசவல்லானை, வேத மால்விடை ஏற வல்லானை' என (பதி. 57) ஆரூரர் பாடுவது ஏன்? வேதங்கள் கடவுளர்க்குச் சமம் என்பதை மறுத்து, எவ் வேதமாயினும் அது சிவனுக்குக் கட்டுப்பட்டதே என உணர்த்துகிறது இது.

பொய்யாத வாய்மையால் பொடிபூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து
கையினால் எரிஓம்பி மறை வளர்க்கும்
அந்தணர்தம் கருப்பறியலூர் (பதி. 30)

'வேதம் ஓதி வெண்ணீறு பூசி' (பதி. 49) என்றும் ஆரூரர் பாடுகிறார். 'பொய்யாத வாய்மை' என்றது ஏன்? பொடி பூசுதல் வெளித்தோற்றம். 'வேதம் ஓதி எரி ஓம்புதல்' - உள்நோக்கம்'. 'மறை வளர்க்கும் அந்தணர்' என்பதையும் கருதுக. 'அரிய நான்மறை அந்தணர் ஓவாது, அடிபணிந்து அறிதற்கு அரியானை' (பதி. 67) என்று, ஆரூரர் பாடுவதுபோல் வருமிடங்களைத் தொகுத்து நோக்குக.

சிவன் சங்க இலக்கியத்தில் 'ஆலமர் செல்வன்' (கலி. 81), ஆலமர் செல்வற்கு (சிறுபாண் 97), ஆல்கெழு கடவுள் (முருகு. 256) என இவ்வாறு பல இடங்களில் குறிக்கப்படுதல் காணலாம்.

வடமொழி வேதங்கள் காணாத ஒன்று இது. 'மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப் பன்னிய எங்கள் பிரான்' (ஆரூரர். பதி. 22).

'அன்று ஆலின் நிழற்கீழ் அறம் நால்வர்க்கு அருள் புரிந்து' (பதி. 22) 'அந்தணர்க்குப் பொழில்கொள் ஆல் நிழற்கீழ் அறம் புரிந்து (பதி. 55) என ஆரூரர் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுறைத்தான் காணேடி
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ (270)

என்று மாணிக்கவாசகரும் பாடுகிறார். இக்கருத்து மேலும் பல திருப்பதிகங்களில் வருகிறது. சமய குரவர்கள் அனைவரும் பாடும் இது ஒரு வரலாற்றுண்மையாகும்.

வடவேதம் பற்றிய எதிலும் காணாத செய்தி இது. பிற்காலப் புராணம் முதலியன நம்மைப் பார்த்து எழுதிக் கொண்டவை. சமணர்கள் தங்கள் நான்மறை பற்றிக் கூறுவதுபோல், தமிழர்க்கும் நான்கு திருமறைகள் இருந்துள.

இதனால் நம் அருளாளர்கள் வடமொழி வேதங்களைப் புகழ்வதுபோல் காட்டி, நம் திருமறைகளையே போற்றியுள் ளனரோ என்ற ஐயம் எழுகிறது.

ஆலமர் செல்வனைத் தென்முகக் கடவுள் என்றனர். வடவர் 'தட்சிணா மூர்த்தி' என்றனர். இவற்றால் இவர் தென்னாடுடைய சிவன் என்பது தேற்றம். அவர் அருளியவை தமிழ் மறைகளாகத் தான் இருக்கமுடியும். ஆயினும் புராணம் மூலம் தட்சிணா மூர்த்தியை, தேவகுரு - வியாழ பகவான் என மாற்றி, திருச்சுற்றில் வைத்தனர்.

நம் திருமுறைகளில் மேலும் மேலும் நுட்பமாய் ஆராய்ந்து உண்மை காணவேண்டும். மூலநூல் சான்றுகளைத் தனியாகவும் வடமொழியார் இடையிடைப் புகுத்தியவற்றை வேறாகவும் கொண்டு ஆராயும் தெளிவும் துணிவும் வேண்டும். சம்பந்தர் பாடிய திருஆலவாய்ப் பதிகம் (108) அவரது திருவுள்ளக் கிடக்கையைத் தெள்ளிதின் விளக்குவதாகும்.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை

வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞாலம்நின் புகழேமிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே (1)

வைதிகத்தின் வழி ஒழுகாத அக் கைதவம் முடைக்கார மண் தேரரை, மறைவழக்கமிலாத மா பாவிகள், அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர், வேட்டு வேள்வி செயும் பொருளை விளி மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை என் றிவ்வாறு இப்பதிகம் முழுவதும் இடம்பெறுகின்றன. அதாவது அமணை, தேரரை அழிக்க ஆலவாய்ச் சிவனைச் சரணடைகிறார். அவரது சமண எதிர்ப்பு, தமிழுக்கும் சிவநெறிக்கும் ஆக்கமாயிற்று.

ஆயினும் அவர்களிலும் பலர் இன்றளவும் தம் வாழ்வுக்குத் தமிழையும் தமிழரையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்; உள்ளூற வடமொழிப் பாசத்துடனேயே வாழ்கின்றனர். இது தமிழுக்குத் தீராத - உடன்பிறந்தே கொல்லும் நோயாகிப் போனது.

சமயம் நேரும்போது தமிழை வீழ்த்தவும் தம் அறியாமையால் தாய்த் தமிழைச் சிதைப்பவர்களை ஆதரிக்கவும் இவர்கள் தயங்குவதே இல்லை.

இவர்கள் சமஸ்கிருதத்தில் தாளிகைகள், நாளிதழ்கள் நடத்தலாமே? சமஸ்கிருத மொழியில் கவிதை, கதை, நாவல், கட்டுரை எழுதிப் புகழ் பெறலாமே?

ஏன் அவ்வாறு முயன்றிலர்?

வேறு வழியின்றித் தமிழைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். தமிழில்தான் வாசகர்கள் கிடைக்கின்றனர்.

ஒருவேளை சமஸ்கிருதத்தில் எழுதிப் பிழைக்க வாய்ப்பு வருமெனத் தெரிந்தாலே, இவர்கள் தமிழைத் தூக்கி எறியத் தயங்கமாட்டார்கள்.

இவர்கள் வேதவேள்வி நெறியைக் கைவிட்டு, நம் ஆகம நெறிக்குள் புகுந்தது ஏன்? வயிறு கழுவ வாய்ப்புளது என்பதால் தானே? தமிழர்களின் பத்திநெறி, இவர்களின் உயர்ந்தோங்கும் வாழ்வுக்கு, முதலீடாகிப் போனது.

இல்லை என்றால்,

இவர்கள் தமிழிசையை அறவே இன்றும் புறக்கணித்து, நம்மிடையே வாழ்வதேன்?

தாய்த்தமிழைக் கோயில்களிலும், சடங்குகளிலும் இடம்பெற விடாமல், உத்தமபுரம் தீண்டாமைச் சுவர்போல், மொழித் தீண்டாமையை நம்மவரிடமே நிலைபெறுத்த முயல்வது ஏன்?

வேள்வி, ஹோமம் என்று ஒவ்வொரு நாளும் பலகோடி பெறுமானமுள்ள பொருள்களை, அக்கினியில் போட்டு 'எரிப்பது' - அழலோம்புவது ஏன்? அவை அத்தனையும் இந்த நாட்டு ஏழைகளுக்குத் தரப்பட்டால் ஆண்டவன் அருளமாட்டானா?

'விழிப்புணர்வுப் பேரியக்கம்' - இவ்வளவும் எடுத்துக் காட்டுவது, பகைமை நோக்கிலன்று.

இது நோய்நீக்கும் மருந்து; முதலில் கைக்கும்; ஆயினும் பிறகு நன்மைகளை விளைவிக்கும்.

✣✣✣✣✣

## உண்மையைத்தேடும்
## ஒளிக்கதிர்கள்

'சிவன்' வடமொழியில் வழிப்பட்டுத் தோன்றியதாகக் கூறுவது பொருந்தாது. இந்நூலுள் சிவ வழிபாட்டின் தோற்றம் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

வேதம்வேறு+வேதாந்தம்வேறு என்பதுநன்கு விளக்கப்பட்டுள்ளது.

வேதம்வேறு, ஆகமம்வேறு.தமிழ்ஆகமங்கள் அழிக்கப்பட்டு, வடமொழி மயமாக்கப்பட்டன என்றஉண்மைசுட்டிக்காட்டப்பட்டுளது.

ஆலமர்செல்வன், சிவன்.அவன்அருளியவை தமிழ் நான்மறைகள். இவை மாற்றித் திருத்தி மறைக்கப்பட்டன.

சமணர் அரசியல் செல்வாக்குடன் புரோகிதப் பிராமணியத்தை முழுவதும் அழிக்க முயன்றபோது, இவ்ஆரியப்பார்ப்பனர்தமிழ்க் கோயில்களுக்குள்தஞ்சம்புகுந்தனர். தமிழைப் போற்றிப் பாடி, தமிழர் வழிபாட்டிற்கு மாறிக் கொண்டனர். பிறகு நன்றியின்றி சமணரை விரட்டிய பின், எல்லாவற்றையும் சமஸ்கிருத மயமாக்கித்தமிழையேஅழிக்கமுயன்றனர்.

வடமொழி வேதங்கள் தேடியும் காணாதவன் சிவன். இவ்வாறு திருமுறைகள் உணர்த்தும் மறை பொருள்கள் பல. அவை தனிநூலாக அடுத்துவெளிவரவுள்ளன.